# மஞ்சள் மேகம்..



# மஞ்சள் மேகம்...



-நிவேதா ஜெயாநந்தன்.

## அத்தியாயம் – 1

கே.ஜே.யேசுதாஸின் கூர்மையான கணீர்க் குரலை மிகச் சரியாக உபயோகித்துக் கொண்ட பெருமை இளையராஜவை மட்டுமே சாரும்! அவர் இயற்றிய பாடல்களைக் கேட்டு மகிழும் நம் காதுகளுக்கே இத்தனை ரசனை என்கையில்.. இயற்றிய மனிதன் எப்பேர்ப்பட்ட உயர் ரசனை கொண்டவனாக இருப்பான்! இளையராஜா கர்வி தான்!

இருக்கட்டுமே! இளையராஜாவின் உச்சந்தலையில் ஏறியமர்ந்த பின்பு தான் கர்வம் என்ற சொல் கௌரவம் பெற்று விட்டதாய் நான் எண்ணுகிறேன்! மாற்றுக் கருத்து இருப்பின்.. இதோ.. என் காது துவாரத்தின் வழி நுழைந்து.. என் இதயத்தை நனைத்துக் கொண்டிருக்கும்.. இசையையும்,குரலையும் கேளுங்கள்!

மாவிலைப் பாதமோ.. மங்கை நீ வேதமோ..

இந்த மண்ணில் இது போல் பெண்ணில்லையே!!

அழகில் அழகு தேவதை!ஆயிரம் பாவலர் எழுதும் காவியம்!

தமிழ் மொழிக்குப் பூவும்,பொட்டும் வைத்து அலங்கரித்துப் பார்க்க வேண்டுமெனில்.. கண்ணதாசனிடம் பேப்பரையும், பேனாவையும் நீட்டினால் போதும் (பாதத்தை மாமர இலையோட ஒப்பிட்டதே பெரிய சாட்சி)! அவரது தேர்வில் வடிவம் கொண்ட வார்த்தைகள் ஒவ்வொன்றும் யேசுதாஸின் குரலில் உருவம் பெற்று நிற்கும் வித்தையை.. இப்பாடலில் கண் கூடக் காணலாம்! Ofcourse ஆட்டுவிப்பவன் ராஜாதிராஜாவாயிற்றே!!

துணுக்கு: பாடல் இடம் பெற்ற படம் ராஜபார்வை!

**‘அ**து ஒரு அழகிய கனா காலம்’ – என்கிற வாக்கியத்துக்கான மிகச் சிறந்த உதாரணம் 1980-க்கும் 1990-க்கும் இடைப்பட்ட வருடங்களாகும்! தொழில்நுட்ப வளர்ச்சியின் ஆக்டோபஸ் கரங்கள் நம் நாட்டுப் பட்டி,தொட்டிகளை அள்ளிச் சுருட்டியிராத.. அப்பாவி காலகட்டம் அது! அல்லக்கை அலைபேசிகளும், கர்ணகொடூரக் கணிணிகளும் இல்லாது.. வாயும்,கையும் படைக்கப்பட்டதற்கானக் காரணத்தை முழுமையாய் அனுபவித்து.. மனிதன்,மனிதனாய் வாழ்ந்த பொற்காலம்!

டிவியும்,டெலிஃபோனும் அதிகம் ஆக்கிரமித்திராத வீடுகளுக்கு மத்தியில், சைக்கிளும், டிரான்சிஸ்டரும் வைத்திருப்பதே மிகப் பெரிய கௌரவம் தான்! டேப் ரெக்கார்டர்,வாக்மேன்,ஸ்கூட்டர், புல்லட்,அம்பாசிடர்,ஏசி,ஃப்ரிட்ஜ் எல்லாம் நம் வரிசையில் அடுத்தடுத்து வருபவை.

தலைமுறை தாண்டியும் குறையாத கவர்ச்சியை இந்தப் பத்தாண்டுகளும்

பெற்றிருப்பதற்கான முக்கியக் காரணம்.. இளையராஜா என்னும் மாயாவி! 80ஸ்-என்றாலே நம்மில் அநேக பேருக்குத் தெரிந்த ஒரே பெயர் இளையராஜா தான்!

தன் ஒவ்வொரு பாடலின் வழியாகயும் அந்தக் கால கட்டத்தின் இயல்பை,அழகை கற்பனையில் உணர வைத்து.. ஒரு ஏகாந்தத்தை ஏற்படுத்தி.. ஏங்கச் செய்து விடும் வித்தை தெரிந்த ஒரே மனிதன்!

அவர் கொடுத்தத் தாக்கத்துடனே இக்கதையோடு நாம் நகர்வோம்! ஏனெனில்..

நீயும், நானும் போவது... காதல் என்ற பாதையில்!!! :P

1985, பீட்டர்ஸ் ரோடு, மெட்ராஸ்.

**1996**-ஆம் ஆண்டுக்கு முன்பு வரை மெட்ராஸ் என்றழைக்கப்பட்ட தமிழ்நாட்டின் தலைநகரம்! இந்தியாவின் பெரிய நகரங்களின் பட்டியலில் நான்காவது இடத்தைப் பெற்ற மாநகரம்!

அப்பேர்ப்பட்டத் தலைநகரத்தின் பிரதான சாலையொன்றின் காலை நேரம்! சாதாரண காலை நேரம் தான்! ஆனால்.. அதில் ஆச்சரியம் ஒன்றுள்ளது! கடும் வெயிலும்,அனல் காற்றும் வாட்டியெடுக்கும் இப்போதைய சென்னையைப் போலல்லாது, மோதிச் செல்லும் காற்று முழுதிலும் குளிர்ச்சி நிரம்பியிருக்கிறது.! எஸ்! மரங்கள் நிறைந்திருந்த மெட்ராஸ் அது!

அத்தகைய மெட்ராஸின் தலைமுடியைச் சுத்தமாய் மழித்து மொட்டை அடித்துத் தான் சென்னை எனப் பெயர் வைத்திருக்கிறோம் நாம்! மரங்களற்றக் கட்டிடப் பேழைக்குள் எந்திரமாய் ஒரு வாழ்க்கை! மூச்சுக்குத் தவிக்கப் போகும் நாள் தொலைவில் இல்லை!

அந்தக் காலை நேரத்தின் பரபரப்பை ஏந்திக் கொண்டு.. பெருத்துப் பிதுங்கிப் போய்.. மூச்சு வாங்க முன்னே வந்து நிற்கும் பல்லவன் தான் நம்மை முதலில் வரவேற்கிறான்! சென்னை மாநகரப் பேருந்து அது! ஒற்றை ஜடையுடன் க்ளோஸ்ட்-நெக் ப்ளவுஸுமாகப் பெண்களும், பெல் பாட்டம்,ஸ்டெப்-கட்டுடன் ஆண்களுமாய் வண்ணமயத்துடனிருந்தது!

அம்பாசிடர்களும்,’ப்ளஷர் கார்’ என்றழைக்கப்படும் காண்டஸாக்களுக்கும், ப்ரிமியர் பத்மினியும் சாலையில் ஒரு புறம் பவனி வர.. பஜாஜ் செடக், கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டர்களும்,

புல்லட்களும் மறுபுறம் நிறைந்திருந்தது.

இதில் ஆச்சரியம் என்னவெனில்.. மேற்கூரிய இரு சக்கர வாகனங்கள் ஹெல்மெட் அணிந்த மனிதர்களால் இயக்கப்பட்டுக் கொண்டிருந்தது. பின்னால் அமர்ந்து செல்பவர் உட்பட! (நம்மூர்ல ஹெல்மெட் போட்றது எவ்ளோ பெரிய விசயம்!)

அந்த ஸ்கூட்டர்களுக்கு நம்பர் ப்ளேட் எனத் தனியாக எதுவும் இல்லை! ஸ்கூட்டரின் முன்புறம் வலது பக்கத்தில் கருப்பு பேக்-க்ரவுண்டில் வெள்ளை எழுத்துக்களுடன் எண்கள் மின்னியது! ஹாஹா!

இதையெல்லாம் விட மிகப் பெரிய அதிசயம்.. சிக்னலில் காத்திருந்த இந்த மோட்டார் வண்டிகளோடு சேர்ந்து.. சரிசமமாக நின்று கொண்டிருந்த சைக்கிள்கள் தான்! பெரும்பான்மை மக்கள் சைக்கிள் உபயோகிப்பவர்களாகத் தானிருந்தார்கள்!

கேஸ் சிலிண்டர்களுடன் ட்ரை-சைக்கிள், அரிசி மூட்டைகளுடன் கடக்கும் மாட்டு-வண்டி, ஏகப்பட்ட ரிக்ஷாக்கள், ஆட்டோக்கள் என ஜனக் கூட்டத்துக்குப் பஞ்சமில்லாதிருந்தது!

சாலையின் இடது புற சுவற்றில் அப்போது வெளிவந்த திரைப்படமான இதயகோயிலின் பேனர் ஒட்டப்பட்டிருந்தது. கோவில் பின்புறத்தில் அம்பிகாவும்,மோகனும் சிரித்துக் கொண்டிருக்க.. மறுபுறம் புன்னகையுடன் ராதா!

அருகிலேயே மற்றுமொரு பேனர்! மதன மஞ்சரி! பிட்டு படம் போலும்! கடந்து செல்லும் ஆண்களைக் கவரும் நோக்கத்துடன் ஒளிவு மறைவு ஏதுமின்றி வெட்ட வெளிச்சத்தில் பகிரங்கமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இவை ஒருபுறமிருக்க.. சாலையின் வலது புற வளைவில் இந்திரா காந்தி,ராஜீவ் காந்தியின் புகைப்படங்களுடன் பெரிதாய் ஒரு பேனர்! சுவர்களில் அறிஞர் அண்ணாவின் வாசகங்களும், எம்.ஜி.ஆர்-இன் புகைப்படமும்! அரசியலும்,சினிமாவும் இன்றி தமிழகமா??

புரட்சிகளற்றத் தலைநகரமேது என்று நிரூபிக்கும் வகையில் கையில் ஆரஞ்சு நிறப் பதாதைகளைத் தாங்கியபடி சாலைமறியலில் ஈடுபட்டிருந்தக் கூட்டம் ஒருபுறம், அதைத் தடுத்து தடுக்கில் இட, படபடவெனக் குவிந்தப் காக்கிச் சட்டைகள் மறுபுறம்!

சுவாரஸ்யம் நிறைந்த அந்தச் சாலையின் விறுவிறுப்பும்,பரபரப்பும் கொஞ்சமும் பாதிக்காது, ஆளரவமற்று அமைதியாகத் தெரிந்த அந்தக்

கிளைச் சாலையின் சிறிய அரங்கமொன்று.. அன்று காலை நடக்கவிருக்கும் மேடை நாடகத்துக்கான டிக்கெட் விற்பனையில் ஈடுபட்டிருந்தது.

பெரிதாக வியாபார நோக்கமெதுவும் கிடையாது! அந்த நோக்கத்தை ஏற்படுத்துமளவிற்கு அவர்களுக்குப் பார்வையாளர்களும் கிடையாது!

முத்தமிழ் வரிசையில் கடைசி இடத்தைப் பெற்றிருப்பதாலோ என்னவோ.. நாடகக் கலையை வளர்க்கவும்,போற்றவும் பெரிதாகக் கூட்டம் கிடையாது இங்கே!

பள்ளி,கல்லூரியிலிருந்துத் தொடங்கி அத்தனை மேடையிலும் பாட்டுக்கும்,நடனத்துக்கும் ஆர்வம் காட்டும் நாம், நாடகம் என்றாலே.. எழுந்து சென்று விடுவதை வழக்கமாக வைத்திருக்கிறோம்! அவ்வளவு தான் நாடகக்கலைக்கு நாம் அளிக்கும் மரியாதை!

போதாததற்குத் தொலைகாட்சி,சினிமா போன்றவை உண்டாக்கிய கவர்ச்சியும்,மோகமும் இண்டு,இடுக்குகளைக் கூட விட்டு வைக்காமல் நிறைந்து வழியத் தொடங்கிய பின்பு.. கண் முன்னே நிகழ்த்தப்படும் இந்த அரியகலையானதுத் தன் வீரியத்தை முற்றிலுமாக இழந்து விட்டதாகவே கருதப்படுகிறது.

ஒரு கட்டத்தில் கீழ்நிலைக்குச் சென்று விட்ட இக்கலையைக் காக்கவெனத் தோன்றிய சான்றோர்கள் பலர் உள்ளனர்! 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் கட்டத்தில் பம்மல் சம்மந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள் ஆகியோர் மேடை நாடகச் செயல்பாடுகளால் மக்களிடம் எழுச்சியை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகிறது. மொழித் தொண்டு செய்வதற்காகவே துறவறம் பூண்ட சங்கரதாஸ் சுவாமிகள் இன்று வரை மேடை நாடகக் கலையின் தந்தை என்றே அழைக்கப்படுகிறார்.

நம் நாட்டைப் பொறுத்தவரை சமூகம் சார்ந்த பிரச்சனைகளை, விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்துவதற்கானக் கருவியாகவே இந்நாடகங்கள் பயன்படுத்தப்பட்டன. சுதந்திரப் போராட்ட காலத்தில் நாடகம் என்றாலே பிரிட்டிசார் பயப்படுமளவிற்கு மிகப் பெரிய தாக்கத்தை உண்டாக்கிய கலை இது.

ஆனால்.. அக்காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட பெரும்பாலான நாடகங்களும்,நாடகக் குறிப்புகளும் எழுத்து நடையாகவோ, இன்ன பிற வடிவமாகவோ பேணிப் பாதுகாக்கப் படாமல் போனது தான் நம் துர்பாக்கியம்!

திராவிட இயக்கங்கள் தலையெடுத்த பிறகு அரிசியல் சார்ந்த நையாண்டிகளுடனான நாடகங்களின் எண்ணிக்கை அதிகமாகவே இருந்தது.

அதன் பின்பு நம் தலைமுறையினரிடம் பிரபலமாகத் திகழ்ந்தவர்கள் சோ.ராமசாமி,விசு, மௌலி, எஸ்.வி.சேகர், கிரேசி மோகன் போன்றோர்!

அண்மைக்காலமாக நா.முத்துசாமி என்பவர் கூத்துப்பட்டறை என்ற அமைப்பை நிறுவி முறையான பயிற்சியுடன் முழு நேர நடிகர்களை உருவாக்கி வருகிறார் என்று கூறப்படுகிறது. (vijaysethupathy is from koothu patarai I guess).

பெரிதாகப் பெயர் பெற்றிராத சாதாரண நாடகக் குழு அது. பொருள் ஈட்டும் நோக்கத்தைத் தாண்டி இக்கலையின் மீது ஆர்வமும்,மோகமும் கொண்ட இளைஞர் பட்டாளம்! ஒவ்வொரு முறையும் அவர்கள் மேடையேறுவது மிகப் பெரிய போராட்டங்களுக்கு மத்தியில் தான்!

சொற்பப் பார்வையாளர்களை மட்டுமே பெற்றிருந்த அந்தச் சிறிய அரங்கத்தின்.. மேடையில் தொங்க விடப்பட்டிருந்தத் திரையில் அன்றைய நாடகத்திற்கானத் தலைப்பு எழுதப்பட்டிருந்தது.

அபுமன்யு – சுந்தரி கல்யாணம்,

குழு – மறுமலர்ச்சி.

நாடகக்கலையின் தந்தையான சங்கரதாஸ் சுவாமிகளின் நினைவு நாளை அனுசரிக்கும் பொருட்டு அவரது நாடகங்களில் ஒன்றான அபிமன்யு-சுந்தரி கல்யாணம் அன்று மேடை நாடகமாக நடைபெறவிருந்தது.

திருமண வயதைத் தொட்டு வளர்ந்து நிற்கும் தன் மகன் இலக்குமண குமாரனுக்குத் திருமணம் செய்ய முனைகிறான் அஸ்தினாபுரி அரசனாகிய துரியோதனன்!

அவன் எண்ணம் புரிந்த உடன் தனக்குள் மனக்கணக்கு போடும் சகுனி, மங்கையோடு சேர்த்து இம்மண்ணை ஆளும் நாராயணனையும் கௌரவர்களின் புறம் இழுத்துக் கொண்டுப் பாண்டவர்களை வெல்லும் நோக்கத்தோடு துவாரகபுரி மன்னனும், உலகை ஆளும் வைகுந்தனமாகிய வாசுதேவகிருஷ்ணனின் அருமைப் புதல்வியும், பேரழகியுமான அதிரூபசுந்தரியைப் பெண் கேட்டுச் செல்லுமாறு யோசனை கூறுகிறான்.

தன் மாமனின் யோசனையில் பூரித்துப் போன துரியோதனனும் துவாரகையில் யாதவகண்ணனைச் சந்தித்து தன் விருப்பத்தைக் கூறி.. கையோடு ஒப்புத் தாம்பூலம் மாற்றி விட்டுச் சென்று விடுகிறான்.

வில்வித்தை வீரன் காண்டீபனுக்கும், சுபத்திரைக்கும் பிறந்த வீர அபிமன்யுவை பால்ய வயது தொட்டே மணாளனாய் எண்ணி வைத்திருந்த சுந்தரி, தந்தையின் முடிவைக் கண்டு கோபமுற்று.. தன் மனம் தொட்ட மன்னவனை மட்டுமே மணாளனாக மணமுடிப்பேன் என்று சபதமெடுக்கிறாள்.

இச்சூழ்நிலையை ஓலையில் வடித்து அபிமன்யுவிடம் ஒப்படைக்கச் சொல்லி வாயுதேவனிடம் கொடுத்தனுப்புகிறாள் சுந்தரி.

செய்தி எட்டிய பின் எப்படியெல்லாம் போராடி அபிமன்யு என்பவன், தன் உள்ளங்கவர்க் கள்ளியான சுந்தரி தேவியை மணம் முடிக்கிறான் என்பதே நாடகத்தின் சாரம்சம்!

எடுத்ததும் முதல் காட்சி.. துச்சாதனன்,சகுனி மற்றும் கர்ணன் புடை சூழ அஸ்தினாபுர அரியணையில் கம்பீரமாய் அமர்ந்திருந்த துரியோதனனுடன் தொடங்கியது.

அஸ்தினாபுரத்து செல்வ வளங்களைப் பற்றியும், துரியோதனின் அருமை,பெருமைகளையும் எடுத்துச் சொல்லும் பாடல்கள் சிலவற்றைத் தூய தமிழில் கணீர்க்குரலில் பாடினான் ஒருவன்.

முன் வரிசையில் அமர்ந்திருந்த சிலர் ‘ஆஹா’ போட்டபடி நாடகத்தைக் கவனித்தனர்.

துரியோதனனின் ஆசையையும், சகுனியின் யோசனையையும் கேட்ட பின்பு காட்சி மாறுகிறது.

மாயக்கண்ணனாய்,நீல வர்ணனாய் மேடையில் தோன்றியவன் நடிகர் சிவக்குமாரின் சாயலில் இருந்தான்.

தான் வந்த நோக்கத்தைப் புட்டு புட்டு வைக்கும் துரியோதனன், ‘உன் பெண்ணை என் மருமகளாக்கிக் கொள்ள என்ன வேண்டுமானாலும் தருவேன்’ என ஆர்ப்பரிக்க…

அந்த சூத்திரதாரி கிருஷ்ணனோ, ‘அப்படியென்ன தந்து விடுவாய்’ எனக் கேட்க..

‘ஏழு லட்சம் ஒட்டகங்களின் மீது மூட்டை,மூட்டையாகப் பொன்னும்,பொருளும் கொண்டு வந்துள்ளேன்! அவ்வத்தனையையும்

பெற்றுக் கொண்டு உன் பெண்ணை என் மகனுக்குக் கல்யாணம் செய்து கொடு’ என்கிறான்.

நமுட்டுச் சிரிப்புடன் மறுக்கும் வைகுந்தன் ‘அவ்வளவு பொன்னெல்லாம் தேவையில்லை! இந்த கோபாலப் பெட்டியை நிரப்பினால் மட்டும் போதும்’ என்கிறான்.

ஒரு கை நீளமும்,ஒரு கை அகலமும் கொண்ட அந்தச் சிறிய பெட்டியை இகழ்ச்சியுடன் நோக்கி விட்டு அதில் பொன்னை நிரப்புகிறான் துரியோதனன்.

என்னவொரு ஆச்சரியம்! ஏழு லட்சம் ஒட்டகங்களில் அவன் ஏந்தி வந்தப் பொன்னும்,பொருளும் அந்தப் பெட்டியின் பாதியைக் கூட எட்டவில்லை!

அவமானத்தில் முகம் கறுக்க அசையாது நின்றவனைக் கண்டு ‘என்னப்பா இது?’ ரீதியில் மோவாயில் கை வைத்தக் கிருஷ்ணனின் முக பாவனையைக் கண்டு அவையோரும் நகைத்தனர்.

கண் முன்னே நடந்து கொண்டிருக்கும் கிருஷ்ணலீலாவையும், மருமகனின் முகத்தையும் கண்ட சகுனி விரைந்து சென்று, ஒட்டு மொத்த அஸ்தினாபுரத்துப் பொன்னையும் அள்ளிக் கொண்டு வந்து பெட்டியில் இட்டான்.

அப்படியும் கால்வாசிப் பெட்டிக் காலியாய் இருந்தது.

உடனே சமயோசிதமாக செயல்பட்டு மீதிப் பெட்டியைத் திருமணத்தின் போது நிரப்புவதாக வாக்குக் கொடுத்து ஒப்புத் தாம்பூலத்தை மாற்றிக் கொண்டு துரியோதனனுடன் அஸ்தினாபுரம் திரும்புகிறான்.

அடுத்த காட்சி தந்தைக்கும்,மகளுக்குமானது!

சுந்தரியாக வேடமிட்டிருந்த ஒருவன் உள் நுழைந்ததும் அரங்கம் முழுதும் கரகோஷம்!

அவன் ஆண் எனக் கூறிவிட முடியாதபடி அத்தனை திருத்தமான முகமும், பாவனையும்!

அடுத்து நடந்ததெல்லாம் காரசாரமான விவாதம் தான்!

‘துரியோதனனைப் போன்ற பணக்காரனை உலகில் காண முடியாதென்றும், அவன் மகனைக் கலியாணம் செய்து கொண்டால் சொகுசாக வாழலாம்’- என்றும் கூறி மகளை இலக்குமணனுடனானத் திருமணத்திற்கு வற்புறுத்துகிறான் கார்மேக வர்ணன்.

‘மனதில் ஒருவனை மணாளனாக வடித்து வைத்திருக்க, வேறு ஒருவனை ஏற்பதா’ என்று கோபம் கொள்ளும் அதிரூபசுந்தரி ‘வில்லாளனின் மகன் அபிமன்யுவைத் தவிர வேறு எவரையும் திருமணம் செய்ய மாட்டேன்’ எனத் தன் தந்தையிடம் சபதமிடுகிறாள்!

கண்ணீரும்,கோபமுமாய் பெண் குரலில் ‘சுந்தரி’ வேடமிட்டவன் பேசிய வசனங்கள் சபையோரை ‘சபாஷ்’ போட வைத்தது.

தன் தந்தை தனக்குத் திருமணம் செய்யவிருக்கும் செய்தியை ஓலையில் வடித்து வாயு பகவானிடம் சமர்ப்பிக்கிறாள் சுந்தரி! அபிமன்யுவிடம் சேர்த்து விடச் சொல்லி!

அடுத்து காட்சி மாறுகிறது!

காட்டு வெளியைக் கொண்டப் பிண்ணனியில்... தன் கரங்களில் வில்லையும்,அம்பையும் ஏந்தியபடி.. தூரத்தே தெரியும் மான் ஒன்றைக் குறி வைத்து பூனை போல் பம்மி வருகிறான் தனஞ்செயனின் வாரிசு வீர அபிமன்யு.

சந்திரனின் அம்சத்துடன் இவ்வையகத்தின் சகல சர்வ லட்சணத்தையும் முக வடிவாய்ப் பெற்றிருக்கும் பார்த்திபனின் மகன்.. அழகனாய் இல்லாதிருந்தால் தான் ஆச்சரியம் கொள்ள வேண்டும்!

திண்ணிய மார்பும்,திரண்ட தோள்களுமாய் காளையை ஒத்திருந்த அவனது தோற்றம்.. காண்போர் அனைவரையும் நிச்சயம் மயங்கச் செய்யும்!

அவன் வைத்த குறிக்குத் தப்பாது.. மான் மரித்துப் போக.. ஆர்ப்பாட்டமான சிரிப்புடன் வீரர்களாகியத் தன் நண்பர்கள் புடை சூழ.. காட்டை வலம் வந்தவனிடம் ஓலையை நீட்டுகிறார் வாயு பகவான்!

ஓலை சொன்ன செய்தியில் ஆக்ரோஷமடைபவன்.. விழி சிவக்கத் தன் அன்னையைத் நாடிச் செல்கிறான்.

பல்குனனின் மனைவியும்,அபிமன்யுவின் அன்னையுமாகிய சுபத்திரை மகன் கூறிய செய்து கேட்டுக் கொதித்துப் போய் வடமதுரை நோக்கிச் செல்கிறாள் தன் அண்ணனாகிய நாராயணனைத் தேடி!

தங்கையின் காலடி கேட்டு பொய்த் தூக்கத்தோடு கண்களை மூடிக் கொள்ளும் வாசுதேவன் கடைசி வரை அவள் புறம் திரும்பவேயில்லை!

வந்த காரியம் முடியாமலே வீடு திரும்பிய சுபத்திரை நடந்ததை புதல்வனிடம் கூற.. மாமனின் கபட நாடகத்தைப் புரிந்து கொண்டவன்..

அநியாயத்திற்குக் கோபம் கொண்டு உடனே புறப்படுகிறான்.. துவாரகபுரியை நோக்கி!

‘சென்று வருவேன்! வென்று வருவேன்’ – தன் இரும்புக் கரங்களைத் தூக்கிக் காட்டிக் கூச்சலிட்டவனைக் கண்டு கீழே அமர்ந்திருந்தோர் விசில் அடிக்கத் தொடங்கினர்.

தடைகளின்றிக் காதல் கை கூடி விடுமா என்ன?

அடுத்த காட்சி ஆற்றங்கரையும், அந்தணரும்!

தன் மங்கையைத் தேடி துவாரகைக்குச் செல்லும் வழியில் ஓர் ஆற்றங்கரையையும், அதில் மூழ்கித் தவித்துக் கொண்டிருக்கும் அந்தணரையும் காண்கிறான் அபிமன்யு!

பதறியடித்துக் கொண்டு.. அவரைக் காப்பாற்ற வேண்டி ஆற்றில் குதிப்பவன்.. பாதியிலேயே மறைந்து விட்ட அந்தணரைக் கண்டு வியந்து.. அவரைத் தொலைத்து விட்டதாக எண்ணித் தவிக்கிறான்!

வந்தவன்.. அந்தணன் உருவம் கொண்ட நந்த கோபாலன்! மருமகனை திசைத் திருப்பும் நோக்கத்தில் வெற்றி கண்டவன்! பின்பு போகிறதெனத் தன் வழி செல்கிறான் அபிமன்யு!

அடுத்ததாக வருகிறான்.. வல்லரக்கன்! முட்டிக் கொள்கிறது இருவருக்கும்!

வல்லரக்கனை வெல்ல முடியாமல் தவிக்கும் அபிமன்யு காளிகாதேவியைத் துணைக்கழைக்கிறான்.

அவள் அளிக்கும் மந்திர வாள் வல்லரக்கனின் தலையை வாங்கி விட.. வெற்றிக் களிப்பில் மூச்சு வாங்க.. இடுப்பில் கை வைத்துக் கொண்டு இறுமாப்புடன் நிற்கிறான்.

அவையோர் ஒரு நிலையிலேயே இல்லை! உயரமும்,அகலமுமாய் அங்கவஸ்திரத்தில் வெற்று மார்புடன் நிற்கும் அழகனின் மீது மையல் கொண்டு விட்டார்கள் போலும்!

அடுத்ததாக வருகிறான் கட கட கட கடோத்கஜன்! பீமன் பெற்ற பராக்கிரமன்! அவன் தாய்மாமனான வல்லரக்கனுக்குக் கஞ்சி எடுத்துக் கொண்டு!

மாய்ந்து விட்ட மாமனைக் கண்டு வெகுண்டு ‘யாரடா அது என் மாமனைக் கொன்றது’ என அபிமன்யுவிடம் கேள்வி கேட்கிறான்.

‘அவன் வடக்கே போய் விட்டான்’ – என்ற அபிமன்யுவின் பதிலைக்

கேட்டு வடதிசையை நோக்குகிறான். மீண்டும் ‘அவன் தெற்கே போய் விட்டான்’ என்றவனை முறைத்து தென் திசையில் நோக்குகிறான்.

நான்கு திசைகளிலும் எவனையும் காணாது குழம்பி நிற்பவனிடம்.. தோள் குலுங்கச் சிரித்து..

‘கொன்றவன் நான் தானடா’ – எனக் கர்வமாய்க் கொக்கரிக்கிறான் அபிமன்யு.

அதன் பின்பு அடித்துக் கொள்கிறார்கள் கடோத்கஜனும்,அபிமன்யுவும்!

வெற்றி,தோல்வி காணாது சரிசமமாகச் சண்டையிட்டுக் கொண்ட இருவரும் ஒருவரைப் பற்றியொருவர் அறிந்து கொள்ள முயலும் போது தான் தெரிகிறது.. இருவரும் அண்ணன்,தம்பியென்பது! பிறகென்ன! துணை கிடைத்த மகிழ்ச்சியுடன் செல்கிறான் சுந்தரியைத் தூக்க!

அடுத்தபடியாக வருகிறான் அரவான்!

வழி விடாது நின்றபடி.. மலை மீது ஒரு காலைத் தூக்கி வைத்துக் கொண்டு.. ‘வல்லமை இருந்தால் சண்டைக்கு வா.. இல்லையெனில் காலுக்கடியில் செல்’ என்கிறான்.

அவனுடனும் சண்டையிட்டுக் கடைசியில் அவனும் தமையன் என்றறிந்து கொண்டு அவனையும் கூட்டிச் செல்கிறான்!

அடுத்ததாக தொந்திசட்டி!

‘என் எடைக்கு எடைப் பொருள் கொடுத்து விட்டு முன்னே செல்’ என்றவனிடமும் சண்டையிட்டு.. அவனும் தன் தமையன் என்று தெரிந்து கொண்டு.. அவனையும் இழுத்துச் செல்கிறான்.

கடைசியில்.. துவாரகையை அடைந்து அஸ்தினாபுரத்து வீரர்களுடனும்,துரியோதனுடனும் சண்டையிட்டு.. பந்தக் காலிலேயே அனைவரையும் கட்டி வைத்து விட்டு.. தானும் கட்டுண்டது போல் நடித்த கமலக் கண்ணனை கண்டு கொள்ளாது.. மணமேடையில் வெற்றி கரமாக சுந்தரியுடன் அமர்கிறான் அபிமன்யு!

பால்ய பருவத்தில்.. பாட சாலையில்.. ஆற்றுக்குள் தவறி விழுந்தத் தன் கணையாழியைக் கண்டுபிடித்துக் கொடுத்து.. அதைத் தன் விரலில் இட்டு.. ‘இன்று முதல் நீயே என் மனைவி’ எனக் கந்தர்வ மணம் புரிந்த அழகன்.. இன்றுத் தடைகள் பல தாண்டி.. ஊர் மக்கள் முன்பு மீண்டுமொரு முறைத் தன் கரம் பற்ற வந்ததை எண்ணிக் கர்வம் கொண்டு.. விழி கொள்ளாக் காதலுடன்.. அவன் புறம் தன் சிரம்

தாழ்த்துகிறாள் சுந்தரி.. தன் கழுத்தில் மாலையிடப் போகும் அவன் கைகளுக்காக!

மங்கல வாக்கியம் முழங்க.. அபிமன்யு தன் பொற் கரங்களால் சுந்தரியின் கழுத்தில் மாலையிட.. அவன் புகழ் பாடும் பாடலோடு முடிகிறது நாடகம்!

கொடுத்த காசுக்கு அதிகமாகவே உண்டு விட்டதை போல்.. அந்த நாடகம் கொடுத்தத் திருப்தியில்.. உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியுடன் அனைவரும் எழுந்து நின்று கைத் தட்டினர்.

பத்து பேர் கொண்ட 'மறுமலர்ச்சி' குழுவைச் சேர்ந்த அனைவரும் மேடையில் நின்று சபையோரிடம் நன்றி தெரிவித்து விட்டு.. இனி வரும் காலத்தில் இந்தக் கலையை வளர்க்கவிருக்கும் தங்களைப் போன்றோரை ஆதரிக்குமாறு கேட்டுக் கொண்டதுடன் சபை காலியானது.

அபிமன்யு வேடத்தில் அச்சுபிசகாமல் மேடையில் நடித்த 'அவன்' மேடைக்குப் பின்புறமிருந்த அறையில்.. கண்ணாடி முன்பு அமர்ந்தபடி தன் முகத்திலிருந்த மேக்கப்பைக் கலைத்துக் கொண்டிருந்தான்.

சிரித்த முகம் தான் ஆனாலும்.. தற்போது அதீத இறுக்கத்தைச் சுமந்து கொண்டிருந்தது.

"டேய் வசந்த்.." – என்ற நண்பனின் குரலுக்குத் திரும்பியவனிடம்..

"சாருமதி உன்னைப் பார்க்க வந்திருக்காங்க" என்றான் அவன்.

ஏற்கனவே இறுக்கத்துடன் இருந்த அவனது முகம்.. மேலும் கற்பாறையாய் மாறி விட ஒரு நொடி செய்து கொண்டிருந்த வேலையை நிறுத்தி விட்டு யோசித்தவன்.. அடுத்த நொடி.. கடகடவென முகம் துடைத்து, உடை மாற்றி விட்டு அவளைத் தேடிச் சென்றான்.

அரங்கத்தின் வாசலிலிருந்த மரத்தடியில் கைகளைப் பிசைந்தபடி நின்று கொண்டிருந்தவளின் அருகே சென்று நின்றான்.

அவன் வந்ததும்.. தானாகவே ஒரு அடி பின்னால் நகர்ந்தவள்.. அருகே நின்றிருந்தத் தன் சைக்கிளின் ஹாண்டில் பார்-ஐப் பற்றிக் கொண்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

மஸ்டர்ட் நிறத்தில், சின்னச் சின்ன வெள்ளைப் பூக்களிட்ட சுடிதார் அணிந்திருந்தாள். வெள்ளை நிறத் துப்பட்டா! ரெட்டை ஜடையுடனிருந்தவளின் காதுகளில் அதே நிற ப்ளாஸ்டிக் தோடுகள்!

கேட்டால்.. ஃபேஷன் என்பாள்! வட்டமாய் மரூன் நிறப் பொட்டு! இருபுருவ மத்தியில் அல்லாது.. சற்று மேல் ஏறியிருந்தது. மூக்கின் இடது புறத்தில் ஒரு மூக்குத்தி! அது மட்டும் வைரமென்று அவனுக்குத் தெரியும்!

அடர்த்தியாய்த் தீட்டப்பட்டிருந்த மைவிழிகள் இரண்டும் அவன் முகம் காண முயலாமல்.. அலைபாய்ந்த வண்ணமிருப்பதை அவனால் உணர முடிந்தது.

தன் கூரிய கண்களால் அவளைக் கூறு போட நினைத்து... அழுத்தமாய் நோக்கியவன்.. அடுக்கடுக்காய் வரிசை கட்டி நின்ற எண்ண ஓட்டங்களை அணை போட்டுத் தடுத்து..

“என்ன?” என்றான் அவளிடம்.

பதிலின்றி உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றவளை எரிச்சலுடன் நோக்கி..

“ஹாண்டில் பார்-ஐ பிடிச்சுக்கிட்டு ஹாய்-ஆ நிக்கத் தான் என்னைத் தேடி வந்தியா?” – பாயத் தொடங்கியவனிடம் அவசரமாக..

“மாமாவைப் பார்க்க ஒரு தடவை நீங்க ஹாஸ்பிடலுக்கு வாங்க ப்ளீஸ்” – என்றாள் அவள்.

“எதுக்கு?”

“என்ன தான் நாளைக்கு டிஸ்சார்ஜ் பண்ணிக்கலாம்ன்னு டாக்டர் சொல்லிட்டாலும், மாமா முகம் தெளிவாவே இல்ல! ஒரு வேளை.. உங்களை நினைச்சு....” - அவள் முடிப்பதற்குள் குறுக்கே புகுந்தவன்..

“அவர் என்னை நினைச்சுக் கவலை பட்ற ஆளெல்லாம் கிடையாது! அவரோட அன்பு,அக்கறைக்குப் பாத்திரமான ஒரே ஜீவன்.. இந்த உலகத்துல நீ மட்டும் தான்! உன் முகத்தை நீ தெளிவா வை! தன்னாலயே அவரும் தெளிஞ்சிடுவார்” – அசால்ட்டாகப் பதில் கூற.. இப்போது அவள் எரிச்சலுற்றாள்.

“உங்களுக்கு அப்படியென்ன கோபம் அவர் மேல?, பெத்தத் தகப்பனை எதிர்த்து சண்டை போட்டு வீட்டை விட்டு வெளிய வர்ற அளவுக்கு?, அத்தையில்லாம, உங்களை சின்ன வயசுல இருந்து எவ்ளோ கஷ்டப்பட்டு வளர்த்தார்?, இது தான் நீங்க அவருக்கு செய்யுற கைம்மாறா?”

“ஏய்.. மனசாட்சியைத் தொட்டு சொல்லு! கஷ்டப்பட்டு அவர் வளர்த்தது

என்னையா இல்ல உன்னையா?”

“அப்டின்னா.. அப்டின்னா.. நான் தான் பிரச்சனையா உங்களுக்கு?, அப்போ வீட்டை விட்டு வெளிய போக வேண்டியது நான் தான். நீங்க இல்ல”

“ஆமா! நீ தான் என் பெரிய பிரச்சனை! விடாம துரத்தியடிக்கிற ஏழரைச் சனியைக் கூட ஈசியா சமாளிச்சுடுவேன், ஆனா.. உன் விஷயத்துல.. ஒன்னும்.. முடியல”

-காலர் பட்டனைத் தொடர்ந்த அடுத்த பட்டனை இடது கையால் பட்டெனக் கழட்டியபடி.. எங்கோ பார்வையை பதித்துக் கொண்டு கோபமும்,எரிச்சலுமாய் கூறியவனை மூச்சு வாங்க மிதமிஞ்சிய ஆத்திரத்துடன் நோக்கினாள் அவள்.

நேர்ப்பார்வையாய் தன்னை நோக்கியவளின் அருகே நெருங்கி.. ஹாண்டில் பார்-இன் மீதிருந்த அவள் கையின் மீது தன் கரத்தை வைத்தான்.

“வந்தப்போ கண்ணாலயே மண்ணைத் தோண்டிட்டு இருந்த?, இப்போ மட்டும் ஏன் நிமிர்ந்து பார்க்குற?” – காதருகே அடிக்குரலில் சீறியவனிடம்..

“மாமாவைக் கஷ்டப்படுத்தாம மரியாதையா... திரும்ப வீட்டுக்கே வந்துடுங்க” – குரல் நடுங்க அவள்.

“உன் கையைத் தொட்டிருக்கேன். நீ ஒன்னுமே சொல்லல?”

“பேச்சை மாத்தாதீங்க”

“துப்பட்டாவை இப்படி குறுக்கால கட்டாதன்னு நான் எத்தனை தடவை சொல்லியிருக்கேன்?”

“என்ன?? சம்மந்தமில்லாம பேசி என்னைக் கோபப்படுத்தி பார்க்குறீங்களா?”

“கோபப் படு! அப்போ தான் எனக்கு உன்னை ரொம்ப சைட் அடிக்கத் தோணும்”

“...............”

“எதுக்குடி கண்ணுல தண்ணி தேங்குது?, யாருக்காக அழற?, உன் மாமனுக்காகவா?, எனக்காகவா? இல்ல.. உன் மாமன் பார்த்து வைச்சிருக்கிற அருமை மாப்பிள்ளைக்காகவா?”

“இப்போ எதுக்கு இந்த தேவையில்லாத பேச்சு?”

“தேவையில்லாத பேச்சா?, ஹ்ம்ம்ம்! இப்போதைக்கு என்னோடப் பெரிய தேவையே நீ தான்! அது தெரியுமா உனக்கு? ராத்தூக்கம் பறி போய் நான் ராட்சசன் மாதிரி சுத்திட்டிருக்கக் காரணமே நீ தான்!

“............”

“வீட்டுக்குத் தான?, வர்றேன்! கண்டிப்பா வர்றேன்! அதுக்கு முன்னாடி உன் மாமன் கிட்ட சொல்லி உன் கல்யாண ஏற்பாட்டை நிறுத்து. அப்புறம் வர்றேன்”

“...........”

“முடியாது! உன்னால நிச்சயம் முடியாது! சொந்தப் பொண்ணா நினைச்சு வளர்த்தத் தாய் மாமன் மனசு கோணுற விசயத்தை உன்னால என்னைக்கும் செய்ய முடியாது! போதாததுக்கு மனுஷன் ஹார்ட்-அட்டாக் வந்து படுக்கைல விழுந்துட்டார்! இனி அவர் கௌரவத்தைக் காப்பாத்தி.. அவரை சந்தோசப்படுத்துறதைத் தான் முதல் வேலையா வைச்சிருப்ப! ஆனா.. நான் அப்டியில்ல! மனசாட்சியைக் கொன்னுட்டு.. எந்திரமா வாழ என்னால முடியாது”

“.............”

“மறுபடி மறுபடி எதுக்கு அழற? வளர்த்த பாசம் கண்ணீரா மாறி.. கன்னத்துல அருவியா கொட்டுதா?”

“...........”

“இப்பவும் ஒன்னும் பிரச்சனையில்ல! இப்டியே என் கையைப் பிடிச்சுக்கிட்டு.. என் கூட வந்துடு! எங்கயாவது போய் கல்யாணம் பண்ணிக்கலாம்! மாமனாவது மண்ணாங்கட்டியாவதுன்னு” – தன் பிடியை இறுக்கித் தீவிரமான குரலில் புருவம் சுருங்கக் கூறியவனிடம்..

“என்னாலயும் மனசாட்சியைக் கொன்னுட்டு வாழ முடியாது” – என்றாள் அவள்.

“அப்போ என்னைத் தேடி வராத! உன் முகத்தை என் கிட்டக் காட்டாத! என்னை ஏங்க வைக்காத! உயிரோட நிற்க வைச்சு எரிக்கிற மாதிரி.... தகதகன்னு தலையிலிருந்து கால் வரைக்கும் மொத்தமா எரியுது எனக்கு... ஒவ்வொரு தடவையும் உன்னைப் பார்க்கும் போது”

“..................”

“என் கண்ணு முன்னாடியே வேற ஒருத்தன் பக்கத்துல உன்னை நிக்க

வைச்சு அழகு பார்க்குறார் அந்த மனுஷன்! சொந்த மகன் மேல இவ்ளோ வெறுப்பா?, அப்டி என்னடி பெரிய ஆளு நீ?, என்னைத் தவிர உன்னைக் கட்டிக்க எவனுக்குத் தகுதியிருக்கு?"

"இப்போ வந்து பெருசா குதிக்கிறீங்களே! நிச்சயதார்த்த ஏற்பாடெல்லாம் நடக்கும் போது.. வேடிக்கை தான பார்த்தீங்க?, இதையெல்லாம் அப்ப சொல்ல வேண்டியது தான?" – பொறுக்கமாட்டாமல் வார்த்தைகள் வெளி வந்து விட்டது அவளுக்கு.

"ஓஓ!! நான் சொன்னாத் தான் தெரியனுமா?, ஏன், என்னைப் பார்த்தா ஆம்பளையாத் தெரியலயா உனக்கும், உன் மாமனுக்கும்?, ஃபர்ஸ்ட் ஆஃப் ஆல், உங்களோட எலிஜிபிள் மாப்பிள்ளைங்க லிஸ்ட்ல என் பேர் இல்லவே இல்ல! போட்டியில கலந்துக்கிட்டா தான ஜெயிக்கிறதும், தோற்கிறதும்! உங்களுக்குத் தான் நான் ஒரு ஆளே கிடையாதே!"

"முட்டாள்த்தனமா வாக்குவாதம் பண்றீங்க நீங்க?"

"வேற என்ன செய்யனும்?, 'ஷேமமா இரு'-ன்னு உன் தலையில அச்சதையைத் தூவனுமா?"

"முடிவா என்ன தான் சொல்றீங்க?, வீட்டுக்கு வருவீங்களா, மாட்டீங்களா?"

"இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாது"

"மாமா பேச்சை மீறி நான் எதுவும் செய்ய மாட்டேன்"

"உனக்கும்,எனக்கும் இடைல அந்தாளு ஏன் டி வர்றான்?"

"அவன்,இவன்னு சொல்லாதீங்க! எனக்கு ரொம்பக் கோபம் வரும்"

"சரி அவர்"

"………."

"இப்போ சொல்லு! உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா?"

"மாமாவோட விருப்பம் தான் என் விருப்பமும்"

"அவரை நான் காதலிக்கும் போது, அவர் விருப்பத்தைக் கேட்டுக்கிறேன்! இப்போ நீ சொல்லு.."

அவன் வார்த்தைகளினால் களுக்கெனத் தோன்றிய சிரிப்பை அடக்கி.. வேறு புறம் நோக்கியவளைக் கண்டுத் தானும் புன்னகை கொண்டு.. மேலும் அவளை நெருங்கி நின்று…

“அன்னிக்கு உன்னைக் கட்டிப் பிடிச்சிருக்கேன்! முத்தம் கொடுத்திருக்கேன்! இப்போ கைப் பிடிச்சுப் பக்கத்துல நிக்குறேன்! இது… எல்லாத்துக்கும் என் இஷ்டப்படி தான் நான் அர்த்தம் பண்ணிப்பேன்” – அடிக்குரலில் கூறியவனைக் கண்டு..

உடல் முழுதும் கன்றிச் சிவக்க.. நிமிடத்தில் சுருங்கிச் சுண்டிப் போன முகத்தை அவனிடம் காட்டாது.. மறுபுறம் திரும்ப முயன்றவளைத் தடுத்து…

“இந்தக் கையை நான் கடைசி வரை விடப் போறதில்ல! அதனால.. எங்கப்பன் கிட்டயும், அந்த மாப்பிள்ளைக் கிட்டயும் போய்ச் சொல்லு! என் மாமன் மகனுக்குத் தான் என் மேல முதல் உரிமைன்னு” – எனக் கூறி விட்டு… அவளை அணைத்தவாறு நின்று சைக்கிளின் ஸ்டாண்டை நீக்கி விட்டு.. விக்கித்துப் போய் நின்றவளைப் பார்த்தபடியே நகர்ந்து விட்டான்.

## அத்தியாயம் – 2

மறுபடி ஒரு கண்ணதாசன் பாடல்! ஆனா இந்த முறை இளையராஜா இல்ல! எம்.எஸ்.வி! இந்தப் பாட்டைத் தேர்ந்தேடுக்க இரண்டே காரணங்கள் தான்! ஒன்று எஸ்.பி.பி மற்றொன்று கமலஹாசன்! இளையராஜாவின் மீது எத்தனை மோகமோ.. அதே அளவு மயக்கம் எனக்கு எஸ்.பி.பியிடமும் உண்டு! ஒரு நாள் இல்ல, ஒரு நாள் நிச்சயம் எஸ்.பி.பியைக் கடத்திட்டு வந்து.. நாள் முழுக்கப் பாட வைச்சு.. பக்கத்துலயே உட்கார்ந்து கேட்கப் போறேன்!!

எடுத்ததும் எஸ்.பி.பி சொல்ற ‘ஓஹோ’-விலேயே நாம ஃப்ளாட்! பல்லவியில்… ‘come on say it once again..’ –ன்னு தொடங்குற மனுஷன் குரல்ல வர்ற அடுத்தடுத்த வாக்கியங்கள் ஒவ்வொன்னும்… கொடுக்குற பாவனைக்காகவே… ஏழேழு ஜென்மங்களுக்கும் மனுஷப்பிறவியெடுக்கலாம்!

அத்தோட நிறுத்த முடியுமா?, தாடியும்,மீசையுமாக அடர்ந்தத் தலைமுடியும்,காதல் கொட்டும் காந்தக் கண்களுமாய்.. எஸ்.பி.பியின் குரலைத் தனதாக்கிக் கொண்டு.. சந்தம் பாடும் கமலஹாசனை வர்ணிக்க.. பத்து விரல்கள் போதாது!

‘கவிதை உலகம் கெஞ்சும்..

உன்னைக் கண்டால் கவிஞர் இதயம் கொஞ்சும்..

கொடுத்த சந்தங்களில்.. என் மனதை நீ அறிய..

நான் உரைத்தேன்...’

கை தேர்ந்த கவிஞனாகவே உருமாறி.. தான் உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தையின் அர்த்தத்தையும் உள் வாங்கி.. அதை விழி வழி வெளிக் கொணர்ந்து.. திரையில் தெரியும் தன் பிம்பத்தோடு நம்மைக் காதல் கொள்ள வைக்கும் கமல்ஹாசனுக்கு.. ஒரு கூடை முத்தங்களையும் உடனடியாகப் பொட்டலம் கட்டுகிறேன்!

1981, கோபாலபுரம்,மெட்ராஸ்.

தெருவோரமாய் அமைந்திருந்த அந்த டீக்கடையில் நான்கு பேர் அமருமளவிற்கு நீளமாய் பெஞ்சு ஒன்று போடப்பட்டிருந்தாலும்... அவ்விருக்கையை அமரிக்கையுடன் மறுத்து விட்டு.. அருகிலிருந்த குட்டிச் சுவரில் ஆர்ப்பாட்டமாய் ஐக்கியமாயிருந்தனர் அந்த ஐந்து இளைஞர்களும்.

கட்டவிழ்ந்தக் காளைகளெனப் பெயர் வாங்கி.. தங்களது வீட்டாரினால் தண்ணீர் தெளித்து விடப்பட்டிருந்த ஐந்தறிவு ஜீவிகள் ஐவரும்!

ஒரே தட்டில் உண்டு, ஒரு படுக்கையில் உருண்டு, ஒரே கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் ஒரு கூட்டுப் பறவைகள்! மூன்றாமாண்டு பட்டப்படிப்பில் இருப்பவர்கள்! ஆனால் படிக்கும் படிப்புக்கும், நடந்து கொள்ளும் விதத்துக்கும் சற்றும் சம்பந்தமிருக்காது.

‘டீசண்ஸி’ என்ற வார்த்தைக்கான அர்த்தத்தை அந்த டீக்கடை வாசலைக் கூட்டிப் பெருக்கும் ரத்தினத்திடம் கூடக் காணலாம்! ஆனால் பட்டறிவு பெற்று வளர்ந்து நிற்கும் இந்த சிற்றறிவு ஜீவிகளிடம்.. நாகரீகம்,பண்பாடு என்பதெல்லாம் மருந்துக்கும் கூடக் கிடையாது!

சிரிப்பும்,கும்மாளமுமாய் அத்தெருவையே கதிகலங்கச் செய்து கொண்டிருந்த ஐவரையும் கண்டு.. டீக்கடை பெஞ்சில் அமர்ந்திருந்த பெருசுகள் சிலர் தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டனர்.

“என்ன பெருசு??, வாய்லயே டைப் அடிச்சிட்டிருக்க?” – கூட்டத்தில் ஒருவனனான ஜெயந்தன்.. அமர்ந்திருந்த பெரியவர் ஒருவரை நோக்கிச் சத்தமிட்டான்.

“அதான?, உன் மக லலிதா கிட்ட சொன்னேனா.. பக்கம்,பக்கமா டைப்

அடிச்சுத் தருவாளே!" – அசோகன்.

"புரியலயா பெருசு?, டெய்லி சாயந்தரம் 4 மணிக்கு டைப் ரைட்டிங் க்ளாஸ்க்குப் போற உன் மக லலிதாவுக்கு சார் தான் பாடி-கார்ட் வேலை பார்க்குறாரு"

விளக்கமாய் சொன்ன வசந்தின் பதிலைக் கேட்டு ஐவரும் ஹாஹா,ஹோஹோவென ஒருவரையொருவரின் தோளைத் தட்டிச் சத்தமாய்ச் சிரிக்க...

"சண்டாளப் பாவிங்களா! உங்களை ஒரு வழி பண்ணாம விட மாட்டேன் டா" – கோபமாய்க் கூறியபடிப் பேப்பரை பெஞ்சில் எறிந்து விட்டு நகர்ந்தவரிடம்..

"அதுக்கு முன்னாடி நான் உன் மக லலிதாவை ஒரு வழி பண்ணிடுவேன்ய்யா தொங்கு மீச" – எனக் கொக்கரித்த அசோகனைக் கண்டு மறுபடி ஒரு சிரிப்பலை ஐவரிடமும்.

கண்டும் காணாமல் அனைத்தையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த டீக்கடைக்காரர் இவர்களது வாய்ச்சவடாலைத் தற்காலிமாக நிறுத்தும் பொருட்டுத் திருகுகிறார் தன் வானொலிப் பெட்டியை.

'வணக்கம் நேயர்களே.. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம், தமிழ் சேவை 2, நேரம் 8 மணி 1 நிமிடம்"

ஓங்கி ஒலிக்கிறது மதுரக் குரல் மன்னன் கே.எஸ்.ராஜாவின் குரல்! இலங்கை இழந்த மிகப் பெரிய பொக்கிஷம்! இவர் நிகழ்ச்சியைத் தொகுத்தளிக்கும் விதமும், அதில் ஒலித்த பாடல்களும் மக்கள் மனதில் என்றும் நீங்காதவை! விரலால் இடது காதை அடைத்துக் கொண்டு பேசுவது இவரது ஸ்டைல் எனவும் இவர் பணியாற்றிய காலத்தில் இவருக்கென ஒரு ரசிகர் பட்டாளமே இருந்ததாகவும் கூறப்படுகிறது! இவர் மட்டுமல்ல ராஜேஸ்வரி ஷண்முகம்,பி.ஹெச்.அப்துல்ஹமீது போன்றவர்களின் தமிழ் உச்சரிப்பைத் திரும்பப் பெற நாம் இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் காத்திருக்க வேண்டுமோ!

'டண்டைன்! அழைக்கிறது வெள்ளவத்தை ஆராதனா கோல்டுஹவுஸ்,

வாங்கோண்ணா... அட வாங்கோண்ணா..

22 கேரட் தங்கத்தில் அன்னக்கிளி வளையல்களுக்கும், பல்வேறு டிசைன் தங்க நகைகளுக்கும் ஆராதனா கோல்டுஹவுஸ்... 32, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை, வெள்ளவத்தை. தொலைபேசி 87045.'

விளம்பரத்திலும் தொடர்கிறது அவர் குரல்.

‘இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம், தமிழ் சேவை 2.

பொங்கும் பூம்புனல்......

முத்தையன் கட்டு ராகினி,சதானந்தம், ஜமுனா, இந்து, குமாரி சுபா இவர்களுக்காக நாம் தருவது…’

-என்று அவர் முடித்ததும்… ஒலிக்கிறது டி.ராஜேந்திரின் இசையும், மலேசியா வாசுதேவன் குரலும்!

“கூடையில கருவாடு… கூந்தலில பூக்காடு….”

போதுமே நம் கழிசடைகளுக்கு! ‘ஓஓஓஓஓஓ’ என்று கூவிக் குட்டிச்சுவரிலிருந்துக் குதித்துக் கீழிறங்கி.. தங்கள் போக்கில் பாடியபடி ஆடத் துவங்கி விட்டனர். தலையில் அடித்துக் கொண்ட டீக்கடைக்காரரும் “ஹூம்” என மறுபுறம் திரும்பிக் கொண்டார்.

“என்னுயிர் ரோசா.. எங்கடி போற..

மாமலர் வண்டு.. வாடுது இங்கு..

அம்மாளே… அம்மாளே…”

கையிலிருந்த நோட்டில் தாளம் போட்டபடி பாடிய வசந்தின் குரல் முன்னே ஒலித்ததும், அவனைத் தொடர்ந்து நால்வரும் நடுவே நின்றவனைச் சுற்றி வந்தபடி..

“பொழுதோட கோழி கூவுற வேளை…

ராசாதி ராசன்.. வாரான் டி முன்னே..” – பாடவும், அந்த இடமே அவர்களின் தயவால் களைகட்டத் துவங்கியது.

“ரொம்பப் புலம்பாதடா வசந்த்!, அதோ வர்றா பாரு.. உன் ஆச ரோசா” – ஆட்டத்தோடு ஆட்டமாக விஜயன் என்பவன் கைக் காட்டிய திசையைத் தானும் நோக்கினான் வசந்த்.

அதுவரை முழுச் சிரிப்புடன் நண்பர்களோடு கொட்டமடித்துக் கொண்டிருந்தவனுக்கு.. பத்தடி தூரத்தில் பள்ளிச் சீருடையில் குனிந்தத் தலை நிமிராமல் வியர்த்து வழிய நடந்து வந்தவளைக் கண்டு.. விரிந்த சிரிப்பு உதட்டோடு உறைய.. இதழோடு சேர்த்து முகத்தையும் சுருக்கிக் கொண்டு.. “ம்க்கும்” எனத் தொண்டையைக் கனைத்தபடி சட்டையை நீவி விட்டுக் கொண்டான்.

“என்னடா?, ரோஜாவைப் பார்த்த ராஜாவா நெஞ்சை நிமிர்த்திட்டு

நிற்ப-ன்னு பார்த்தா.. பம்முற?”

“ப்ச், அது என்ன ரோஜா?. எனக்கு ரோஜா-லாம் பிடிக்காது! மல்லிப்பூ தான் இஷ்டம்”

“ஓஓஓஓஓஓஓஓஓஓ.. நீ அப்பிடி வர்றியா??????” – ஒருவிதமாய்க் கூறிக் கண்ணடித்த அசோக்கின் தலையில் ஒரு இடியை இறக்கி விட்டு மீண்டும் சுவர் மீது ஏறி அமர்ந்தான் வசந்த்.

“உன் சிட்டு தலைல இருக்கிற மல்லிப்பூவோட அளவைப் பாரு! வழியை மறிச்சு.. வாசம் பிடிக்கிறதை விட்டுட்டு.. அமைதியா உட்கார்ந்துட்ட! போடா!”

‘ம்க்கும்! வாசம் பிடிச்சதுக்குத் தான் வாங்குனேனே கன்னத்துலயே! என் அப்பன் கையால!’ – மனதுக்குள் எண்ணிக் கொண்டவன் அப்போதும் கூட எரிவதாய்த் தோன்றிய கன்னத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

எரிச்சலும்,கோபமாய் பல்லைக் கடித்துக் கொண்டு அவளை நோக்கியவனுக்கு.. ஓரக்கண்ணால் தன்னை அளந்தபடி பம்மிக் கொண்டு வந்தவளைக் கண்டு ஆத்திரம் அளவு தாண்டியது.

அல்ட்ரா-மாடர்ன் முகத்துலயும் அப்பாவித்தனத்தைக் கொண்டு வர இவளால மட்டும் தான் முடியும்!

ஆம்! அல்ட்ரா-மாடர்ன் முகம் தான்! நேர்வகிடுடனான.. கற்றை முடிகள் இரண்டு வில்லாய் வளைந்து.. நெற்றியைத் தழுவி.. அவளது கண்களின் ஓரத்தைத் தொட்டு நின்றது. நீளமான மூக்கு! வடிவான இதழ்கள் என.. இளமையின் உச்சமான பதினேழுகளின் இறுதியில் இருந்தவள்.. அதற்கே உண்டான செழுமையைத் தன் கன்னங்கள் இரண்டிலும் பருக்களாய்ப் பெற்றிருந்தாள். ஒல்லியாய்,உயரமாயிருந்தவள்.. நடிகை மாதவியின் சாயலை ஒத்திருந்தாள்! அதே பெரிய கண்களுடன்! இப்போது அந்தக் கண்கள் முழுதையும் நிறைத்திருந்தது பீதி!

‘எல்லாம் நடிப்பு! ஏய்.. இரு டி இரு! எங்கப்பனோட சேர்ந்து ஆட்டமா ஆடுற?, இன்னிக்கு உன்னைக் கண் கலங்க வைக்கல, என் பேரு வசந்த் இல்லடி!’

இத்தனை ஆங்காரத்துடன் அவன் ஆக்கிரோஷமாய் சிந்திக்கக் காரணம் ஒரு வாரத்திற்கு முன்பு அவன் செய்து வைத்த காரியமும்.. அதைத் தொடர்ந்து நடந்த சம்பவமும் தான்!

குட்டிச் சுவரில் அமர்ந்திருப்பவனைத் தூரத்தில் வரும் போதே கண்டு

கொண்டாள் சாருமதி. தினமும் வேறு வழியில் பள்ளி செல்பவள், இன்று விரைவாகப் பள்ளியை அடையும் நோக்கத்துடன் இந்தத் தெருவைத் தேந்தெடுத்திருந்தாள். உண்மையில்.. அவனைக் காணும் வரை அவளது கவலையே வேறு!

அரசின் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வுக்காக அவளும்,அவள் தோழிகளும் இயற்றிய பாடலொன்றை இன்று பள்ளியில் அனைவரின் முன்பும் அவள் பாடியாக வேண்டும்.

பொதுவாகவே அவளுக்கு மேடை என்றாலே அலர்ஜி! பயம்! பேச்சு,பாட்டு,நடனப் போட்டிகள் எதிலும் இதுவரை அவள் கலந்து கொண்டதேயில்லை! வசந்துக்கு நேர் எதிர்! அவன் மேடை தான் தனது காதலியெனப் பெருமை பீற்றுபவன்!

அவனைப் போலத் தான் இருந்திருக்கக் கூடாதா என்று புலம்பியபடி வந்தவளுக்கு அவனை இங்கு கண்டது அதிர்ச்சி தான்!

அதிலும் போன வாரம் நடந்த அந்த அகோர (?!) சம்பவத்துக்குப் பிறகு வசந்தை இன்று தான் காண்கிறாள். ஆம்! அகோர சம்பவம் தான்! சாந்தமே உருவான மாமாவின் மறு முகத்தை முதன்முதலாக அவள் நேரில் கண்டது அன்று தான்!

வசந்த்தின் வலது கன்னத்தில் விட்டாரே ஒரு அறை! அவனது செவிப்பறையில் பூகம்பம் வந்து.. காது ஜவ்வு உயிரை விட்டிருந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை! அப்படியொரு அடி!

அந்த ஒட்டுமொத்த நிகழ்விலும் அவள் மீது தவறென்பது ஒரு சதவீதம் கூடக் கிடையாது! ஆனால்.. ஏனோ அதன் பின்பு அவன்.. அவளைப் பார்க்கும் பார்வையில் ஆத்திரம் தான் அதிகமிருக்கிறது!

இப்போது வானொலியில் வைரமுத்துவின் வார்த்தைகளை உச்சரித்த வண்ணம் கே.ஜே.யேசுதாஸ் தோன்ற.. அவருக்கு பக்க வாத்தியம் வாசித்துக் கொண்டிருந்தார் ஜென்சி.

தன்னைக் கடந்து செல்பவளை அழுத்தமாக நோக்கியவன்.. நண்பர்களின் தோளில் தட்டி.. அவளை நோக்கிக் கை காட்டி விட்டு.. விறுவிறுவென அவளருகே ஓடிச் சென்றான்.

“ஏய்.. என்னடா.. பொண்ணை வட்டம் கட்டப் போறானா?” – என்ற ஜெயந்தனிடம் “நம்ம வேலையே அது தான?” என்ற அசோகனும் நண்பனை நெருங்கி விட..

சரியாக அப்போது.. யேசுதாஸ் வேறு.. எக்குத்தப்பான வரிகளுடன் தன் வாயைத் திறக்க... எப்போதும் போல் கூடச் சேர்ந்து பாடத் தொடங்கிய வசந்த், சத்தியமாக அதன் அர்த்தம் உணர்ந்து பாடவில்லை! ஆனால்.. வார்த்தைகளுக்கான பாவனைகளைக் கொடுக்க மட்டும் தவறவில்லை!

‘படுக்கையில் பாம்பு நெளியுது....

தலையணை நூறு கிழியுது..

நீ அணிகிற ஆடையிலொரு நூலென தினம் நான் இருந்திட.. சநிதபமபதநி....

பூ மலர்ந்திட நடமிடும் பொன்மயிலே...

ஐ லவ் யூ... ஐ லவ் யூ.. ஐ லவ் யூ’

திடீரென அவன் நடுத்தெருவில் வழிமறிப்பான் என்று எதிர்பார்த்திராத சாருமதி அதிர்ந்து போய் தன் பெரிய கண்ணை விரித்து பேந்தப் பேந்த விழித்தபடி நிற்க.. அவளைச் சூழ்ந்து கொண்ட ஐவரும் ஸ்லோ மோஷனில் சுற்றி வர.. கூடுதலாக பாட்டு பாடியபடி வசந்தன்!

இவர்களனைவரையும் வேடிக்கை பார்த்தபடி டீக்கடையில் அமர்ந்திருந்த கூட்டத்தைக் கண்ட சாரு, அங்கிருந்து எவரும் நிச்சயம் உதவிக்கு வரப் போவதில்லை என்றுணர்ந்து.. வசந்த்தை நோக்கிய சமயம், அவனும் நின்று.. கைகளைக் கட்டிக் கொண்டு அவளைப் பார்த்தான்.

பயம் நிரம்பி வழிந்தாலும்.. அவள் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் வரவில்லை!

ம்ஹ்ம்! பெர்ஃபாமன்ஸ் இன்னும் கொஞ்சம் இண்டென்சிவ்-ஆ இருக்கனும் போல!

“பாட்டுல லேடீஸ் வாய்ஸ் வர்றது தெரியல??, நீ பாடாம அமைதியா இருந்தா என்ன அர்த்தம்?” – அமர்த்தலாய் வசந்த்.

“நா....நா..நான் பாட்றதா..?” – திக்கித் திணறி வெளி வந்தது அவள் குரல்.

“ஹ்ம்!, ஏன் நான் பாடுறேன்ல?, கூடச் சேர்ந்து நீயும் பாடு”

“அ...அ..அது..” – என்றபடிச் சுற்றி நோக்கியவளிடம்..

“நடுத்தெருவா இருக்கேன்னு பார்க்குறியா?, நாங்கல்லாம் தூங்கி எந்திரிக்கிறதே இந்தக் குட்டிச் சுவத்துல தான்! இதுவும் நம்ம வீடு மாதிரி

தான்.. அதனால கூச்சப்படாம பாடு”

“.................” – தயங்கித் தவித்துப் போய் நின்றவளிடம்..

“பாடு டி” – என்றவனின் குரல் இப்போது மிரட்டலைத் தேர்ந்தெடுத்திருந்தது.

“.................”

“ஐ லவ் யூ.. ஐ லவ் யூ.. ஐ லவ் யூ-ன்னு நான் 3 தடவை பாடுனேன்ல?, நீயும் அதே மாதிரி 3 தடவை பாடு”

“இந்தப் பாட்டுல லேடீஸ் வாய்ஸ் தான் ஐ லவ் யூ சொல்லவே இல்லையே?” – எரிச்சலுடன் முகத்தை வைத்துக் கொண்டு கேள்வி கேட்டவளிடம்..

“அடுத்த தடவை ஜென்சியைப் பார்க்கும் போது ஏன் ஐ லவ் யூ சொல்லலன்னு கேட்டுக்குறேன்! இப்போ.. நீ பாடு..” – அழுத்தமாய்க் கூறினான் அவன்.

ஒரு நொடித் தலையைக் குனிந்து யோசித்து விட்டுப் பின்..

“இல்ல,இல்ல.. என்னால அப்டில்லாம் பாட முடியாது” – எனத் திடமாய் மறுத்து விட்டாள் அவள்.

“ஹேய்ய்... என்னவோ உன்னை நான் ஆசையாப் பாட சொல்லிக் கேட்ட மாதிரி வேகமா முடியாதுன்னு தலையாட்டுற?, இது ரெக்வஸ்ட் இல்ல. ஆர்டர்! பாட்டு பாடுனா தான் நீ இங்க இருந்து நகர முடியும். இல்ல... உன்னைத் தூக்கிட்டுப் போய் அந்தக் குட்டிச்சுவர்ல உட்கார வைச்சு.. நானும் பக்கத்துலயே உட்கார்ந்துப்பேன்! போற,வர்ற எல்லாரும் நம்ம ஜோடிப் பொருத்தத்தைப் பார்த்துப் பொறாமை படட்டும்”

“எப்படி இப்படியெல்லாம் பேசுறீங்க?, மாமாக் கிட்ட நல்லா வாங்கிக் கட்டியும் பயமே இல்லாம?, ச்ச, நான் போறேன்”

அதுவரை விளையாட்டுப் போக்கில் அவளுடன் வம்பளந்து கொண்டிருந்தவனை, அவள் தன் வார்த்தைகளால் சொரிந்து விட.. ஆத்திரத்தை அடக்க முடியாமல்.. அவள் கையை இறுகப் பற்றினான் அவன்.

“என்னடி திமிரா?, நான் சொன்னதைச் செய்யாம உன்னால இங்க இருந்து ஒரு அடி கூட நகர முடியாது”

-அவன் தன் கையைப் பற்றியதும், நடுங்கிப் போனவள்..

“கையை விடுங்க, ப்ளீஸ்” – என்று கெஞ்சத் துவங்கிய வேளையில்.. தன் செவியோரம் பதிந்த இரும்புக் கரத்தின் வல்லமையைத் தாங்க இயலாது.. நான்கடி நகர்ந்துத் தடுமாறி நின்றான் வசந்த்.

எவன் டா அவன் ரீதியில் நிமிர்ந்து நோக்கிய ஐவரும் கண்டது.. ருத்ர மூர்த்தியாய் சிவந்த கண்களுடன் நின்ற சாருகேசனைத் தான்.

மாமனைக் கண்டதும் பதறி சாருமதித் தன் கையை வசந்திடமிருந்துப் பறிப்பதற்குள்.. இருவரையும் நோக்கி விட்ட சாருகேசன்.. வந்த கோபத்தில் மகனின் காது ஜவ்வை மீண்டுமொருமுறை கிழித்து வைத்தார்.

அவர் கொடுத்த அடி ஒலித்த சத்தத்தில் டீக்கடைக்காரர் உட்பட அனைவரும் முன்னே வந்து நிற்க.. பெஞ்சில் அமர்ந்திருந்த பெருசுகளுக்கோ ஏகக் குஷி.

அவமானத்தில் முகம் சுண்ட கோபத்துடன் தந்தையை நோக்கியவன்…

“என்ன சும்மா, சும்மா கை நீட்டுறீங்க?, இன்னொரு முறை நான் பார்த்துட்டு நிக்க மாட்டேன் சொல்லிட்டேன்” என்று எகிற..

அணிந்திருந்த ஜிப்பாவைத் தூக்கித் தன் பேண்ட் பெல்ட்டைக் கழட்டியபடி அவனருகே வந்து “என்ன?, என்ன டா பண்ணிடுவ நீ?” – என்று கர்ஜித்தவரிடம்..

பல்லைக் கடித்துக் கொண்டு “திருப்பி அடிப்பேன்” – என்றான் வசந்த்.

“அதுக்கு உனக்குக் கை இருந்தாத் தான டா?” என்றவர்.. தன் கையிலிருந்த பெல்ட்டினால் அவனை விளாசித் தள்ளி விட்டார்.

“எப்டியெப்டி படுக்கைல பாம்பு நெளியுதா, நான் அடிக்கிற அடில உன் உடம்புல என்னல்லாம்.. நெளியப் போகுதுன்னு பாரு டா”

‘மனுஷன் சீன் தொடங்குனதுமே வந்துட்டார் போல!’

வெலவெலத்துப் போய் நின்ற அவன் நண்பர்கள் நால்வரையும் கூட அவர் வெளுக்கத் துவங்க.. அடித்துப் பிடித்துத் தப்பியோடிவர்களை விரட்டியடித்து விட்டு மகன் புறம் திரும்பினார் அவர்.

வாங்கிய அடியில்.. கழுத்தருகே தோல் கிழிந்து ரத்தம் சொட்ட.. அப்போதும் அடங்காமல்.. கொலைவெறியுடன் தன்னை நோக்குபவனைக் கண்டு மீண்டும் பெல்ட்டை ஓங்கியவரை அவசரமாகத் தடுத்தாள் சாருமதி.

“மாமா.. வேண்டாம் மாமா.. வேண்டாம் மாமா” – கெஞ்சிக் கொண்டே

அவர் கையைப் பற்றியவரைக் கண்டு ஆத்திரத்தின் உச்சத்திற்கே சென்ற வசந்த்..

“ஏய்ய்ய்ய்ய்.... நீ வராத டி! எனக்கும்,இவருக்கும் இடைல நீ வராத” என்று கர்ஜிக்க..

அவனைக் கண்டு கொள்ளாமல்.. மருமகளிடம் “நீ கிளம்பு டா அம்மா, நான் இவன் கதையை முடிச்சுட்டு வீட்டுக்கு போய்க்கிறேன்” என்றார் சாருகேசன்.

“என்ன என்ன பண்ணுவீங்க?, கொன்னு போட்டுடுவீங்களா?, ஆமா.. உங்களுக்கென்ன மனசுல பெரிய புரூஸ்லின்னு நினைப்பா?, காலம் போன காலத்துல உங்களுக்கு எதுக்கு ஃபைட் சீன் எல்லாம்?” – சட்டை காலரைக் கொண்டு கழுத்தை மறைத்தபடி வசந்த்.

“டேய்... டேய்... டேய்...”

“இந்த பெல்ட்டைப் பிடிச்சு இழுத்து உங்களைக் கீழ தள்ள எனக்கு எவ்ளோ நேரம் ஆயிடும்?”

“முயற்சி பண்ணிப் பாரேன்! நான் வைரம் பாய்ஞ்ச கட்டை டா. அவ்ளோ சீக்கிரம் என்னை சாய்க்க முடியாது”

“அப்ப வாங்க, ஒத்தைக்கு ஒத்தை பார்க்கலாம்”

“வாடா வாடா, குஸ்தி வீரன் டா! உன்னை மாதிரி லுச்சா பசங்க நிறைய பேர் முதுகெலும்பை உடைச்சி வளர்ந்தவன்!” – கையைத் தட்டிக் கொண்டு முன்னே வந்தவரைக் கண்டு முகத்தைச் சுழித்து..

“25 வருஷத்துக்கு முன்னாடி போட்ட குஸ்தியை இன்னும் சொல்லிக் காட்டுறாரு மனுஷன்!, அப்பா... நான் கராத்தேல ப்ளாக் பெல்ட்ப்பா” – என்றான் அவன் மிதமிஞ்சிய எரிச்சலில்.

“மாமா... வீட்டுக்குப் போகலாம் மாமா..” – எங்கே மீண்டும் சண்டையிடுவார்களோ என்ற பயத்தில் இடை புகுந்து விட்ட சாரு!

“ஏய்... நீ இன்னும் போகல?” – எரிச்சலுடன் வசந்த்.

“அவ ஏன் டா போகனும்?”

“சரி, ரெண்டு பேரும் இருங்க! நான் கிளம்புறேன்!”

“ஒத்தைக்கு ஒத்தைப் பார்க்கலாம்ன்னு சொல்லிட்டு ஓடிப் போறியாடா?”

“நடுத்தெருன்னு கூட பார்க்காம பெத்தப் பையனை பெல்ட்டால

அடிச்சுத் தள்ளிட்டு, சண்டைக்கு வேற கூப்பிட்றீங்களா?, கொஞ்சம் கூட அசிங்கமா இல்லையா உங்களுக்கு?”

“நடுத்தெருன்னு கூடப் பார்க்காம சொந்த அத்தப் பொண்ணை கையைப் புடிச்சு இழுத்து வம்பு பண்ணிட்டிருக்கியே?, உனக்கு அசிங்கமா இல்ல?, 3 வேளை சோறும்,பாக்கெட் நிறைய பணமும் இருக்குற திமிரா?, நீ பண்ணதுக்குப் பேரு என்ன தெரியுமா, ஹராஸ்மெண்ட்! தெருப்பொருக்கிங்க பண்ற வேலை!” – ஹை-டெசிபலில் தகப்பன்.

“நீங்க என்னை ரொம்ப இழிவா ட்ரீட் பண்றீங்கப்பா” – பொங்கியெழுந்தபடி மகன்.

“நீ தான் என்னை இப்படிப் பேச வைக்குற”

“அப்டியா?, அப்போ நானும் சொல்லுவேன்!, நீங்க தான் என்னை இப்படியெல்லாம் பண்ண வைக்குறீங்கன்னு”

“டேய்ய்”

“போங்கப்பா! போய்… இவளுக்கு சேவகம் பண்ணுங்க! நான் அவ கையைப் பிடிச்ச இடத்தை ஆராய்ச்சி பண்ணி, காயமே இல்லாத கைக்கு மருந்து போடுவீங்களே! அதைச் செய்ங்க!, ஏன்னா…. நீங்க பிறவி எடுத்ததே இவளுக்காகத் தான?”

-எரிச்சலுடன் கூறியவன் மேலும் அங்கே நிற்காது விறுவிறுவென நகர்ந்து விட்டான்.

இரவு எட்டு மணி வரை வீட்டிற்குச் செல்லாமல்.. நண்பர்களுடன் சுற்றியவன் கடைசியாக வீடு திரும்பிய போது.. அவனுக்காகவே வாசலில் காத்திருந்தார் அன்னம்மா.

அவன் அன்னை இறந்த தினத்திலிருந்து இன்று வரை உடனிருப்பவர்! அன்பு காட்டுவதில் அன்னையை மிஞ்சியவர்! எச்சூழ்நிலையிலும் அவனுக்காக வரிந்து கட்டிக் கொண்டு சாருகேசனுடன் சண்டைக்குப் போகும் ஒரே ஜீவன்! ஒவ்வொரு முறையும் தந்தையின் செயலால்.. எங்கேனும் ஓடி விட வேண்டுமென்கிற நோக்கத்துடன் சுற்றி அலைபவனின் எண்ணத்தை மாற்றி.. அந்த வீட்டுக்குள் அவன் தினம் காலடி எடுத்து வைப்பதற்கான ஒரே காரணகர்த்தா!

“ப்ச், நம்ம வீட்டுக்குத் தான் ஏற்கனவே ஒரு கூர்க்கா இருக்காரே! நீ வேற ஏன் அந்த வேலையைப் பார்க்குற?” – திட்டியபடியே வீட்டுக்குள் நுழைந்தவனுக்குப் பதில் சொல்லாமல்.. தலை முதல் கால் வரை

அவனை ஆராய்ந்து கொண்டிருந்தவரைக் கண்டுச் சிரித்து..

“என்ன அன்னம்மா?” என்றான்.

வன்மை மிகுந்த வசந்தின் மென்மை வெளிப்படும் ஒரே இடம் அன்னம்மா மட்டும் தான்!

“ரோட்ல வைச்சு ஐயா உங்களை பெல்ட்டால அடிச்சுப் போட்டாருன்னு மதி பாப்பா சொல்லுச்சு கண்ணு!, காயத்துக்கு உடனே மருந்து போடாம விட்டா.. அடி பட்ட இடமெல்லாம் கன்னிப் போய் வலியெடுக்கும் ராசா”

“ப்ச், நான் மதியமே ஆண்டி-பயாட்டிக் எடுத்துக்கிட்டேன் அன்னம்மா”

“அது என்ன கண்றாவி?, நான் ஐஸ்கட்டி ஒத்தடம் கொடுக்குறேன், நீங்க இப்படி உட்காருங்க”

“அதெல்லாம் வேண்டாம்!”

“ஷ்,ஷ், நான் ஒரு கூறு கெட்டவ!, நீங்க சாப்பிட்டீங்களா, என்னன்னு கூட கேட்காம.. நசநசன்னு பேசிட்டு நிக்குறேன்”

“ம்ம், ஹோட்டல்ல சாப்பிட்டுத் தான் வர்றேன்”

“வெளிய சாப்பிட்றதெல்லாம் உடம்புக்குக் கெடுதி கண்ணு, இனியொரு முறை இப்பிடி பண்ணாதீங்க”

“பார்த்தியா?, நீயும் என்னை மிரட்ட ஆரம்பிச்சுட்ட” – எனக் கூறிச் சிரித்தபடி கழுத்தைத் தடவியவன்.. காயம் கொடுத்த எரிச்சலில் “ஷ்ஷ” என்று விடப் பதறிப் போனார் அன்னம்.

“இருங்க ராசா, நான் போய் மருந்து கொண்டு வாரேன்”

இருவரது சம்பாஷணையையும் கேட்டபடி டைனிங் ஹாலில் அமர்ந்திருந்த சாருமதி, வேகமாக ஒரு ட்ரேயில் மருந்தையும்,ஐஸ் கட்டியையும் கொண்டு சென்று நீட்டினாள்.

அவளைக் கண்டதும் முகம் கடுக்க வேறு புறம் நோக்கியவன் “இவளை முதல்ல போகச் சொல்லு அன்னம்மா” என்று பொங்கவும்.. சுணங்கிய முகத்துடன் வாசல் புறம் நகர்ந்து விட்டாள் சாரு.

அப்படியும் பொறுக்காமல்.. “பண்றதையும் பண்ணிட்டு என்ன அக்கறை வேண்டிக் கிடக்குது?” என்று அவன் காய..

வெளி வாசலின் அருகே.. மாடியறைகளுக்குச் செல்லும் படிக்கட்டில் அமர்ந்தவள்..

“இதுல என் தப்பு என்ன இருக்குன்னு எனக்கு இப்பவும் தெரியல அன்னம்மா” என்று தானும் பதில் கூறினாள்.

பேச்சோடு பேச்சாக அன்னம்மா ஐஸ் கட்டிகளைக் கையில் எடுத்திருக்க..

“அவ கொண்டு வந்தது எனக்கு வேணாம் அன்னம்மா” என்று பெரிதாக முறுக்கிக் கொண்டான் அவன்.

“வாதாடாம சட்டையைக் கழட்டுங்க ராசா, வேதனைப்பட போறது நீங்க தான?” என்று சமாதானம் செய்து மேல் சட்டையை நீக்கி முதுகில் ஐஸ் கட்டிகளால் ஒத்தடம் கொடுக்கத் தொடங்கினார்.

“பெத்த மகன்னு பார்க்காம இப்டி போட்டு அடிச்சிருக்காரே மனுஷன்!” - அன்னம்மா

“எல்லாம் வெளிய உட்கார்ந்திருக்கிற அவரு கண்ணு மணிக்காகத் தான்!”

“எனக்காக இல்ல! உங்களுக்காகத் தான்! நடு ரோட்ல ஒரு பொண்ணு கையைப் பிடிச்சு இழுத்தா.. எந்த அப்பா தான் பார்த்துட்டு சும்மாயிருப்பாரு” - சாருமதி

“ஏய்.. என்ன?, என்னவோ நான் போற,வர்ற பொண்ணுங்க கையையெல்லாம் பிடிச்சி இழுக்குற பொருக்கி மாதிரி பேசிட்டிருக்க?”

“அப்போ உங்க மேல தப்பே இல்லன்றீங்களா?”

“தைரியம் இருந்தா.. என் முன்னாடி வந்து பேசுடி, முகத்தைக் காட்டாம வாசல்ல உட்கார்ந்துக்கிட்டு.. வக்கணையா பேசிட்டிருக்க?”

“என்னால உங்களுக்கும்,மாமாவுக்கும் சண்டை வரக் கூடாதுன்னு தான் நான் பேசிட்டிருக்கேன்”

“ரொம்ம்ம்ம்ம்ம்ப லேட்!, நீ பத்து வயசுல இந்த வீட்டுக்குள்ள காலடி எடுத்து வைக்கும் போதே, இந்த யுத்தத்துக்கு பிள்ளையார் சுழி போட்டுட்ட”

“நான் என்னவோ வேணும்ன்னே உங்க ரெண்டு பேருக்கும் இடைல வந்த மாதிரி பேசுறீங்க?, அப்பா-அம்மா செத்துப் போய் கதியில்லாம நின்னவளை கூப்பிட்டு வந்து கூட வைச்சுக்கிட்டது மாமா தான்! இப்படி நான் எல்லாருக்கும் பாரமாவேன்னு தெரிஞ்சிருந்தா.. என்னை பெத்தவங்க போனப்பவே, நானும் போய்ச் சேர்ந்திருப்பேன்”

-வெற்றுக் குரலில் விரக்தியாய்க் கூறியவளைக் கேட்டு புசு,புசுவெனக்

கோபம் பிறக்க.. விறுவிறுவென வாசலருகே சென்றவன்..

“இது என்னடி பேச்சு?, பாரம்,அது,இதுன்னு?, எனக்கு உன்னை சுத்தமாப் பிடிக்காது தான்! அதுக்காக.. நீ இந்த வீட்ல இருக்கக் கூடாதுன்னுலாம் நான் யோசிச்சதே கிடையாது! சின்ன வயசுல இருந்து சண்டை போட்டுட்டுத் தான இருக்கோம்?, இப்ப என்ன பெரிய மனுஷி மாதிரி டயலாக் பேசுற?, அடிச்சுப் பல்லைக் கழட்டிடுவேன்!” – என்று உச்சஸ்தாதியில் கத்த...

வெற்று மார்புடன் தன் கண் முன்னே நிற்பவனின் முகத்தை அசையாது நோக்கி..

“பிடிக்கவே பிடிக்காத பொண்ணுக்கு எதுக்காக லவ் லெட்டர் கொடுத்தீங்க?” என்று பிசிர் தட்டாத குரலில் அமைதியாய் வினவினாள் அவள்.

பின் கழுத்தைத் தேய்த்தபடி.. முகம் இறுக.. மறுபுறம் திரும்பியவன் “தெரியாது” என்றான்.

“இது என்ன பதில்?”

“குடுத்த லெட்டரைத் தான் நேராப் போய் எங்கப்பாக் கிட்ட நீட்டி அடி வாங்கியும் கொடுத்திட்டியே?, பின்ன என்ன?”

“நான் ஒன்னும் மாமா கிட்ட கொடுக்கல”

“பின்ன எப்படி அவர் கைக்குப் போச்சு?, நடிக்காதடி நடிக்காத!”

“நான் ஒன்னும் நடிக்கல!, மேத்ஸ் புக்குக்குள்ள நீங்க லெட்டர் வைச்சதே எனக்குத் தெரியாது. மாமா தான் அதைக் கவனிச்சு எடுத்தார்.”

“சரி, அவர் எடுக்காம நீ மட்டும் அதைப் பார்த்திருந்தா.. என்ன நடந்திருக்கும்?”

“இப்படிக் கேட்டா என்ன பதில் சொல்றது?”

“பிடிச்சிருக்கா, பிடிக்கலையான்னு நேரா சொல்லு”

“இப்போ தான, என்னைச் சுத்தமா பிடிக்காதுன்னு நீங்க சொன்னீங்க”

“..................”

“முதல்ல, உங்க மனசுல என்ன இருக்குன்னு நீங்க ஒரு முடிவுக்கு வாங்க! அப்புறம் வந்து.. என்னைக் கேளுங்க”

-தனக்கே அறிவுரை கூறியவளை எரிச்சலுடன் பார்த்து.. படியேறப்

போனவளை “ஏய்,நில்லு” எனக் கூறி நிறுத்தியவன்.. தொண்டையைக் கனைத்தபடி....

“எனக்கு உன்னை சுத்தமாப் பிடிக்காது தான்! ஆனா.. வேற யாரையும் பிடிக்கும்ன்னும் தோண மாட்டேங்குதே” – என்றான்.

புருவம் சுருக்கி அவனை நோக்கியவள் “புரியல” என்றாள்.

“எனக்கும் தான்” என்றவன்.. ஒரு நொடி அமைதியாகிப் பின்..

“ப்ச், போ” – என்று விட்டு.. கழுத்தைத் தேய்த்தபடி அங்கிருந்த ஜன்னல் வழித் தோட்டத்தை நோக்கினான்.

எரியத் துவங்கிய காயத்தை உணர்ந்து “ஷ்ஷ்” என்றவன் மீண்டும் திரும்புகையில்.. அவள் அங்கேயே நிற்பதைக் கண்டு “என்ன?” என்றான்.

ஓடிச் சென்று ஹாலில் இருந்த மருந்தை எடுத்து வந்தவள் அவனிடம் நீட்ட.. புருவம் உயர்த்தியவன்.. கண்ணைச் சுருக்கியபடி..

“உனக்கு என்னை ரொம்பப் பிடிக்கும் போலவே” எனக் கூற.. வந்த சிரிப்பை உதட்டில் அடக்கியவள் “ம்ம்” எனத் தலையாட்டினாள்.

“ம்ம்ம்ம்??” – பெரிதாய்க் கண்களை விரித்து அப்படியா எனப் பாவனை செய்தவனிடம்..

“நீங்க லெட்டர் கொடுத்த மாதிரியான பிடித்தம் இல்ல!, எனக்கு இந்த வீட்ல இருக்குற எல்லாரையும் ரொம்பப் பிடிக்கும்! மாமாவை,அன்னம்மாவை,உங்களை..”

“கூர்க்காவை,பால்காரனை,பேப்பர்காரனை எல்லாரையும் சொல்லேன்! ஏன் விட்டுட்ட?” என்றவன் தொடர்ந்து “போடி” என்று சலித்துக் கொண்டான்.

மறுபடி அவனைக் கோபப்படுத்தி விட்டதை உணர்ந்து வேகமாய் அவனிடமிருந்து மருந்தைப் பறித்தவள்..

“திரும்புங்க நானே போட்டு விட்றேன்” என்றாள்.

அலட்டிக் கொள்ளாமல் திரும்பி நின்றவனின் வலது புற கழுத்தில் மருந்தை இட்டவளிடம்..

“நான் உன் கையைப் பிடிச்சதுக்கே பெல்ட்டால அடிச்சார் மிஸ்டர்.கேசன்! இதையெல்லாம் பார்த்தார்ன்னா அவ்ளோ தான்.. நான் தான் உன்னை வற்புறுத்தி மருந்து போட வைச்சிட்டிருக்கேன்னு

சொல்லி.. ஜெயில்ல போட்டாலும் போடுவார்! ஆனா.. ஏன் டி உன் மாமா இப்படி இருக்காரு?"

"அவருக்கு உங்க மேல ரொம்பப் பாசம்! அதனால தான்"

"அடேங்கப்பா" – என்றவனைக் கண்டு சிரித்து அவள் மேலும் ஏதேதோ பேச.. அந்த நேரத்தில் இருவரையும் அந்த டீக்கடைக்காரர் மட்டும் பார்த்தாரேயானால்.. வாயில் விரல் வைத்திருப்பார்!

'சாருசந்திரா' ஃபேன் ஹவுஸ் என்னும் ஃபர்னிச்சர் ஷோரூமை நிறுவி நடத்தி வரும் சாருகேசனின் மனைவி சகுந்தலா, வசந்தனின் மூன்றாவது வயதிலேயே மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறைவனடி சேர்ந்து விட்டார்.

ஒற்றை ஆளாய் மகனுடன் தனித்துப் போன கேசன், மறுமணம் செய்து கொள்ளாமல் அன்னம்மாவின் உதவியுடன் பிள்ளை வளர்க்கத் தொடங்கினார்.

மனைவியின் நினைவுகளைத் தவிர்க்கத் தொழிலில் முழு மூச்சாக ஈடுபட்ட மனிதன் அடுத்தப் பத்தாண்டுகளில் இன்னுமொரு ஷோரூமையும் திறந்து வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்த வேளை.. தனது பிரியத்திற்குரியத் தங்கையாகிய சந்திரா, தன் கணவனுடன் சாலை விபத்தொன்றில் இறந்து விட்ட செய்தி கிட்டுகிறது.

தாய்-தந்தையற்ற அநாதையாய் சுற்றி நடக்கும் எதையும் புரிந்து கொள்ள முடியாதப் பதினோறு வயது சிறுமியாய் நின்ற சாருமதியைத் தன்னோடு அழைத்து வந்து விட்டார் கேசன்.

தங்கையின் மீதிருந்த அதீத அன்பினால் தனது கடைக்கு சாருசந்திரா எனப் பெயர் வைத்தவர் அவர்! சந்திராவும் கூட அண்ணனுக்குச் சளைத்தவர் இல்லை! அண்ணன் மீதானத் தன் பாசத்தின் வெளிப்பாடாகவேத் தன் குழந்தைக்குச் சாருமதி எனப் பெயரிட்டார்!

உயிராய் எண்ணிய தங்கை உயிர் விட்ட துக்கத்தில் ஆழ்ந்திருந்தவரை மீட்டெடுத்தது சாருமதி தான்! உருவத்தில் தன் அன்னையை அவள் நினைவு படுத்துவதாலோ என்னவோ.. 'அம்மா' என்று தான் அழைப்பார் அவளை!

சாருமதியும் தன் மாமனின் மீது மரியாதை,பாசம் அனைத்தையும் தாண்டி.. ஒரு பக்தியுடனே வளர்ந்தாள்.

தொழில்,தொழில் எனப் பத்தாண்டுகளாய் பெற்ற மகன் மீது பார்வையைக் கூட செலுத்தியிராத மனிதன்.. இன்று தங்கை மகளின்

பின்னே அன்பும்,பாசமுமாய் சுற்றுவதைக் கண்டு.. வசந்த்திற்கு அந்த வயதிலேயே ஆத்திரம் தான்!

அவனது அன்பிற்குரிய அத்தை தான் சந்திரா! ஏன், அவர் மகள் மீது கூட அவனுக்குப் பாசம் அதிகம் தான்!, ஆனால் ஏனோ.. அவனது தந்தைக்கும்,அவளுக்குமான உறவு அவனுக்கு ஏதோ ஒருவகையில் பிடித்தமின்மையைக் கொடுத்தது.

இருவரையும் அவர் சரிசமமாய் நடத்தியிருந்தால் கூட இந்தளவிற்கு வித்தியாசத்தை அவன் உணர்ந்திருக்க மாட்டான்!

பதினைந்து வயதை எட்டி மீசை முளைக்கத் துவங்கிய வயதில்.. தோள் வரை நிற்பவனை.. அவர் ஒரு வளர்ந்த இளைஞனாகவே கருதத் தொடங்கினார்.

இதைச் செய்யாதே,அதைச் செய்யாதேவென ஏகப்பட்டக் கெடுபிடிகள்! படிப்பில் அவர் கொடுக்கும் அழுத்தம்!

ஏன் என்று கேள்வி கேட்ட அன்னம்மாவிடம், ‘எனக்கப்புறம் தொழிலை எடுத்து நடத்தப் போறது அவன் தான்! அதை நிர்வகிக்கவும், விரிவு படுத்தவும் அவன் பொறுப்பா வளர வேண்டியது அவசியம் அன்னம்’ என்று விட்டார் அவர். இதுவே அவர் மீது ஒரு வெறுப்பை உண்டு பண்ணி விட்டது வசந்துக்கு!

“யாருக்கு வேணும் இவர் பார்க்குற தொழில்?, இந்தத் தொழிலுக்காகத் தான என்னை ஒதுக்குனார்?, நான் அதுக்கெல்லாம் சம்மதிக்க மாட்டேன் அன்னம்மா” – என்று பாய்ந்தவனிடம்..

“வேற என்னடா செய்யப் போற?, பிச்சையெடுத்து வயித்துப் பாட்டைப் பார்க்கப் போறியா?” – என்றார் அவர்.

“ஓ! உலகத்துலயே நீங்க மட்டும் தான் சம்பாதிச்சு வயித்தை நிரப்புறீங்களா?, மத்த எல்லாரும் பிச்சையெடுத்துத் தான் பிழைக்கிறாங்களோ?

“நீ படிக்கிற லட்சணத்துக்கு உனக்குக் கலெக்டர் உத்தியோகம் தான் கொடுப்பாங்க”

விடாது அடித்துக் கொண்ட இருவரின் இடையில் பாய்ந்தார் அன்னம்.

“ஐயா.. பையன் இன்னும் பத்தாவது கூட எழுதல, அதுக்குள்ள என்ன தொழிலைப் பத்தி பேச்சு?, அவன் தான் இளங்குருத்து! பொசுக்கு,பொசுக்குன்னு கோபப்பட்டுக் கத்துறான்னா.. நீங்களும்

கூட,கூடப் பேசுறீங்களேய்யா?"

"என்னை அவன் ரொம்பக் கஷ்டப்படுத்தி பார்க்குறான் அன்னம்மா!, இவன் என்ன ஆகப் போறான்னு நினைச்சு,நினைச்சே எனக்கு இப்போல்லாம் ராத்திரி தூக்கம் வர மாட்டேங்குது!"

"என்னை ஏன் நினைக்குறீங்க?, உங்க தங்கை மகளை நினைச்சுக்கங்க! நல்லாத் தூக்கம் வரும்"

"அவளைத் தான் டா நினைப்பேன்! நான் நினைச்ச மாதிரி பொறுப்பும்,அறிவுமா அவளை வளர்ப்பேன்"

சூளுரைத்தவரிடம் "பெஸ்ட் ஆஃப் லக்" என்று விட்டான்.

அவனுக்குப் படிப்பின் மீது ஈடுபாடில்லை என்று கிடையாது. படி,படி என்று அவனைத் தொல்லை செய்தே அவனது ஈடுபாட்டைக் கெடுத்து விட்டார் கேசன்.

ரொம்பவும் சூப்பராகவும் இல்லாமல், அதே சமயம் சுமாராகவும் இல்லாமல்.. மத்தியில் நின்று பள்ளிப் படிப்பை முடித்துக் கல்லூரியில் சேர்ந்து விட்டான்!

அதன் பின்பு படிப்பென்பது மொத்தமாய் பின்னுக்குப் போய் விட்டது அவனைப் பொறுத்தவரை! எப்படிப் படிக்கிறான், என்ன மார்க் வாங்குகிறான் என்பதெல்லாம் அவன் தந்தையை எட்டுவதேயில்லை!

கூட்டமாய் நண்பர்கள் பட்டாளமும் அமைந்து விட, வீடும்,தகப்பனும் கொடுக்கும் டென்ஷன் அனைத்திற்கும் வடிகாலாய் கல்லூரியை எண்ணிக் கொண்டான்.

அவன் முதலாமாண்டு பட்டப்படிப்பில் இருந்த சமயம், சாருமதி பூப்பெய்தி விட.. 'வயசுப் பொண்ணு இருக்குற வீட்ல பையனையும் வைச்சிருக்கிறது தப்பு கேசன், அண்ணன்,தங்கச்சியா இருந்தாப் பரவாயில்ல! ரெண்டு பேருக்கும் முறைப் பிள்ளைங்க, ஊர் தப்பாப் பேசும்' என சொந்தங்கள் சிலர் விசேஷத்தின் போது அளந்து விட்டுச் செல்ல.. முதல் வேலையாக மகனை ஹாஸ்டலில் சேர்த்தார் கேசன்.

மகன் அதில் மொத்தமாய் நொறுங்கிப் போய் விட்டான். அப்படி என்ன தங்கை மகள் மீது பாசம்?, உள்ளூரில் படிப்பவனை விடுதியில் சேர்க்குமளவிற்கு?, பெற்ற மகனை விட அவள் பெரிதாகப் போய் விட்டாளா?,

அன்னம்மாவின் ஆப்பமும்,அடையுமில்லாமல் அவனால் எப்படி உயிர்

வாழ முடியும்?

போக மாட்டேன் என்று அடம் பிடித்தவனைத் திட்டி,மிரட்டி விடுதியில் தள்ளினார் கேசன்.

## அத்தியாயம் - 3

ஸ்ட்ரிக்ட் ஆசாமியான கேசன், தாய்,தந்தையற்று வளரும் சாருமதி எந்த வகையிலும் எதற்காகவும் ஏங்கி விடக் கூடாதென்பதில் வெகு முனைப்புடன் இருந்தார்! அதிலும் தன்னால்,தன் மகனால் சாருமதிக்கு எந்த அவப்பெயரும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் மிகத் தெளிவாக இருந்தார்.

ஆண்டாண்டு காலமாய் உடன் வளர்ந்தாலும்.. இருவரும் ஒரே மேஜையில் அமர்ந்து சாப்பிட்டது கூடக் கிடையாது! ஏன், தந்தையோடு கூட சேர்ந்து அமர்ந்து உண்ட நினைவு அவனுக்குக் கிடையாது! எப்போதும் அன்னம்மா தான் உணவு மேஜையில் அவனுக்காகக் காத்திருப்பார்.

ஆனால் சாருமதி வந்த பின்பு மனிதர் மாறிப் போனார். காலை,இரவு இரு வேளையும் அவளுடன் உண்பதை வழக்கமாக்கிக் கொண்டார். ஆனால் அந்த வாய்ப்பை அவர் மகனுக்குக் கொடுக்கவேயில்லை!

தன்னை மீறி மகன் மீது வெளிப்படும் பாசம்,அக்கறையெதுவும்

சாருமதியைப் பாதித்து விடுமோ என்றெண்ணிக் கூடப் பல முறை அவனை தவிர்த்திருக்கிறார்.

எடுத்துச் சொல்லியிருந்தால் கூட புரிந்து நடந்து கொண்டிருந்திருப்பான் அவன்!

அதுவரை சாருமதி என்பவளை மனுஷ ஜென்மமாம மதித்து ஒரு முறை கூட நின்று பேசியது கிடையாது அவன். கீழ்த்தளத்தின் மூலையில் இவன் அறை என்றால்.. மாடியறையின் மூலையில் அவளது அறை! தப்பித் தவறி இருவரும் நேருக்கு நேர் பார்த்துக் கொண்டாலும் கூட பெரிதாக அலட்டிக் கொண்டதில்லை.

ஆனால்.. தந்தை தன்னை விடுதியில் தள்ளி விட்ட ஆத்திரத்தில் அவளைக் காணும் போதெல்லாம் வம்பு செய்யத் துவங்கினான் வசந்த். தந்தையின் மீது காட்ட முடியாத கோபத்தை இவளிடம் வெளிப்படுத்துவது அவனுக்குச் சுலபமாக இருந்தது. அதன் விளைவாக தன் தந்தையிடம் அவன் வாங்கிக் கட்டிக் கொள்வதும் வழக்கமாகியது.

தான் மட்டும் விடுதி சாப்பாட்டை உண்டு அரை வயிற்றுடன் திரிய.. இவள் மட்டும் வக்கணையாகத் தின்று வளர்வதா.. என்ற எண்ணத்தில்.. அந்த முறை விடுமுறைக்கு வீடு வந்த போது.. தந்தையில்லாத சமயத்தில் அவளைக் கட்டம் கட்டி விட்டான்.

அன்று தன் நண்பர்களுடன் தர்மயுத்தம் படத்துக்குச் செல்லத் தீர்மானித்திருந்தவன்... டேப்-ரெக்கார்டரில் ‘சிகப்பு ரோஜாக்கள்’ படக் கேசட்டை ஒலிக்கச் செய்தபடி தயாராகிக் கொண்டிருந்தான்.

இடையில் கட்டியத் துண்டும்,வெள்ளை சட்டையுமாய் நின்றவனுக்கு வார்ட்-ரோபில் தான் தேடிய கால் சட்டைக் கிடைக்காது போக...

“அன்னம்மா... என் ப்ளாக் பெல்ஸ் எங்க?” என்று குரல் கொடுத்தான்.

“கருப்புக் கால்சட்டையா ராசா?”

“ப்ச், சுத்தத் தமிழ் வேற! ஆமா”

“அது மாடில காயுதே!, எடுத்துட்டு வந்துத் தரட்டுமா?”

“வேண்டாம்,வேண்டாம்! நானே போய் எடுத்துக்கிறேன்” – என்றபடி.. அறையை விட்டு வெளியே வந்தவன்..

“நினைவோ ஒரு பறவை..

விரிக்கும் அதன் சிறகை..

பறக்கும்.. அது கலக்கும் தன் உறவை…”

- டேப்-ரெக்கார்டில் ஒலித்த கமலஹாசன் குரலோடுத் தானும் பாடியபடி விறுவிறுவெனப் படியேறியவன்..

முதல் மாடியைக் கடக்க எத்தனித்த வேளை.. உள்ளிருந்து வெளி வந்த சாருமதியின் மீது இடிக்காத குறையாகச் சென்று பின் ஒருவாறு சமாளித்துக் கொண்டு நின்றான்.

சுடிதாரும்,துப்பட்டாவுமாக ஒற்றை ஜடையோடு நின்றவளின் முகத்தை அசிரத்தையுடன் நோக்கியவன்..

“கை-ல என்ன?” என்றான்.

முதலில் அவனைக் கண்டதும் வழக்கம் போல் கடந்து செல்ல முற்பட்டவள்.. அவன் வழியை மறித்து நின்று கேள்வி கேட்பதைக் கண்டு நிமிர்ந்து அவனை நோக்கினாள்.

“கையில என்னன்னு கேட்டேன்”

“புக்”

“என்ன புக்?”

“மேத்ஸ்”

“நல்லா படிக்கிறியா?”

“ம்ம்”

“நல்லாப் படிச்சா மட்டும் பத்தாது!, ரொம்ம்ம்ம்ப நல்லாப் படிக்கனும்! புரியுதா?, எங்கப்பா உன்னைத் தான் அவரோட விடிவெள்ளியா நினைச்சிட்டிருக்கார்”

“ம்ம்”

“என்ன ம்ம்?, ரொம்ப நல்லாப் படிக்கிறதுக்கு என்ன செய்யனும்ன்னு என் கிட்டக் கேட்க மாட்டியா?”

“ஏன், உங்களுக்குத் தெரியுமா?”

“தெரியுமே”

“வாய்ப்பே இல்ல! பார்டர்ல பாஸ் ஆகி காலேஜ் சேர்ந்திருக்கிற உங்களுக்கு ரொம்ம்ம்ப நல்லாப் படிக்கிறதப் பத்தி தெரிஞ்சிருக்க வாய்ப்பே இல்ல”

“ஏய்.. என்ன நக்கலா?”

“அதை நான் கேக்கனும், இப்போ எதுக்கு என்னை வழியை மறிச்சு நிற்க வைச்சுப் பேசிட்டிருக்கீங்க?”

-சுருக்கியப் புருவங்களுடன் அவள் காட்டிய எரிச்சலில் திகைத்து வாயில் கை வைத்தவன்..

“பரவாயில்லயே! எப்பவும் எங்கப்பன் வேட்டிக்குப் பின்னாடி ஒளிஞ்சு நிற்கிற உன்னை.. நான் என்னமோன்னு நினைச்சேன்! இவ்ளோ பேசுவியா நீ?” – என்றான்.

“அப்டி என்ன பேசிட்டேன்?, நான் சொன்னதெல்லாம் உண்மை தான?”

“உண்மை தான்! உனக்கென்ன.. 3 வேளை வீட்டு சாப்பாடு தின்னு.. எங்கப்பன் கொட்டுற அன்பு மழைல நனைஞ்சு... குருவிக்கூட்டுக்குள்ள வாழ்ற மாதிரி.. சுகமா சுத்துற!, நான் அப்படியா?”

“ஏன், உங்களுக்கென்ன குறை?, லேட்டஸ்ட் மாடல் சட்டை உடுத்தியிருக்கீங்க!, வாட்ச்,செயின்! வாரம் தவறாம ஹேர் ஸ்டைல் மாத்துறீங்க!, ஃப்ரன்ஸ்ங்குள்ளோட தியேட்டர்,பார்ட்டின்னு போய் என் மாமா காசைத் தெண்டம் போடுறீங்க! இதை விடப் பெரிய ராஜபோக வாழ்க்கை யாருக்குக் கிடைக்கும்?”

“என்னடி விட்டா ரொம்பப் பேசுற?”

“அப்படித் தான் பேசுவேன்! உங்களால மாமா.. எவ்ளோ கஷ்டப்படுறாரு தெரியுமா?”

“அந்தாளுக்குப் புள்ளையா பொறந்ததுக்கு நான் தான் கஷ்டப்படுறேன்! இவருக்கு என்ன கஷ்டம்?”

“நீங்க இப்டியே எதுலயும் நாட்டமில்லாம, எத்தனை நாளைக்கு பொறுப்பில்லாம சுத்தப் போறீங்களான்னோ நினைச்சுக் கவலைப் பட்றார்”

“ஓஹோ”

“என்ன ஓஹோ!, தகப்பன் இல்லாத எனக்குத் தான் அந்த அருமை தெரியும்!”

“அப்படியா?”

“இருந்தும் கூட நீங்க இப்படி நடந்துக்கிறீங்க”

“ஏய்ய்ய்.. ஒரு நாள்.. ஒரு வேளை.. என்னைப் பக்கத்துல உட்கார

வைச்சுப் பாசமா பேசி... சோறு பரிமாறச் சொல்லு உன் மாமாவை! அதுக்கப்புறம் நான்.. பொறுப்பு சிகரமா மாறிக்கிறேன்”

“என்ன இப்படி பேசுறீங்க?”

“நீங்களே யோசிங்க இளவரசி! அன்பும்,அக்கறையுமா உன் மாமா உன் கிட்ட பேசுற மாதிரி என்னைக்காவது என் கிட்டப் பேசியிருக்காரான்னு?”

“அவர் அன்பா பேசுற அளவுக்கு நீங்க என்னைக்காவது நடந்துருக்கீங்களா?”

“எல்லாம் எங்கப்பன் வளர்ப்பு! அதான் உன்னை இப்படிப் பேச வைக்குது”

“அதுல எனக்குப் பெருமை தான்”

“இருந்துட்டுப் போ!, உன்னால எனக்கு ஒரு காரியமாகனும்”

“என்ன?”

“எனக்கு ஹாஸ்டல்ல இருக்குறது சுத்தமாப் பிடிக்கல! மறுபடி நான் வீட்டுக்கு வரனும்! அதுக்கு உன் மாமனை நீ சம்மதிக்க வைக்கனும்!”

“நானா?”

“ஆமா!, உன்னால.. உனக்காகத் தானே என்னை ஹாஸ்டல்ல தள்ளினார் மனுஷன்?”

“என்னாலயா?, நான் என்ன பண்ணினேன்?”

“ம்ம், உன்னைப் பாவப்பட்டப் பசுவாகவும், என்னைக் கட்டுத்தறிக் காளையாகவும் அவரே இமேஜின் பண்ணிக்கிட்டார்! அதனால வந்தப் பிரச்சனை இது”

“புரியல எனக்கு”

“ப்ச், நீ வயசுக்கு வந்த பொண்ணாம்! நான் இங்க இருந்தா.. உன் மேல பாய்ஞ்சு உன்னைக் கற்பழிச்சிடுவேனாம்”

“அய்யோ!” எனக் கண்ணை விரித்து வாயை மூடிக் கொண்டவள் “நீங்க அப்டில்லாம் செய்வீங்களா?” எனக் கேட்டு வைக்க.. மேலிருந்து கீழ் வரை அவளை வினோதமாக நோக்கினான் வசந்த்.

“ரொம்ப அசால்ட்டா கேக்குற?, கற்பழிக்கிறதுன்னா என்னன்னாவது தெரியுமா உனக்கு?”

“இல்ல!, நான் பயாலஜில வீக்கு”

“வீக் ஆவே இரு! அதான் நல்லது!, ப்ச்! நான் கேட்டதுக்கு பதில் சொல்லு”

“மாமா கிட்ட நீங்களே நேரா சொல்லலாமே!, உங்களுக்கு அங்க இருக்கப் பிடிக்கலன்னு”

“ஆமா, நான் சொன்னதும் அவர் அப்டியே கேட்டுடுவார்”

“நான் சொன்னா மட்டும் கேட்டுடுவாரா என்ன?”

“அது எனக்குத் தெரியாது. நீ தான் ஏதாவது பண்ணனும்”

“பண்ணலேன்னா?”

“ம்ம்ம்ம்ம், கற்பழிக்கிறதுன்னா என்னன்னு தெரியாதுன்னு சொன்னியே! தெரிய வைச்சிட வேண்டியது தான்”

“ச்சி”

“என்ன ச்சி?, ம்? என்ன ச்சி?” – அதட்டிக் கொண்டு அருகே வந்தவனைக் கண்டு எரிச்சலுடன் இரண்டடி பின்னே நகர்ந்தவள்.. கண்களைச் சுருக்க...

“எதுக்கு இவ்ளோ அடர்த்தியா மை தீட்டியிருக்க?” என்று வினவினான் திடீரென.

“என்னது?”

“கண்ணுக்கு எதுக்கு இவ்ளோ மை-ன்னு கேட்டேன்”

“...............”

“இப்டில்லாம் தீட்டாத!, பார்க்குறவன் வேற மாதிரி நினைப்பான்” – என்றவனைக் கண்டுப் பல்லைக் கடித்தபடி அவனைக் கடந்து சென்றவள்..

போகிற போக்கில் அருகிலிருந்தப் பூந்தொட்டியை ஒரு காட்டு,காட்டி விட்டுச் சென்றதில்.. தொட்டி விழுந்து அவனது வலது கால் சுண்டு விரலை பதம் பார்த்திருந்தது.

“ஆஆஆஆஆஆ” எனக் கத்தியவனைச் சட்டை செய்யாமல் முன்னே நடந்தவளைக் கண்டு “ராட்சசி” என முணுமுணுத்துக் கொண்டான் அவன்.

அதன் பின்பு அந்த விடுமுறை நாட்கள் முழுவதிலும் அன்னம்மாவிடம்

விடுதியில் போடப்படும் உணவு வகைகளின் அருமை,பெருமைகளைச் சொல்லி அவன் பொங்கித் தீர்க்க.. அவனறியாமல் அனைத்தையும் ஒட்டுக் கேட்ட சாருமதிக்குக் கொஞ்சம் பாவமாகித் தான் போனது.

அதன் பிறகு மாமாவின் மனதை மாற்றி வசந்த்தை மீண்டும் இல்லம் திரும்ப வைக்க என்ன செய்யலாம் என்றுத் தீவிரமாக யோசிக்கத் தொடங்கி விட்டாள்.

அவளுக்கு உதவும் வகையில் அன்று காலை செய்தித்தாளில் வெளி வந்தக் கட்டுரையொன்று அவள் கையில் சிக்கியது.

அதை எடுத்துக் கொண்டு நேராக மாமனின் முன்பு நின்றாள்.

“மாமா...”

“என்னடா அம்மா?”

“வ..வந்து.. நீங்க இன்னிக்கு தந்திப் பேப்பர் படிச்சீங்களா?”

“இன்னும் இல்ல, ஏன் என்னாச்சு?” – கையில் பெரிய கணக்கு நோட்டுடன் அமர்ந்திருந்தவர்.. மருமகளின் புறம் திரும்பாமலே பேசிக் கொண்டிருந்தார்.

“அது.. மாமா.. இப்போ-ல்லாம் காலேஜ் படிக்கிற பசங்க மத்தில போதைப் பொருள் பழக்கம் சகஜமா இருக்குறதா.. இந்த ஆர்ட்டிகிள்ல போட்டிருக்கு”

-அவள் கூறியதும், கண்ணாடியைச் சரி செய்தபடி அவளை நிமிர்ந்து நோக்கியவர்..

“நீ ஏன் இந்த மாதிரி கட்டுரையெல்லாம் படிக்கிற?” – என்று கேட்டு வைத்தார்.

“அ..அ..அது.. நான் கன்னித்தீவு படிக்கிறப்போ.. இது கண்ல பட்டது மாமா”

“சரி, அதுக்கு நாம என்னம்மா பண்றது?”

“நம்ம வீட்லயும் ஒரு காலேஜ் கோயிங் பர்சனாலிட்டி இருக்காரே மாமா”

“யாரு?, வசந்த்தா?”

“ஆமாம்”

“அவனுக்கு இந்தப் பழக்கம் வேற இருக்கா?, அதைச் சொல்லத் தான் சுத்தி வளைக்கிறியா?, உனக்கு எப்படி அதைப் பத்தி தெரியும்?”

-எகிறிக் கொண்டு வந்தவரின் தோளைப் பற்றி சமாதானம் செய்து..

“அய்யோ மாமா! நான் சொல்ல வந்ததை முழுசாக் கேட்காம நீங்களா ஒரு அர்த்தம் பண்ணிக்காதீங்க!” என்றவள் தொடர்ந்து..

“அவர் படிக்கிற காலேஜ்ல கூட பசங்க மத்தில இந்தப் பழக்கம் இருக்குறதா என் ஃப்ரண்ட் ஒருத்தி சொன்னா. அதுவும் ஹாஸ்டல்ல தங்கிப் படிக்கிற பசங்கக் கிட்ட அதிகமா இருக்குறதா!” என்றாள்.

“அவளுக்கு எப்படித் தெரியுமாம்?”

“ப்ச், அவளுக்கு எப்படியோ தெரியும். அது எதுக்கு நமக்கு?, அதனால.. அ..அ..அவரை ஹாஸ்டல்ல தங்க வைக்காம, மறுபடி வீட்டுக்கேக் கூப்பிட்டு வந்துடலாம் மாமா”

“இந்நேரத்துக்கு அந்தத் தறுதலை இந்தப் பழக்கத்தையெல்லாம் கத்துக்காம இருப்பான்னா நினைக்கிற?”

“ச்ச,ச்ச! அவர் அப்படியெல்லாம் பண்ண மாட்டார் மாமா”

“நீ என்ன புதுசா அவனுக்கு வக்காலத்து வாங்குற?”

“இல்ல மாமா, ஹாஸ்டல்ல போடுற சாப்பாடு சரியில்லன்னு அவர் அன்னம்மாக் கிட்ட புலம்புனதைக் கேட்டேன்! பா..பாவம்ல மாமா?”

“ம்ம்ம்! கஷ்டப்படட்டும்! அப்போ தான் கொஞ்சமாவது பொறுப்பு வரும்! ருசியா சோறு திங்குறதுக்கு துட்டு வேணும்!, அந்தத் துட்டை சம்பாதிக்க படிப்பு வேணும்,பதவி வேணும்ன்னு அப்பவாவது அவனுக்குப் புரியட்டும்”

கெட்டது குடி!

“ப்ச், மாமா... அதெல்லாம் தன்னால.. காலப்போக்குல வந்துடும்!, நீங்கக் கண்டுக்காம விட்டு.. கண்ட பழக்கத்தையும் பழகிட்டு வந்தார்ன்னா என்ன மாமா பண்றது?, இங்க இருந்தாலாவது.. உங்கக் கண் பார்வையில இருக்கோம்ன்ற பயத்தோடயாவது இருப்பார்”

“யார்?, அவன் எனக்கு பயப்பட்றவனா?, அடப்போம்மா”

“..............” – அமைதியாய் ஒரு நொடி நின்றவள் பின்..

“எதுக்காக மாமா அவரை ஹாஸ்டல்ல சேர்த்தீங்க?” என்று வினவினாள்.

“............”

“எனக்காகவா?, ஊர் ஆயிரம் பேசும் மாமா! எங்களைப் பத்தி உங்களுக்குத் தெரியாதா?, அப்டி என்ன நடந்துடும் நாங்க ரெண்டு பேரும் ஒரே வீட்ல இருந்தா?” – ஆதங்கத்தில் கேட்டு விட்டவளை..

“ப்ச், வயசுக்கு மீறி பேசக் கூடாது மதி” – என்று அவர் அதட்டி விட.. மீண்டும் அமைதியாகிப் போனாள் அவள்.

அவளது முகம் சுருங்கிப் போனதைக் கண்டு அவள் தோளில் தட்டி..

“மாமா காரணமில்லாம எதுவும் பண்ண மாட்டேன்! நீ அதை,இதை நினைச்சுக் குழம்பிக்காத!” என்றார் கேசன்.

சரியெனத் தலையாட்டியவள் மீண்டும்..

“இனி.. நீங்க என் கூட உட்கார்ந்து சாப்பிட்ற நேரம்.. அவரையும் சேர்த்துக்கோங்க மாமா!, அவரும் என்னைப் போலத் தான?, 3 வயசுல அம்மாவை இழந்தவரு! உங்கக் கிட்ட அவருக்கு எதிர்பார்ப்பு எதுவும் இருக்குதோ என்னவோ.. சொ..சொல்லனும்ன்னு தோணுச்சு. சொல்லிட்டேன். தப்பாயிருந்தா மன்னிச்சுக்கோங்க” என்றவள் மெல்ல நகர்ந்து விட..

அதுவரை சலனமில்லாத முகத்துடன் நின்றிருந்தவர்.. “மதி நில்லு..” என்று நிறுத்தினார்.

“இந்தக் காலேஜ் சங்கதியைப் பத்தி உன் கிட்ட சொன்னாலே ஒரு சிநேகிதி! அவ பேர் என்ன?”

“எ....எதுக்கு மாமா?”

“இனி அவ சகவாசமெல்லாம் நீ வைச்சுக்கக் கூடாது! இந்த வயசுல டிஸ்கஸ் பண்ற விசயமில்ல இது. புரிஞ்சதா?” –எனக் கேட்டவரைப் பரிதாபமாய் நோக்கி மெல்லத் தலையாட்டி விட்டு ஓடியே விட்டாள்.

அவனுக்கு சப்போர்ட் பண்ணி நான் பேசுனா.. மனுஷன் எனக்கே ரிவீட் அடிக்கிறார் என்றெண்ணிக் கொண்டு!

சாருமதியின் புண்ணியத்தில் ஒரு வழியாக மறுபடி வீடு வந்து சேர்ந்தான் வசந்த். என்ன நேர்ந்ததென்பதை அன்னம்மா அவனிடம் புட்டு,புட்டு வைக்க.. ‘இவளா எனக்காகப் பரிந்து பேசியது’ எனக் கேட்டு மிகுந்த ஆச்சரியம் கொண்டான். ஆனால் அதை விட ஆச்சரியமொன்று அன்றிரவு நடந்தது.

இரவுச் சாப்பாட்டுக்காக சாருமதி மேஜையை அடைந்த போது, அவளுக்கு முன்பாகவே வந்தமர்ந்திருந்த கேசன் அன்னம்மாவிடம்

வசந்தையும் அழைக்கச் சொல்லியதும்.. மகிழ்ச்சியாகிப் போனது மதிக்கு.

தன் பேச்சை மதித்து மாமா செய்த காரியத்தில் பூரித்துப் போய்.. மாமாவின் மீதிருந்தப் பக்தியின் அளவில் ஒரு சதவீதத்தைக் கூட்டிக் கொண்டவள்.. சிரிப்புடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

அன்னம்மா அழைத்ததும் அறையை விட்டு வெளியே வந்தவன்.. “என்ன?” என்றான் தந்தையிடம்.

நிமிர்ந்து அவனைப் பார்த்து அவர் முறைத்ததும்..

“என்னப்பா?” என்றான்.

“உட்காரு”

“எதுக்கு?”

“ஏன்?, காரணம் சொன்னாத் தான் உட்காருவியோ?”

“சாப்பாட்டு மேசைல எதுக்கு ராசா உட்காரச் சொல்வாங்க, சாப்பிடத் தான்” – என்ற அன்னம்மா அவன் தோளைப் பிடித்து நாற்காலியில் அமரச் செய்ய..

“என்ன இது புதுசா?” என்று கேள்வி கேட்டபடி அமர்ந்தான்.

அவன் முன்னே ஒரு தட்டை வைத்த கேசன், இட்லியையும், சாம்பார்,சட்னியையும் இட்டுத் தட்டை நிரப்ப.. நிமிர்ந்து அவரை நோக்கினான் வசந்த்.

“என்ன பண்றீங்க?”

“நான் பெத்த மகனுக்கு சாப்பாடு பரிமாறுறேன்” – தீவிர முக பாவத்தோடு கேசன்.

“எந்த லட்சணத்துல பரிமாறுறீங்க?, எனக்கு சாம்பாரை இட்லி மேல ஊத்துனாத் தான் பிடிக்கும். உங்களை யாரு சைட்ல ஊத்தச் சொன்னது?”

“ஏன் டா ஒரு நாள் அட்ஜஸ்ட் பண்ணிக்க மாட்டியாடா?”

“நான் ஏன் அட்ஜஸ்ட் பண்ணனும்?, நான் உங்கக் கிட்ட கேட்டேனா, எனக்கு சாப்பாடு பரிமாறுங்கன்னு?”

பதில் சொல்லாமல் அவர் அன்னம்மாவையும்,சாருவையும் மாற்றி,மாற்றிப் பார்த்து வைத்தார்.

“எதுக்கு வாக்குவாதம்?, நான் ஊத்துறேன் இட்லி மேல சாம்பாரை” – என்று முன்னே வந்த அன்னத்தைத் தடுத்தவன்..

“அவரே ஊத்தட்டும்” என்றான்.

‘எல்லாம் நேரம்’ என்றபடி முகத்தை வைத்துக் கொண்ட கேசன் மகன் கூறியதைச் செய்ய..

“இந்த கறிவேப்பிலைச் சட்னியை என் தட்டுல இருந்து எடுங்க!, எனக்குப் பிடிக்காது” – மீண்டும் கட்டளையிட்டவனைக் கண்டு..

பல்லைக் கடித்தபடி அவன் சொன்னதைச் செய்தார் அவர்.

இரண்டு வாய் உள்ளே இறங்கியதும்.. அவனுக்கு விக்கல் எடுக்க.. எரிச்சலுடன் தந்தையை நோக்கி..

“டம்ளர் காலியா இருக்குறது தெரியலயா?, தண்ணி யார் ஊத்துவா?” என்றுத் திட்டவும்..

அவ்வளவு தான்! மூச்சு வாங்க முறைத்தவரைக் கண்டு ‘இவன் இன்னைக்குக் கைக்கலப்பாக்காம விட மாட்டான் போலவே’ என்று பதறிப் போன சாரு..

மேஜைக்கு அடியிலிருந்த அவன் காலில் ஓங்கி ஒரு மிதி மிதித்தாள்.

எரிச்சலுடன் அவளைப் பார்த்தவனிடம் பல்லைக் கடித்துக் கொண்டுத் தன் பெரிய கண்களால் அவள் ஜாடை செய்ய.. கண்டு கொள்ளாமல் தட்டில் கையைக் கழுவியவன்.. தந்தையை நோக்கி..

“20 வயசுப் பையன் வாய்ல பால் பாட்டிலை வைக்குற மாதிரி இருக்கு நீங்க பண்றது! இதையெல்லாம் நீங்க.. பத்து வருஷத்துக்கு முன்னாடி பண்ணியிருந்தீங்கன்னா.. இன்னிக்கு இப்பிடிப் பரிதாபமா நின்னுருக்க மாட்டீங்க”

“யாரு நான்?, நான் பரிதாபமா நிற்கிறேனா?”

“இல்லையா?, ப்ச்! ப்பா... உங்களுக்கு என்ன வருமோ அதை மட்டும் பண்ணுங்க! கண் கெட்டப்புறம் எதுக்கு சூர்ய நமஸ்காரம்?”

“பார்த்தியா அன்னம்?, என்ன வார்த்தை பேசுறான்னு, அப்படி என்ன நான் பண்ணிட்டேன் இப்போ?”

“பரிமாற வந்துட்டாரு பெருசா! எனக்கு என்னப் பிடிக்கும், பிடிக்காதுன்னாவது தெரிஞ்சு வைச்சிருக்கீங்களா?”

“ஏன் டா ஆயிரம் யோசனைகளோட இருக்குறவன் டா நான்!

இதையெல்லாமாடா தெரிஞ்சு வைச்சிட்டிருப்பேன்?”

“தெரிஞ்சு வைச்சுக்கனும்! தாயில்லாத பிள்ளைக்குத் தகப்பன் தான் எல்லாமுமா இருக்கனும்!, நீங்கள்லாம் படிச்சு,சம்பாதிச்சு இவ்ளோ பெரிய நிலைக்கு வந்து என்ன பிரயோஜனம்?”

“அன்னம்.. இவனைப் பேச வேண்டாம்னு சொல்லு”

“இதுக்குத் தான் நான் தினம் தனியாவே சாப்பிட்றேன்” – என்றவன் அதற்கு மேல் நில்லாமல் எழுந்து சென்று விட்டான்.

மறக்காமல்.. சாருமதியின் காலை பதிலுக்கு மிதித்து விட்டுத் தான் சென்றான்!

பல்லைக் கடித்துக் கண்ணை மூடி வலியை அடக்கியவளுக்குத் தோன்றியது ஒன்றே ஒன்று தான்! இந்த அப்பன்-மகன் போர் என்றுமே தீரப் போவதில்லை!

கஷ்டப்பட்டு உருவாக்கிய சூழ்நிலையை இப்படிக் கெடுத்துக் கொண்டானே! மாட்டினால்.. கடித்துக் குதறி விட வேண்டுமென்கிற எண்ணத்துடன் நடமாடியவளை.. அன்றிரவே மறுபடி சந்தித்தான் அவன்.

“அன்னம்மா…” என்றபடி அடுக்களைக்குள் நுழைந்தவன்.. அங்கு நின்றிருந்த சாருமதியைக் கண்டு.. “அன்னம்மா எங்க?” என்றான்.

“தூங்கப் போயாச்சு”

“சரி, உனக்கு சமைக்கத் தெரியுமா?”

“என்ன வேணும்?”

“ஒரு தம்ளர் ஓவல்”

பொறுமையாய் ஓவலைக் கலக்கியவளைக் கண்டபடி நாற்காலியில் அமர்ந்தவன்..

“எவ்ளோ நேரம் ஆகும்” என்றான்.

“அவசரமா குடிச்சுட்டுப் போய் எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறீங்க?”

“ஏன் கோபப்பட்ற?”

“பின்ன கோபப்படாம?, எங்கப்பாப் பாசமா எனக்கு ஒரு வாய் சோறு பரிமாறுனதில்லன்னு கவலைப் பட்றீங்களேன்னு நான் மாமா கிட்ட

பொறுமையாப் பேசி வைச்சா.. நீங்க.. அத்தனையையும் கெடுக்குற மாதிரி சண்டை போட்டு வந்து நிற்குறீங்க?”

லேசாய் நகைத்தவன்.. அவள் நீட்டிய ஓவலைப் பருகிய படி.. “ஓ! இதெல்லாம் உன் வேலை தானா?” என்று வினவினான்.

“சொல்லுங்க! அன்னிக்குப் பெருசா கவலைப்பட்ற மாதிரி பேசிட்டு இன்னிக்கு ஏன் இப்படி நடந்துக்கிட்டீங்க?”

“எங்கப்பாவைப் பார்த்தா.. பாசமாப் பரிமாறுன மாதிரியா தெரிஞ்சது உனக்கு?”

“...............”

“அவர் உனக்குப் பரிமாறுறதை நான் பார்த்திருக்கேன்! பக்கத்துல உட்கார்ந்து... தலையைக் கோதி.. ‘இது வைக்கட்டுமா,அது வைக்கட்டுமா’-ன்னு கேட்டு கேட்டுப் பாசத்தைப் பொழிவார்”

“.............”

“உண்மை தானே?”

“அம்மா,அப்பா இல்லாத பொண்ணாச்சேன்னு ஒரு நல்ல எண்ணத்துல அவர் அதையெல்லாம் பண்றார்! அதை விமர்சனம் பண்ணாதீங்க ப்ளீஸ்”

“அவர் ஏன் உன் மேல பாசம் காட்டுறார்ன்னு நான் என்னைக்காவது சண்டை போட்ருக்கேன்னா?, என் கிட்ட ஏன் அந்த மாதிரி நடந்துக்க மாட்டேங்குறார்?, அது தான் கேள்வி”

“............”

“ரொம்பவும் குழப்பிக்காத! இந்த டாபிக் எல்லாம்.. உன்னைப் பொறுத்தவரை அவுட் ஆஃப் சப்ஜெக்ட் தான்! நீ இதையெல்லாம் யோசிக்க வேண்டிய அவசியமேயில்ல! எனிவேஸ்!, நான் மீண்டும் இல்லம் திரும்ப உதவியமைக்கு கோடான கோடி நன்றிகள்!” – என்றபடி அவள் கையில் காலி தம்ளரைத் திணித்தவன்.. தொடர்ந்து..

“ஹ்ம்ம், மை இல்லாத கண்ணைப் பார்க்க.. எவ்ளோ அழகா இருக்கு!, இனி இப்படியே இரு” எனக் கூறிச் செல்ல.. என்ன பிறவி இவன் ரீதியில் வாய் பிளந்து நோக்கினாள் சாருமதி.

அதன் பிறகு.. வருடங்கள் கடக்க.. அவளை நேர் எதிரே பார்க்க நேரும் போதெல்லாம்.. ஏதேனும் வம்பு பேசி அவளை எரிச்சலோ,கோபமோ கொள்ள வைத்துக் கொண்டிருந்த வசந்த், அவள் விஷயத்தில்

தெளிவாகத் தானிருந்தான் அந்த ஒரு தினத்திற்கு முன்பு வரை!

அது மஞ்சள் மேகம் சூழ்ந்திருந்த ஒரு மாலை வேளை...

விடியலின் போதும்,அஸ்தமனத்தின் போதும் மட்டுமே தோன்றும் இம்மஞ்சள் மேகக் கூட்டங்களின் கொள்ளை அழகை வர்ணித்து எழுதாத உலகத்துக் கவிஞர்கள் எவரும் இலர்!

குளிருமல்லாத, வெயிலுமல்லாத இதமான வேளையில்.. மேற்குத் திசையில் முழுதாய் மூழ்கக் காத்திருக்கும் சூரியனுக்கு விடை கொடுக்கும் நோக்கத்துடன்.. உதிர்ந்த மஞ்சள் பூக்களாய்.. வான்வெளியில் பரவிக் கிடக்கும் இம்மேகக் கூட்டம் கொடுக்கும் ரசனை.. வேறு மாதிரியானது!

அன்னம்மா கொடுத்த மாலைக் காபியையும்,சிற்றுண்டியையும் உண்டதும்.. இலங்கை வானொலி நிலையத்தை ட்யூன் செய்து விட்டு.. தோட்டத்துச் செடிகள் சிவற்றைக் களையெடுத்த வண்ணம் அமர்ந்திருந்தான் வசந்த்.

வேலை முடிந்து செம்மண் அப்பிக் கிடந்த சட்டையுடன் நிமிர்கையில்.. அவன் எதிரில் கண்டது மஞ்சள் மேகங்கள் சூழ்ந்திருந்த வானைத் தான்.

கையில் ஒட்டியிருந்த மண்ணைத் துடைத்தபடி சற்று நேரம் மேகக் கூட்டத்தைப் பார்த்திருந்து விட்டு.. எதேச்சையாகத் திரும்பியவன்.. முதல் மாடி பலகணியில் மஞ்சள் தாவணியும்,சிகப்புப் பாவடையுமாய்.. முன்னே விழுந்திருந்த ஒற்றை ஜடையைத் திருகியபடி.. தோழியொருத்தியுடன் புன்னகையோடு பேசிக் கொண்டிருந்த சாருமதியைக் கண்டதும்... திடீரென உள்ளுக்குள் மின்சாரம் ஊடுருவிச் சென்றதைப் போல் அதிர்வுடன் நின்று விட்டான்.

பெண்,அழகு,ரசனை,காதல் என்பதற்கெல்லாம் அவனது அகராதியில் ஒரு தனி விளக்கமே உண்டு!

ஆசை கொண்ட ஆண் மகனின் பார்வையில், எதிரிலிருக்கும் பெண் ரதியாய்த் தோன்றியதும்.. தேவதைகள் புடை சூழ காற்றாய் வந்திறங்கும் மன்மதன்.. மன்னவனின் இடது மார்பில் தன் பானத்தை செலுத்துவதும்.. பின் அதில்.. மயங்கி.. மகிழ்ந்து.. சுற்றம் மங்கி.. மறந்து.. திடீரெனத் தலை கீழாய்ப் பாயத் தொடங்கும் ரத்தத்தின் தாக்கத்தில் இறக்கையின்றிப் பறந்து.. நகக் கண்ணில் கூட சுகம் உணர்வது தான் காதல் என்று நினைத்திருந்தான்!

ஆனால்.. அதில் ஒன்றைக் கூட இப்போது அவன் உணராமல் போனது

தான் துக்கம்!

காதல்.. எப்போது.. எப்படி... யார் மீது வருகிறதென்பதெல்லாம் படைத்தவனுக்கு மட்டுமே தெரிந்த தெய்வீக ரகசியம் போலும்!

திடீரென உள்ளே ஏற்பட்ட அதிர்வில் திகைத்து சட்டென மறுபுறம் திரும்பியவனுக்கு சத்தியமாகப் புரியவில்லை! ஏன் இந்த ஷாக் அடித்த உணர்வென்று! அடுத்தடுத்துப் பூத்துக் குலுங்கத் தொடங்கிய நெற்றி வியர்வையை ஒரு வித படபடப்புடனே சுண்டி எறிந்தான்.

மீண்டும்,மீண்டும் அவளைத் திரும்பிப் பார்க்கச் சொல்லி கண்களுக்குக் கட்டளையிட்ட இதயத்தை.. தடுக்கத் தோன்றாமல்.. அவன் செய்கையற்று நிற்க.. இப்போது அவனது இரண்டு கண்களுக்குள்ளும் இருநூறு சாருமதிக்கள்!

இதற்கு முன்பு அவள் தாவணி அணிந்து அவன் பார்த்ததில்லை! ஆனால்.. அதற்காக மட்டுமே கண்கள் அவள் புறம் திரும்புவதாகவும் தோன்றவில்லை! ஏதோ செய்கிறது உள்ளே! என்னவென்று அலசி ஆராயத் தோன்றவில்லை! இந்த நொடி.. அவள் பிம்பத்தை இதயத்துக்குள் அடுக்கி வைக்கப் பிடித்திருக்கிறது!

அவள் அழகி தானென்று தெரியும்! ஆனால்.. இத்தனை அழகியென்பதை இன்று தான் காண்கிறான்.

மஞ்சள் மேகத்தோடு போட்டி போட்டுக் கொண்டு.. மஞ்சள் தாவணியில் அவள் முகம் மிளிர.. டாலடித்த வைர மூக்குத்தியின் பளபளப்பை ஓரங்கட்டி விட்டு மாலை வெயிலில் மின்னியது அவள் கன்னப்பருக்கள்! அனைத்தையும் தாண்டி.. நீலக் கடலாய் விரிந்து நின்ற அந்தக் கண்கள்.. அவனை நீந்த அழைப்பதைப் போல் உணர்ந்தான்.

காது வரை நீண்ட அவளது புன்னகையை.. இந்த அதிர்வுக்கும், இந்த சூழ்நிலைக்கும் என்ன பெயர் வைக்கலாமென்கிற குழப்பத்துடன் புரியாத பார்வை பார்த்துக் கொண்டிருந்தவனை இப்போது அவளும் நோக்கினாள்.

பார்வையை மாற்றிக் கொள்ளாமல் நின்று கொண்டிருந்தவனைக் கண்டு புருவம் சுருக்கி அவள் என்னவென்று கேட்க..

அடித்துப்பிடித்துக் கொண்டு இதயத்தை நோக்கி ஓடி வந்த ரத்தம் கொடுத்த ‘தடதட’-ப்பில் தடுமாறி.. திணறித் தவித்து.. சட்டெனப் பார்வையைத் திருப்பியவனைக் கிளப்பி விடும் நோக்கத்துடன் வானொலி ஒலித்தது.

‘கண்மணியே.... காதல் என்பது..

கற்பனையோ.. காவியமோ..

கண் வரைந்த ஓவியமோ...

எத்தனை,எத்தனை இன்பங்கள் நெஞ்சினில் பொங்குதம்மா.. பல்சுவையும் சொல்லுதம்மா’

## அத்தியாயம் – 3

யேசுதாஸின் குரலோடு இந்த மனிதரின் குரலைக் குழப்பிக் கொண்ட அனுபவம் நம்மில் பல பேருக்கு உண்டு! மிஸ்டர்.பி.ஜெயச்சந்திரன்! இளையராஜா இசையில் இவரோட பாடல்கள் அனைத்தும் அல்மோஸ்ட் ஹிட் தான்! சித்திரைச் செவ்வானம் சிவக்கக் கண்டேன், தாலாட்டுதே வானம், பூவ எடுத்து ஒரு மாலை தொடுத்து வைச்சேனே, ராசாத்தி உன்னைக் காணாத நெஞ்சு இதெல்லாம் ஆல் டைம் ஃபேவரைட்!! ஆனா.. இந்தப் பாட்டு தான் லிஸ்ட்ல ஃபர்ஸ்ட் எப்பவும்!

“பறிக்கச் சொல்லித் தூண்டுதே... பவளமல்லித் தோட்டம்..

நெருங்க விடவில்லையே.. நெஞ்சுக்குள்ளக் கூச்சம்!

கொடியிலே.... மல்லியப் பூ.. மணக்குதே மானே..”

எப்படி யோசிச்சிருப்பார் இளையராஜா?, ஒரு இன்னசெண்ட் ஆன பையனுக்குள்ள வர்ற காதல்,அதைத் தொடர்ந்த ரொமான்ஸ்! காதலுக்கு ‘அடி ஆத்தாடி’-ன்னு பாட்டு கம்போஸ் பண்ணிட்டார்! அதைத் தாண்டின உணர்வுகளை வெளிப்படுத்த அவர் தேர்ந்தெடுத்த மெட்டு இருக்கே! Simply beautiful! ரசிப்பு,சிலிர்ப்பு,ஆசை,மோகம்! இவ்வளவு தான்! வைரமுத்து வரிகளும்,பின்னணி இசையும்,ஜெயச்சந்திரன், ஜானகி குரல்களும் இந்த உணர்வுகள் அத்தனைக்கும் உயிர் சேர்க்கும் விதம்.. ஒரு அனுபவம்!

துணுக்கு: பாடல் இடம் பெற்ற படம் கடலோரக் கவிதைகள்.

ஆர்ப்பாட்டமான மாலை வேளையொன்றில்.. கலை நிகழ்ச்சிகளால் களை கட்டியிருந்தது வசந்தின் கல்லூரி வளாகம்!

சேலை,ஒற்றை ஜடை,சைட் ரோஸ் சகிதமாய் சில அம்மணிகள், சுரிதார்,ரெட்டைப் பின்னலுடன் சிலர், இன்னும் கொஞ்சம் மேல் தட்டு ரகப் பெண்கள் மேக்ஸியுடனும்,மிடியுடனும்! ஆக மொத்தம்.. பெண் என்றாலே ‘பன்’-ஐக் கண்டது போல் வாய் திறக்கும் நம் பெல்ஸ் இளைஞர்கள்.. அன்று தரையில் கால் படாத வண்ணம்.. மிதந்தபடியே திரிந்து கொண்டிருந்தனர்.

ஒரு சிறிய மியூசிக் ட்ரூப் ஒன்று மேடையை ஆக்கிரமித்திருக்க.. வழக்கம் போலத் தன் நான்கு நண்பர்கள் சகிதம் மேடையில் முழு உற்சாகத்துடன் மைக்கும்,பாட்டுமாய் ஆட்டம் போட்டபடி வசந்த்! வெள்ளை நிற பெல்ஸும்,நீண்ட காலர் வைத்த சிகப்புச் சட்டையுமாய்!

“நீலாம்பரி ராகம்.. உனக்காக நீலா..

ஒன்றும் சொல்லாமல் போவாயோ.. என் கலா..

அடக் கலா...”

எப்போதும் அடித் தொண்டையையும்,மேல் தொண்டையையும் மட்டுமே உபயோகித்தில் வைத்திருக்கும் வசந்தின் குரல், அப்போது

காட்டிய மென்மையில்.. மேடைக்குக் கீழே அமர்ந்திருந்த அவனது நண்பர்கள் விசிலைப் பறக்க விட..

முடியைக் கோதிக் கொண்டு முழுச் சிரிப்புடன்..

“சந்திக்கத் துடிக்கும் சாந்தி..

நிந்திக்க நினைப்பாள் ஜெயந்தி..

இடையினில் கிடைத்தாள் வசந்தி..

நான் எவளிடம் போவேன் மயங்கி..”

ஒவ்வொரு வரிக்கும் ஒவ்வொரு பாவனையைக் கொடுத்தபடி ஆர்ப்பாட்டமாய்ப் பாடியவனைக் கண்டு கூட்டம் ஆரவாரத்துடன் கைத் தட்டத் துவங்கியது!

அவன் கூறிய பெயர்களிலிருந்தப் பெண்களனவரும் கூச்சமும்,வெட்கமுமாய் சிரிப்பை அடக்கியபடித் தலை குனிந்து கொள்வதைக் கண்டு ஆண்கள் கூட்டம் ஆர்ப்பரிக்க... கல்லூரிக்கே உரித்தான குறும்பும்,கும்மாளமும் அந்த இடம் முழுதையும் நிறைத்திருந்தது.

அடுத்தடுத்துப் பாட்டும்,நடனமும் தொடர.. நண்பர்களுடன் கும்மியடித்துக் கொண்டிருந்தவன்.. கூட்டத்திலிருந்து விலகி வந்தான் தண்ணீர் அருந்துவதற்காக.

தண்ணீர்த் தொட்டியினருகே நின்று நீர் அருந்தி விட்டு, முகம் கழுவிக் கொண்டிருந்த வேளை.. பின்னால் அரவம் கேட்டுத் திரும்பி நோக்கினான்.

நின்று கொண்டிருந்தவன் ஹரிஹரன்! அவனது வகுப்பைச் சேர்ந்தவன்! பொதுவாக அவன் எவருடனும் உரையாடி அவன் கண்டதில்லை! எப்போதும் தனிமையிலேயே இனிமை காண்பவன்! அதுமட்டுமின்றி.. அவனைப் பற்றி மற்றுமொரு எண்ணம் கூட மாணவர்களின் மத்தியில் உண்டு.

தயங்கித் திணறியபடி தன் முகத்தை நிமிர்ந்து பார்க்க முயன்று கொண்டிருந்தவனிடம்.. புன்னகைத்து..

“தண்ணி வேணுமா?” – என்று வினவினான் வசந்த்.

“இ..இல்ல.. நான் உங்க.. உன்.. உன் கிட்டப் பேசத் தான் வந்தேன்"”- குரலில் மென்மையுடன் அவன் பேசிய விதம்.. தான் கேள்வி பட்டது உண்மை தான் என்கிற எண்ணத்தைத் தோற்றுவித்தது வசந்துக்கு.

ஆனாலும்.. காட்டிக் கொள்ளாமல்..

“சொல்லு” என்றான்.

“நீ மேடைல பாடுன விதம் ரொம்ப ரசிக்கும் படியா இருந்தது”

“அப்படியா?, ரொம்ப நன்றி” – மீண்டும் புன்னகையுடன் வசந்த்.

“ம்ம், பாவனைகளெல்லாம் ரொம்ப அருமை! லட்சணமும் கம்பீரமும் நிறைஞ்ச முகம் உனக்கு”

“அடடா!, இதையெல்லாம் ஒரு பொண்ணு சொல்லிக் கேட்டா.. என் மனசு குளிர்ந்திருக்கும்!”

-சிரித்தபடி வசந்த் கூறியதும் அதுவரை ஒரு மலர்ந்த பாவனையுடன் பேசிக்கொண்டிருந்த ஹரிஹரனின் முகம் சட்டெனச் சுருங்கி.. சுண்டிப் போயிற்று.

பின் தான் பேசியதை உணர்ந்து நாக்கைக் கடித்துக் கொண்ட வசந்த் “ஏய்.. நான் தப்பான அர்த்தத்துல சொல்லல! நீ.. நீ ஹர்ட் ஆயிடாத” என்று அவசரத்துடன் கூறவும்..

மறுத்துத் தலையசைத்தபடிக் கைகளைக் கட்டிக் கொண்டான் அவன்!

அவனது முக பாவனை,செய்கை அத்தனையும் பெண்ணை ஒத்திருப்பதை சற்று ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் வசந்த்.

“இல்ல, நீ மனசு கஷ்டப்பட்ற மாதிரி நடந்துக்க மாட்ட. எனக்குத் தெரியும்”

“அடேங்கப்பா!, என்னைப் பத்தி உனக்கு எப்படித் தெரியும்?, க்ளாஸ்ல நீ யாரோடயும் பேசியே நான் பார்த்ததில்லையே”

“பேசுனதில்ல தான்! ஆனா.. எல்லாரையும் கவனிப்பேன்! உன்னை.. கொஞ்சம் அதிகமாவே!”

“ஏன்?”

“ஏன்னாஆஆஆ.. எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும்”

“ஹாஹாஹா”

“நிஜமாத் தான்!, பொண்ணுங்களைக் கேலி பண்ணி வம்பு செஞ்சாலும்.. நீ எப்பவும் எல்லை மீறினதில்ல!, எந்தப் பொண்ணையும் ரொம்ப இண்ட்ரெஸ்ட்-ஆ பார்த்ததில்ல! பெருசா.. சண்டை,சச்சரவுக்குப்

போனதில்ல!, ப்ரண்ட்ஸ்-க்கு ரொம்ப முக்கியத்துவம் கொடுப்ப”

-அவன் சொல்லச் சொல்ல வாயில் கை வைத்துக் கொண்ட வசந்த்..

“அடப்பாவி! இப்படி தூர இருந்தே என்னை சைட் அடிச்சிட்டு இருந்ததுக்கு, பக்கம் வந்து பேசியிருக்கலாம்ல டா?” – என்று கூற.. லேசாய்ப் புன்னகைத்தவன்..

“பேசியிருக்கலாம்!.. ஆனா.. நீயும் எல்லாரை மாதிரியும் என்னைக் கேலி பேசிடுவியோன்னு பயம். இதனால.. உன்னைப் பத்தின என்னோட மதிப்பு குறைஞ்சிடுமோன்னும் பயம்!”

“என்னைப் பத்தின மதிப்பா?, டேய்.. இதையெல்லாம் என் அப்பா கேட்டார்ன்னா.. ஆச்சரியப்பட்டுப் போவார் டா”

“ஹாஹாஹா” – அதிக சத்தமின்றிக் கிண்கிணியாய் நகைத்தவனை மீண்டும் ஆச்சரியத்துடன் நோக்கினான் வசந்த்.

“என்ன அப்படிப் பார்க்குற?”

“ஒன்னுமில்ல!, உனக்குப் பாட்டு,டான்ஸ்ல எல்லாம் ஈடுபாடு இல்லையா?”

“இருக்கே” என்று கண் மலரக் கூறியவன்.. “எனக்கு நடிப்பு மேல ரொம்ப ஈடுபாடு! நாடகம் போடுறதுல விருப்பம் அதிகம்.. ஸ்கூல் படிக்கும் போதெல்லாம்.. சரித்திர நாடகங்கள்ல நிறைய நடிச்சிருக்கேன்! இப்போவும் ஒரு சின்ன நாடகக் குழுவுல மெம்பர்-ஆ இருக்கேன்! அப்பப்போ.. தெருக்கூத்துகளுக்குப் போவேன்!” என்றான்.

“எனக்கும் கூட நடிப்புன்னா இஷ்டம் தான்! ஸ்கூல் படிக்கும் போது வருஷம் தவறாம கலந்துக்குவேன்! காலேஜ் வந்தப்புறம் அது பாட்டாகவும்,டான்ஸாகவும் மாறிடுச்சு! எந்த வகையிலாவது மேடையேறிடனும் எனக்கு! மேடை தான் என் முதல் காதலின்னு நானே சொல்லிக்குவேன்” – என்று வசந்த் கூறியதும்..

“நான் ஒன்னு கேட்டா.. தப்பா நினைச்சுக்க மாட்டியே?” என்றான் ஹரிஹரன்.

“சொல்லு”

“எங்க நாடகக் குழுவுல நீயும் சேர்ந்துக்குறியா?, எங்கக் குழுவைச் சேர்ந்த யாருக்கும் உன் அளவு ஹீரோ ஃபேஸ் கிடையாது!”

“நாடகமா? நானா?, எங்கப்பாவுக்குத் தெரிஞ்சா.. பெல்ட்டாலேயே என்னைப் பரலோகம் அனுப்பிடுவார்”

“ஓஓஓஓஓ”

“உடனே முகத்தை சுருக்கிக்காத! எல்லா விஷயத்துலயும் என் அப்பாவுக்கு எதிரா நடந்துக்கிறது தான் என் ஜீவ சங்கல்பம்! அதனால யோசிச்சு சொல்றேன். சரியா?”

“ம்ம்!” – கண்ணும்,முகமும் மலரத் தலையாட்டியவனின் சிறு பிள்ளைத் தனமான பாவனையைக் கண்டு சிரிப்பு வர.. அவன் தோளில் அடித்த வசந்தின் செய்கையில்.. தடுமாறி.. கூச்சத்துடன் சற்றுத் தள்ளி நின்று கொண்டான் ஹரி.

“என்னாச்சு டா?” – என்றவனின் கேள்விக்கு.. பதில் சொல்ல முடியாமல் திணறி.. தலை குனிந்தபடி..

“கொ..கொஞ்சம்.. கூச்சமாயிருக்கு” என்றான் அவன்.

“எப்பவுமே இப்படித் தான் இருக்குமா?”

“இ..இல்ல.. பழகிட்டா.. குறைஞ்சிடும்!” – மிகுந்தத் தயக்கத்துடன் வந்தது பதில்.

“ஹ்ம்ம்ம்” – என்ற வசந்த்.. அமைதியாக நடப்பதைக் கண்டு அவன் முகம் பார்த்தவன்.. அதே தயக்கத்துடனே..

“என்னால.. இயல்பா யாரோடயும் பழக முடியாதோன்னு தான் நான் யார் கூடவும் பேசுறதில்ல” – என்றான்.

“ப்ச், அங்க தான் நீ தப்பு பண்ற!, இது வெறும் ஹார்மோனல் சேஞ்ச் தான்!, பசி,தூக்கத்தைத் தர்ற ஹார்மோன்ஸையெல்லாம் நாம பழி சொல்லிக்கிட்டா இருக்கோம்?, அந்த மாதிரி தான் இதுவும்!, பையனா உருவத்தைக் கொடுத்த ஆண்டவன்.. பொண்ணுக்கான ஹார்மோனை உனக்குக் கொடுத்திருக்கிறான்னா.. அது அவனோட தப்பு தான். உன்னோடது இல்ல”

“என்.. என் அப்பா கூட இப்படித் தான் சொல்லுவார்”

“அப்பாவாஆஆஆஆ?, உன் அப்பா நல்லவரா?”

“என்ன இப்படிக் கேக்குற?”

“எங்கப்பா ரொம்பபபபபபக் கெட்டவரு! அதான் கேட்டேன்”

“அப்பா எப்படிக் கெட்டவரா இருக்க முடியும்?”

“இருக்காரே!, எங்கப்பா!”

“நீ ஏதோ அவரைப் பத்தித் தப்பாப் புரிஞ்சிட்டிருக்க போல”

“ஆமாமாமா.. அடப் போடா!”

“..................” – சிறிது நேரம் அமைதியாய் நடந்த ஹரி..

“நீ சொல்றது எல்லாம் சரி தான்! ஆனா.. நடப்புல எல்லாத்தையும் சந்திக்கும் போது.. வர்ற சேலஞ்சஸ்.. ரொம்பக் கஷ்டமானது! யாரும் இயல்பா நெருங்கிப் பழக மாட்டாங்க! கேலி,கிண்டல் ஒரு பக்கம்! ஏன் வாழ்றோம்ன்னு தான் பல முறை நினைச்சிருக்கேன்!”

“ப்ச், யார் தான் சேலஞ்சஸை ஃபேஸ் பண்ணாம இருக்காங்க! ஒரு நாள் எங்கப்பனை சமாளிச்சுப் பாரு, இந்த உலகத்தையே சமாளிச்சுடலாம்ன்ற தைரியம் தன்னால வந்துடும்”

“ஹாஹாஹா.. நீ ஏன் அவரை இவ்ளோ திட்டுற?”

“அந்தாளுக்கு மகனாப் பொறந்துட்டு நான் பட்ற பாடு, சொல்லித் தீர்க்க முடியாது”

“ஹாஹாஹா..” – மீண்டும் கலகலவென நகைத்தவனை நின்று பார்த்துப் புன்னகை கொண்டான் வசந்த்.

“நீ மட்டுமில்ல!,நானும் உன்னை நிறைய கவனிச்சிருக்கேன்! சோலோவாவே சுத்துறானே-ன்னு பேசலாமான்னு நினைச்சிருக்கேன்! ஆனா.. நான் கொடுக்குற ஸ்பெஷல் அட்டென்ஷன் உன்னை பாதிக்குமோன்னும் கவலைப்பட்டுருக்கேன்”

“நீ ரொம்ப நல்லவன் வசந்த்”

“இந்த ஸ்டேட்மெண்ட்டை அப்டியே ஒரு பேப்பர்ல எழுதிக் கொடு டா! எங்கப்பாக் கிட்ட காட்டனும்”

“விளையாடத வசந்த்! நான் உண்மையா தான் சொல்றேன்”

“சரி! இனி யாராவது கேலி பண்ணுவாங்களோன்னு ஒதுங்கியிருக்காம, இயல்பாப் பழகு! அதையும் மீறி யாராவது ஏதாவது செஞ்சா.. என் கிட்ட சொல்லு! நான் பார்த்துக்கிறேன்”

திருத்தப்பட்டப் புருவங்களுக்குக் கீழிருந்தத் தன் பெரிய கண்களை விரித்தபடி அவன் கூறியதைக் கேட்ட ஹரி..

“அப்போ நீயும்,நானும் ப்ரன்ஸ்-ஆ” என்று வினவ..

“அட ஆமா டா!, ப்ச், தோளைத் தட்டிச் சொல்லனும் போல இருக்கு! நீ கூச்சப்பட்டு நாலடி பின்னாலே போய்டுவன்னு தான் அமைதியா

நிற்குறேன்" – என்று வசந்த் கூறியதும் புன்னகைத்துக் கொண்டான் ஹரி.

"அப்புறம், நான் சொன்னதை யோசி! எங்க நாடகக் குழுவுல சேர்றதைப் பத்தி"

"கண்டிப்பா யோசிக்கிறேன்" – என்று கூறியதும் அவன் விடைபெற.. அவனையே பார்த்த வண்ணம் நின்றிருந்தான் வசந்த்.

அச்சு,அசல் பெண்ணைப் போலவே ஒரு நடை அவனுக்கு! தரைக்கு வலிக்காத வண்ணம் சின்ன எட்டுக்களால் முன்னே செல்பவனை வியப்புக் குறையாமல் நோக்கினான்.

காக்கா,குருவி,பன்றி,நாய்,காண்டாமிருகம்,சாருகேசன் போன்ற கடவுள் உருவாக்கிய ஜீவராசிகளின் வரிசையில்.. இது எந்தமாதிரியான படைப்பு?

உடல் அளவில் ஆணாகவும்,மனதளவில் பெண்ணாகவும்.. இரு வகையான பாலினங்களையும் ஒரு உருவில் பெற்று.. அடையாளமும்,அங்கீகாரமும் இன்றி.. கல்லாய்,மண்ணாய் இப்பூமியில் வாழ வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது யார் தவறு?

மீசை,தாடியெதுவுமின்றி,திருத்தப்பட்டிருந்தப் புருவங்களுடன் பெண் முகத்தைப் பிரதபலிக்க முயற்சியெடுத்திருந்தவனின் ஒவ்வொரு செய்கையிலும் அத்தனை நளினம்!

நினைக்க.. நினைக்க வியப்பு தான் வசந்துக்கு!

இரட்டைப் பிறவிகளை, ஆறு விரல் கொண்டவர்களை, இடது கை பழக்கமிருப்போரை எல்லாம் ஆச்சரியமாய்ப் பார்த்து.. ஏற்றுக் கொள்ளவும் தெரிந்த நாம், இதை மட்டும் எதற்காக வித்தியாசமாய் ஒதுக்கி வைக்கிறோம்?

இதுவும் கூட மேற்கூரிய வரிசையில் வரும் அசாத்திய மனிதப் பிறவிகளின் பட்டியலில் ஒன்று தானே?,

வசந்தைப் பொறுத்தவரை ஹரி ஒரு ஆச்சரியம்! அதிசயம்!

எப்போதும் ஒதுங்கியிருப்பவன்.. இன்று அருகில் வந்து பேசவும்.. இதையே வாய்ப்பாக பயன்படுத்தி அவனை நெருங்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டான்.

தனது இந்த உடல் மாற்றங்களைப் பெரிதாக நினைத்துக் கொண்டுத் தள்ளியே நிற்பவனை.. இயல்பாக்கி விட வேண்டுமென்கிற உத்வேகம்

அவனுக்குள்!

ஏதேதோ எண்ணங்களுடன் வீடு வந்து சேர்ந்தவனை வரவேற்றது டைனிங் டேபிளில் புத்தகத்துடன் அமர்ந்திருந்த சாருமதி தான்!

தந்தையுடன் நடந்த பெல்ட் சண்டைக்குப் பிறகு இவளுடன் சமாதானமாகியிருந்தாலும்.. அதிகம் பேச்சு வைத்துக் கொள்வதில்லை அவன்!

“அன்னம்மா...”

நாற்காலியில் அமர்ந்து கொண்டு வழக்கம் போலக் குரல் கொடுத்தவனைக் கண்டுப் பல்லைக் கடித்த சாரு..

“நட்ட நடு ராத்திரி வீட்டுக்கு வந்ததுமில்லாம, இப்போ அன்னம்மாவை வேற ஏன் எழுப்புறீங்க?” என்று வினவினாள்.

“சாப்பிடத் தான். பசிக்குது”

“உங்க முன்னாடி தான் எல்லாம் இருக்கே! எடுத்துப் போட்டு சாப்பிட வேண்டியது தான?”

“நான் என்ன பண்ணனும்ன்னு நீ எனக்கு சொல்லிக் கொடுக்கிறியா?, ப்ச், உன் கூட எனக்கு என்னப் பேச்சு?” என்றவன் தொடர்ந்து.. “அன்னம்மா...” – என்று குரல் கொடுக்க.. கையிலிருந்தப் புத்தகத்தை டொக்கெனக் கீழே வைத்தவள்..

“அன்னம்மாவுக்கு உடம்பு சரியில்ல. மருந்து கொடுத்து நான் தான் தூங்க வைச்சிருக்கேன்” – என்றாள்.

“ஏன்?, என்னாச்சு?” – பதற்றத்துடன் எழுந்தவனைத் தடுத்து..

“சாதாரணக் காய்ச்சல் தான்! இருந்தாலும் நான் தான் ரெஸ்ட் எடுக்கச் சொல்லிட்டேன்! தூங்குறவங்களை நீங்க எழுப்ப வேண்டாம்” என்று அவள் கூற..

அவளைச் சட்டை செய்யாமல் விறுவிறுவென உள்ளே சென்றவன்.. அறைக்குள் உறங்கும் அன்னம்மாவின் நெற்றியில்,கழுத்தில் கை வைத்துப் பார்த்து.. காய்ச்சலின் அளவைக் கண்டு விட்டு.. வெளியே வந்தான்.

கைகளைக் கட்டிக் கொண்டு அவனை முறைத்தபடி நின்றவளிடம்..

“என்ன?” என்றான்.

“நான் சொல்லச் சொல்லக் கேட்காம நீங்க பாட்டுக்கப் போறீங்க?”

“நீ இப்படி அதட்டி,உருட்டி என் கிட்டப் பேசுறது எனக்குச் சுத்தமா பிடிக்கவே இல்ல தெரியுமா?”

“ஓஹோ! சும்மா போனவ வழியை மறிச்சு, எங்கப்பாக் கிட்டப் பேசி என்னை ஹாஸ்டல்ல இருந்து வீடு திரும்ப வழி பண்ணுன்னு கேட்குறதுக்கு முன்னாடி நீங்க இதையெல்லாம் யோசிச்சிருக்கனும்”

“அதாவது.. என் தயவுல தான் டா நீ இந்த வீட்ல நடமாடுறன்னு சொல்லாம சொல்றியா?”

“நான் எப்போ அப்படிச் சொன்னேன்?”

“பின்ன நீ சொன்னதுக்கு என்ன அர்த்தம்?”

“இப்போ நாம சண்டை போட்றோமா?”

“இல்ல தான்! வந்த வேலையைப் பார்க்குறேன்” – என்றவன் தட்டை எடுத்துக் கொண்டு சாப்பிட அமர.. தானும் புத்தகத்துடன் அமர்ந்தாள் சாருமதி.

“நீ போட்டது.. என் கண்ணிலே மந்திரம்..

நான் பார்த்தது.. அழகின் ஆலயம்..

சரி தான்! நடக்கட்டும் இளமையின் ரசனை!

பேரைச் சொல்லவா.. அது நியாயமாகுமா..?”

ஒருபுறம் எஸ்.பி.பியும்,எஸ்.ஜானகியும் டேப் ரெக்கார்டர் வழியே காதல் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தனர்!

‘பாட்டுக் கேட்டுக்கிட்டே படிக்கிறது என்ன பழக்கமோ!’

புத்தகத்தை விட்டு இங்கும்,அங்கும் நிமிராமல் குனிந்து அமர்ந்திருந்தவளைக் கண்டபடி இடியாப்பத்தை வாயில் திணித்தவனுக்குத் தன்னுடைய ‘லவ் லெட்டர்’ சம்பவம் நினைவுக்கு வந்தது.

அந்த ஒரு மஞ்சள் மாலையில்.. ஏகப்பட்ட உணர்ச்சி மாற்றங்களின் இடையே சிக்கிக் கொந்தளித்துப் போய் நின்றவனின் பார்வை.. அதன்பிறகு அவளைப் பார்க்கும் போதெல்லாம்.. அதே ‘ஷாக்’ உணர்வைப் பிரதிபலிக்க.. சற்று நின்று.. நிறுத்தி நிதானமாய் யோசிக்கத் தொடங்கினான்.

இதற்கு முன்பு அவன் அழகான பெண்களை ரசித்ததில்லை என்று கூறி விட முடியாது. நண்பர்களோடு சேர்ந்து கேலியும்,கிண்டலுமாய் ‘சைட்’ அடிப்பதிலேயே அந்த ரசனைகளின் எல்லை நின்று விடும்! அதையும் மீறி மனதில் நின்ற முகங்கள் எல்லாம்.. அன்னம்மாவின் ஆப்பத்தைக் கண்ட பின்பு மாயமாய் மறைந்து போனது கிட்டத்தட்ட அவமானத்திற்குரிய விஷயம் தான்!

மறுபடி,மறுபடி பார்க்கச் சொல்லியோ, நினைக்கச் சொல்லியோ.. அவனது மனம் இது போல் என்றும் சண்டித் தனம் செய்ததில்லை!

ஒரு வகையில் இது அவனுக்கு எரிச்சலைக் கொடுத்தது. இருவரும் ஒரு முறை கூட இயல்பாய்ப் பேசிக் கொண்டதில்லை! அப்படியிருக்கும் பட்சத்தில் ஒரு மஞ்சள் மேகமும்,மஞ்சள் தாவணியும் இத்தனைத் தாக்கத்தை என்ன

எழவுக்காக ஏற்படுத்திச் செல்ல வேண்டுமென்று எண்ணிக் கொண்டான்.

அடி மனது கொடுத்த இந்த நமைச்சலுடனே சுற்றியவனின் முக மாற்றத்தை அன்று முழுதும் உற்று,உற்றுப் பார்த்துக் கவனித்துக் கொண்டிருந்தவளின் பார்வை வேறு... எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்ற... முழுதாக 24 மணி நேரம்.. பொறுத்துப் பார்த்தவன்.. வெகுவாக யோசித்து..

மறுநாள் காலை ஒரு காகிதத்தில் ஐ லவ் யூ – வசந்த் என எழுதி அதை நான்காய் மடித்து அவளது புத்தகமொன்றில் வைத்து விட்டான்.

பார்த்தவுடனே தெரியும்படி நீட்டிக் கொண்டு நின்ற காகிதத்தை எடுத்து முதலில் படித்தவர் மிஸ்டர்.கேசன்!

அடுத்த நிமிடம் “வசந்த்த்த்த்த்த்த்த்” என கர்ஜித்தவரைக் கண்டு அனைவரும் பதறியடித்து ஓடி வந்தனர்.

தந்தையின் கையிலிருந்தக் காகிதத்தைக் கண்டு ஒரு நிமிடம் அதிர்ந்தவன் மறு நொடி.. அவரருகே புரியாத பார்வையோடு நின்றிருந்த சாருவை முறைத்துப் பார்த்தான்.

“என்னடா இது?” – கேசன்.

“எனக்குத் தெரியாது” – தோளைக் குலுக்கிக் கொண்டு அலட்சியமாய்ப் பதிலளித்தான்.

“ஐ லவ் யூ – வசந்த்! நீ தான இந்த வீட்ல வசந்த்?”

“ஆமா.. அதனால?”

“எதுக்காக இப்படி எழுதி சாருவோட புத்தகத்துக்குள்ள வைச்சிருக்க?”

“அவ புத்தகத்துல இருந்ததை நீங்க எதுக்கு எடுத்துப் படிச்சீங்க?”

-அவனுக்கு மிக மிக எரிச்சலாகிப் போனது! என்னவென்றே புரியாமல்.. இதுவாகத் தான் இருக்க வேண்டுமென்கிற கணிப்புடன்.. போகிற போக்கில் ஒரு ஐ லவ் யூ-வை எழுதி இவன் அவளது புத்தகத்துக்குள் வைக்க.. அதைச் சரியாக எடுத்துத் தொலைத்தது மட்டுமில்லாமல் கேள்வி வேறு கேட்கிறார் மனிதர்”

“டேய் படவா!, ஒழுங்கா நான் கேட்குறதுக்குப் பதில் சொல்லு டா”

“ப்ச்,இதை நான் எழுதலப்பா!”

“வசந்த்-ன்னு தெளிவா பேரு போட்டு வைச்சிருக்க?, இப்போ மாட்டிக்கிட்டதும் மாத்திப் பேசுறியா டா ராஸ்கல்?”

“ஏன், இந்த உலகத்துலயே நான் ஒருத்தன் மட்டும் தான் வசந்த்-ஆ?”

“இது உன் கையெழுத்து தான். எனக்கு நல்லாத் தெரியும். ஒன்னாங்க்ளாஸ் பையன் கிறுக்கி வைச்ச மாதிரி கோணல்,மானலா இருக்கு”

“அப்பாஆஆஆ....”-இப்போது முழு கடுப்புடன் வசந்த்.

“இருக்காது மாமா!, அவரா இருக்காது. எனக்கு நிச்சயமாத் தெரியும்! ஆனா.. யாரு இப்படி எழுதி என் புக்ல வைச்சிருப்பா?” –திடீரென இடை புகுந்துத் தனக்காக வக்காலத்து வாங்கியவளைக் கண்டு சந்தோசத்துக்குப் பதில் கோபம் தான் வந்த வசந்துக்கு.

முறைப்புடன் அவள் புறம் திரும்பியவன்..

“ஏன்? ஏன்? ஏன் நானா இருக்கக் கூடாது? உன்னைப் பார்த்து ஐ லவ் யூ சொல்ற அளவுக்கு எனக்குத் தகுதியில்லன்னு நினைக்குறியா?”

“இது என்னப் பேச்சு? நான் எப்போ அப்படிச் சொன்னேன்?”

“அப்டின்னா.. அப்பா.. அந்த லெட்டரை அவ கைல கொடுங்க! அவ என்ன பதில் சொல்லப் போறான்னு எனக்குத் தெரியனும்”

-மாமனும்,மருமகளும் அவன் கூறியதைக் கேட்டுத் திகைத்துப் போய் நிற்க.. முதலில் சுதாரித்த கேசன்..

“ராஸ்கல், எவ்ளோ தைரியம் இருந்தா.. இந்தக் கருமத்தை அவ கைல

கொடுக்கச் சொல்லி என்னையே ஏவுவ?, ரெண்டு பேரும் ஒரே வீட்ல இருந்தா.. அப்படியென்ன மாமா நடந்துடும்ன்னு கேட்டியேம்மா மதி?, இதோ.. இது தான்! இந்தப் பய மேல எனக்குத் துளி கூட நம்பிக்கைக் கிடையாது! அங்க,இங்கத் தொட்டுக் கடைசியா அடிமடில கையை வைச்சுட்டான் பார்த்தியா?"

"ஷ்ஷ்ஷ்.. அப்பா.. எதுக்கு இவ்ளோ லெங்க்த்தியா டையலாக் பேசி எனர்ஜி வேஸ்ட் பண்றீங்க?, நெத்தியெல்லாம் வேர்த்துப் போய்.. எப்படி மூச்சு வாங்குது பாருங்க!, அன்னம்மா.. அப்பாவுக்கு ப்ரஷர் மாத்திரையெல்லாம் நீ சரியா கொடுக்கிறியா இல்லையா?"

"தினமும் காலைலயும்,ராத்திரியும் தவறாம கொடுத்திடுவேன் ராசா" – சின்சியராகப் பதில் சொல்லியபடி அன்னம்மா வேறு இடையில்!

"என் ரத்த அழுத்தம் ஏகத்துக்கும் ஏறுறதுக்குக் காரணமே நீ தான் டா!, அக்கறையா என்ன கேள்வி வேண்டிக் கிடக்கு?, பேச்சை மாத்தி.. தப்பிச்சுக்கலாம்ன்னு பார்க்குறியா?"

"நான் பேச்சை மாத்தல-ப்பா!," என்றவன் சாருவின் புறம் திரும்பி..

"ஐ லவ் யூ-ன்னு எழுதி உன் புக்-ல வைச்சது நான் தான்!" என்றான்.

"நீ...நீங்களாஆஆஆஆ?"-என்று இழுத்த சாருமதிக்கு அவன் சொல்ல வந்த விசயத்தைக் காட்டிலும், மாமாவின் முக பாவனையே நிறைய கலக்கமூட்ட.. அவரையும்,அவனையும் மாற்றி மாற்றிப் பீதியுடன் பார்த்தாள்.

"உன்னைப் பிடிச்சிருக்கா,இல்லையா.. உன்னை நேசிக்கிறேனே இல்லையா.. இந்த உணர்ச்சிகளெல்லாம் இன்னும் எத்தனை நாளைக்கு நீடிக்கும்ன்னு தெரிஞ்சுக்க.. காதலிச்சுப் பார்க்கனும்ன்னு தோணுச்சு! அதனால தான் யோசிக்காமப் பட்டுன்னு லெட்டர் எழுதிட்டேன்! நீ சொல்லு! காதலிக்கலாமா?"

கலக்கம்,பயம்,பீதி அனைத்தையும் தாண்டி.. வியப்பு ஒன்றே மேலோங்க.. விரிந்த வாயுடன் அவனை நோக்கியவளைக் கண்டவனுக்கு.. மெல்ல மெல்ல இதழ் விரிந்து.. புன்னகை தோன்ற... கன்னக்குழியுடன் அழகாகச் சிரித்து..

"உனக்குத் தோணுதோ இல்லையோ! எனக்கு நிறையத் தோணுது! காதலிச்சே ஆகனும்ன்னு"

-அவன் முடித்ததும் அவனது இரு கண்களிலும் பூச்சி பறக்குமளவிற்கு பட்டெனக் கன்னத்தில் அறைந்த சாருகேசன்..

“கமலஹாசன் மாதிரி தலைமுடியும்,மீசையும் வைச்சுக்கிட்டா.. நீ பெரிய காதல் மன்னன் ஆயிடுவியா டா?, ராஸ்கல்! அப்பா முன்னாடி நிற்கிறோம்ன்ற பயம் கொஞ்சமும் இல்லாம.. எவ்ளோ தைரியமா அவக் கிட்ட உளறுவ?” – எனக் கேட்டு.. அவன் கோபத்தைக் கிளப்பி விட.. பதிலின்றி இருவரையும் கலவர முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்த சாருவை ஏகத்துக்கும் கொலைவெறியுடன் நோக்கி விட்டுச் சென்றவன்... அதன் பிறகு பெல்ட் சம்பவத்தின் போது தான் மீண்டும் சந்தித்தான்!

புத்தகத்தினுள் ஆழ்ந்திருந்தவள் நிமிர்ந்து.. தன்னையே பார்த்துக் கொண்டிருந்தவனைக் கண்டு..

“என்ன அப்படிப் பார்க்குறீங்க?” என்று வினவினாள்.

“நீ அடிக்கடி தாவணி போடுவியா?”

“ஹ்ம்ம்!, ஸ்கூல் யூனிஃபார்மே தாவணி தான?”

“ப்ச், அது இல்ல! அ..அ..அந்த மஞ்சள் கலர் தாவணி”

“என் கிட்ட மஞ்சள் கலர் தாவணியிருக்கிறது உங்களுக்கு எப்படித் தெரியும்?”

வெகு சிரமப்பட்டு முக பாவனையை அடக்கித் தட்டை அளந்தவன்.. பின் கையைக் கழுவியபடியே..

“போன வாரம் ஞாயிற்றுக் கிழமை நீ அந்தத் தாவணி தானே உடுத்தியிருந்த?, அதனால தெரியும்” – என்றான்.

“ஓ...”

“எனக்காக ஒன்னு செய்வியா?” – கெஞ்சலுடன் முகத்தை வைத்துக் கொண்டவனைக் கண்டு புருவம் சுருக்கி..

“என்ன?” – என்றவளிடம்..

“இனி அந்தத் தாவணி உடுத்தாத” – என்றான்.

குழப்பத்துடன் “ஏன்?” என்றவளிடம்..

“ம்ம், அதை நீ உடுத்துனா.. மறுபடி நான் லவ் லெட்டர் கொடுப்பேன். பரவாயில்லையா?” - மிடுக்குடன் கூறியபடி எழுந்து கொண்டவன்..

“அப்புறம்.. அடிக்கடி இப்படிக் கண்ணை விரிச்சு,விரிச்சுப் பார்க்காத!, எனக்கு நீச்சல் எல்லாம் தெரியாது” – என்று மொழிந்து விட்டு நகர்ந்து விட.. புரிந்தும்,புரியாத பாவனையுடன்.. முகம் மாற... அமர்ந்திருந்தாள்

சாருமதி.

அன்று இடியும்,மின்னலுமாய்ப் பெய்த பலத்த மழையின் விளைவால்.. அந்தப் பின் மாலை நேரம் பாரபட்சமின்றி முழுதாய் நனைந்திருந்தது.

அப்போது இந்தியா-இங்கிலாந்துக்கு இடையேயான கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

முதல் நாள் காந்தி ஸ்டேடியத்தில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் (டிசம்பர்,1981) ஆறு விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்று விட.. நாடே மிகுந்த கொண்டாட்டத்தில் இருந்தது. திலிப் வெங்சர்கார் அடித்த சதம் பெரிதாகப் பேசப்பட.. அடுத்த போட்டியில் ஜெயித்து விட்டால்... அத்தொடருக்கான கோப்பையை வென்று விடலாம் என்ற எதிர்பார்ப்புடன் கிரிக்கெட் ஆர்வலர்கள் காத்திருந்தனர்.

வானொலி வழி வந்த செய்தியைக் கேட்டபடி மழைக்கு ஒதுங்கி ஒரு டீக்கடை வாசலில் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் வசந்த்.

சிறிது நேரத்தில்.. கையில் குடையுடன் சாலையில் நடந்து சென்ற ஹரியைக் கண்டு... “டேய்.. ஹரி..” என்றழைத்தபடி அருகே ஓடிச் சென்றான்.

“வசந்த்... நீ எங்க இந்தப் பக்கம்?” – முகம் மலரக் கேட்டவனிடம் சிரித்து.. “என் வீடு இந்தப் பக்கம் தான்! மழைக்காக ஒதுங்குனேன்” என்றான் வசந்த்.

“என் வீடு கூடப் பக்கத்துல தான்! உன்னை நான் இதுக்கு முன்னாடி இங்க பார்த்ததே இல்லையே” என்றவன் தொடர்ந்து “வா என் வீட்டுக்குப் போகலாம்” எனக் கூறிக் கையோடு அழைத்துச் சென்று விட்டான்.

ஒற்றைப் படுக்கையறை கொண்டத் தனி வீடு ஒன்றில் தனியாகக் குடியேறியிருந்தான் அவன்.

கேள்வியாக நோக்கிய வசந்திடம் “அம்மாவுக்கு நான் இப்படியிருக்கிறது பிடிக்கல! நான் அங்க இருந்தா.. தம்பி,தங்கச்சி வாழ்க்கைப் பாதிக்கப்படுமோன்னு பயந்து.. என்னை வீட்டை விட்டுத் துரத்திட்டாங்க. ஆனா.. அப்பா தான் என்னை இங்க வீடு பார்த்துக் குடி வைச்சு காலேஜூம் சேர்த்து விட்டார்.” என்றான்.

“நிஜமாவே உங்கப்பா க்ரேட் டா ஹரி”

“ஹ்ம்ம், கொஞ்சம் கஷ்டப்பட்டாலும் அப்புறம் இதை இயல்பா ஏத்துக்கிட்டார். அடிக்கடி என்னை வந்து பார்ப்பார்”

-சிரிப்புடன் கூறியவனைக் கண்டுத் தானும் புன்னகை கொண்டு வீட்டைச் சுற்றிப் பார்த்தான் வசந்த்.

ஒரு புற அலமாரி முழுவதும் புத்தகங்கள் நிறைந்திருப்பதைக் கண்டு அருகே சென்றான்.

“நிறைய புத்தகம் படிப்பியோ?” - வசந்த்

“ம்ம், உனக்கு மேடை முதல் காதலின்னா.. எனக்குப் புத்தகம்”

“நாடகக் கலை பத்தின புத்தகங்கள் தான் நிறைய இருக்கு”

“சொன்னேனே.. எனக்கு மேடை நாடகங்கள்ல ஈடுபாடு ஜாஸ்தின்னு”

“ஹ்ம்ம்.. எனக்கு ரெண்டு புஸ்தகம் இரவலா கொடுக்குறியா?, படிச்சிட்டுத் தர்றேன்”

“ம்ஹும், புத்தகத்தை மட்டும் நான் யாருக்கும் கடன் கொடுக்குறது இல்ல! நீ தான் எனக்கு ஃப்ரண்ட் ஆயிட்டியே! வேணும்ன்றப்போ எல்லாம் இங்க வந்து படிச்சிட்டுப் போ”

“அதுசரி!”

“சரி, என்ன சாப்பிட்ற?, டீ ஆர் காஃபி?”

“ஏய்.. நீ தான் சமையலா இங்க?”

“ஆமா பின்ன?, எனக்கு சமையல்ன்னா ரொம்ப இஷ்டம்”

“அப்டின்னா டீ,காஃபி எதுக்கு?, சாப்பாடே சாப்பிட்றேன்”

“நிஜமா?” என்றவன் உற்சாகமாய் சமையலறைக்குச் சென்று விட.. வீட்டை நோட்டம் விட்டான் வசந்த்.

கண்ணாடியில் ஒட்டியிருந்த ஸ்டிக்கர் பொட்டுக்கள், செல்ஃபிலிருந்த நெய்ல் பாலிஷ் பாட்டில்கள், லிப்ஸ்டிக்குகளையெல்லாம் மெல்லப் பார்வையிட்டபடி நடந்த வசந்த்..

“இதுவும் இஷ்டமோ?” – என்றபடி அவற்றையெல்லாம் கை காட்டிக் கேட்க.. தயக்கமாய்த் தலை குனிந்த ஹரி....

“ம்ம்..” என்றான்.

அவன் சங்கடப்படுவதை உணர்ந்து..

“எல்லாம் டார்க் ஷேட்-ஆ இருக்கே டா! உன் ஸ்கின் கலருக்கு செட் ஆகுமா?” என்று சாதாரணமாகக் கேட்டபடி நடந்து சென்று சமையல் மேடையில் ஹரியின் அருகே நின்று கொண்டான்.

அவன் கேள்வியில் பளிச்சிட்டக் கண்களுடன் அவன் முகம் பார்த்தவன்.. அவன் முயற்சியைக் கண்டு கொண்டு..

“இதெல்லாம் வீட்டுக்குள்ள மட்டும் தான்!, வெளிய போகும் போது போட்டுக்கிட்டதில்ல” என்றான்.

“ஏன்?”

“ஏற்கனவே ஏகப்பட்ட கேலி,கிண்டல்! அதனால தான்”

“கமலஹாசன் பெரிய ஆணழகன் தான்! ஆனாலும் அவருக்கு உயரம் பத்தலன்னு விமர்சனம் பண்றதில்லையா?, யாரைத் தான் உலகம் கேலி பண்ணாம இருக்கு?, நமக்குக் கிடைச்சது ஒரு வாழ்க்கை டா ஹரி! அதைப் பிடிச்ச மாதிரி வாழ்றதுல எந்தத் தப்புமில்ல”

“எல்லாரும் உன்னை மாதிரியே இருந்துட்டா.. பிரச்சனையே இருக்காது போல வசந்த்”

“நீ ஒருத்தன் தான் டா என்னை ஒரு மகான் ரேஞ்சுக்குப் பார்க்குற!, அதான்.. எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்குது”

“ஹாஹாஹா”

“ஹ்ம்ம், இப்டியே சிரிச்சுக்கிட்டே இரு! பார்க்க நல்லாயிருக்கு! ஆமா, இந்த மாதிரி லீவ் நாள்ல நீ என்ன பண்ணுவ பொதுவா?”

“ம்ம்ம்ம்... வீடு சுத்தம் பண்ணுவேன்! துணி துவைப்பேன்! சமையல்,புக், ரேடியோ.. அவ்ளோ தான்”

“அவ்ளோ தானா?, வெளிய-லாம் போக மாட்டியா?”

“ப்ச், இண்ட்ரெஸ்ட் இல்ல வசந்த்! பெரும்பாலும் தெருக்கூத்து நாடகங்கள் எதுக்காகவாவது அழைப்பாங்க! அதுக்குப் போயிடுவேன்..”

“அடப்பாவி! அது தவிர.. வேற எங்கயும் போக மாட்டியா?, வேஸ்ட் டா நீ!, பேசாம நீ என் கூட்டத்துல கலந்துடு! வாழ்க்கைன்னா என்னன்னு நான் காட்டுறேன்”

“அதுசரி”

“சரி, என்ன மாதிரியான நாடகமெல்லாம் போடுவீங்க?”

“வள்ளித் திருமணம், குற்றாலக் குறவஞ்சி, அரிச்சந்திரா, கர்ணன் கதை இந்த மாதிரி..”

“ஓஹோ..”

“நாளைக்குக் கூட ஒரு நாடகம் போடப் போறோம்!, மெட்ராஸ் மேளா-வில்! சாயந்தரம் தான்!, நீயும் வர்றியா?”

“நானா?”

“ம்ம், நாடகம் பார்க்க பிடிக்கும்ன்னு சொன்னியே! வா வசந்த்.. நல்லாயிருக்கும்”

“சரி,சரி, அதுக்கு ஏன் கெஞ்சுற?, கண்டிப்பா வர்றேன்!, உன் முட்டைக்குழம்பு என்னை இழுக்குது.. முதல்ல சாப்பிடலாமா?” என்றவன்.. அந்த மாலை முழுதும் அவனுடன் நேரத்தைக் கழித்து விட்டு மறுநாள் சொன்னபடி.. நாடகம் பார்க்கச் சென்றான்.

அதே நேரம் பச்சை வண்ணத்தில் கருப்புப் பொட்டுக்கள் வைத்த முழு நீள மேக்ஸியில்.. அன்னம்மாவிடம் சொல்லிக் கொண்டுத் தன் தோழியுடன் அதே மேளாவிற்குப் புறப்பட்டிருந்தாள் சாருமதி.

நாடகம் தொடங்க சில மணி நேரங்களே மிச்சமிருந்த சமயம் அங்கு வருகை தந்த வசந்த் கண்டது, தொங்கிப் போன முகத்துடன் நின்றிருந்த ஹரியைத் தான்.

என்னவாகிற்று என்று வினவியவனிடம், அன்றைய நாடகத்தின் கதாநாயகனாக நடிக்க வேண்டிய ஆள், அவசர வேலையாக வெளியூர் சென்று விட்டதாகவும், வேறு எவரும் கிடைக்கவில்லையென்பதால் நாடகம் நடக்கப் போவதில்லை என்றும் கூறினான் ஹரி.

“அதுக்கு ஏன் டா நீ முகத்தை இப்படி வைச்சிருக்க?”

“இல்ல, நான் கூப்பிட்டதால வந்த உன்னை ஏமாத்திட்டோமேன்னு நினைக்கிறப்ப...”

“வருத்தமா இருக்கா?, டில்லி அப்பளம் 2 வாங்கிக் கொடு! என் வருத்தமெல்லாம் காணாம போயிடும்! அட ஏன் டா?”

“இன்னிக்கு நல்லக் கூட்டம் கூடும் வசந்த்! இது எங்கக் குழுவுக்கு ஒரு நல்ல வாய்ப்பு டா!”

“அப்டின்னா.. வேற யாரையும் ஏற்பாடு பண்ண முடியாதா?”

“ஆள் கிடைக்கல டா”

“ஹ்ம்ம்.. என்ன பண்ணலாம்?”

“வசந்த்”

“சொல்லு”

“இ..இல்ல.. உனக்கு நடிப்பு வரும்ன்னு அடிக்கடி சொல்லுவியே!, பேசாம நீயே நடிக்கிறியா?”

“டேய்.. வேடிக்கை பார்க்க வந்தவனை, மேடை ஏத்தி விடப் பார்ப்பியா நீ?, நான் கிளம்புறேன்”

“வசந்த்… வசந்த்.. ப்ளீஸ்.. போகாத நில்லு”

“என்னடா?”

“எனக்காக டா.. எங்கக் குழுவுக்காக டா! இவ்ளோ கூட்டத்துக்கு முன்னாடிலாம் நாங்க நாடகம் போட்டதே இல்ல டா! இது தான் முதல் முறை! ப்ளீஸ் டா”

“ப்ச், ஒத்திகையே பார்க்காம.. எப்படிடா என்னால நடிக்க முடியும்?”

“நாடகம் தொடங்க நேரமிருக்கே!, அதுக்குள்ள நாம ஒத்திகை பார்த்துடலாம்”

“உனக்கு என்னை நடிக்க வைக்குறதுல ஏன் இவ்ளோ ஆர்வம்?”

“ப்ளீஸ் வசந்த்”

“நீ இந்த மாதிரி முகத்தை வைக்கும் போது.. போனா,போகுது இவன் கேட்குறதைப் பண்ணிடலாம்ன்னு தோண ஆரம்பிச்சிடுதுடா ஹரி”

“என் மேல உனக்கு அவ்ளோ பாசம் டா வசந்த்”

“ம்ம்ம், நல்லா வருது வாய்ல! போடா.. போ..” – நண்பனைத் திட்டியபடித் தன்னுடைய முதல் நாடக மேடையில் ஏறிய வசந்துக்கு அப்போது தெரியவில்லை! இது தனக்குள் எத்தகைய தாக்கத்தைத் தோற்றுவிக்கப் போகிறதென்றும்.. இனித் தன் எதிர்காலத்தையே இது தீர்மானிக்கப் போகிறதென்றும்!

இப்போது நடக்கும் பொருட்காட்சி தான் அப்போது மேளா எனப் பெயர் வைக்கப்பட்டிருந்தது. ஒரு மைதானம் முழுவதும் விதவிதமான ஆடை,அணிகலனிலிருந்துத் தொடங்கி விளையாட்டுப் பொருட்கள்,தின்பண்டங்கள் என அனைத்தும் அணிவகுத்திருந்தது.

சர்க்கஸ்,ராட்டினம் போன்ற சிறுவர்களைக் கவரும் பொழுதுபோக்கு

அம்சங்களும் எக்கச்சக்கமாய் இருந்தன.

அவ்வப்போது வாய்க்கு உகந்ததை வாங்கிக் கொறித்தபடி ஒருபுறம் ஷாப்பிங்கிலும் ஈடுபட்டிருந்த சாருமதியை, அவள் தோழி மைதிலி நாடகம் பார்க்க அழைத்தாள்.

களைத்துப் போயிருந்தவளுக்கும் எங்கேனும் அமர்ந்தால் போதுமெனத் தோன்ற.. உடனே தலையாட்டி விட்டாள்.

இருவரும் மூன்றாவது வரிசையில் அமர்ந்து கொண்டு மேடையை பார்க்கத் தொடங்கினர்.

மேடையின் பிண்ணனியிலிருந்தத் திரையில் அன்றைய நாடகத்தின் பெயரும்,குழுவின் பெயரும் எழுதப்பட்டிருந்தது.

நாடகம்: மிருச்சகடிகம்

குழு: எம்.கே பிரதர்ஸ்.

நாடகம் தொடங்கியதும் அசுவாரசியமாய் மேடையை நோக்கிய சாருமதி, பஞ்சகச்சமும்,மேல்சட்டையுமாய் தலைப்பாகையுடன்.. அம்மேடையின் மேற்கூரையை தொட்டு விடும் உயரத்தில் அகலமாய் நின்றிருந்தவனைக் கண்டு விழி விரித்தாள்.

அவந்திநகரத்தில் அந்தணர்குலத்தில் பிறந்தப் பெரும் வணிகனான சாருதத்தன் என்பவன் மிகச் சிறந்தக் கொடையாளியாவான். தன் கொடைப் பண்பினால் பொருளிழந்து வறுமை நிலைக்குத் தள்ளப்படுபவன் மீது அவ்வூரின் தேவதாசியான வசந்தசேனையென்பவள் தீராக் காதல் கொள்கிறாள். இதற்கிடையே அரசன் பாலகனின் மைத்துனான சகாரன் என்பவன் வசந்தசேனையை அடைய முயல்கிறான். ஒருமுறை அவனிடமிருந்துத் தப்பித்து எதேச்சையாக சாருதத்தனின் வீட்டில் தஞ்சம் புகுகிறாள் வசந்தசேனை. தன் வீட்டில் அவளைக் கண்டு உபசரிக்கும் சாருதத்தனிடம் தன் அணிகலன்களை ஒப்படைக்கிறாள் ‘இரவு வேளையில் இத்தனை நகை அணிந்து செல்வது பாதுகாப்பு இல்லையென்று கருதி’. இந்நகையானது மறுநாள் இரவு சாருதத்தனின் வீட்டிலிருந்துக் கொள்ளை போகிறது.

இத்திருட்டுச் சம்பவத்தை வசந்தசேனை நம்புவாளோ, இல்லையோ என்று கருதி.. தன் மனைவியின் ரத்தினஹாரத்தை அவளிடம் ஒப்படைத்து, தான் சூதாட்டத்தில் அந்நகைகளை இழந்து விட்டதாகப் பொய் கூறுகிறான் சாருதத்தன்.

சாருதத்தனின் வீட்டிலிருந்து நகையைத் திருடியவன்..

வசந்தேசனையின் சேடிப் பெண்ணான மதனிகையின் காதலன் சர்விலகனன் என்பவன். இந்நகையைக் கொடுத்து மதனிகையை அடிமைத்தனத்திலிருந்து விலக்கி விவாஹம் செய்யத் திட்டமிட்டிருந்தான்.

நகைகளைக் கண்டதும் விஷயம் புரிந்து கொண்ட வசந்தசேனை, ரத்தினஹாரத்துடன் சாருதத்தனைச் சந்திக்கிறாள். நடந்ததைக் கூறுகிறாள். அன்றிரவு அவன் வீட்டிலேயே தங்கிக் களிக்கிறாள்.

மறுநாள் சாருதத்தனுடன் புஷ்பகரண்டகம் செல்லவிருந்தவள்.. வண்டி மாறி சகாரனின் இடத்திற்குச் சென்று விடுகிறாள். தன் ஆசைக்கு அடி பணியக் கோருபவனிடம் அவள் மறுத்து விட.. அங்கேயே அவளை அடித்துக் கொல்ல முயல்கிறான் சகாரன். அதன் பிறகு என்ன நடக்கிறது,சாருதத்தன் எப்படித் தப்பிக்கிறான் என்பதே கதை.

கல்வி,அறிவு,பொறுமை,தயை முதலியவற்றில் சிறந்தவனும், கட்டழகும்,யௌவனமும் வாய்ந்த சாருதத்தனின் கொடைப்பண்பைப் பற்றி எடுத்துக் கூறும் வகையில் துவங்குகிறது முதல் காட்சி.

பசி,பட்டினியில் வாடுபவர்களுக்கு.. தான் வணிகத்தில் ஈட்டும் பொருளையும்,பொன்னையும் கை நிறைய அள்ளிக் கொடுத்து விட்டு வீடு வந்து சேர்பவனுக்கு.. வெறும் கூழையும்,கஞ்சியையும் நீட்டுகிறாள் அவனது சேடிப் பெண்ணான ரதனிகை.

“ஏன்?” என்று பார்ப்பவனிடம் “தானம் அளித்தே அவனது வீட்டுத் தாழி காலியானதை” எடுத்துக் கூறிகிறாள் ரதனிகை.

தான் வறிஞனாகியதை எண்ணிச் சிறிதும் கவலை கொள்ளாமல் இன்றுத் தன் வயிறு நிறைய வழி செய்த கடவுளுக்கு நன்றி கூறி விட்டுக் கஞ்சியை உண்ணுகிறான் சாருத்தத்தன்.

அடுத்ததாகக் காட்சி மாறுகிறது. வருகிறாள் பேரழகி வசந்தசேனை!

அவந்திநகரத்தின் தேவதாசிகளில் ஒருத்தி! திராட்சை விழிகளுக்கும், பலாப்பழ உதடுகளுக்கும் சொந்தக்காரி! அழகில் ரதியையும்! பண்பிலும்,கருணையிலும் அன்னை மீனாட்சியையும் ஒத்திருப்பவள்! நல்லுள்ளம் படைத்த கற்புக்கரசி!

காமதேவன் கோயிற்றோட்டத்திற்கு வருகை தந்தவளின் கண்களில் படுகிறான் சாருதத்தன். அவனது கொடைப் பண்பைப் பற்றி ஊரார் கூறக் காதால் கேட்டு வந்தவள், இன்று தான் அந்த ஆணழகனை நேரில் காண்கிறாள். கண்டதும் காதல் கொள்கிறாள்.

திருவிழாவில் கூடியிருந்த அத்தனை பேரும் அவள் கண்களிலிருந்து மறைந்து போக.. இப்போது அவனும்,அவளும் மட்டும்! அவளது கற்பனையில்!

மேடையின் நடுவில் சாருதத்தனாக வசந்தும், வசந்தசேனையாக ஹரியும் ஒருவரையொருவர் கண் பார்த்துக் காதல் பேசியபடி எதிரெதிரே நின்று கொண்டு சுற்றி வர... பிண்ணனியில் பாகவதர் காலத்துக் காதல் பாடலொன்று ஒலிக்கிறது.

அடுத்த காட்சியில் தோன்றுகிறான் சகாரன் என்னும் அரக்கன் தன் நண்பன் விடன் என்பவனோடு!

கோவிலுக்குச் சென்று கொண்டிருக்கும் வசந்த சேனையை விடாது துரத்தியபடி ஏதேதோ பிதற்றிக் கொண்டுப் பின்னால் வருகிறான் சகாரன்.

எப்படியேனும் அவளைக் கவர்ந்து விட வேண்டும் என்கிற நோக்கத்துடன் தனது இதிகாச அறிவை அவிழ்த்து விட்டவனைக் கண்டு மேடையின் கீழ் அமர்ந்தோர் சிரிக்கத் தொடங்கினர்.

“இராவணன் கையில் குந்தி எப்படி அகப்பட்டாளோ அப்படி நீ என் கையில் அகப்பட்டாய்” – என்பவனைக் கண்டு சிரிக்காமல் என்ன செய்ய முடியும்?, இராமயணத்தில் குந்தி எங்கே வந்தாள்??

அவனிடமிருந்துத் தப்பிக்கும் பொருட்டு புகுந்து கொள்கிறாள் சாருதத்தனின் வீட்டுக்குள்.

அப்போது பார்த்து சாருதத்தனின் நண்பன் மைத்திரேயனும், அவனது சேடி ரதனிகையும் வீட்டை விட்டு வெளியே வர.. ரதனிகையை வசந்தசேனை என்றெண்ணிக் கொண்டுக் கட்டிப்பிடித்தபடி “நான் உன்னைப் பிடித்து விட்டேன்” என்று குதித்த சகாரனின் தலையிலேயே ஒரு போடு போடுகிறான் மைத்திரேயன்.

“வசந்தசேனையை என்னிடம் கொணர்ந்து விடா விடில், உனக்கும்,எனக்கும் தீராப்பகை விளையும்” என்று சாருதத்தனிடம் சொல் என்று மைத்ரேயனை மிரட்டுகிறான் சகாரன்.

வீட்டினுள்ளே நடக்கிறது மற்றுமொரு காதல் அரங்கேற்றம்!

ரதனிகையென்றெண்ணித் திரும்பிய சாருதத்தன், வசந்தசேனையைக் கண்டு மகிழ்ச்சியுற்று விழி மலர அவளருகே வந்து வரவேற்று உபசரிக்கிறான்.

தன் கண்ணாளனை அருகில் கண்ட மிதப்பில், உலகம் மறந்து.. வெட்கம் சூழ தலை குனிந்து அமர்ந்திருந்தவள்.. அவன் முகம் பாராமல் நடந்ததை விவரிக்கிறாள்.

அன்றிரவு அங்கு தங்க வற்புறுத்துபவனிடம் மறுத்து தன் நகைகளனைத்தையும் கழட்டிக் கொடுத்து “பணிகளினிமித்தம் பாவிகள் என்னைத் துரத்துகிறார்கள். உம்மிடத்தில் இந்த முடிப்பை அடைக்கலமாக வைக்கிறேன்” என்கிறாள். இதைச் சாக்காக வைத்து மீண்டும் அவனைச் சந்திக்கும் எண்ணத்துடன்!

“சரி”-என்று விட்டு எழும் சாருதத்தன் அவளைத் தானே அழைத்துச் சென்று அவள் வீட்டில் விடுகிறான்.

இரவும்,நிலவும் இடையே பவனி வர.. மோனநிலையில் இருவரும்!

அடுத்து வசந்தசேனையின் நகைகள் களவு போகும் காட்சி துவங்குகிறது!

அன்று மாலை பாடகன் ரைபிலன் என்பவனின் கானக் கச்சேரியில் கலந்து கொண்டு சாருதத்தனும்,மைத்ரேயனும் இரவு தாமதமாக வீடு திரும்ப.. களைப்பில் நண்பனை நோக்கிய சாருதத்தன்..

“இந்த ஆபரணங்களை நீயே பாதுகாப்பாக வைத்திரு” என்று கூறி விட்டு உறங்கி விடுகிறான்.

அன்றிரவு சாருதத்தனின் வீட்டில் கன்னமிட்டு நுழையும் திருடன் சர்விலகனென்பவன், மைத்ரேயனின் மார் மீதிருந்த நகையைத் திருடுகிறான்.

உறக்கத்திலிருந்த மைத்ரேயனும் சாருதத்தன் என்றெண்ணி “இந்தத் தங்கப்பானையைக் காப்பாற்ற என்னால் முடியாது. நீரே வைத்துக் கொள்ளும்” என்று கொடுத்து விடுகிறான்.

மறுநாள் காலை எழுந்து நகை திருட்டுப் போனதை உணர்ந்து பதறிய மைத்ரேயன்.. கள்வன் கன்னமிட்ட இடத்தைக் கண்டு வியந்து.. அவனது திறமையை எண்ணி சிலாகித்த சாருதத்தனை முறைக்கிறான்.

அடுத்து திருடன் சர்விலகனென் தன் காதலியும், வசந்தசேனையின் சேடிப் பெண்ணுமான மதனிகையைச் சந்திக்கும் காட்சி..

நீண்ட நாட்களுக்குப் பின் சந்திக்கும் தனது காதலனைக் கட்டியணைத்துக் கொள்ளும் மதனிகையின் கண்கள் தானாய்க் கண்ணீரைச் சொரிய..

“இனி கவலை தீர்ந்தது. முறிப்பணத்தை உன் முதலாளியிடம் கொடுத்து உன்னை அழைத்துச் சென்று விவாஹம் புரியவே நான் வந்திருக்கிறேன்” – என்ற சர்விலகனென் தான் திருடிய நகைகளைக் காட்டுகிறான்.

ஒரு பார்வையில் அது வசந்தசேனையினுடையது என்பதைக் கண்டு கொண்ட மதனிகை விரைந்து சென்று அதை அவளிடம் கொடுக்கிறாள்.

“முறிப்பணத்தைக் கொடுத்து என்னை மீட்டு மணந்து கொள்ளும் ஆசையில் என் காதலன் இவ்வாறு செய்து விட்டான்” – எனக் கூறிக் கதறுபவளை அணைத்துக் கொண்ட வசந்த சேனை அவன் தவறை மன்னித்து உடனே மதனிகையுடனான அவன் திருமணத்தை நடத்திக் கொடுக்கிறாள்.

இதற்கிடையில் சாருதத்தன் அளித்த ரத்தின மாலையோடு வசந்தசேனையின் வீட்டிற்கு வருகிறான் மைத்திரேயன்.

களவு போன நகைகளுக்கு ஈடு கொடுக்க எண்ணி, தன் மனைவியின் நகையொன்றைக் கொடுத்தனுப்பியிருந்தான் சாருதத்தன்.

“என் நண்பன் நேற்று சூதாட்டத்தில் உங்கள் நகைகளைத் தனதாக நினைத்து ஆடி.. அனைத்தையும் இழந்து விட்டான். அவற்றை ஈடுகட்ட இந்த ஆபரணத்தைக் கொடுத்தான்” – என்று கூற..

உண்மையறிந்த வசந்தசேனையோ அதை வாங்கி வைத்துக் கொண்டு “உன் நண்பரை நான் இன்று மாலை சந்திப்பதாகச் சொல்” என்று விடுகிறாள்.

“வேசியிடம் நட்பு பாராட்ட வேண்டாமென்றேனே!, தாங்களளித்த நகையை ஈ-யென்று வாங்கிக் கொண்டாள்” எனச் சாடும் நண்பனை அதட்டி அடக்குகிறான் சாருதத்தன்.

அடுத்த காட்சி சாருதத்தனுக்கும்,வசந்தசேனைக்கும்!

களவு போன நகையைக் கையோடு கொண்டு வந்து அவனைச் சந்திக்கிறாள் வசந்தசேனை.

வரவேற்றபடி வந்து நிற்பவனை கோபமும்,ஆதங்கமுமாய் நோக்கி..

“நான் ஒரு சூதாட்டக்காரரைக் காண வந்துள்ளேன்” என்கிறாள். புரியாமல் விழிப்பவனிடம்..

“சூதாட்டத்தில் எனது ஆபரணங்களை இழந்ததாகப் பொய்யுரைத்தீர்களே!, இதோ அந்நகைகள்” என்று அவள் நீட்ட..

வியந்த சாருதத்தனிடம் நடந்ததைக் கூறுகிறாள்.

“தானத்தில்,தர்மத்திலும் தாங்கள் கர்ணனுக்கு ஈடல்லவா?, வறுமை நிலையிலும் கூட உள்ளதைக் கொடுத்து பலர் உள்ளத்தை மகிழ்விக்கும் பெரும் கொடையாளியாகியத் தாங்கள் சூதாடுபவரா?”

ஆதங்கத்துடன் கேள்வி கேட்டவளிடம்.. “என் மீது அத்தனை நல்ல எண்ணமா?, எதற்காக?” என்பவனுக்குப் பதிலாய் வெட்கத்தைப் பரிசளிக்கும் வசந்தசேனையை அன்பாய் அணைத்துக் கொள்கிறான் சாருதத்தன்.

மறுநாள் காலை தனது பூந்தோட்டத்துக்கு அவளை அழைத்துச் செல்வதாக வாக்களிப்பவன், தன் சேடனிடம் அவளை அழைத்து வரும்படி கூறி விட்டு முன் செல்கிறான்.

அடுத்த காட்சி வசந்தசேனைக்கும், சாருதத்தனின் மகன் உரோகணனுக்கும்!

சாருதத்தனின் சேடிப் பெண் ரதனிகையுடன் வீட்டுக்குள் நுழையும் சிறுவனை மேலிருந்துக் கீழ் வரை நோக்குகிறாள் வசந்தசேனை.

ஒரே பார்வையில் அவன் தான் நேசிக்கும் காதலனின் மகன் என்பதை அறிந்து கொள்பவளுக்கு, அச்சிறுவனின் மீதுப் பாசம் பொங்குகிறது.

ஓடிச் சென்று அவனை அணைத்து உச்சி முகர்பவளை சிறுவன் அழுகையுடன் எதிர் கொள்கிறான்.

என்னவென்று கேட்பவளிடம் ரதனிகை கூறுகிறாள்.

“அவன் விளையாடுவதற்கு மண் வண்டியொன்று தந்தேன்! ஆனால் அவன் அதை மறுத்து விட்டு, அடுத்த வீட்டுக் குழந்தை வைத்து விளையாடும் தங்க வண்டி வேண்டுமென்கிறான்”

தன் கண்ணாளனின் மகனைத் தன் மகனாகவே கருதும் வசந்தசேனை தன் ஆபரணங்களனைத்தையும் கழட்டிக் கொடுத்து “இதில் பொன் வண்டி செய்து கொள்ளடா கண்ணே” என்கிறாள்.

அடுத்தக் காட்சியில் ஜனசந்தடி மிகுந்த சாலையொன்றில் போக்கு வரத்து நெரிசலில் இரண்டு குதிரை வண்டிகள் அருகருகே நிற்கின்றன.

சாருதத்தன் வண்டியென நினைத்து ஒரு வண்டியில் வசந்தசேனை ஏற.. மறு வண்டியிலோ.. முக்காடணிந்த ஒருவன் ஏறிக் கொள்கிறான்.

வசந்தசேனை ஏறிய வண்டி நேராக சகாரனின் தோட்டத்திற்குச் சென்று நிற்கிறது.

வண்டிக்குள் இவளிருப்பதைக் கண்ட விடன் (சகாரனின் தோழன்) சகாரனிடம் “தங்களுடன் கூடுவதற்காகவே அவள் தங்களைத் தேடி வந்திருக்கிறாள்” எனக் கூற ஆவலாக வருகிறான் சகாரன்.

இவனைக் கண்டதும் அதிர்ந்த வசந்தசேனை “தான் வண்டி மாறி வந்து விட்டதாக” விடனிடம் கூறித் தன்னைக் காப்பாற்றுமாறு மன்றாடுகிறாள்.

அவள் பதிலில் வெகுண்ட சகாரன் “ஏன் எனக்கு மட்டும் மறுப்பு?, வறுமை மிக்க சாருதத்தனுடன் கூடுதற்குச் செல்லுகின்றாய்!” எனப் பாய..

“இச்சொல்லால் நான் அலங்கரிக்கப்பட்டுள்ளேன்” என்று மகிழ்கிறாள்.

முற்றிலும் கோபமுற்ற சகாரன், விடனைப் பார்த்து “உனக்குத் தக்க பரிசளிக்கிறேன்!, வசந்தசேனையை வதை” என்கிறான்.

விடன் தயக்கத்துடன் நிற்க.. தன் சேடனைப் பார்த்தும் அதே வசனத்தைக் கூறுகிறான். அவனும் மறுக்க, இருவரையும் சிறையில் தள்ளுகிறான்.

பின் வசந்தசேனையை முடிந்த மட்டும் அடித்துக் கொன்று விட்டு.. அங்கிருந்த காய்ந்த சருகுகளால் அவள் உடலை மூடுகிறான்.

“மாட்சிமிக்க சாருதத்தருக்கு வணக்கம்” – என்ற கடைசி வார்த்தையோடுக் கண் மூடுகிறாள் வசந்தசேனை.

அடுத்த காட்சியில் நீதிபதியின் முன்பு சாருதத்தன் நிற்கிறான்.

வசந்தசேனையின் நகைகளைப் பறித்து அவளைக் கொன்று விட்டதாக அவன் மீது குற்றம் சாட்டி அவனை நீதிபதி முன்பு நிறுத்தி வைக்கிறான் சகாரன்.

போதிய சாட்சிகளில்லாததால் அவனுக்குத் தண்டனையளிக்க இயலாது எனக் கூறும் நீதிபதியிடம் “நான் அரசனின் மைத்துனன், நான் நினைத்தால் இப்போதே உன்னைப் பதவியிலிருந்துத் தூக்கி விட முடியும்” என்று சகாரன் கொக்கரிக்க.. அவரும் பயந்து கொண்டு சாருதத்தனுக்கு மரண தண்டனை விதிக்கிறார்.

அடுத்த காட்சியில்..

சகாரனின் தோட்டத்தில் சருகுகளினிடையே மயங்கிக் கிடக்கும் வசந்தசேனையைக் காப்பாற்றுகிறார் சித்தர் ஒருவர்.

அதற்கடுத்த காட்சியில் கழுவேற்றும் இடத்தில் சாருதத்தன்.

சண்டாளர் அவன் கழுத்தில் அலரிப்பூமாலையை மாட்டி அவனைக் கொலைக்களத்துக்கு அழைத்துப் போய்.. கொலையைத் தம்பட்டமடித்துப் பிரசித்தப் படுத்துகின்றனர்.

அவன் செய்த தர்மத்தால் பலன் கண்ட மக்கள், அவனது நிலையை எண்ணிக் கலங்கி வாய் விட்டுக் கதறுகின்றனர்.

மைத்ரேயனுடன் வந்தத் தன் மகன் உரோகணனை ஆரத் தழுவி முத்தமிட்டு.. தனது பூணூலை மைந்தனுக்கு அணிவித்து "அவனைச் சாவதானமாய்ப் பார்த்துக் கொள்ளும்படி" மைத்ரேயன் வசம் ஒப்படைக்கிறான் சாருதத்தன்.

சகாரனால் சிறையில் தள்ளப்பட்ட விடன் திடீரென எங்கிருந்தோ குதித்து.. "சாருதத்தனால் வசந்தசேனை கொல்லப்படவில்லை! சகாரனே கொன்றான்" என்று நடந்த உண்மையனைத்தையும் கூறுகிறான்.

அதற்குள் கொலைக்களத்தை எட்டி விட்ட வசந்தசேனை, சாருதத்தனைக் கட்டித் தழுவுகிறாள்.

தன்னை உயிராய் நேசித்தக் காதலி செத்து விட்டத் துயரத்திலிருந்தவன் முதலில் அதைக் கனவென்றே எண்ணினான். தன் இருகைகளால் அவள் முகம் ஏந்தி, நடப்பவை கனவல்ல என்றுணர்ந்துத் தானும் அவளைத் தழுவிக் கொள்கிறான்.

பின் வசந்த சேனை சகாரனுடையக் கோர நாடகத்தை உலகுக்கு எடுத்துச் சொல்கிறாள்.

தப்பியோடத் துடித்த சகாரனைக் கையும்,களவுமாக சேவகர் பிடித்து விட, அவன் நடுநடுங்கிப் போய் சாருதத்தனின் கால்களில் விழுகிறான்.

அவனுக்கு அபயம் அளித்த சாருதத்தன் "அவனைக் கொல்லாது அவன் இஷ்டப்படி விட்டு விடும் படி" சேவகர்களிடம் பிரார்த்திக்கிறான்.

முக்காடிட்டு தன் வண்டியில் ஏறிய புரட்சியாளன் ஆரியகன் என்பவனை சாருதத்தன் ஆதரித்த நிலையில், அவன் கொடுங்கோல் ஆட்சி புரிந்த அரசன் பாலகனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றி.. சாருதத்தனின் நிலையறிந்து, அவனது பண்பைப் புரிந்து கொண்டு.. ராஜ்யத்தையே அவனுக்காகப் பரிசளிக்க முன் வருகிறான்.

அவனிடம் அன்புடன் அதை மறுத்து விட்ட சாருதத்தன் தன் காதலி,குழந்தை,நண்பர்கள் என அனைவருடனும் மகிழ்ச்சியான இல் வாழ்க்கையை வாழ்கிறான்!

தர்மம் தலை காக்கும் பாடலோடு நாடகம் முடிந்து விட..

தன் மாமன் மகனின் நடிப்புத் திறமையில் முற்றிலும் ஆச்சரிமுற்றுப் போய் மேடையையே வெறித்த வண்ணம் சிலையாய் அமர்ந்திருந்தாள் சாருமதி.

‘பொறுப்பில்லாதவன், ஊதாரி, எதற்கும் லாயக்கில்லாதவன், உருப்படாதவன்’ என்று சாருகேசன் தினம்,தினம் ஏசிய.. வசந்த் இவன் தானா என்ற வியப்பே மேலோங்கியிருந்தது அவளுக்கு.

கஞ்சி கொடுத்த சேடிப் பெண் கூறிய காரணத்தைக் கேட்டு.. லேசான சிரிப்புடன் அதைப் பருகிய விதமாகட்டும், வசந்தசேனையாக வந்தவனிடம் செலுத்திய காதல் பார்வையாகட்டும், திருட்டு சம்பவத்தின் போது, திருடனின் திறமையை வியந்து பேசி.. தாடையில் கை வைத்ததாகட்டும், கடைசிக் காட்சியில் மகனாக வந்த சிறுவனைக் கட்டித் தழுவிக் கண்ணீர் விட்டதாகட்டும்!,

அவன் முகத்தில் வந்து போகும் ஒவ்வொரு பாவனையிலும் அத்தனை கம்பீரம்! சாருதத்தனாகவே இயல்பாய் வாழ்ந்தவனின் மீது ஒரு மரியாதையே வந்தது! இத்தனையா திறமையா இவனிடம்! நிஜமாகவே மேடையின் காதலன் தான் இவன்!

இவள் ஒரு புறம் இப்படிப் பெருமைப் பட்டுக் கொண்டிருக்க, அவனோ தன் முன்னே அமர்ந்து மேக்-அப்பைக் களைத்துக் கொண்டிருந்த ஹரியைக் கண் இமைக்காமல் பார்த்தான்.

“எவ்ளோ அழகா நடிக்கிற டா ஹரி?, சாவித்ரியும்,சரோஜா தேவியும் தோத்துப் போவாங்க டா”

“நீயும் தான் டா! ஒரு தடவை ஒத்திகை பார்த்தே இவ்ளோ அழகா நடிச்சுக் கொடுத்துட்ட?, ரொம்ப ரொம்ப நன்றி டா”

“ப்ச், அதை விடு! உனக்கு இவ்ளோ ஈடுபாடு இருக்கும்ன்னு நான் நினைக்கவே இல்லடா ஹரி!, பேசாம சினிமாவுல நடிக்கிறியா?”

“ஏன்?, வளர்ந்த வர்ற சினிமாவால தான் இந்த மாதிரி பாரம்பரியக் கலையெல்லாம் கொஞ்சம்,கொஞ்சமா அழிஞ்சிட்டு வருது!, நான் நேசிக்கிற விசயத்தை ஆதரிச்சுக் கொண்டாடாம, என்னையே அழிக்கச் சொல்றியா?”

“..........”

“என்னால முடிஞ்ச வரைக்கும் இந்த நாடகக்கலையை வளர்க்கத் தான்

டா பார்ப்பேன்”

“சூப்பர் டா!, ஒரு தடவை கைத் தட்டல் வாங்குன எனக்கே, இன்னும்,இன்னும் நடிச்சா என்னன்னு தோணும் போது, நீ இதை உயிரா மதிக்குறதுல தப்பே இல்ல! எனக்கும் கூட உன்னை மாதிரி ஆகனும்ன்னு ஆசையா இருக்கு”

“நீ என்னை விடப் பிரமாதமாகவே நடிக்கிற வசந்த்! இயல்பாவே உனக்கு பாவனைகளெல்லாம் அற்புதமா வருது”

“அப்படியா?”

“ஆமாம்! உனக்கு இஷ்டமிருந்தா.. அடுத்தடுத்து எங்களோட நாடகங்கள்ல நீயும் கலந்துக்கோயேன்”

“ஹேய்... அதுக்கெல்லாம் வாய்ப்பு இல்ல டா!”

“யோசிச்சு சொல்லு வசந்த்” – என்றவனிடம் தலையாட்டி விட்டு.. உடை மாற்றி வெளியே வந்தவனை வரவேற்றது.. மந்திரித்த ஆட்டைப் போல் நின்ற சாருமதி தான்!

அவளைக் கண்டதும் திடுக்கிட்டவன்..

“நீ எங்க இங்க?” என்று சந்தேகமாய் வினவினான்.

அவன் பார்வையின் அர்த்தம் புரிந்து..

“தங்களைக் காணவே வந்தேன் சாருதத்தரே” என்றவளைக் கண்டுத் தலையில் கை வைத்துக் கொண்டவன்... பின் தலை முடியைக் கோதியபடி..

“நான் கொடுத்த லெட்டரை எங்கப்பாக் கிட்ட காட்டுன மாதிரி, இதையும் போட்டுக் கொடுத்திடாத! சாமியாடிடுவார் அப்புறம்” – என்றான்.

“ப்ச், என்னைப் பார்த்தா போட்டுக் கொடுக்கிற ஆள் மாதிரியா தெரியுது?”

மேலிருந்துக் கீழ் வரை அவளை நோக்கியவன் “இல்ல தான்” எனக் கூற.. அவன் பார்வையைப் பெரிது படுத்தாமல்..

“நீங்க ரொம்ப நல்லா நடிக்கிறீங்க தெரியுமா?, சில பாவனைகள் எல்லாம் ரொம்பத் தத்ரூபமா இருந்தது!, நீங்க ஏன் சினிமாவுல நடிக்கக் கூடாது?” என்று வளவளத்தபடி வந்தவள் நிறுத்தி “ப்ச், வேண்டாம், வேண்டாம்! சினிமாவெல்லாம் வேண்டாம்” என்றாள்.

“ஏன்?”

“ஹீரோயினோடெல்லாம் ரொமான்ஸ் பண்ண வேண்டி வருமே?"

அவள் பதிலில் உள்ளே இதம் பரவ.. லேசாய்ச் சிரித்தபடி நின்று அவள் முகம் பார்த்தவன்.. தலை சாய்த்து “ஏன்?, ரொமான்ஸ் பண்ணா என்ன?” என்று வினவ..

திடீரென வியர்க்கத் தொடங்கிய நெற்றியைத் துடைத்தபடி..

“இல்ல, நம்ம குடும்பத்துக்கு அதெல்லாம் ஒத்து வராது தானே?, அதனால சொன்னேன்” என்று அவள் கூற..

“அதுசரி” எனத் தலையாட்டியவன் சிரிப்பு மாறாமல் முன்னே நடந்தான்.

ஓட்டமும்,நடையுமாக அவனைத் தொடர்ந்தபடி பின்னே சென்றவள்.. “என்ன சிரிப்பு?” என்று கடுப்புடன் வினவியதும்..

பதில் சொல்லாமல் பக்கவாட்டில் ஒலித்தப் பாடலை ஹம் செய்த படி அவன் நடக்க…

அவனது இதழோரத்தில் தேங்கித் தெப்பமாகியிருந்த சிரிப்பு.. அவன் முகம் முழுதிலும் வழிந்தோடிக் கொடுத்த சோபையில்.. அழகில்.. படபடத்துப் போய்.. வேகம் குறைத்துக் கிட்டத்தட்ட நின்று விட்ட சாருமதியின் இதயத்துக்குள்.. அவன் ஹம் செய்த பாடல் ஹை-டெசிபலில் ஒலித்தது.

“ஒரே நாள்… உனை நான் நிலாவில் பார்த்தது..

உலாவும் உன் இளமை தான் ஊஞ்சலாடுது…..”

## அத்தியாயம் – 4

இளையராஜா தானே இசையமைத்துப் பாடின பாடல்களின் வரிசை மிக நீளமானது! நான் தேடும் செவ்வந்திப் பூவிது, ராஜா ராஜாதி ராஜன் இந்த ராஜா, தென்றல் வந்துத் தீண்டும் போது, அப்புறம் the most beautiful... சங்கத்தில் பாடாத கவிதை.. இவையெல்லாம் என்றுமே அலுத்துப் போகாத பாடல்கள்! ஆனால் ஜென்சியுடனான இந்தப் பாடல்.. இதற்கெல்லாம் உச்சம்!

வேதம் ஓதும் குரலும்,தேவாலய மணியோசையும் இணைந்து இசைப்பதிலிருந்துத் தொடங்கும் பாடல் இது! இளையராஜாவோட மூளையும்,விரலும் என்ன மாதிரியான சிங்க்ல இருந்தா இப்படிப்பட்ட ட்யூன் வெளியே வரும்?, நிஜமாவே இவர் இசை பிரம்மா தான்! அதிலும் ஜென்சியின் குரல்! டிவைன்-ன்ற வார்த்தைகான அர்த்தத்தைத் தத்ரூபமா உணரலாம்!

பாடல் வரிகள், பாடுபவர்களின் குரல், ரெண்டையும் தாண்டி.. BGM தான் இந்தப் பாட்டோட ஹைலைட்! That too.. 2nd BGM.. அந்த வீணை ஒலி! சான்ஸே இல்ல! சும்மா.. சிலிர்க்க வைச்சிடும்! எத்தனை தலைமுறை தாண்டினாலும் சரி, இதெல்லாம் அழியும்ன்னா நினைக்கிறீங்க? வாய்ப்பே இல்ல!

நீ என் நாயகன்.. காதல் பாடகன்..

அன்பில் ஓடி.. இன்பம் கோடி.. என்றும் காணலாம்..

காதல் ஓவியம்.. பாடும் காவியம்..

துணுக்கு: பாடல் இடம் பெற்ற படம் அலைகள் ஓய்வதில்லை!

“அந்தக் காலேஜ்ல தான் நீ கண்டிப்பா சேர்ந்தாகனுமா?, ஸ்டெல்லா மேரிஸ்ல என் ஃப்ரண்ட் ஒருத்தன் சீட் வாங்கித் தர்றேன்னு சொல்றான்ம்மா”

“வ..வந்து.. எனக்கு பிரசிடென்ஸில படிக்கனும்ன்னு ரொம்ப ஆசை மாமா. சார் சி.வி.ராமனே அங்க தான் படிச்சிருக்கார். தெரியுமா?” – எப்படியேனும் மாமனைச் சம்மதிக்க வைத்து விடும் நோக்கத்துடன் சாருமதி.

“சி.வி.ராமன் படிக்கிறது இருக்கட்டும்! நம்ம வீட்டுத் தறுதலை அங்க படிக்கிறானே! படிச்சது போதும்,தொழிலைக் கத்துக்க வாடான்னு

கூப்பிட்டா... மாஸ்டர் டிகிரி வாங்கியே ஆகனும்ன்னு ஒத்தக் கால்-ல நிக்கிறான்! இவனெல்லாம் யு.ஜி பாஸ் ஆனதே பெரிய விஷயம்! இதுல பி.ஜி வேற”

“படிக்கனும்ன்னு ஆசைப்பட்றது தப்பில்லையே மாமா” – மெல்லிய குரலில் முணுமுணுத்தவளைக் கண்டு கொள்ளாமல்..

“என் கண் முன்னாடியே லெட்டர்,அது,இதுன்னு உனக்குத் தொந்தரவு கொடுக்குறவன், காலேஜ்ல வைச்சு என்னல்லாம் பண்ணுவானோ! வயித்துல நெருப்பைக் கட்டிக்கிட்டு சுத்தனும்மா நான்! பேசாம நீ ஏதாவது லேடீஸ் காலேஜ்ல சேர்ந்துக்கோயேன்”

“உங்க இஷ்டம் மாமா” – சுருங்கிப் போன முகத்துடன் தலையைக் குனிந்தபடி கூறியவளைக் கேட்டு..

“ப்ச், சரி உனக்கு அங்க படிக்குறது தான் பிடித்தம்ன்னா நான் என்ன செய்ய?, இந்தப் பய அங்க எதுவும் வம்பு பண்ணினா.. என் கிட்ட சொல்லிடனும். சரியா?” – என்று அவர் கூறியதும்..

முகம் மலர “அவர் அப்படியெல்லாம் எதுவும் பண்ண மாட்டார் மாமா” என்றாள் சாருமதி.

“பெத்தது ஒன்னு! அதுவும் மண்ணு-ன்ற கதையாய்ப் போச்சு!, அவனை மாதிரி இல்லாம நீயாவது நல்லாப் படிச்சு, நல்ல வேலைக்குப் போகனும். சரியா-ம்மா?”

“கண்டிப்பா மாமா! B.sc,M.sc அப்படியே M.phil பண்ணி லெக்சரர் ஆகனும் மாமா! வேலைக்குப் போய்க்கிட்டே ph.D பண்ணனும்! நிறைய நினைச்சு வைச்சிருக்கிறேன்”

“படி படி! நீ நினைச்சதெல்லாம் படி! இனி போற காலத்துல பொண்ணுங்களுக்குப் படிப்பு ரொம்பவும் அவசியம்! கல்யாணமெல்லாம் பொறுமையா.. உனக்குப் பிடிக்கும் போது பண்ணி வைக்கிறேன்! சரியா?”

மாமனின் பதிலில் வெகுவாய்ப் புல்லரித்துப் போனவள் “நாட்டுல எத்தனை பேர் உங்களை மாதிரி யோசிக்கிறாங்க! பெண் பிள்ளைங்களைப் பெத்தாலே கல்யாணம் பண்ணிக் கொடுத்துக் கடமையை முடிச்சிடனும்ன்னு நினைக்கிறவங்க மத்தியில நீங்க ரொம்ப க்ரேட் மாமா” – பரவசத்துடன் கூறிக் கொண்டிருக்கையில் “ம்க்க்க்க்கும்” என்றபடி டைனிங்-டேபிளில் வந்தமர்ந்தான் வசந்த்.

அவனைக் கண்டதும் தன்னாலேயே கேசனின் முகம் கடுகடுத்து விட..

கடைசி வாய் இட்லியை.. சாம்பாருடன் வழித்து விழுங்கி விட்டு அவனை முறைத்தபடியே கையைக் கழுவினார்.

“அன்னம்மாஆஆஆ” – அவரைக் கண்டு கொள்ளாமல் குரல் கொடுத்தான் வசந்த்.

“வந்துட்டேன் ராசா” – என்ற அன்னம்மா அவன் தட்டில் இட்லிகளை அடுக்க..

“மூணு போதும். ஒரு ஆம்லேட் ஊத்து” – என்று விட்டு..

“ஏன் அன்னம்மா, உனக்கு இந்த இங்க்லிஷ் ப்ரேக் ஃபாஸ்ட் எல்லாம் தெரியாதா?, ஃப்ரெஞ்ச் டோஸ்ட், சாண்ட்விச் மாதிரி” என்று வினவினான்.

“பிரிஞ்சி தோசை, சாந்து பொட்டா?, என்ன கண்ணு சொல்றீங்க?” – தலையைச் சொறிந்த அன்னம்மாவைக் கண்டு சாருமதி களுக் எனச் சிரிக்க.. “போ,போ..” என்று அடுக்களையை நோக்கிக் கை காட்டினான் வசந்த்.

ஈரக் கையைத் துடைத்தபடித் தன் முறைப்பைத் தொடர்ந்தவரைக் கண்டு..

“என்ன?, உங்களுக்கும் முட்டை வேணுமா?” – தந்தையின் முகத்தைப் பார்க்காமல்.. தட்டைப் பார்த்து உண்டபடியே கேள்வி கேட்டான் வசந்த்.

“என்னடா நக்கலா?”

“பின்ன எதுக்கு என்னையே வெறிச்சு வெறிச்சுப் பார்க்குறீங்க?, வயசுப் பையன்ப்பா நான்! அப்படியெல்லாம் பார்க்கக் கூடாது”

“அடி படவா!, என்ன டா வாய் நீளுது?”

“அன்னம்மா.. ஆம்லெட் ரெடியா?”

“நோகாம.. டைனிங் டேபிள்ல உட்கார்ந்து வக்கணையா.. வாய்க்கு ருசியாக் கேட்டு வாங்கி சாப்பிட்ற நீயெல்லாம்?, உன் வயசுல நான் உனக்கு அப்பனாகி, ராத்திரியும்,பகலுமா அயராம உழைச்சு என் பிஸினசைப் பெருக்கத் தொடங்கிட்டேன்”

“வெளி வேலையில உழைப்பைப் போட்டவரு அதோட நிறுத்தியிருக்க வேண்டியது தானே?, வீட்ல வேற உழைச்சு, என்னை ஏன் பெத்துக்கிட்டீங்க?” – மீண்டும் அலட்டிக் கொள்ளாமல் கேள்வி கேட்டவனைக் கண்டு..

“ராஸ்கல்” எனக் கொதித்துப் போன கேசன் “பெண் பிள்ளை முன்னாடி என்னடா பேச்சு இது?” என்று காய..

பொறுமையுடன் இட்லியை மென்றபடி அவளை நோக்கியவன் “வீட்ல உழைக்கிறதுன்னா என்னன்னு தெரியாதா உனக்கு?” என்று கேட்டு விட்டு “குழந்தை....” என்று ஏதோ ஆரம்பிப்பதற்குள் அவசரமாய் அருகிலிருந்த ஆம்லெட்டை ஒரே சுருட்டலில் எடுத்து அவன் வாய்க்குள் அடைத்தாள் சாரு.

அப்படியும் அடங்காமல் அவன் ..

“அடுத்த தடவை ஊட்டும் போது சொல்லிட்டு ஊட்டு. பாரு சட்டையெல்லாம் சிதறிடுச்சு” என்று கூற...

எரிச்சலும்,கோபமுமாய் வாய்க்குள் அவனை அர்ச்சித்தபடிக் கலவரத்துடன் மாமனை நோக்கினாள் சாரு.

“என் மேல இருக்குற கடுப்பைக் காட்டத் தான் உன்னை வம்புக்கு இழுக்குறான் இந்தப் பய! நல்லா யோசிச்சுக்கோம்மா! இவன் படிக்குற காலேஜ்ல தான் நீயும் படிக்கனுமா?, மாமா உன்னை ஸ்டெல்லா மேரிஸ்லயே சேர்த்து விட்றேனே” – வெகுவாய்க் கெஞ்சிக் கேட்டவரிடம்..

பதில் சொல்ல முடியாமல் திணறிக் கொலைவெறியுடன் வசந்தை நோக்கினாள் சாரு.

கஷ்டப்பட்டு இவரை சம்மதிக்க வைச்சா, இவன் வேற!

“அ..அது.. வந்து.. மாமா...” – திக்கிக் கொண்டிருந்தவளைக் கண்டு விட்டு..

“ஆமாமா! விமன்ஸ் காலேஜ்க்கு என்ன குறை?, வாசல்-லயே வாலிபப் பசங்கக் காத்துக்கிட்டு நிற்பானுங்க, ஒருத்தி விடாம நூல் விட்டு காதல் கோட்டைக் கட்டுறதுக்காகவே! என் ஒருத்தனுக்கே இவ்ளோ பயப்பட்றார் உன் மாமா! அங்க, ஓராயிரம் பசங்க இருப்பானுங்க! ஒவ்வொருத்தனையும் எப்படி சமாளிப்பார்?, பெல்ட்டாலயா?, இந்த நிலைமை நீடிச்சா, சார் சேர்த்து வைச்சிருக்கிற சொத்து எல்லாத்தையும் பெல்ட் வாங்கியே வீணாக்க வேண்டியது தான்!” – என்று நக்கலடித்தான் வசந்த்.

“என்ன சொன்ன? உனக்குப் பயந்து நான் இவளை அங்க சேர வேண்டாம்ன்னு சொல்றேனா?, டேய்... நீயெல்லாம் எனக்கு ஒரு ஆளா டா?, என் ஒரு பெல்ட்டால உன்னை ஒட்டு மொத்தமா சுருட்டிடுவேன்!”

“ஆமாமா! அதான் உங்க பெல்ட் சைஸ்-ஐப் பார்த்தாலே தெரியுதே! ஏன்-ப்பா பெரிய்ய்ய பெல்ட்-ஆ கட்டனும்ன்றதுக்காகவே தொப்பை வளர்க்குறீங்களோ?”

சிரித்தபடி கூறியவனைக் கண்டுப் பல்லைக் கடித்தவர் ஒரு செம்புத் தண்ணீரையும் கடகடவெனப் பருகினார்.

சிரிப்பை அடக்க முயன்ற சாருமதியும், தட்டுக்குள் தலையை விட்டுக் கொண்டாள்.

“டேய்.. என்னைக் கேலி பேசுனதெல்லாம் போதும்! யாரு டா அவன்?, நாலாவது தெருவுல குடியிருக்கிறவன்?, சிநேகிதனா?, சிநேகிதியா?, எந்த வரிசைல டா வருவான் அவன்?, அவன் கூட உனக்கு என்ன சகவாசம்?, சங்கரன் உன்னை அவனோட சேர்த்துப் பார்த்துட்டு, என் கிட்டயே கிண்டல் அடிக்கிறான்”

“யார் அது சங்கரன்?”

“என் நண்பன் டா”

“ஹ்ம், நல்லவங்களோடப் பழகுற பழக்கமே கிடையாது போல உங்களுக்கு! ஃப்ரெண்டாம் ஃப்ரெண்டு!!

“கண்டவனோடெல்லாம் சகவாசம் வைச்சிருக்கிற நீ என் சகவாசத்தைக் குறை சொல்றியா?”

“ப்ச், அப்பா.. உங்களுக்கு இப்போ என்னப் பிரச்சனை?, அவன் என் ஃப்ரெண்ட். நான் அப்படித் தான் பழகுவேன்! உடல் ஊனமிருக்கிற ஒருத்தனோட நான் பழகினா.. நீங்க தடை சொல்லுவீங்களா?, இல்லேல்ல?, அது மாதிரி தான் இதுவும்”

“ஊர்ல ஒவ்வொருத்தன் கிட்டயும் போய் இதே வசனத்தைச் சொல்லுவியா?, இப்படிப் பேசி எத்தனை பேர் வாயை டா உன்னால அடைக்க முடியும்”

“இப்போதைக்கு உங்க வாயை அடைச்சா மட்டும் போதும்” – என்று முணுமுணுத்தவன்..

“அன்னம்மா.. அந்த டிரான்சிஸ்டர் சத்தத்தைக் கூட்டு, தேவையில்லாத பேச்செல்லாம் என் காதுல விழுகுது” என்று கத்த... விருட்டென எழுந்து சென்று விட்டார் சாருகேசன்.

அன்னம்மா டிரான்சிஸ்டரைத் தொட்டதும்.. இலங்கை வானொலியில்.. எஸ்.பி.சைலஜா கொஞ்சத் தொடங்கினார்.

"ராசாவே.. உன்னை நான் எண்ணித் தான்!

பல ராத்திரி மூடல கண்ணைத் தான்!"

சிரித்துக் கொண்டே உண்பதைத் தொடர்ந்தவன்.. தன்னையே பார்த்தவளைத் திரும்பி நோக்கினான்.

"என்ன?" - வசந்த்

"யாரைச் சொல்றார் மாமா?"

"நீ தெரிஞ்சுக்கிட்டு என்ன பண்ணப் போற?"

".............." – முசுட்டு முகத்துடன் இட்லியைப் பிய்த்தாள் அவள்.

மெல்லச் சிரித்தவன்.. "எதுக்கு எங்க காலேஜ்ல தான் சேருவேன்னு இந்த மனுஷன் கூட போராடிட்டு இருக்க?" என்று கேட்டுப் பின் "எனக்காகத் தான?" என்று வினவ...

நன்றாகத் திரும்பி அமர்ந்து அவனை முறைத்தவள்..

"பீச் ரோட்-ல காலேஜ்! யாருக்குத் தான் கசக்கும்?, அதுமட்டுமில்லாம, என் பெஸ்ட் ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் அங்க தான் ஜாயின் பண்ணுறாங்க! அதனால தான் நானும் அங்க சேர ஆசைப் பட்றேன்" – என்றாள்.

"ஓஹோ..."

"................."

"காலேஜ்ல ராகிங் எல்லாம் பண்ணுவோம்!, தெரியும் தானே?"

"என்ன பண்ணுவீங்க?, பாட்டு பாடச் சொல்லுவீங்களா?, இல்ல டான்ஸ் ஆடச் சொல்லுவீங்களா?"

"ரெண்டும் இல்ல"

"பின்ன?"

"ஐ லவ் யூ சொல்லச் சொல்லுவோம்" – அலட்டிக் கொள்ளாமல் கூறியவனைக் கேட்டுப் புரையேறும் அளவுக்கு லொக்,லொக் என இருமியவள்.. அவனை நிமிர்ந்து பார்த்துப் பல்லைக் கடிக்க..

"மூணே வார்த்தை தான்! ஜஸ்ட் த்ரீ வேர்ட்ஸ்! இப்டியெல்லாம் நான் பண்ணிடுவேனோன்னு தானே உன் மாமா அவ்ளோ பயப்பட்றாரு! அவர் எதிர்பார்ப்பை ஏன் பொய்யாக்கனும்?," தோளைக் குலுக்கியபடிக் கூறியவனை முறைத்தாள் அவள்.

“அப்டின்னா எனக்கு லவ் லெட்டர் குடுத்தது கூட மாமாவை கோபப்படுத்தி பார்க்கத் தானா?”

“இல்லைன்னு சொன்னா சந்தோசப்படுவியா?”

“இதுல சந்தோஷப்பட என்ன இருக்கு?”

“அப்புறம் எதுக்குக் கேள்வி கேட்குற?”

“ப்ச், அவரைக் கடுப்பேத்த என்னை எதுக்கு யூஸ் பண்ணிக்கிறீங்க?, வேற எவளும் கிடைக்கலையா?”

“ம்ஹ்ம் அல்வாத் துண்டு மாதிரி என் அத்தைப் பொண்ணு நீ இருக்கும் போது, நான் ஏன் எவளையும் தேடனும்! அதுமட்டுமில்லாம, நீ-ன்னா மட்டும் தான் மிஸ்டர்.கேசன் அநியாயத்துக்கு எகிறுவார்”

“இதுக்குப் பேரு தான் திமிரு”

“இருக்கட்டும்!, ப்ச், ராகிங்ல ஐ லவ் யூ சொல்லச் சொன்னா சொல்லுவியா மாட்டியா?, அதைச் சொல்லு முதல்ல”

மீண்டும்,மீண்டும் வம்பு செய்தவனை மூச்சு வாங்க முறைத்து.. அருகிலிருந்தக் காலி செம்பால் அவன் தலையில் அடியைப் போட்டு விட்டு நகர்ந்து விட்டாள் சாரு.

மறுநாள் தன் மாமனோடு தனக்குப் பிடித்தக் கல்லூரியிலேயே அட்மிஷனுக்குக் கிளம்பி விட்டாள்.

ஏற்கனவே விண்ணப்பித்திருந்ததால் வேண்டிய ஃபார்மாலிட்டிஸை முடித்து விட்டுக் கல்லூரி வளாகத்தில் சாருகேசனுடனும்,தன் தோழிகளுடனும் நின்றிருந்தாள்.

“என்னம்மா வீட்டுக்குக் கிளம்பலாம் தான?” – கேசன்.

“மாமா அது வந்து..”

“என்னம்மா?”

“ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் சேர்ந்து வெளியே போகலாம்ன்னு ப்ளான் பண்ணியிருக்கோம் மாமா!,”

“வெளிய-ன்னா எங்க?”

“தியேட்டர்,பீச் அப்புறம்.. ஹோட்டல்” – தயங்கிப் பதிலளித்தாள்.

“தாராளமா போய்ட்டு வா! படத்துக்குப் போ.. பார்ட்டி பண்ணு! இந்த வயசுல இதெல்லாம் பண்ணாம, வேற எப்போ பண்றது?, நம்ம வீட்டுத்

தறுதலையெல்லாம் என் கிட்ட பர்மிஷன் கேட்டுட்டா இருக்கான்?, நீ எஞ்சாய் பண்ணுடா அம்மா"

"தேங்க்ஸ் மாமா" – சிரிப்புடன் தலையாட்டியவளிடம்..

"ஜாக்கிரதை-ம்மா! சேஃப்ட்டி ரொம்ப முக்கியம்!" – என்று விட்டு அவர் நகர்ந்து விட...

தோழிகள் அனைவரும் ஆளாளுக்குக் கையைத் தட்டிக் கொண்டு "ஹேய்ய்ய்" எனக் குதித்தனர்.

கூட்டமாய் நடந்து வரும் பெண்களை வேடிக்கை பார்த்தபடி.. அக்கல்லூரியிலிருந்த அரசமரத்தடி நிழலில் அமர்ந்திருந்தனர் வசந்த் அண்ட் கோ.

"அந்த சிகப்பு சுரிதார் ஸ்ரீதேவி ரகம் மாமா.. அந்தப் பச்சை மேக்ஸி ரேகாஜி!! அதோ வர்றா பாரு.. கருப்பு மிடி.. அவ தான்.. அவ தான் நம்மாளு... ஜீனத் அமன் மாதிரி பார்க்கவே சும்மா குளு குளுன்னு இருக்கா பாரு.." – கடந்து செல்லும் பெண்களை வர்ணித்துக் கொண்டிருந்த ராகவன்.. தொடர்ந்து..

"சுரா லியா ஹேய் தும்னே ஜோ தில் கோ....

நஜர் நஹி சுரானா சனம்**..."** - என்று பாட வேறு செய்ய.. மற்ற அனைவரும் அவனுக்கு ஓஹோ போட்டனர்.

தங்களுக்குள் சலசலவெனப் பேசியபடி வந்து கொண்டிருந்த சாருமதியையும்,அவள் தோழிகளையும் கண்டு விட்ட ஜெயந்தன்.. நிமிடத்தில் திடுக்கிட்டு..

"டேய்.. வசந்த்" என்றுத் தன் நண்பனின் தோளை உலுக்கினான்.

"என்ன டா?"

"அங்க பார்த்தியா?"

"என்ன?"

"உன் அத்தைப் பொண்ணு அந்த சாமுண்டேஸ்வரி வர்றா டா!" – என்றவனைக் கண்டு.. அவன் சொன்ன திசையில் நோக்கியவன்.. லேசான சிரிப்போடு திரும்பிக் கொள்ள..

"என்னடா சிரிக்கிற? பின்னாடியே உங்கப்பா வருவாரோ? மனுஷன் பெல்ட் போட்டு வந்திருக்கிறாருன்னு எப்படி டா கண்டுபிடிக்கிறது?" – தன் போக்கில் உளறியபடிப் பதறியவனைக் கண்டு கடகடவென

நகைத்த வசந்த்..

“எங்கப்பாவைப் பார்த்து நானே பயப்பட மாட்டேன்! நீ ஏன் டா இப்படி நடுங்குற?” – என்றான்.

“ம்ம்ம்ம்ம்ம், உனக்கென்ன? எவ்ளோ அடிச்சாலும் வாங்கிட்டு அபிமன்யு மாதிரி நிற்ப! நாங்கள்லாம்.. லுச்சா பசங்கப்பா! உத்துப் பார்த்தாலே... உச்சா போய்டுவோம்”

“அட ச்சி”

“ப்ச், உன் அத்தைப் பொண்ணுக்கு நம்ம காலேஜ்ல என்ன டா வேலை?, அதைச் சொல்லு முதல்ல”

“அவ இங்க தான் படிக்கப் போறாளாம்”

“என்னது??” – அதிர்ச்சியாய்க் கேட்டவனிடம்..

“நீ ஏன் டா ஷாக் ஆகுற?” என்றான் வசந்த்.

“பின்ன, தப்பித் தவறி உங்கப்பாவை நான் மறுபடி பார்க்க வேண்டிய நிலைமை வந்தா.. என்ன டா பண்றது?, உன் அத்தைப் பொண்ணு ஏன் இங்க படிக்க வருது?”

“ஏய்.. அவ இங்க படிக்குறதுல உனக்கு என்ன அவ்ளோ வருத்தம்?”

“வருத்தம் இல்ல டா பயம்!, உங்கப்பனைப் பார்த்து”

“ப்ச், வாயை மூடு” என்றவன்.. தன்னருகே அமர்ந்திருந்தவனிடம் திரும்பி “அசோக்.. அந்த ரோஸ் கலர் டிரஸ்-ஐ ஓரங்கட்டு டா” என்றான்.

“டேய்... டேய்.. மறுபடியுமா டா?” – பதறியபடி ஜெயந்தன்.

“ப்ச், எங்கப்பா வர மாட்டார் டா”

“நீ அப்படித் தான் சொல்லுவ! திடீர்ன்னு மனுஷன் பெல்ட் ஓட குதிப்பார்! குஸ்தி வீரன்னு வேற சொன்னார் அன்னிக்கு”

“ஏய்.. சும்மா இரு டா! அசோக்.. நீ கூப்பிடு”

வசந்த் அதட்டியதும் ஜெயந்தன் அமைதியாகி விட.. அசோக் என்பவன்.. அந்தப் பெண்களை நோக்கி விசில் அடித்தான்.

சட்டெனத் திரும்பிய சாருமதி.. ஒரே பார்வையில் வசந்தைக் கண்டு கொண்டாள்.

நண்பனின் தோளைச் சுற்றிக் கை போட்டபடி அடக்கப்பட்ட சிரிப்புடன்

அவளையே பார்த்திருந்தவனின் கண்களில் அப்படியொரு பளபளப்பு!

“ஓய்ய்ய்.. சிட்டுக்குருவிங்களா!! கூப்பிட்றது காதுல விழல??”

“ஓ! விசில் அடிச்சாக் கூப்பிட்றதா அர்த்தமா?” – தோழிகளில் ஒருத்தி.

“இதெல்லாம் காலேஜ் பாஷை! படிப்படியா கத்துக்கனும்!, சரி, சரி வாங்க.. வாங்க.. வந்து வரிசைல நில்லுங்க”

“வரிசையா?, எதுக்கு?”

“ம்ம்ம், கூழ் ஊத்துவோம்! அப்டி ஓரமா நின்னு குடிச்சிட்டுப் போங்க”

“ஏய் சும்மா இரு டி! இவங்க நம்மை ராகிங் பண்ணப் பார்க்குறாங்க” “ராகிங்கெல்லாம் காலேஜ்ல சேர்ந்தப்புறம் தான நடக்கும்?, அட்மிஷன் போட வந்தவங்களையெல்லாமா கட்டம் கட்டுவாங்க?”

தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டவர்களைக் கண்டு..

“அடச்சை! சில்வண்டு மாதிரி நசநசன்னு சத்தம் விட்டுக்கிட்டு! சுப்” – என அதட்டிய ராகவன்..

நால்வரில் முதலாக நின்றிருந்தவளின் முகத்தை உற்று நோக்கி “எம்மாடி… எவ்ளோஓஓ நீள மூக்கு! பேசாம, தோள்ல மாட்டியிருக்கிறப் பையை எடுத்து மூக்குல மாட்டிக்க!, வசதியா இருக்கும்! மாமா, இவ உனக்கு…” என ராகம் பாடியவன் அவளை அசோக்கிடம் தள்ளினான்.

ரெண்டாவது பெண்ணிடம் “கும்க்காவா தாவணி கட்டியிருக்கியே! பேர் என்ன அம்சாவா?” என்றவன்.. “நீ அந்த சிகப்புச் சட்டைக் கிட்டப் போ..” என்று துரத்தினான்.

மூன்றாவதாக நின்றவளைச் சுற்றி வந்தவன் “கோவில் தூண் மாதிரி பரந்து,விரிஞ்சு வளர்ந்து நிற்குறியேம்மா! நீ நேராப் போய்.. அந்த அரசமரத்தைக் கட்டிப்பிடிச்சுக்க! உன்னையெல்லாம் எவனும் ராகிங் பண்ண மாட்டான்” என்று கூறி விட்டுக் கடைசியாக சாருமதியிடம் வந்தான்.

பெல்டட் மேக்ஸி என்று சொல்லக் கூடிய.. கணுக்கால் வரையிலான ரோஸ் நிற மேக்ஸி அணிந்திருந்தாள். மார்புக்குக் கீழே பெல்ட் அமைப்புடன்.. ஒரு சிறிய ‘போ’-வும் அதைத் தொடர்ந்து இரு ரிப்பனும் தொங்கிக் கொண்டிருந்தது. நேர் வகிட்டைத் தொடர்ந்து முன் நெற்றியில் கற்றையாய் முடிகள் இருபுறமும் தோரணம் கட்டியிருக்க.. காதில் ரோஸ் நிறத்தில் ப்ளாஸ்டிக் தோடுகள்!

தன்னருகே வந்து நின்ற ராகவனை முறைத்தபடி அழுத்தமாய்

நின்றிருந்தாள் சாரு.

சட்டைக் காலரை சரி செய்து கொண்டு.. தலையைக் கோதியவன்.. பாக்கெட்டில் இருந்த கண்ணாடியை எடுத்து.. அதன் நுனியை வாயில் வைத்துக் கொண்டு.. மேலும்,கீழுமாய் அவளை நோக்கினான்.

“தனிமையிலே.. வெறுமையிலே.. எத்தனை நாளடி இள மயிலே..” என்று பாடிப் பின் “அன்பே மாதவி! உனக்கு இந்த அத்தானைப் பிடிச்சிருக்கா?” என்று வினவும் வேளையில்.. “ம்க்க்க்க்க்க்கும்” என்றான் வசந்த்.

“என்ன மாமா?, விட்றட்டுமா?” – வசந்தை நோக்கி ராகவன்.

“ம்ஹ்ம்... அவ எனக்கு” – பின் தலை முடியைக் கோதிக் கொண்டு அவளையே பார்த்தபடி கூறியவனைக் கண்டு முகத்தைச் சுருக்கிய ராகவன்..

“வசந்த்... ப்ளீஸ் டா!” என்று கூற...

“டேய்.. வந்துடு டா ராகவா! உன் உடம்பு பெல்ட் அடியெல்லாம் தாங்காது டா” – என்றபடி இடை புகுந்தான் ஜெயந்தன்.

தோன்றிய முறுவலை வாய்க்குள் அடக்கியவளைக் கண்டு அமர்ந்திருந்த இடத்திலிருந்துக் குதித்து இறங்கி வந்தான் வசந்த்.

“சிரிக்கிறியா?” – வசந்த்.

“ப்ச்” என்றபடி கைகளைக் கட்டிக் கொண்டவள் “மாமா கிளம்பிட்டார்ன்ற தைரியத்துல தானே இப்படியெல்லாம் பண்றீங்க?, தயவு செஞ்சு என் ஃப்ரெண்ட்ஸ்ங்களை விட்ருங்க ப்ளீஸ்”

“அப்டின்னா.. நீ, நான் சொல்றதைச் செய்யனும்”

“ஐ லவ் யூ-வைத் தவிர எது வேணாலும் சொல்லுங்க செய்றேன்”

“எது வேணாலுமா?ஹாஹா.. அநாவசியமா வாக்குக் கொடுக்காத! அப்புறம் நான் எக்குத்தப்பா ஏதாவது கேட்டு வைச்சிடுவேன்”

“டர்ட்டி மைண்டட் நீங்க”

“கெட்டன இரவுகள்.. சுட்டன கனவுகள்.. இமைகளும் சுமையடி இளமயிலே..” – அவளையே கண்டபடி ராகவன் வேறு இடையில் வந்து பாட்டு பாடிச் சென்றான்.

“இவனை விடவா?” - வசந்த்

“ச்சி! அவன் ஆளும்,மூஞ்சியும்! நல்லா.. தீஞ்சு போன தோசைச் சட்டி மாதிரி இருக்கான்! இவனுக்கு வைரமுத்துப் பாட்டு வேற!”

“ஹாஹாஹா”

“ப்ச், எங்களை விட்ருங்க நாங்க போறோம் ப்ளீஸ்”

ஆளாளுக்கு ஒருவனிடம் சிக்கிக் கொண்டு.. பரிதாபமாய் நின்ற தோழிகளைக் கண்டு வசந்திடம் அவள் கெஞ்ச..

“ம்ஹ்ம்.. பசங்க ரொம்ப சீரியஸ் ஆய்ட்டானுங்க! இப்போதைக்கு விட மாட்டானுங்க”

“என்ன இப்படி சொல்றீங்க! நாங்க தியேட்டர்,பீச்ன்னு இன்னிக்கு ஃபுல்-ஆ ஆட்டம் போடலாம்ன்னு ப்ளான் பண்ணியிருக்கோம்! நீங்க எல்லாத்தையும் கெடுத்துடுவீங்க போல”

“அடேங்கப்பா! கேங்-ஆ சுத்துற அளவுக்கு நீங்க பெரிய ஆள் ஆயிட்டீங்களா?, ஆமா, உன் மாமா எப்படி சம்மதிச்சார்?”

“நீ படத்துக்குப் போனாலும் சரி, பார்ட்டி பண்ணாலும் சரின்னு எனக்கு சகல உரிமையும் கொடுத்துட்டார். தெரியுமா?” – கர்வமாய்க் கூறியவளைக் கண்டு..

“பாரேன்! நான் பர்ஸ்ல நாலணா வைச்சிருந்தா கூட.. சிகரெட் பிடிக்கிறியாடான்னு கேட்டு.. சந்தேகப் பட்ற மனுஷன், உன்னை பார்ட்டிக்கெல்லாம் போகச் சொல்லி பர்மிஷன் கொடுக்குறார்?” – என்று பெருமூச்சு விட..

“உங்க முகராசி அப்படி! யாருக்குத் தெரியும்?, நிஜமாவே நீங்க சிகரெட் பிடிப்பீங்களோ என்னவோ” – தோளைக் குலுக்கிக் கொண்டுத் திமிராய்க் கூறியவளை எரிச்சலுடன் நோக்கியவன்..

“நீ பார்த்த?, ஏய்ய் என்னடி கடுப்பேத்துறியா?” – என்று எகிறினான்.

“ப்ச், உங்களால அவங்களை விட முடியுமா முடியாதா?”

“விட்டுட்றேன்! ஆனா ஒரு கண்டிஷன்”

“என்ன?”

“இவங்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்பிட்டு நீ சொன்ன தியேட்டர்,பீச்,ஹோட்டல்ன்னு எல்லா இடத்துக்கும் நீ என் கூட வரணும்” – கையைக் கட்டிக் கொண்டுத் தலை சாய்த்துக் கூறியவனைக் கண்டுப் பதறிப் போனவள்..

“வாஆஆஆஆட்???, என்ன விளையாடுறீங்களா?, மாமாவுக்குத் தெரிஞ்சா அவ்ளோ தான்!” – இண்ஸ்டண்ட் ஆக தாம்,தூமெனக் குதித்தாள்.

“ப்ச், அவர் என்னவோ உனக்கு ஸ்பை வைச்சிருக்க மாதிரி! ரொம்பப் பயப்பட்ற?, அதெல்லாம் அவருக்குத் தெரிய வராது”

“ம்ஹ்ம், என்னால் முடியாது! நான் ஒத்துக்க மாட்டேன்!”

கலவர முகத்துடன்.. தலையைப் பலமாக ஆட்டி மறுத்தவளை இரண்டு நிமிடம் பொறுமையாய் நோக்கியவன்.. பின் தன் நண்பர்களின் புறம் திரும்பி... “டேய்ய்.. இன்னும் ரெண்டு மணி நேரத்துக்கு இவங்களை அங்க,இங்க நகர விடக் கூடாது” என்று ஆணையிட..

கோபத்தில் கொதித்துப் போனவள் “நான் இப்பவே போய் உங்களைப் பத்தி கம்ப்ளைண்ட் பண்ணுவேன்!” என்று பாய...

“போ! போ! அந்த ரெண்டாவது பில்டிங்-ல முதல் மாடி! பிரின்சிபல் ரூம்! முடிஞ்சா போய் கம்ப்ளைண்ட் பண்ணு” – அசால்ட்டாக கூறினான் அவன்.

எரிச்சலுடன் நெற்றியைத் தேய்த்துக் கொண்டு “இதுவும் மாமாவை வெறுப்பேத்த தானா?” – என்று வினவினாள்.

“உனக்கு அப்படித் தோணுதா?” – பாக்கெட்டுக்குள் கை விட்டுக் கொண்டு.. புருவம் உயர்த்திக் கேட்டவனிடம்..

“பின்ன எதுக்கு?, எனக்குப் புரியல! நீங்க புரிய வைங்க!” – என்றாள்.

புருவத்தை சொரிந்தபடி வேறு புறம் நோக்கியவன் பின் தன்னையே நேர்ப் பார்வையாகப் பார்த்தவளிடம்..

“ஏற்கனவே சொன்னேனே! உன்னைக் காதலிக்கிறேனா, இல்லையான்னு தெரிஞ்சுக்கக் காதலிச்சுப் பார்க்கத் தோணுதுன்னு?? – பார்வை மாற.. அடிக்குரலில் நிதானமாய்க் கூறியவனைக் கேட்டு.. வாயடைத்துப் போனவள்....

“அதனால??” என்று வினவ...

“என் கூட வா. காதலிக்கனும்” என்றான் அதே பார்வையுடன்! அதே நிதானத்துடன்!

திடுக்கிட்ட நெஞ்சம் உள்ளே பரப்பிய வெப்பத்தின் விளைவால்.. வியர்க்கத் தொடங்கிய நெற்றியுடன்.. கையைக் கட்டிக் கொண்டு அவனை முறைத்தவளுக்கு.. சில நொடிகளுக்கு மேல் அவன் பார்வை

கொடுக்கும் தாக்கத்தை.. அது தனக்குள் செய்ய விளையும் மாற்றத்தை.. தாங்கிக் கொள்ள முடியாது போக.. சட்டென வேறு புறம் நோக்கினாள்.

நீள,நீள மூச்சுக்களுடன் கோபம்,பயம்,எரிச்சல்,படபடப்பு என அத்தனை உணர்வுகளையும் உள்ளே அடக்க முயன்றவளைக் கண்டு சிரிப்பு வந்தது அவனுக்கு.

“டெஸ்ட் எனக்குத் தான்! உனக்கு இல்ல! அதனால பயப்படாம வா” – என்றவனைக் கண்டு மட்டுப்பட்டக் கோபம் மீண்டும் முன்னே வர.. எரிச்சலுடன் அவனை நெருங்கி..

“என்னை சுத்தமாப் பிடிக்காதுன்னு சொல்லிட்டு லவ் லெட்டர் கொடுத்தே தப்பு! இதுல.. இது என்ன ஃபீலிங்க்ஸ்ன்னு தெரிஞ்சுக்கனும்,அதனால் என் கூட ஊர் சுத்த வான்னு கொஞ்சம் கூட யோசிக்காம.. கூப்பிட்றீங்க?”

மூச்சு விடாமல் கத்தியபடி முன்னே வந்தவளைக் கண்டு அதிர்ந்து அவளது நடைக்கேற்ப இரண்டடி பின்னால் சென்ற வசந்துக்கு சிரிப்புப் பொங்கியது.

“ஏய்ய்... ரிலாக்ஸ் ரிலாக்ஸ்!” என்றவன் தொடர்ந்து..

“அன்னிக்கு ஏன் நீ மஞ்சள் கலர் தாவணி போட்ட?, அது தான் இவ்ளோ பிரச்சனைக்கும் காரணம்” என்றான்.

“வாட்??”

“ப்ச், உன்னால வர முடியுமா முடியாதா?”

“என்னை சுத்தமா பிடிக்காதுன்னு ஒரு ஸ்டேட்மெண்ட் சொல்லியிருக்கீங்க நீங்க! அதுக்கு எக்ஸ்ப்ளனேஷன் கொடுங்க முதல்ல. அப்புறம் நான் வர்றதா வேணாமான்னு யோசிக்கிறேன்”– கையைக் கட்டிக் கொண்டு முறைப்புடன் கேட்டவளைக் கண்டுச் சிரித்து..

“உன்னைத் தவிர வேற யாரையும் பிடிக்கும்ன்னும் தோணலன்னு சொன்னேனே! அதை மட்டும் வசதியா மறந்துட்ட?

“தெளிவா குழப்புறதுல நீங்க பெரிய கில்லாடி!!”

“குழப்பம் தெளியத் தான் வா-ன்னு கூப்பிட்றேன்”

“..................” – உதட்டைக் கடித்தபடி அமைதியாக நின்றவளைக் கண்டு..

“இந்த காலேஜ்ல தான் நீ சேரப் போற-ன்னு தெரிஞ்சப்பவே நான் இதெல்லாம் ப்ளான் பண்ணிட்டேன்! இன்னிக்கு நீயாவே வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்க! நிச்சயம் சும்மா விட மாட்டேன்”

அசால்ட்டாகக் கூறியவனைக் கண்டு அடப்பாவி எனக் கண்ணை விரித்தவளை எரிச்சலுடன் பார்த்து.. “ஆ,ஊ-ன்னா கண்ணைப் பொளக்க வேண்டியது! முதல் வேலையா.. நீச்சல் கத்துக்கனும்” எனத் தனக்குத் தானே பேசிக் கொண்டான்.

அவன் பேச்சு,செயல் எதையும் கோர்வையாகக் கோர்க்க முடியாமல்.. விழித்தபடி நின்று கொண்டிருந்தவளிடம்..

“ஒழுங்கா என்னோட வர்றியா? இல்ல, உன் ஃப்ரெண்ட்ஸோட சேர்ந்து இந்த அரசமரத்தடிலயே இன்னிக்கு ஃபுல்-ஆ உட்காரப் போறியா”

முடிவாகக் கேட்டவனைக் கண்டு ஒரு நொடித் தன் தோழிகளை நோக்கியவள் பின் வேறு வழியின்றி சரியெனத் தலையாட்டினாள்.

முகம் மலர சிரித்தவனை முறைக்க முயன்றுத் தோற்றுப் பின் தனது தோழிகளிடம் விடை பெற்று வந்தவளை அழைத்துச் சென்றான் வசந்த்.

“வசந்த் ஆல் த வர்ஸ்ட் டா” - அசோகன்

“மாமா, போன தடவையாவது பெல்ட்-ல தான் அடி வாங்குன! இந்தத் தடவை உங்கப்பன் செருப்பைத் தூக்கப் போறான் டா” - ஜெயந்தன்

“சாருமதி ஐ லவ் யூ.. என் ப்ரபோசலை கன்சிடர் பண்ணு”-ராகவன்.

பலதரப்பட்டக் குரல்களைக் கேட்டுப் பல்லைக் கடித்துக் கொண்டு நின்றவளைத் தன் புல்லட்டில் ஏற்றிக் கொண்டான்.

கல்லூரி வளாகத்தைத் தாண்டி பீச் ரோட்டில் அவனது வாகனம் முழு உற்சாகத்துடன் சீறிப் பாய்ந்தது.

கடற்காற்றின் திருவிளையாடலால் முன்னுச்சி முடி பறக்க... நினைத்ததைச் சாதித்து விட்டத் திருப்தியில்.. முழுப் புன்னகையுடன்.. புருவம் சுருக்கியபடி.. ரியர் வியூ மிர்ரரை நோக்கினான் அவன்.

கண்ணாடி காட்டிய அவள் பிம்பத்தைக் கண்டவனின் கண்களில் கடற்காற்றையும் தாண்டிய குளிர்ச்சி!!

முழுப் பயமும், ஏகப்பட்டத் தயக்கமுமாய்.. பட்டும் படாமல் அமர்ந்திருந்தவளைக் கண்டு..

“அடுத்த ஸ்பீட் ப்ரேக்கர்ல கண்டிப்பா நீ கீழ விழப் போற”- என்றான்.

“ஏன்?”

“எதையுமே பிடிக்காம ரொம்ப அசால்ட்டா உட்கார்ந்துட்டு வர்ற?”

“பிடிக்கிறதுக்குத் தான் எதுவுமில்லையே இங்க”

“நான் எதுக்கு இருக்கேன் அப்போ?” – அடக்கப்பட்ட சிரிப்புடன் கேள்வி கேட்டவனை முறைத்து..

“அப்டியெல்லாம் பிடிக்க முடியாது” – என்றாள் அவள்.

“ஓஹோஓஓ” என்றபடி ஒரு நொடி அமைதியானவன்.. அடுத்த நொடி இஷ்டத்துக்குத் தன் வண்டியை குலுக்கியதில்... ஆடிப் போய்.. அவசரமாய் அவன் தோளைப் பற்றியவளைக் கண்டு வாய் விட்டுச் சிரித்தான்.

தலைக்கு மேல் வெள்ளம் போயாயிற்று! இனி ஜாண் என்ன முழம் என்ன என்றெண்ணிக் கொண்டு.. அவன் தோளைப் பிடித்தபடி நன்றாக அமர்ந்து கொண்டாள் அவள்.

“இதுக்கு முன்னாடி நான் உன் கையைப் பிடிச்சதே இல்லையா?, ரொம்பத் தான் பண்ணிக்கிற?”

முறைப்புடன் முகத்தை வைத்துக் கொண்டவளை மீண்டும் ரியர் வியூ மிர்ரரில் நோக்கியவன்..

“பிடிக்கலையா?” என்று வினவினான்.

“பயமா இருக்கு” – கலக்கத்துடன் வெளி வந்தது அவள் குரல்.

“உன் மாமாவை நினைச்சா?”

“ம்ம்”

“இருக்க வேண்டியது தான்!” – நக்கலாகக் கூறியபடிச் சிரித்துக் கொண்டான் அவன்.

“ப்ச்”

“பயத்தைத் தாண்டி வேற எதுவும் தோணலயா?”

“என்ன தோணனும்?”

“இதுக்கு முன்னாடி நீ பைக்ல போயிருக்கியா?”

“இல்ல.” என்றவள் தொடர்ந்து.. “நீங்க இதுக்கு முன்னாடி வேற எந்தப் பொண்ணையாவது பின்னாடி வைச்சுக் கூப்பிட்டுப்

போயிருக்கீங்களா?" – என்று சந்தேகமாய் வினவினாள்.

அவள் முக மாற்றத்தைக் கண்ணாடி வழி நோக்கியவன்.. சிரிப்புடனே வினவினான்.

"ஆமா-ன்னு சொல்லனுமா, இல்லன்னு சொல்லனுமா?"

"உண்மையைச் சொல்லுங்க"

"இல்ல! நீ தான் என் வண்டில ஏறுன முதல் பொண்ணு. போதுமா?"

"நம்புற மாதிரி இல்லையே!"

"நம்பாட்டிப் போடி" – மிர்ரரை நோக்கி முகத்தை சுழித்தவனைக் கண்டு சிரிப்புடன் தலை குனிந்தவளுக்கு.. என்னவென்றே புரியாத உணர்வு!

ஒலித்த அலையோசையும்,தழுவிச் சென்ற குளிர்க் காற்றும்.. ஒரு விதமான மிதப்பைக் கொடுக்க.. மயங்கத் தொடங்கிய மனதின் கதவு,ஜன்னல்கள் அனைத்தையும் திறந்து வைத்துக் கொண்டு... அவன் பார்வையும்,பேச்சும் தூண்டியக் கிளர்ச்சியை, ஆசையை வரவேற்கக் காத்திருந்தாள் அவள்.

"என்ன படம் பார்க்கனும்ன்னு ப்ளான் பண்ணியிருந்தீங்க?" - வசந்த்

"பயணங்கள் முடிவதில்லை!"

"அந்தப் படம் ரிலீஸ் ஆகி மூணு மாசத்துக்கு மேல ஆச்சே!"

"ஆமா நூறு நாள் தாண்டி ஓடிட்டிருக்கு! ஆனா நான் இன்னும் பார்க்கல!, இளையராஜாவுக்காகவே அந்தப் படம் பார்க்கனும்"

"ஏன், நினைவெல்லாம் நித்யா-ல கூடப் பாட்டு நல்லாத் தான இருக்கு?, புதுப் படம்! அதுக்குப் போகலாமா?"

"வேண்டாம்!, படம் நல்லாயில்லைன்னு கேள்விப்பட்டேன், எனக்குப் பயணங்கள் முடிவதில்லை தான் பார்க்கனும்!" – பிடிவாதம் பிடித்தவளைக் கண்டு..

"சரி, அந்தப் படத்துக்கே போகலாம்" – என்றவன் வண்டியை மௌண்ட் ரோட்டிற்குச் செலுத்தினான்.

தேவி காம்ப்ளெக்ஸில் வண்டியை நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்தவர்களை வரவேற்றது.. இளையராஜாவின் பெரிய பெரிய கட் அவுட்டுகள் தான்!

நாட்டிலேயே மியூசிக் டைரக்டருக்காக அதிக கட் அவுட்டுகள்

வைக்கப்பட்ட ஒரே படம் பயணங்கள் முடிவதில்லை!

படத்தில் இடம் பெற்ற ஒட்டு மொத்தப் பாடல்களும் ஹிட்டோ ஹிட்! ஏ.. ஆத்தாவிலிருந்துத் தொடங்கி, இளையநிலா பொழிகிறதே,தோகை இளமயில், வைகறையில் வைகைக் கரையில், மணியோசை கேட்டு எழுந்து, ராக தீபம் ஏற்றும் நேரம்,சாலையோரம் சோலையொன்று பாடும்.. என ஒவ்வொன்றும் முத்து,முத்தான பாடல்கள்! நூறு நாட்களையும் தாண்டி ஓடி சில்வர் ஜூப்லியைத் தொட்ட இந்தப் படம் ஏகப்பட்ட விருதுகளையும் குவித்ததென்பது குறிப்பிடத்தக்கது.

நூறு நாட்கள் தாண்டியும் கூட்டம் குறையாதிருந்தது தேவி – பாரடைஸில் திரையிடப்பட்ட அந்த முதற் காட்சி!

படம் தொடங்கியதும் ஆர்வத்துடன் திரையில் மூழ்கிப் போனவளைக் கண்டுச் சிரித்துத் தானும் படத்தில் ஆழ்ந்தான் வசந்த்.

லொக்,லொக் என இருமியபடி மோகன், மணியோசை கேட்டு எழுந்து எனப் பாடத் தொடங்கியதும் எரிச்சலுற்று அவன் புறம் திரும்பினாள் சாரு.

“sad ending-ன்னு முன்னமே சொல்லியிருக்கலாம்ல?”

“ஜஸ்ட் படம் தான?, ஏன் இவ்ளோ ஃபீல் பண்ற”

“ப்ச், உங்களோட ஃபர்ஸ்ட் டைம் பார்க்குற படம், ஹாப்பி எண்டிங்-ஆ இருந்திருந்தா நல்லா இருந்திருக்கும்” – தன் போக்கில் புலம்பியவள் பின் தான் கூறியதை எண்ணி நாக்கைக் கடித்ததைக் கண்டு அவன் லேசாகச் சிரித்தான்.

“சாரு…”

“ம்ம்?”

“லவர்ஸ் எல்லாம் ஏன் தியேட்டருக்கு வர்றாங்கன்னு தெரியுமா?”

“எக்குத்தப்பா ஏதோ சொல்லப் போறீங்க தான?” – இருட்டில் பளபளத்த அவன் கண்களைக் கண்டு சந்தேகமாய் வினவியவளிடம்..

“பரவாயில்லையே! உன்னைச் சின்னப் பொண்ணுன்னு நினைச்சேன்! எல்லாஆஆஆமே தெரிஞ்சு வைச்சிருக்க” – என்று நக்கலடித்தான் அவன்.

“பின்ன?, ஜெனரல் நாலேஜ் ரொம்பவும் முக்கியம்! என் கேங் லேடீஸ் 24 மணி நேரமும் பேசிக்கிற ஒரே விஷயம் இது தான்!” – கூச்ச நாச்சம் பாராமல் ஓபன் ஸ்டேட்மெண்ட் கொடுத்தவளைக் கண்டுப் புருவம்

உயர்த்தி..

“ஹ்ம்ம்! அப்ப எனக்கு வேலை சுலபம்ன்னு சொல்லு” – என்று அவன் கூற..

“என்னது?” – எனப் பதறிப் போனாள் அவள்.

“ஏன் ஷாக் ஆகுற?”

“காதலிக்கனும்ன்னு மட்டும் தான சொன்னீங்க?”

“கிஸ்ஸிங் எல்லாம் லவ்க்கு கீழ தான் வரும் சாரு”

“வா…வா…வாட்ட்ட்ட்ட்??” – ஏகத்துக்கும் வாயைத் திறந்தவளிடம்..

“முத்தமெல்லாம் காதலில் ஒரு அங்கம்-ன்னு சொல்றேன்” என்றான்.

“முத்தமாஆஆஆஆ?”

“சரி, கண்ணை விரிக்காத! நெக்ஸ்ட் டைம் நீச்சல் கத்துக்கிட்டு வந்து.. உன் கிட்ட இதைப் பத்தியெல்லாம் பேசுறேன்! அப்போ தான் நான் சேஃப்-ஆ இருக்க முடியும்” – தலை முடியைக் கோதிக் கொண்டவனிடம்..

“ப்ச், புரியுற மாதிரி பேசுங்க”- என்று சிடுசிடுத்தாள் அவள்.

“புரியுற மாதிரியா?” – என்றவன்.. அருகே அமர்ந்திருந்தவளிடம் “இங்க வா..” என்று கையசைத்தான்.

“நம்பி வரலாம்ல?”

“கவலைப் படாத! உனக்குப் பதினெட்டு வயசு முடியற வரைக்கும் நான் ஒன்னும் பண்ண மாட்டேன்”

வாக்களித்தவனைக் கண்டுத் தலையில் அடித்துக் கொண்டு அவனருகே முகத்தைக் கொண்டு வந்தவளிடம்..

“உன் கண்ணு இல்ல?”

“ம்ம்ம்”

“மையெல்லாம் தீட்டிப் பெருசா வைச்சிருக்கியே”

“ப்ச், விசயத்தைச் சொல்லுங்க”

“ஹ்ம்ம்ம்ம், அது ஒரு ஆழ்கடல் மாதிரி! அநியாயத்துக்கு மொத்தமா என்னை உள்ள இழுத்துப் போட்டுடுது! ஒவ்வொரு தடவையும் உன்னைப் பார்க்குறப்போ அதுக்குள்ள மூழ்கிப் போய் மூச்சுத் திணறுற

உணர்வு எனக்கு! அதனால தான் நீச்சல் கத்துக்கனும்ன்னு சொல்றேன்”

அவள் விழிகளில் பார்வையைப் பதித்துப் பொறுமையாய்க் கூறியவனைக் கண்டு உதட்டை நக்கலாக வளைத்தவள்..

“சும்மா சொல்லக் கூடாது! வசனமெல்லாம் பின்றீங்க! அடுத்த நாடகத்துக்கு யூஸ் பண்ணிக்கோங்க! நிச்சயம் க்ளாப்ஸ் வாங்கும்” – என்று சிரிக்காமல் கூற..

“போடி” – என்ற படி நகர்ந்தமர்ந்து கொண்டான் அவன்.

அதன் பின்பு படம் முடிந்து வெளியே வந்து.. சங்கம் ஹோட்டலில் உணவை முடித்துக் கொண்டு.. மாலை மெரினாவில்.. கால் நனைத்துக் கொண்டிருந்த சாருவுக்கு.. வசந்தைத் தவிர வேறு எவரும் இப்பூவுலகில் வசிக்கும் ஜீவராசிகளாகவேத் தோன்றவில்லை.

தன் நீண்ட கூந்தலைக் கட்டிக் கொண்டையாக்கி.. காலணிகளைக் கையில் வைத்துக் கொண்டு.. கடலலையுடன் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தவளைப் பாண்ட் பாக்கெட்டுக்குள் கை விட்டபடி சற்றுத் தள்ளி நின்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் வசந்த்.

“இப்படிக் கரையோரமா நின்னு காக்கா விரட்டுறதுக்கு, நீங்க வராமலே இருந்துருக்கலாம்ல?” – சாரு.

மூச்சு வாங்க வசந்தை நோக்கிக் கத்தினாள்.

“நான் சும்மா நிற்கிறேன்னு யார் சொன்னா?”

“பின்ன?”

“நான் உன்னை சைட் அடிச்சிட்டு இருக்கேன்”

“அடேங்கப்பா! இதுக்குப் பேரு தான் ஃப்ளர்ட்டிங்! இதுவும் கூட காதல்ல ஒரு அங்கம்! அப்படித் தான சொல்லப் போறீங்க?”

“எக்ஸாக்ட்லி! இப்போ தான் நீ என்னோட வேவ் லெங்க்த்துக்கு வந்திருக்க”

“கடவுளே!!!!”

“சாரு.....”

“ம்ம்”

“இப்போ பயமெல்லாம் இல்லையே!”

“இவ்ளோ நேரம் இல்லாம இருந்தது! இப்போ நீங்க தான் நியாபகப்

படுத்திருக்கீங்க"

"சரி, அப்டின்னா நான் கேட்டதை உன் மெமரில இருந்து அழிச்சிடு"

"அதுசரி"

"சாரு...."

"சொல்லுங்ங்ங்ங்ங்ங்க..." – மீண்டும் கரையை நோக்கிக் கத்தினாள் அவள்.

"காதலிக்கலாமா??"

"கேட்கல" – காதில் விரலை வைத்துக் கையசைத்தவளிடம்..

"லவ் பண்ணலாமான்னு கேட்டேன்" – என்று அவனும் கத்தினான்.

"காலையில இருந்து நீங்க அதைத் தான பண்ணிட்டு இருக்கீங்க!"

"ம்ஹ்ம்!காலையில இங்க வரும் போது.. நான் உன்னைக் காதலிக்கனும்ன்னு சொல்லித் தான் கூட்டிட்டு வந்தேன்! ஆனா.. இப்போ.. நீயும் என்னைக் காதலிக்கனும்ன்னு தோணுது"

கரு மேகங்கள் சூழ மங்கிப் போயிருந்த அந்த மாலை வேளையில்.. சந்தன நிற பெல்ஸும்,கருப்புச் சட்டையுமாய்.. வேகமாய் வீசியக் காற்றில்.. முன்னுச்சி முடி பறக்க.. பாக்கெட்டுக்குள் கை விட்டுக் கொண்டு நின்றவனைக் கண்டு.. அதுவரையிலிருந்தத் துள்ளல் மறைய... படபடக்கும் இதயத்துடன் அவனை நோக்கினாள் அவள்.

உதட்டில் உறைந்து போன சிரிப்புடன் அவளையே நோக்கியவனும் தன் பார்வையை மாற்றிக் கொள்ளவில்லை.

"இதுக்கு என்ன பதில் சொல்றது?" – சாரு.

"காதலிக்கலாம்ன்னு சொல்லு"

"என்னைப் பிடிக்கல! ஆனா வேற யாரையும் பிடிக்கும்ன்னும் தோணலன்னு சொன்னீங்களே! அந்தக் குழப்பமெல்லாம் தீர்ந்துடுச்சா உங்களுக்கு?"

"யெஸ்! இப்போ வரைக்கும் வேற யாரையும் பிடிக்கல! இனிமேலும் பிடிக்கும்ன்னும் தோணல! அப்டின்னா உன்னைப் பிடிச்சிருக்குன்னு தான அர்த்தம்?"

"எனக்கு லேசா தலை சுத்துது"

"ஹாஹாஹா"

“சிரிக்காதீங்க. எப்பவும் என்னைக் குழப்புறீங்க நீங்க” – எரிச்சலுடன் அவள் சிணுங்கிக் கொண்ட வேளை.. பெரிய,பெரிய துளிகளுடன் மழை பொழியத் துவங்க..

அவசரமாய் ஓடிய இருவரும்.. மூடப்பட்டிருந்தக் கடையொன்றின் வாசலை அடைந்த நேரம்.. ஏறக்குறைய முழுதாய் நனைந்திருந்தனர்.

முகத்தில் வழிந்த நீரைத் துடைத்தபடித் தலையைக் கோதியவனைக் கண்டு..

“நான் நெகட்டிவ்-ஆ பதில் சொன்னா என்ன செய்வீங்க” என்று ஓடி வந்ததில் மூச்சிரைக்க.. திணறியபடி வெளி வந்தது அவள் குரல்.

தானும் மூச்சிரைக்க.. அவளை நோக்கியவன்.. அவள் நெற்றியோரத்தை அலங்கரித்திருந்த முடிகளிலிருந்து சொட்டிய நீரில் பார்வையைப் பதித்து..

“சாருமதி இல்லேன்னா ஒரு வெண்மதின்னு! யாரையாவது பார்த்துட்டுப் போக வேண்டியது தான்” எனவும்..

அவனை முறைத்து விட்டு வேறு புறம் திரும்பியவள்.. காதோரத்தில் வழிந்த நீரைத் துடைத்த வேளை... வேகமாய் அவளருகே வந்து... அவள் வலது கன்னத்தை பற்றித் தன் புறம் திருப்பினான் அவன்.

திடுக்கிட்டு அவன் முகம் நோக்கியவளிடம்.. “அவ்ளோ ஈசியால்லாம்.. உன்னை விட்டுட மாட்டேன்! நீ நெகட்டிவ்-ஆ பதில் சொல்றதைக் கேட்டுட்டுச் சும்மா நிப்பேன்னு நினைச்சியா?” என்றான்.

“என்ன பண்ணுவீங்க?”

பற்றியிருந்த அவள் கன்னத்தை அழுத்தி.. “உண்ணாவிரதம் இருந்தாவது.. உன்னைக் காதலிக்க வைப்பேன்” எனக் கூற... மெல்லப் பரவத் தொடங்கிய முறுவலை அடக்கியபடி மறுபுறம் திரும்ப எத்தனித்தவளைத் தடுத்துத் தன் முகம் காணச் செய்தான் அவன்.

“பதில் சொல்லு” – அழுத்தமாய் வெளி வந்தது அவன் குரல்.

“..........” – பார்வையைத் தழைத்தபடி அமைதியாய் நின்றவளைக் கண்டு மீண்டும்..

“சாரு....” என்றான் அவன்.

விழிகளை நிமிர்த்தி அவன் முகம் நோக்கியவள்.. அடக்கப்பட்ட சிரிப்புடன்.. “பதில் தான?, என் மாமா சொல்லுவாரு” எனக் கூற.. முறைப்புடன்.. அவள் காதோரத்தை அழுத்தினான் அவன்.

கண்ணைச் சுருக்கி.. சிரிப்பை அடக்கி.. “ஷ்ஷ்ஷ்..” என்றவளைக் கண்டு.. அதுவரையிருந்த விளையாட்டுத்தனத்தைக் கை விட்டுத் தீவிரமாய் அவள் விழி நோக்கியவனின் பார்வையில் திணறி.. திடீரென..

“எனக்கு இன்னும் பதினெட்டு வயசு ஆகல” என்றாள் அவள்.

புரியாமல் நோக்கியவனிடம்..

“பதினெட்டு வயசு முடியுற வரைக்கும் எதுவும் பண்ண மாட்டேன்னு சொல்லியிருக்கீங்க” – தரையைப் பார்த்தபடிக் கூறியவளைக் கண்டு இதழ் வளைய முறுவலித்து..

“அந்த எண்ணத்தை நான் மாத்திக்கிட்டுப் பத்து நிமிஷம் ஆச்சு” – என்றான் அவன்.

வாய் பிளந்து நின்றவளின் கன்னத்தை அழுத்தித் தன்னருகே வரச் செய்தவன்.. விரிந்த விழிகளுடன் தன்னையே நோக்கியவளைக் கண்டு மெல்ல அவள் கன்னத்திலிருந்தக் கையை விலக்கிக் கொண்டு..

பார்வை மாறாமல்.. இரண்டடிப் பின்னே நகர்ந்து.. சுவரில் சாய்ந்து.. ஒரு காலை மடக்கி நின்று.. கையைக் கட்டிக் கொண்டு.. லேசாய்த் தலை சாய்த்தபடி அவளையே நோக்கினான்.

கடல் நீரும்,மழை நீரும் உறையச் செய்யாத கால்களை.. அவன் பார்வை உறையச் செய்ய.. அசையாது நின்றவள்.. உள்ளே உருகிய இதயத்தின் நடுக்கத்தைத் தொண்டைக் குழிக்குள் உணர்ந்த சமயம்.. மிச்ச,சொச்ச மூளையையும் அவன் ஒருவனே.. பாரபட்சமின்றி நிறைந்திருந்தான்.

## அத்தியாயம் – 5

**“நெஞ்சினில் ஆடிட குறிஞ்சியைப் போல் ஒரு..**

**மலர் தேடவோ.. மகிழ்ந்தாடவோ...**

**வசந்தம் பாடி வர... வைகை ஓடி வர..**

**இளமை கூடி வர.. இனிமை தேடி வர..**

**ஆராதனை செய்யட்டுமா... நீரோடையில் நீந்தட்டுமா!!!”**

ஒரு புறம் இளையராஜா, மணிரத்னம்,பாலுமகேந்திரா, எஸ்.பி.முத்துராமன், மகேந்திரன், பாலச்சந்தர் என அத்தனை இயக்குனர்களுடனும் இணைந்து கொண்டு தமிழ் சினிமாவை விலைக்கு வாங்கிக் கொண்டிருந்த வேளையில்... சத்தமில்லாமல் ஒரு மனிதன்.. ஏகலைவனாகத் தானே படத்தை இயக்கி, இசையமைத்துப் பாடல் எழுதி.. இதுவரையிலில்லாதப் புது ட்ரெண்ட் அமைக்கிறார்! வேறு யாருமல்ல! தாடிக்குள் திறமையை ஒளித்து வைத்திருக்கும் தி ஒன் அண்ட் ஒன்லி டி.ராஜேந்தர்!

நான் முதன் முதல்ல பார்த்த படம் ரயில் பயணங்களில்! கை-ல மைக்கோட மேடையில நின்னு பாட்டு பாடுற ஹீரோவை யாருக்குத் தான் பிடிக்காது?, மலையாள முகம் வேறு! படம் நகர்கிற விதம், பாடல்கள் எல்லாம் ரொம்பப் பிடிச்சுப் போய்.. அதுக்கப்புறம் ஒரு தலை ராகம்,உயிருள்ள வரை உஷா, மைதிலி என்னைக் காதலி எல்லாம் தேடி தேடிப் பார்த்தது வேறு கதை! ஒவ்வொரு படமும் ஒவ்வொரு அனுபவம்! காதல் தோல்வியை இவரைப் போல உருகிச் சொல்ல.. இனியொருவர் பிறக்கப் போவதில்லை!

பகல் முழுதும் பணி செய்த களைப்பில் துவண்டு.. தன் கதிர்க் கரங்கள் தொய்ந்து விழ... சோர்வுடன்.. மேற்குத் திசை நோக்கி நகரத் துவங்கியிருந்தான் ஆதவன். அவன் தலை முழுதாய் மறைந்ததும் வெளியே வரும் நோக்கத்தோடு.. மேகத்திரை வழி லேசாய் எட்டிப்பார்த்தபடி திருட்டுப் பார்வையுடன் வெண்மதி! காகம்,குருவிகளென அத்தனைப் பறவைகளும் கூட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த சந்தியா வேளை அது!

வண்டுகளின் ரீங்காரத்தோடுப் போட்டி போட்டுக் கொண்டு சலசலத்தபடி.. உற்சாகமாய்க் கரைபுரண்டோடிக் கொண்டிருந்தக்

காவிரி ஆற்றங்கரையில்.. கற்பாறைகளுக்கிடையில்.. அந்த மயக்கும் மாலை நேரத்தின் தாக்கம் சிறிதுமின்றி சோகமாய் அமர்ந்திருந்தாள் அவள் – ஆதிமந்தி!

ரோமியோ-ஜூலியட், லைலா-மஜ்னு, தேவதாஸ்-பார்வதி போன்ற க்ளாசிக் காதலர்களை மட்டுமே கண்டு ரசித்த நமக்கு... இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நம் சங்க இலக்கியங்களான குறுந்தொகை,அகநானூறு மற்றும் சிலப்பதிகாரத்தில் தோன்றியக் காதல் ஜோடியான ஆட்டனத்தி-ஆதிமந்தியைப் பற்றியப் பொது அறிவு இல்லாமற் போனது நம் மொழிக்கு நேர்ந்த அவலம் தான்!

அன்றைய மேடை நாடகத்தில்.. வழக்கம் போல் பெண் வேடமிட்டிருந்த ஹரி.. கற்பாறையொன்றின் மீது ஆதிமந்தியாக அமர்ந்திருந்தான்.

நீண்ட நயனங்களும்,அதை விட நீண்டு படர்ந்திருந்தக் கூந்தலுமாக.. காவிரி ஆறு அள்ளித் தெளித்தக் காற்றில் சோகமே உருவாய் அமர்ந்திருந்த ஆதிமந்தி ஒரு ஆடுகளமகள் ஆவாள்!

தினமும் இம்மாலை வேளையில் காவிரி ஆற்றுப் படுகையில் சிறுமியாய்த் துள்ளி விளையாடியபடித் தன்னோடு உலா வரும் தோழி ஆதிமந்தியைக் காணாது.. தேடி வருகிறாள் அவள் தோழியொருத்தி.

காவிரிக்கேத் தண்ணி காட்டி விடும் நோக்கத்தோடு.. கண்களில் நீர் வழிய.. ஆதிமந்தி அமர்ந்திருந்த கோலத்தைக் கண்டு.. அவள் நீண்ட கார் கூந்தலை வருடி “என்னவாயிற்று?” என்று விசாரணை செய்கிறாள்.

“ஓ! என்னவென்று சொல்வேன்?” – எனக் கேட்டு மீண்டும் கண்ணீர் விடும் ஆதிமந்தி.. தன் சோகக் கதையைத் தோழியிடம் கூறுகிறாள்.

“என் தலைவனாக, என் காதலனாகக் கருதி.. நான் கனவு கண்டு வந்த.. அந்த நீச்சல்-நடன விளையாட்டு வீரனும், ஆட்டக்கார ஆடுகளக் கூட்டத்துத் தலைவனுமாகிய.. ஆட்டனத்தி என்பவனை.. பலம் உடைய போர் வீரர்கள், மள்ளர் விழாக் கொண்டாடும் இடங்களிலும், மள்ளர் மகளிர் துணங்கை நடனம் ஆடும் இடங்களிலும் இன்று பகல் முழுதும் தேடிப் பார்த்து சோர்ந்து விட்டேன்! எங்கும் அவனை என்னால் காண முடியவில்லை! அவனைக் காணாது என் உடல் பசலை நோயால் வாடி.. என் சங்குக் கை வளையல் நழுவுகிறதடி தோழி”

-எனக் கூறி.. காதலனைப் பிரிந்து வாடும் தன் துயரத்தைத் தோழியுடன் பகிர்ந்து கொள்கிறாள் ஆதிமந்தி.

அவளின் வருத்தத்தைக் கண்டு புன்னகை கொள்ளும் தோழியானவள்..

“அடி அசடே! ஒரு நாள் காணாததற்கு இத்தனை ஆர்ப்பாட்டமா?, ஏன் இந்தக் கவலை?, நாளை ஆட்டனத்தி எமது அரசன் முன்னிலையில் ஆடப் போகிறான். அதற்காக அவனது சக ஆட்டக்காரி காவேரி என்பவளுடன் ஒத்திகை பார்க்கிறானோ என்னவோ!, நாளை அவனது ஆட்டத்தை நாம் இருவரும் முதல் வரிசையில் அமர்ந்து பார்க்கலாம்! கவலை கொள்ளாதே” – எனக் கூறிச் சமாதானப்படுத்துகிறாள்.

அடுத்ததாகக் காட்சி மாறுகிறது.

முப்போகமும் விளைந்து வளமும்,செழிப்புமாய்.. தனம்,தான்யம் போன்றவற்றில் சோழ நாடுத் தன் நிலையை.. நிலையாய்த் தக்க வைத்துக் கொள்ளப் பெரும்உதவி செய்பவள் அந்தக் காவிரி அன்னை! அப்பேர்ப்பட்டவளைத் தெய்வமாகக் கருதி.. அந்நாளில் அவளுக்குப் பொங்கல் வைத்து, அகல் விளக்கேற்றி வழிபட்டு.. ஆட்டனத்தி-காவேரியின் நீச்சல் நடனத்தைப் பார்க்க.. காவிரி ஆற்றங்கரையில் ஆர்வமாய்க் கூடுகின்றனர் மக்கள்.

ஆதிமந்தியும் சீவி,சிங்காரித்துக் கொண்டுத் தன் தோழியுடன் ஆட்டத்தைக் காண வருகிறாள்.

பச்சைப் பசேல் என வயல்கள் நிறைந்திருந்தக் கழார் எனும் ஊரில் காவிரி ஆற்று நீர்த்துறையில் கூட்டம் கூடியிருந்தது. மக்களின் ஆர்வத்துக்கு சிறிதும் குறையாத ஆர்வத்தோடு.. ஆட்டத்தைக் காண ஆசையோடு அமர்ந்திருக்கிறார் அரசர் கரிகால்வளவன்.

சிறிது நேரத்தில் தோன்றுகிறான் ஆட்டனத்தி.. தன் சக ஆட்டக்காரியான காவேரியோடு சேர்ந்து!

நீண்டத் தலைமுடியுடனும்,நெற்றியில் விபூதிப் பட்டையுடனும் கால் சிலம்பத்தோடு.. வெற்று மார்புடன்.. ஆட்டனத்தி வேடத்தில் மேடையில் நிற்கிறான் வசந்த்.

தன் தலைவனைக் கண்ட ஆதிமந்தி, மதி மயங்கி.. சுற்றம் மறந்து நிற்கும் வேளையில் காட்சி மாறுகிறது.

இப்போது அவனும் அவளும் மட்டுமே மேடையில்!

நுரை ததும்பப் பவனி வரும் காவிரியின் நீரோட்டத்தில் தன் மன்னவனுடன் மிதக்கிறாள் ஆதிமந்தி. நீர் தந்த சில்லிப்பின் தாக்கமோ அல்லதுத் தன் தலைவன் தந்த ஸ்பரிசத்தின் தாக்கமோ..! விழி மூடி.. உடல் நடுங்கி.. தண்ணீருக்குள் தனி உலகம் பார்க்கிறாள்!

தான் மட்டும் சஞ்சரித்த அந்த மாய பூமியிலிருந்து அவள் வெளி வந்த

நேரம்.. கரிகாலனுக்கு வணக்கத்தை வைத்து விட்டு காவிரியில் இறங்குகிறான் ஆட்டனத்தி.

ஊர் மக்கள் அனைவரும் ஆர்ப்பரிக்க.. ஆரவாரத்துடன் நீடித்த அவனது நீச்சல் நடனத்தைக் கண்டுப் பூரித்துப் போய்.. அந்தக் காவிரி அன்னையும் உற்சாகத்துடன் மேல் எழும்பியதன் விளைவு.. அந்நீர்த்துறையில் நிமிடத்தில் வெள்ளம் பாய்கிறது.

அவனோடு சேர்ந்து ஆடிய ஆட்டக்காரி பிடிமானத்துக்கு இவனைப் பற்றிக் கொண்டு நீரில் மூழ்கிப் போக.. அவளோடு சேர்ந்து தானும் நீருக்குள் அடித்துச் செல்லப்படுகிறான் ஆட்டனத்தி.

அடுத்ததாகக் காட்சி மாறுகிறது.

இருவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டதில் காவேரியென்பவள் மாண்டு போக.. கரை ஒதுங்கிய ஆட்டனத்தியை மீனவர் மகளான மருதி என்பவள் மீட்டுப் பணிவிடை செய்கிறாள். அத்தோடு அவன் மீது காதலும் கொள்கிறாள்!

அடுத்தக் காட்சி கண்ணீரும்,புலம்பலுமாய் ஆதிமந்திக்கானது!

ஆற்றோடு போய் விட்டத் தன் காதலனைக் காணாது.. கரை முழுதும் பிச்சியாய் ஓடிப் போவோர்,வருவோர் அனைவரிடமும் தன் காதலனின் அங்க அடையாளங்களைச் சொல்லி “கண்டீரோ!, என் தலைவனைக் கண்டீரோ?” எனக் கேட்டுக் கண்ணீர் வடிக்கிறாள் ஆதிமந்தி.

தன் மாண்தக்கோனையை(தனக்கேற்றவனாகக் கருதிய தலைவன்),தன் ஆட்டக்காரனைப் பறி கொடுத்து விட்ட துக்கத்தில்.. கடவுளாய்க் கண்ட காவிரியை.. அன்னையாய் மதித்த பொன்னியை.. ஒரு நொடி.. கடும் வார்த்தைகளால் சாடுகிறாள்!

மறு நொடி “காவிரித் தாயே! நீயேனும் சொல்! எங்கே என் மன்னவன்?” எனக் கேட்டுத் தவிக்கிறாள்.

நீரோடும் போக்கில்.. கால் நோக நடந்து.. வழியெங்கும் தென்படும் ஆட்களிடம் தன் காதலனைப் பற்றி அவள் விசாரித்துக் கொண்டுச் செல்லும் வேளையில்.. அவள் கண்ணில் படுகிறாள் மருதி.

அடுத்த காட்சி மருதி,ஆட்டனத்தி,ஆதிமந்திக்கிடையேயானது!

ஒருதலையாய் அவன் மீது காதல் கொண்டிருந்தாலும்.. களைந்தத் தலையும்,நலுங்கிய உடையுமாய் பிச்சி தோற்றத்தில் கண் முன்னே நின்ற ஆதிமந்தியைக் கண்டுத் தன் மனதை மாற்றிக் கொண்ட மருதி..

அவளை அழைத்துச் செல்கிறாள் ஆட்டனத்தியைக் காண!

ஓலைப் பாயின் மீது.. நெற்றியிலிட்டப் பச்சிலையுடன்.. ஆழ்ந்த நித்திரையில் கிடந்தவனைக் கண்ட ஆதிமந்திக்கு மகிழ்ச்சி பெருகிறது.

கண்ணிலிருந்து இறங்கியக் கண்ணீரின் சூடு.. கன்னத்துச் சிவப்பு தந்த வெப்பத்தில் கலந்து.. அனலாய் அவள் உதட்டில் இறங்கியதும்... தன் காதலனை, தன் தலைவனை, தன் மன்னவனை கை பிடித்து விட்டத் திருப்தியில் அழகாய்ப் புன்னகைக்கிறாள் ஆதிமந்தி.

நாடகம் முடிந்த அந்த இரவு வேளையில்.. அருகிலிருந்த டீக்கடையொன்றில் அமர்ந்திருந்தனர் ஹரியும்,வசந்தும். நெற்றியிலிருந்தப் பட்டையை நீக்காது.. பெல் பாட்டமும், ஸ்டெப் கட்டுமாக அமர்ந்திருந்தவனைக் கண்ட ஹரிக்கு சிரிப்பு வந்தது.

“ஹாஹாஹா” – ஹரி.

“என்னடா?”

“நெத்தில இருக்குற பட்டையை அழி டா வசந்த், நீ போட்டிருக்கிற ட்ரெஸ்க்கும்,பட்டைக்கும் சம்மந்தமே இல்லாம இருக்கு” – என்றபடி அவன் நெற்றியை நோக்கிக் கை நீட்டியவனைத் தடுக்க.. டீ க்ளாஸுடன் தலையைப் பின்னே இழுத்துக் கொண்ட வசந்த்..

“ப்ச், அழிக்காத! இருக்கட்டும்” என்றான்.

“ரொம்பவே மாறிட்ட டா நீ! நானே கூப்பிட்டாலும் நடிக்க அவ்ளோ சீக்கிரம் ஒத்துக்க மாட்ட! இப்போ நீயே எப்போ நாடகம்ன்னு கேட்குற அளவுக்கு முன்னேறிட்ட?”

நண்பன் கூறியதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டான் வசந்த். உண்மை தான்! ஹரியின் கட்டாயத்தினால் அவனோடு சேர்ந்து மேடை ஏறியவனுக்கு இப்போது நாடகத்தின் மீதும், நடிப்பின் மீதும் புது மோகமே பிறந்து விட்டது.

எதிலும் பிடிப்பின்றி.. அசுவாரசியமாய் சென்று கொண்டிருந்த வாழ்க்கையின் மீதுத் திடீரென ஆர்வம் தோன்றியதைப் போல் ஒரு உணர்வு அவனுக்கு.

மனைவி இறந்தத் துக்கத்தைத் தொலைக்கத் தன்னைத் தொழிலுக்குள் புகுத்திக் கொண்ட சாருகேசன், மகனைக் கண்டு கொள்ளாது விட்டதன் விளைவு.. அவனுக்குப் படிப்பு,வேலை போன்றவற்றின் மீது ஒரு ஒவ்வாமை ஏற்பட்டு விட்டது.

தன்னுடைய சுயநலத்துக்காக.. பெற்ற மகனைத் தவிர்த்து.. அவர் தன் இஷ்டப்படி நடந்து கொண்ட போது.. தான் மட்டும் எதற்காக அவர் பேச்சைக் கேட்டு அவர் வளர்த்து.. நிமிர்த்தி வைத்திருக்கும் தொழிலுக்குத் தலை வாரிப் பூ வைக்க வேண்டும் என்கிற எண்ணம் அவனுக்கு!

அதனாலேயே இளங்கலைப் பட்டம் வாங்கிய பிறகுத் தொழிலில் அவனை ஈடுபடுத்த முனைந்தவரின் விருப்பத்துக்கு செவி சாய்க்காமல்.. கடனே என்று முதுகலைப் படிப்பில் சேர்ந்தான் அவன்.

இந்த இரண்டு வருடங்களும் கழிந்த பிறகு.. அடுத்து வாழ்க்கையில் என்ன செய்தால்.. இந்தப் பரந்து விரிந்த பூமியில் திருப்தியாகத் தன்னால் வாழ முடியுமென்கிற சிந்தனை வந்துவிட்டது அவனுக்கு!

காசு சம்பாதிப்பது அவனது நோக்கம் கிடையாது! தங்க மகனின் நலம் பேணாமல்.. ஓடி,ஓடி உழைத்தத் தந்தை லட்ச,லட்சமாகப் பணம் சேர்ப்பதைக் கண்டு விட்டதாலோ என்னவோ.. பெரிதாகப் பணத்தின் மீது ஆசை தோன்றவில்லை!

ஏதேனும் செய்தாக வேண்டும்! மரம் நடுவது, மழை நீர் சேமிப்பது, வாகனப் புகையைக் குறைத்துக் காற்று மாசுபடுதலைத் தவிர்ப்பது, குழந்தைகளிடமும் இளைஞர்களிடமும் உலக அமைதியைப் பற்றின சிந்தனையை உருவாக்குவது! இது போல.. வித்தியாசமாக ஏதேனும்! வாழும் வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுத்துத் திருப்தியளிக்கும் இது போல ஏதேனும் செய்ய வேண்டும்!

தன்னைச் சுற்றியிருப்போரில்.. பணம் சம்பாதிப்பதைத் தவிர மற்ற சிந்தனைகளிலும் ஈடுபடும் ஆட்களை வரிசைப் படுத்த நினைத்தான். எவருமே நினைவிற்கு வரவில்லை!

வரி விலக்குக்காக சமூக நலனில் அக்கறையிருப்பதைப் போல் காட்டிக் கொள்ளும் பணக்கார அங்கிள்களை மட்டுமே அவன் அறிவான்!

எரிச்சலுடன் கண்ணை மூடிக் கொண்டவனின் முன்பு ஹரி வந்து நின்றான்!

தான் போற்றும் கலையை வளர்க்கப் போராடும் ஹரியும் கூட ஒரு வகையில் திருப்தியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பதைப் போலத் தோன்றியது அவனுக்கு!

ஆயிரம் பேர் ஒன்று கூடும் பெரும் மேடையில் நாடகம் போடுபவனல்ல அவன்! பங்குபெறும் தெருக்கூத்துகளில் பெரிதாகப் பணம்

பார்ப்பதுமில்லை! ஆனால்.. ஏதோ ஒரு ஈர்ப்பினால் அக்கலையின் மீது தீராக் காதல் கொண்டிருக்கிறான்.

சொன்னாரே எம்.ஆர்.ராதா.. கலை மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அள்ளி அள்ளிப் பருக வேண்டிய அமிர்தமடா என்று! அந்த அமிர்தத்தின் சுவையை ருசித்து விட்டதாலோ என்னவோ.. அதிலிருந்து வெளி வர முயற்சிக்கவேயில்லை அவன்!

வசந்துக்கும் கூட மேடையின் மீது ஈர்ப்பு அதிகம் தான்! சிறு வயதிலிருந்தே! வருடம் முழுதும் பள்ளி செல்வதற்கு மூக்கால் அழுபவன், விழாக்களின் போது மட்டும் ஆர்வம் குறையாது கலந்து கொள்வான்.

ஆடல்,பாடல்,நாடகம் என அனைத்திலும் பங்கு பெறுபவன்.. அநேகக் கைத்தட்டல்களையும் பெற்று விடுவான்! கொஞ்சமும் மேடை பயமின்றி.. கூச்சமின்றி.. இயல்பாய் வலம் வருபவனை ஆச்சரியமாய்ப் பார்க்கும் தோழர்களிடம்.. மேடை தனது முதல் காதலியெனக் கூறிப் பெருமை பீற்றிக் கொள்வான்!

பாட புஸ்தகங்களை மனனம் செய்வதற்கு பாடாய்ப் படுபவன்.. எத்தனை நீள வசனத்தைக் கொடுத்தாலும் அசால்ட்டாய்ப் பேசி கைத் தட்டல் வாங்கி விடுவான்!

வீரபாண்டிய கட்டபொம்மன், ராஜராஜ சோழன் போன்ற வேடங்களுக்கெல்லாம் பள்ளியில் நிறைய பரிசு வாங்கிக் குவித்திருக்கிறான்.

கல்லூரி வந்த பின்பு அது அனைத்தும் குறைந்து.. பாட்டு பாடுவதற்கும், நடனம் ஆடுவதற்கும் மேடை ஏறப் பழகி விட்டான்.

உள்ளே குவிந்து கிடந்த.. மறைந்து கிடந்த ஆசையை.. திறமையை.. ஹரி என்பவன் ஊதி விட்டதின் விளைவு.. இனித் தன் வாழ்வு என்ன மாதிரியான பாதையை நோக்கிச் செல்லப் போகிறதென்ற யோசனையில் இருந்தவனை.. நாடகக்கலையை நோக்கி முன்னேற வைத்தது.

யோசித்துப் பார்த்தால்.. அதைத் தவிர எதிலும் அவனது எண்ணங்கள் ஆர்வமாய் நுழைவது போலத் தோன்றவில்லை. இது மட்டுமே தனக்குத் தெரிந்த.. இயல்பிலேயேத் தனக்கு நன்றாக வருகின்ற திறமை என்றெண்ணிக் கொண்டான்.

அதன் பிறகு சங்கரதாஸ் சுவாமிகளும், பம்மல் சம்பந்த முதலியாரும் அவன் கண்களுக்குக் குருவாகத் தெரிந்தார்கள்.

பழைய காலத்தில் மக்கள் முன்பு நிகழ்த்தப்பட்டத் தெருக்கூத்து ஆட்களிடம் மைக் செட்டெல்லாம் கிடையாது! கடைசி வரிசை வரை அமர்ந்து பார்க்கும் ஆட்களுக்குத் தங்களது முக பாவமும்,தாங்கள் உச்சரிக்கும் வார்த்தைகளும் சரியாகச் சென்றடைய வேண்டுமென்பதற்காகவே.. அதீத ஒப்பனையும், மிகைப்படுத்தப்பட்டப் பாவனைகளுமாய் மேடையில் தோன்றுவார்கள்!

அது போன்ற நாடகங்களை ஆர்வமாய்க் கண்டு மகிழ்ந்ததாலோ என்னவோ.. சமூக நோக்கத்துடன் நக்கலும்,நையாண்டியும் கலந்து நிகழ்த்துப்படும் நாடகங்களும், குடும்பம் சார்ந்த நாடகங்களும் அச்சமயம் பிரபலமாகத் திகழ்ந்தாலும்.. சரித்திரக் கதாபாத்திரங்களைத் தழுவி எடுக்கப்படும் நாடகங்களே அவனை அதிகம் ஈர்த்தது. அது போன்ற நாடகங்களில் பங்கு பெறவே அவன் ஆர்வமும் கொண்டான்.

ஹரியின் குழுவினர் பலரும் ஆளாளுக்கு சொந்தக் காரணங்களுக்காக விலகித் துவங்க.. வசந்தும், அவனைப் போல நாடகம் போடுவதில் ஆர்வம் உள்ள அவன் நண்பர்கள் சிலரும் ஒன்றிணைந்து ‘மறுமலர்ச்சி’ என்ற குழுவை உருவாக்கினார்கள்.

ஹரிக்கு இருந்த பழக்கவழக்கத்தை வைத்து மிகுந்த போராட்டத்திற்குப் பிறகு இன்று அவர்கள் நடத்திய நாடக வாய்ப்புக் கிடைத்தது.

இப்போது அவனது சிந்தனையெல்லாம்.. இந்த வாய்ப்புகளை எப்படி அதிகப்படுத்துவதென்பது தான்! எத்தனை நாட்களுக்குத் தான் கோவில் திருவிழாக்களிலும், பொருட்காட்சியிலும் நாடகம் போடுவது?, முறையான மேடை கிடைக்க என்ன செய்ய வேண்டுமென்கிற யோசனையுடனே சுற்றினான் வசந்த்.

கையில் டீ க்ளாஸுடன் சிந்தனையில் ஆழ்ந்திருந்தவனைக் களைக்கும் வண்ணம் வானொலியில் செய்தி ஒலித்தது.

உலகக்கோப்பைக் கிரிக்கெட் போட்டிக்காகக் இங்கிலாந்து சென்றிருந்த கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி.. மேற்கிந்தியத் தீவுகளுடனானக் கடைசி ஆட்டத்தில் வென்று.. கோப்பையைக் கைப்பற்றி விட்டதாக வானொலி வழி வந்த செய்தி கூறியது.

டீக்கடை அருகே நின்றிருந்த இளைஞர் கூட்டமொன்று துள்ளிக் குதித்தபடி ஆர்ப்பரிக்கத் தொடங்க.. ஹரி மற்றும் வசந்தின் முகங்களிலும் ஏகப்பட்ட மகிழ்ச்சி! இந்தியாவுக்கான முதல் உலகக்கோப்பையல்லவா இது!

தமிழக வீரரான ஸ்ரீகாந்த் அதிகபட்சமாக 38 ரன்-களையும்,

மதன்லாலும்,அமர்நாத்தும் ஆளுக்குத் தலா 3 விக்கெட்டுகளை எடுத்து வெற்றிக்கு வழியமைத்துக் கொடுத்ததில்.. சுலபமாகக் கோப்பையைக் கைப்பற்றியிருந்தது இந்தியா.

செய்தி கொடுத்த களிப்பில் வீடு திரும்பிய வசந்த்.. வாசலில் செருப்பைக் கழட்டும் போதே.. மாடியறையிலிருந்து வந்த பாட்டுச் சத்தம் காதைக் கிழித்தது.

“மோகனங்கள் பாடி வந்து மோகவலை விரித்தாயே!

சேலைகளைத் திருடி அன்று செய்த லீலை பல கோடி!

பொன்னான காவியங்கள் போற்றிப் பாடும் காதல் மன்னா..

வான் போலே.. வண்ணம் கொண்டு..

வந்தாய் கோபாலனே! பூ முத்தம் தந்தவனே..!”

ரெட்டை ஜடையும்,ப்ரௌன் நிறச் சுரிதாருமாய்.. இடையில் துப்பட்டாவைக் கட்டிக் கொண்டு தன் நீண்ட நயனங்கள் முழுதிலும் நாணத்தையும்,குறும்பையும் தேக்கிக் கொண்டு.. அழகாய் நடனமாடிக் கொண்டிருந்தாள் சாருமதி.

ஜன்னல் வழியே அவள் ஆடுவதைக் கண்டபடி.. மெல்லக் கதவைத் திறந்து கொண்டு அவள் அறைக்குள் நுழைந்தான் வசந்த்.

வேறுபுறம் திரும்பி ஆடிக் கொண்டிருந்தவள் பின்னால் நிற்பவனைக் கண்டு கொள்ளாது போக, டொக்-என டேப்-ரெக்கார்டை அணைத்த வசந்த், தன் இருகைகளையும் சேர்த்துப் பலமாகித் தட்டி... “பியூட்டிஃபுல்!! ஃபெண்டாஸ்டிக்!!! வண்டர்ஃபுல்!” என்று புகழ.. திடீரென அவனைக் கண்டதில் திடுக்கிட்டுப் பின் நிமிர்ந்து அவனை முறைத்தாள் சாரு.

“நீங்க ஏன் உள்ள வந்தீங்க?”

அவள் கேள்விக்குப் பதிலளிக்காமல் அருகிலிருந்தக் கேசட் கவரை நோக்கினான் அவன்.

“சலங்கை ஒலி! ஹ்ம்ம்! கேசட்டைக் காணோமேன்னு நான் அங்க தேடிட்டிருந்தா.. நீ எடுத்து வைச்சிருக்கியா?, புதுப் படக் கேசட் எல்லாம் என் ரூம்ல இருந்து காணாம போற மாயம் இது தானா?” – என்றவன் டேப் ரெக்கார்டரிலிருந்த ஃபார்வர்ட் பட்டனை அழுத்தினான்.

மனதை மயக்கும் எஸ்.ஜானகியின் குரல் மெல்ல ஒலிக்கத் தொடங்கியது.

“மௌனமான நேரம்.. இள மனதில் என்ன பாரம்..”

“ஏன் பாட்டை மாத்துனீங்க?, வான் போலே சாங் போடுங்க! நான் ப்ராக்டிஸ் பண்ணனும்!” – கீச்சுக்குரலுடன் சாருமதி.

“எதுக்கு?”

“நாளைக்கு நான் காலேஜ்ல பெர்ஃபார்ம் பண்றேன்!”

“அடேங்கப்பா! உனக்குத் தான் மேடை-ன்னாலே அலர்ஜியாச்சே!”

“ம்ஹ்ம்! உங்களைப் பார்த்துப் பார்த்து.. எனக்கும் பயம் போயிடுச்சு” – பெருமையாய்க் கூறியவளைக் கண்டுப் புருவம் தூக்கி உதட்டை வளைத்தவன்..

“அப்டின்னா இந்தக் கேசட் என்னோடது தான?” என்று வினவினான்.

“இப்போ அதுவா பிரச்சனை?”

“பின்ன! நான் இல்லாதப்போ என் ரூம்க்குள்ள வந்து என் கேசட்டை எடுத்திருக்க நீ”

“ப்ச், அதனால என்ன இப்போ?” – எரிச்சலுடன் வினவியவளின் இடையிலிருந்தத் துப்பட்டாவைப் பற்றி அருகிலிழுத்து..

“நான் இருக்கும் போது வரலாம்ல?” – என்று கொஞ்ச.. அவன் கையைத் தட்டி விட்டுத் தூரப் போய் நின்றாள் அவள்.

“ஒழுங்கா வெளியே போங்க”

“முடியாதுடி! நீ மட்டும் என் ரூம்க்கு வரலாம்! நான் உன் ரூம்க்கு வரக் கூடாதா?, இது என்ன நியாயம்?”

“நான்.. நான்... கேசட் எடுக்கத் தான் வந்தேன்”

“நான் உன்னைப் பார்க்க வந்தேன்!,”

“பார்க்க மட்டுமா செய்றீங்க?”

“ஏய்ய்.. அது என் தப்பு இல்ல! உன்னை யாரு பூ முத்தம் தந்தவனேன்னு அழகா வெட்கப்படச் சொன்னது?, நான் முத்தம் கொடுக்காமலே இவ்ளோ வெட்கப்பட்ற நீ! கொடுத்தா.. என்னல்லாம் ரியாக்ட் பண்ணுவ-ன்னு.. இந்த ரூம்க்குள்ள வந்த நிமிஷத்துல இருந்து யோசிச்சிட்டு இருக்கேன்”

“ச்சிஇஇஇஇ”

“என்ன ச்சி?, உனக்கு இப்போ 18 வயசு முடிஞ்சிடுச்சு சாரு! கல்யாண வயசை தொட்டுட்டன்னு கவர்மெண்ட்டே சொல்லுது”

“அதனால?”

“அதனால.. இனி முத்தம்-ன்ற வார்த்தையையெல்லாம் நீ இயல்பா.. ஏத்துக்கப் பழகிக்கனும்”

“ஓஹோ!” என்றவள் “என் மாமாவைக் கூப்பிட்றேன்! அவர் வந்து நான் இதையெல்லாம் ஏத்துக்கலாமா, வேணாமான்னு தீர்ப்பு சொல்லட்டும்” என்று விட்டு.. “மாமாஆஆஆஆ” என்று கத்த..

“ஏய்ய்ய் ஏய்ய்ய் வாயை மூடு டி!” என்று பதறிப் போன வசந்த்..

“மதி.. என்னடா அம்மா....?” என்ற தந்தையின் குரலைக் கேட்டு.. “என் கிட்ட மாட்டாமலா போவ?, உன்னை அப்புறம் கவனிச்சுக்கிறேன் டி” என்று விட்டு அடித்துப் பிடித்துக் கொண்டு மாடியை நோக்கி ஓடினான்.

சிரிப்புடன் இடையிலிருந்தத் துப்பட்டாவைக் கழட்டிய சாருமதியின் கண்களில்.. உள் மனதின் பிரதிபலிப்பு அப்பட்டமாய்த் தெரிந்தது!

அந்த மழைநாளுக்குப் பிறகு அவளைக் காணும் போதெல்லாம் இப்படித் தான் வம்பு செய்கிறான்! அடம் பிடித்து அன்று அவளை அழைத்துச் சென்று ‘நீயும் என்னைக் காதலிக்கனும், பதில் சொல்லு’ என்றவன் அதன் பிறகு.. அவளிடம் அதைப் பற்றிப் பேசவில்லை!

வெளிப்படையாக மனதில் இருப்பதைப் பேசிக் கொள்ளாவிட்டாலும் பார்வைகளுக்கும், வார்த்தையாடல்களுக்கும் பஞ்சமேயில்லை!

அவளுக்குப் பிடித்திருக்கிறது! அவன் பார்வை தரும் இதம், அவன் வார்த்தைகளால் உள்ளத்தில் ஊறும் கிளர்ச்சி என அத்தனையையும் பிடித்திருக்கிறது! ஆனால் அதற்கு மேல் யோசிக்கத் தோன்றவில்லை! துணிவில்லை! ஆரம்பித்து வைத்தவனே.. முடித்தும் வைப்பான் என்கிற நம்பிக்கை! ஆசை மேகங்களிடையே ஆடிக் களித்தபடி.. ஒவ்வொரு நாளையும் அழகாய்க் கடத்திக் கொண்டிருந்தாள்.

மந்தகாசப் புன்னகையும்,சிந்தனையுமாயிருந்தவளை கீழே ஒலித்த மாமனின் குரல்.. வாய் விட்டுச் சிரிக்க வைத்தது.

“இந்நேரத்துக்கு மொட்டை மாடில என்னடா வேலை உனக்கு?, வீட்டுக்குள்ளயே சிகரெட் பிடிக்கிறியா டா ப்ளடி ராஸ்கல்?” – முழுத் தொண்டையுடன் சாருகேசன்.

“பெத்த மகனை சந்தேகப்படுறவங்களுக்கெல்லாம் நரகம் தான்

கிடைக்குமாம்” – எரிச்சலுடன் வசந்த்.

“உன்னால எனக்குப் பூமியே நரகமாத் தான் டா இருக்கு!”

“அப்டின்னா சீக்கிரமா சொர்க்கத்துக்குப் போங்கப்பா”

“உயிர் கொடுத்தத் தகப்பனை செத்துப் போகச் சொல்றியேடா பாவி!”

“ஷ்ஷ்ஷ்... மொட்டை மாடியில சொர்க்கமா காத்து வருது! அங்க போங்கன்னு சொன்னேன்ப்பா”

“எதுக்கு?, நீ பிடிச்ச சிகரெட் வாடையை சுவாசிச்சு எனக்குப் புற்று நோய் வர்றதுக்கா?”

“ஆண்டவா! எனக்கு சிகரெட் பிடிக்குற பழக்கமே கிடையாதுப்பா. நம்புங்க”

“பார்த்தேனே! அன்னிக்கு ஃபுட் பால் க்ரௌண்ட்ல! தில்லு முல்லு படத்துல வர்ற ரஜினிகாந்த் மாதிரி ஸ்டைல்-ஆ நீ சிகரெட்டை வாய்ல போட்ட விதத்தை”

“ஆனா.. நீங்க அந்தப் படத்துல வர்ற தேங்காய் சீனிவாசனை விடப் பெரிய தத்தி-ப்பா”

“எல்லாம் என் நேரம்!, நெத்தில என்ன டா பட்டை?, நாம-லாம் நந்த கோபாலனைக் கும்பிடுற ஆளுங்க! நாமம் தான் போடனும்! புரிஞ்சதா?”

-என்றவரைக் கண்டுத் தலையில் அடித்துக் கொண்டவன்.. “ஹரியும்,சிவனும் ஒன்னு! அறியாதவன் வாய்ல மண்ணு” எனக் கூறி விட்டு நகர்ந்து விட.. வழக்கம் போல் மகனின் வார்த்தைகளினால் பல்லைக் கடித்தார் கேசன்.

அன்று காலை ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வசந்தை.. அவன் வீட்டு டெலிஃபோன் மணி அடித்து எழுப்பியது.

“ஹலோ..”

“வசந்த இன்னும் எழுந்திருக்கலயா?” – மென்மையான குரலுடன் ஹரி.

“அதான் நீ எழுப்பிட்டியே! எழுந்தாச்சு! சொல்லு டா”

“இல்ல, இன்னிக்கு வீட்டுக்கு வா-ன்னு கூப்பிட்டியே!, இப்ப வரட்டுமான்னு கேட்கத் தான் ஃபோன் பண்ணினேன்”

“ஹேய்... ஆமாம்! மறந்தே போய்ட்டேன்! ரெண்டு நிமிஷம் டா! நான் வந்து உன்னைப் பிக்-அப் பண்ணிக்கிறேன்”

“நாலு தெரு தள்ளியிருக்கிற வீட்டுக்குப் பிக்-அப் வேறயா?, நானே வந்துட்றேன்! நீ அட்ரஸ் மட்டும் சொல்லு”

“தேர்ட் மெய்ன், ஃபர்ஸ்ட் ஸ்ட்ரீட்ல.. ஆறாவது வீடு டா!, சாருசந்திரா இல்லம்ன்னு பேர் போட்டிருக்கும். பார்த்து வா”

“ஹ்ம்ம் ஓகே”

“டேய் ஹரி..”

“ம்ம், சொல்லு”

“ஃபோன்-ல உன் வாய்ஸ் ரொம்ப ஸ்வீட்-ஆ இருக்கு டா”

“ஹாஹா” – என்ற ஹரி ஃபோன்-ஐக் கட் செய்து விட்டான்!

இப்போது கண்டிப்பாக வெட்கப்பட்டுச் சிரித்துக் கொண்டிருப்பான். அதை அருகிலிருந்துப் பார்த்திருந்தால்.. இவனும் கேலி செய்திருப்பான்! ஹரியை நினைத்தபடிக் கடகடவெனக் கிளம்பினான் வசந்த்.

“அன்னம்மா.....” – தன் அறையிலிருந்துக் குரல் கொடுத்தபடி வெளியே வந்த வசந்த்.. தந்தையின் அறையை எட்டிப் பார்த்து..

“மிஸ்டர்.கேசன் வீட்ல இல்ல தான?” என்று அன்னம்மாவிடம் விசாரித்தான்.

“இல்ல தம்பி” என்று அன்னம்மா கூறியதும் நெஞ்சில் கை வைத்துப் பெருமூச்சொன்றை வெளியிட்டவன்..

“என் ஃப்ரெண்ட் ஒருத்தன் வர்றான்னு சொல்லியிருந்தேனே!, நான் சொன்ன எல்லாத்தையும் சமைச்சு வைச்சியா?” – என்று விசாரிக்க..

“எல்லாம் ரெடி தம்பி”-என அன்னம்மா பதில் கூறியதும்.. வாசலில் அரவம் கேட்டு வெளியே சென்றான்.

காக்கி நிற பெல்ஸும்,வெள்ளைச் சட்டையுமாக நின்ற ஹரியைக் கண்டு “வா,வா டா ஹரி” என்று வரவேற்றவன் அவனை உள்ளே அழைத்துச் சென்றான்.

“சாரி டா ஹரி! உன் கூட இத்தனை வருஷமாப் பழகியும் ஒரு தடவை கூட உன்னை நான் வீட்டுக்குக் கூப்பிட்டதில்ல!”

“ஃபார்மாலிட்டி பார்க்குற அளவுக்கா நாம பழகுறோம்?”

“இல்ல தான்! ஆனா.. எனக்கு அந்த உறுத்தல் எப்பவும் உண்டு டா! எல்லாம் எங்கப்பாவால தான்! அவருக்கு என்னையும் பிடிக்காது, என்

கூடப் பழகுறவங்களையும் பிடிக்காது! அதனால தான்.. அவர் வெளியூர் போயிருக்கிற நேரமாப் பார்த்து உன்னை வரவழைச்சிட்டேன்”

“ப்ச், இதெல்லாம் தேவையா வசந்த்?, நான் உன் கிட்ட எதுவும் எதிர்பார்க்கல டா”

“ம்ஹ்ம்! இது என் திருப்திக்காக! நீ அன்னம்மாவோட கைப்பக்குவத்தை டேஸ்ட் பண்ணியே ஆகனும்! அதுக்காகத் தான் உன்னை வரச் சொன்னேன்” என்றவன் “அன்னம்மா” என்று குரல் கொடுக்க..

அவன் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து நின்ற அன்னம்மாவின் தோளைப் பற்றிக் கொண்டு “இது தான் அன்னம்மா! என் இன்னொரு அம்மா” என்றவன்.. அன்னத்திடம் “இது ஹரி! என்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட்” என்று அறிமுகம் செய்தான்.

அவன் அறிமுகப்படுத்தியதும் படாரென எழுந்து சடாரெனக் காலில் விழுந்து வணங்கியவனைக் கண்டு அன்னம்மா திருதிருவென விழிக்க..

“டேய்.டேய்... எழுந்திரு டா! அன்னம்மா ஷாக் ஆயிடுச்சு பாரு” என்று சிரித்தவன்.. “என்ன அன்னம்மா, உனக்கு இப்டி ஒரு ஃப்ரெண்டான்னு தான ஆச்சரியப்பட்ற?,” என்று கலாய்க்க.. “ஹிஹிஹி” என அசடு வழிந்த அன்னமும் “நல்லாயிருப்பா” எனக் கூறி எழுப்ப... பிறகு இருவரும் பேசியபடியே சாப்பாட்டை முடித்தனர்.

“உன் அப்பா எப்போ வருவார் டா வசந்த்?” – ஹரி

“நைட் தான்! வேலை விஷயமா செங்கல்பட்டுப் போயிருக்கார் டா”

“ஓ!! வீட்ல வேற யாரும் இல்லையா?,” என்றவன் சிரித்து “உன் மனம் கவர்ந்த மதியைக் காணோம்” என்று வினவ..

“ஷ்ஷ்ஷ்.. அன்னம்மா” என்று எச்சரித்தவன் மாடியை எட்டிப் பார்த்து விட்டு “மேடம்.. பாதி நேரம் ரூம்க்குள்ள படுத்து விட்டத்தை பார்த்துட்டிருப்பாங்க” என்றான்.

“எனக்கு அறிமுகப்படுத்தி வைக்க மாட்டியா?, நான் இன்னும் அவளைப் பார்த்ததேயில்ல”

“அவளே வெளியே வருவா! வெய்ட் பண்ணுவோம்! நான் இப்பப் போய்க் கூப்பிட்டா.. உன் ஃப்ரெண்ட்-ஆ, நான் வர மாட்டேன் ஆ,ஊன்னு குதிப்பா” – முகத்தைச் சுழித்துக் கூறியவனைக் கண்டுச் சிரித்து..

“வீட்ல யார்க்கிட்டயும் உனக்கு நல்ல பேரே இல்லையாடா?”

“டேய்.. நல்லவனைத் தான் டா இந்த உலகம் ஒதுக்கி வைக்கும்!” என்ற வசந்த்.. “மொட்டை மாடிக்குப் போகலாம் வா” என்றழைத்துச் சென்றான்.

சாருமதியின் கைங்கரியத்தால் செடிகளும்,மரங்களுமாய்க் குளுகுளுவென இருந்த மொட்டை மாடியை ஹரி ரசித்துப் பார்க்க.. “நான் போய் சாப்பிட ஏதாவது கொண்டு வரேன்” என்று வசந்த் கீழே சென்றான்.

தூரத்தில் தெரிந்த வீடுகளைக் கண்டபடி மெல்ல நடந்த ஹரி.. அருகேயிருந்த கொடிக் கம்பத்தில் காய்ந்து கொண்டிருந்த சாருமதியின் ஆடையொன்றின் அழகில் ஈர்க்கப்பட்டு.. அருகே சென்று நின்று.. அதைத் தொட்டுப் பார்த்தான்.

முன்னும்,பின்னும் அதை அவன் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்த வேளை..

“என்ன பண்றீங்க?????” – என்ற சாருமதியின் குரல் காட்டுக்கத்தலாய்க் காதில் விழ.. திடுக்கிட்டுத் திரும்பியவன்..

கோபமும்,அருவெறுப்புமாய் முகத்தைச் சுழித்துக் கொண்டு நின்றவளைக் கண்டுத் திகைத்து..

“வ...வந்து...” என்று திக்கத் தொடங்க.. அதற்குள்.. பொறுமையற்றுப் போன சாருமதி..

“யார் நீ?, எங்க வீட்டு மொட்டை மாடிக்கு எப்படி வந்த?, என் டிரெஸ்ஸைக் கையில் பிடிச்சுக்கிட்டு என்ன பண்ற?,” என்று மீண்டும் பொரியத் தொடங்கினாள்.

பொதுவாக அனைவரிடமும் ஒரு ஒதுக்கத்துடனே பழகும் ஹரி.. பெண்களைக் கண்டால் காத தூரம் ஓடி விடுவான். அவனைப் பெற்றெடுத்த அன்னையே அவனை அருவெறுப்புடன் நோக்குகையில்.. மற்றப் பெண்களைக் குறை சொல்லி என்ன பயன்? அதனாலேயோ என்னவோ.. எப்போதும் பெண்களிருக்கும் பக்கம் கூடச் செல்ல மாட்டான். வசந்துடன் பழகிய பின்பு ஓரளவு இதை இயல்பாக எதிர் கொள்ளத் தொடங்கியிருந்தவன்.. இன்று சாருமதியின் பார்வையில்.. முழுதாய் தைரியம் இழந்து.. வியர்த்து,விறுவிறுத்து முகம் வெளுக்க நின்றிருந்தான்.

“யார் நீ-ன்னு கேட்குறேன்ல?” – என்று அவள் மீண்டும் கத்திய சமயம்.. “ என்னாச்சு?” என்று கேட்டபடிக் கையில் தட்டுடன் வசந்த் வர..

அவனைக் கண்டதும் “வசந்த்.....” என்றபடி ஓடிச் சென்று அவன் பின்னே நின்று கொண்டான் ஹரி.

அவன் ஓடியதையும், வசந்தின் பின்பு நின்று கொண்டு மிரட்சியுடன் தன்னைப் பார்க்கும் விதத்தையும்.. திகைப்பும்,கோபமுமாய் நோக்கிய சாருமதியிடம்..

“ஏய்ய்... என்ன??” என்று வினவினான் வசந்த்.

“யார் இவன்?” - சாருமதி

“அவன்,இவன்னேனா பல்லை உடைச்சிடுவேன்!, உன்னை விட வயசு மூத்தவன் அவன்”

“வயசு மூத்தவன்னா, என் டிரெஸ்ஸைத் தொட்டுப் பார்ப்பானா?”

“என்ன உளர்ற?”

“ஃப்ரெண்டாம் ஃப்ரெண்டு! ச்சி! என்னைக்குமில்லாம இது என்ன பழக்கம்?,கண்டவனையெல்லாம் வீட்டுக்குள்ள விட்டுக்கிட்டு” – அருவெறுப்புடன் முகம் சுழித்தவளைக் கண்டுக் கோபமுற்ற வசந்த்..

“ஏய்.. என்னடி ரொம்பப் பேசுற?, யோசிக்காம.. வாய்லயே போட்ருவேன்! என்னாச்சுன்னு சொல்லு முதல்ல”

“அதை உங்க அருமை ஃப்ரெண்டு கிட்டயே கேளுங்க” – என்றவளுக்கு.. இன்னமும் வசந்தின் பின்னே அவன் தோளைப் பற்றியபடிப் பெண் பிள்ளையைப் போல் நின்றவனைக் கண்டு ஆத்திரம் பெருகியது.

“ஹரி.. நீ என் முன்னாடி வா” – வசந்த்

“இல்ல டா”

“வா-ன்றேன்ல?”

முன்னே வந்துத் தலை குனிந்து நின்றவனிடம் என்னவென்று விசாரித்தான்.

“அந்த டிரெஸ் அழகாயிருக்கேன்னு நான் சும்மா தொட்டு தான் டா பார்த்தேன்” – தயங்கித் தடுமாறிப் பதில் கூறினான் ஹரி.

“பார்த்தீங்களா?, உங்க முன்னாடியே எப்படி சொல்றான்னு! இவனெல்லாம் ஒரு ஃப்ரெண்டு?”

“நீ இப்போ வாயை மூடலன்னா.. நிச்சயம் உன் கன்னத்தைப் பேத்துறுவேன்” என்ற வசந்த் தொடர்ந்து “நீ ஏன் டா அவ டிரெஸ்ஸைத்

தொட்ட?” என்று நண்பனிடம் எரிச்சலுடன் வினவினான்.

“இல்லடா... இந்த ஆலிவ் க்ரீன்ல ரொம்ப நாளா டிரெஸ் தேடிட்டு இருக்கேன்! ஆனா கிடைக்கல! இந்தப் பேட்டர்ன்ல யெல்லோ கலர் தான் இருக்கு என் கிட்ட! இது நான் ரொம்ப ஆசைப்பட்டுத் தேடின கலர்..”

தயக்கத்தைத் தாண்டிய ஆதங்கத்துடன்.. அந்த டிரெஸ்ஸைப் பார்த்தபடி சிறு பிள்ளைத்தனமாய்க் கூறியவனைக் கேட்டு வசந்துக்கு சிரிப்பு வந்ததென்றால்.. சாருமதியோ.. ‘என்னக் கருமாந்திரம் இது’ ரீதியில் முகத்தை வைத்துக் கொண்டு வாய் பிளந்து அவனை நோக்கினாள்.

அவள் முகத்தில் வந்து போன மாற்றங்களைக் கண்ட வசந்துக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

“சரி, சரி விடு! அவ டிரெஸ்ஸைத் தொட்டதுக்கு ஒரு சாரி கேட்டுடு. இல்ல, இன்னும் சாமியாடுவா”

வசந்த் கூறியதும் தயக்கத்துடன் நிமிர்ந்து சாருமதியைக் கண்ட ஹரி “சாரி” என்றான்.

இருவரது செய்கையும்,பேச்சும் சாருமதியின் சிற்றறிவுக்குப் புரியாமல் போக.. இன்னமும் கோணிய முகத்துடனே நின்று கொண்டிருந்தவளை “சாரு...” என்று அதட்டினான் வசந்த்.

முறைப்புடன் அவனை நோக்கியவள் பல்லைக் கடித்தபடி “என்ன நடக்குது இங்க?” என்று கேட்க..

“இவன் என்னோட ஃப்ரெண்ட் ஹரிஹரன் அண்ட் ஹீ இஸ் அ ட்ரான்ஸ்ஜெண்டர். அதனால தான் உன் டிரெஸ்ஸை ஆசையாத் தொட்டுப் பார்த்துட்டான். இப்போ புரிஞ்சதா?” -விரிவாய்த் தெளிவு படுத்தினான் வசந்த்.

“ஹீ இஸ் அ ட்ரான்ஸ்ஜெண்டர் “ – என்ற வாக்கியத்திலேயே ஆடிப் போன சாருமதி.. பார்க்கக்கூடாத விசயத்தைப் பார்த்து விட்டது போல் முகத்தை ஏகத்துக்கும் அஷ்டகோணலாய் வைத்துக் கொண்டு மேலிருந்துக் கீழ் வரை அவனை அருவெறுப்புடன் நோக்கினாள்.

சிக்னல்களிலும்,ரயில்களிலும் மட்டுமே பார்த்திருந்த இவ்வகை மனிதர்களை இன்று தான் முதன்முறையாக இத்தனை அருகில் பார்க்கிறாள்.

ஆணைப் போல் பாண்ட்-சட்டை அணிந்திருந்தாலும்... அவன் முகத்தில்

பெண்ணின் சாயல்! புருவம் திருத்தியிருந்தான்! அடிக்கடி ஃபேஸியல் செய்வான் போலும்! முடிகளிலின்றி வெயிலில் பளபளத்தது முகம்! பெண் வேடமிட்டானானால் நிச்சயம் சாமுத்ரிகா லட்சணம் கொண்டவனாகத் தெரிவான்.

இருக்கட்டும்! இவனோடு பழக வேண்டியக் கட்டாயம் என்ன இந்த வசந்துக்கு! ஹரியிடம் தோன்றிய அருவெறுப்புக் கடைசியில் வசந்தின் மீது கோபமாக முடியும் சமயம்... அவள் முகத்தைக் கவனித்து விட்ட வசந்த், அவள் மேலும் ஏதும் கூறும் முன்.. “ஹரி.. நாம கீழ போகலாம் டா” எனக் கூறி அவனை இழுத்துச் சென்று விட்டான்.

கீழ சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் புறப்பட்டு விட..

“ரொம்ப சாரி டா ஹரி! உன்னைப் பத்தி நான் அவக்கிட்ட இதுவரை பேசுனதேயில்ல! அதனால தான் பார்த்ததும் டென்ஷன் ஆயிட்டா! நீ ஹர்ட் ஆயிடாத!”

“ச்ச,ச்ச! இதெல்லாம் எனக்குப் பழக்கமானது தான் வசந்த்! உன் கூடப் பழகுனப்புறம் ஓரளவு தைரியமா இதை ஃபேஸ் பண்ண ஆரம்பிச்சுட்டேன்! ஆனா.. என் தைரியத்தையெல்லாம் தூக்கி சாப்பிட்ற அளவுக்கு சௌண்ட் விட்டுட்டா உன் சாரு”

“என் சாரு??, அடப் போடா! ஆனாலும்.. அவளுக்கு இருக்கு இன்னிக்கு. வீட்டுக்கு வந்தவங்களை எப்படி ட்ரீட் பண்ணனும்ன்னு கூடவா தெரியாது?, எல்லாம்.. எங்கப்பனோட வளர்ப்பு”

“ஹாஹாஹா! என்னால.. நீங்க ரெண்டு பேரும் சண்டை போட்டுக்க வேண்டாம் டா”

“இல்லாட்டியும் நாங்க ரெண்டு பேரும் எந்நேரமும் கொஞ்சிட்டா சுத்துறோம்?”

“பாரு,பாரு, மனசுல இருக்குற ஆசையெல்லாம் ஒவ்வொன்னா வெளிய வருது”

“ப்ச், போடா ஹரி! சாரி டா!”

“என் மேலயும் தப்பு இருக்கு டா வசந்த்! ஒரு பொண்ணோட டிரெஸ்ஸைத் தொட்டு பார்த்தது தப்பு தான?”

“அதுசரி!, இல்லாட்டியும் அவ ஒரு ஹைப்பர் கேஸ் தான் டா”

“சரி, நான் கிளம்பட்டுமா?” – என்றவனை வழியனுப்ப வசந்த் வாசலுக்குச் சென்ற போது.. சரியாக உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்

கேசன்.

கண்ணாடியைச் சரி செய்தபடி ஹரியை உற்று நோக்கியவரைக் கண்டுப் பதறிப் போனவன் “ஃப்ரெண்ட்ப்பா, என்னைப் பார்க்க வந்தான்! இப்போக் கிளம்பிட்டான்” என்று அவசரமாகக் கூறி விட்டு ஹரியை இழுத்துக் கொண்டு ஓடி விட்டான்.

ஹரியிடம் ஆயிரம் சாரிக்களைச் சொல்லி விட்டு அவன் மீண்டும் வீடு திரும்புகையில் ஹாலிலேயேக் காத்திருந்தார் கேசன் முழுக் கோபத்துடன்! அவர் அருகிலேயே சாருமதி, அவருக்குச் சற்றும் குறையாத கோபத்துடன்!

இருவரையும் கண்டு கொள்ளாமல் அறைக்குச் செல்லப் பார்த்தவனை “நில்லு டா” என்று நிறுத்தினார் கேசன். இதை எதிர்பார்த்திருந்ததால்.. பின் கழுத்தைச் சொரிந்தபடி கெத்து குறையாமல் நின்றான் வசந்த்.

“யாரு டா அவன்?” – கேசன்

“சொன்னேனே ஃப்ரெண்ட்ன்னு”

“ஃப்ரெண்டாவா? ஃப்ரெண்டியா?”

“அவன் ரெண்டு கேட்டகரிலயும் வர மாட்டான்!”

“அப்படிப்பட்டவனோட உனக்கு என்னப் பழக்கம் வேண்டிக் கிடக்கு?”

“ஆணா,பொண்ணா.. பணக்காரனா,ஏழையான்றதுக்கு முன்னாடி அவன் ஒரு மனுஷன்ப்பா! ஒரு மனுஷன்,இன்னொரு மனுஷனோடப் பழகுறது தப்பா?”

“வீணா தர்க்கம் பண்ணுற நீ”

“இல்ல! நீங்க கேட்டக் கேள்விக்குப் பதில் சொன்னேன்!”

“இது நாள் வரைப் படிப்பு வராம,பொறுப்பில்லாம வீணாப் பொழுதைக் கழிச்சிட்டிருந்த! நானும் இப்போ மாறுவ, அப்போ மாறுவன்னு காத்திட்டிருந்தா.. நீ நாளுக்கு நாள்.. உன் செய்கையாலும், சகவாசத்தாலும் இன்னும் சீரழிஞ்சு போயிட்டிருக்க?”

“அப்டி என்ன இப்போ சீரழிஞ்சு போய்ட்டேன்?”

“கண்டவனோடெல்லாம் சகவாசம் வைச்சிருக்கியே டா”

“திரும்பத் திரும்ப அதையே சொல்லாதீங்கப்பா! கோபம் வருது எனக்கு! நாலு வருஷத்துக்கு முன்னாடி.. உயிரா ஒரு நாய் வளர்த்தீங்களே! யாராவது கேள்வி கேட்டோமா?, நாயோடெல்லாம் என்ன சகவாசம்

உங்களுக்குன்னு?, அபத்தமா இருக்குல்ல என் கேள்வி?, அது போலத் தான்ப்பா இதுவும்! ரொம்ப சாதாரண விசயம்! ஏன் இவ்ளோ அலட்டிக்கிறீங்கன்னு தெரியல எனக்கு”

“சாதாரண விஷயமா?, எது சாதாரண விஷயம்?, அந்த சங்கரன் பய, நீ இந்தக் கருமாந்திரத்தோட பழகுற விசயத்தை என் தொழில் வட்டத்துல இருக்குற அத்தனை பேர்க்கிட்டயும் சொல்லி வைச்சிருக்கான்! உன் மகனுக்குப் பொண்ணுங்க கிடைக்கலன்னா, இப்டி ஒருத்தனோட சுத்திட்டிருக்கான்னு என் கிட்டயே அசிங்கமா கேட்குறானுங்க”

“எந்த நாய் அப்படிக் கேட்டது?”

“அது உனக்குத் தேவையா? இன்னிக்கு ஒருத்தன்,ரெண்டு பேர் பேசுற விசயத்தை நாளைக்கு ஊரே பேசும்!, வாட்டசாட்டமா புள்ளைய பெத்து வைச்சிருக்கேன், போயும்,போயும் ஒரு ஒம்போதோட உன்னை இணைச்சு வைச்சுப் பேசுறதை நான் எப்படி டா பொறுத்துப்பேன்?”

-கவலையும் ஆதங்கமுமாய்க் கேட்டவரைக் கண்டு கொதித்தெழுந்த வசந்த் வீடே அதிரும்படிக் கத்தினான்.

“அப்பாஆஆஆஆ”

“உண்மை அது தான டா?, சமூகம் இவனை மாதிரி ஆளுங்களையெல்லாம் பாலியல் இச்சையைத் தீர்க்குறவங்களைத் தான சித்தரிச்சு வைச்சிருக்கு!, அவன் நல்லவனாவே இருந்துட்டுப் போகட்டும்! அவன் சகவாசம் உனக்கு வேணாம்”

“என்னால அப்டி விட முடியாதுப்பா! அந்த மாதிரியான இமேஜை அவங்க மேல புகுத்துன பாவம் என் தலை மேலயும் இருக்குப்பா! நானும் நீங்க சொன்ன சமூகத்துல ஒரு ஆள் தான?, நாம உருவாக்குன கெட்ட பேரை நாம நினைச்சா தவிர யாராலயும் அழிக்க முடியாது! நான் அவனை ஒரு சக மனுஷனா ட்ரீட் பண்ண விரும்புறேன்ப்பா! நாளைக்கு எனக்குப் பிறக்குறக் குழந்தை இந்த மாதிரியான குறையோட வளர்ந்தா.. ஒதுக்கிடுவேனா நான்?, இல்ல விஷம் வைச்சுக் கொன்னுடுவேனா?, மாட்டேன் தான?, என் எண்ணத்துக்கு ஆதரவு கொடுங்கன்னு நான் உங்களைக் கேட்கல!ஆனா.. எனக்கு எதிரா நிக்காதீங்க! பாவம்ப்பா அவன்”

“உன் எண்ணம் நூறு சதவீதம் சுத்தமானது டா வசந்த்! இந்த வசனத்தையெல்லாம் சினிமால யாராவது பேசியிருந்தா.. நிச்சயம் கைத் தட்டி பாராட்டியிருப்பேன்! ஆனா.. என் வீட்ல.. என் மகன் இப்படிப் பேசுறதை என்னால ரசிக்க முடியல டா”

“எத்தனை சமூக சீர் திருத்தவாதிங்க வந்தாலும் உங்களை மாதிரி ஸ்டீரியோ டைப் ஆட்களை மாத்தவே முடியாதுப்பா”

“நான் ஒரு அப்பனா யோசிக்கிறேன் டா! உன்னைப் பத்தி என் முன்னாடித் தப்பா பேசுனா எனக்குக் கோபம் வராதா?”

“என் மகன் அப்படிப்பட்டவன் கிடையாதுன்னு நெஞ்சை நிமிர்த்தி சொல்லுங்க!”

“நான் நெஞ்சை நிமிர்த்தி என் மகன்னு சொல்லிக்கிற அளவுக்கு நீ என்னடா பெருசா பண்ணியிருக்க?, பெரிய பதவில இருக்கியா?, இல்ல காசு சம்பாதிக்கிறியா?”

“இது ரெண்டும் இருந்தாத் தான் உங்க மகன்னு ஒத்துக்குவீங்களா?, அப்படி ஒத்துக்கிற அப்பா எனக்குத் தேவையில்ல” – இறுகிப் போன குரலுடன் உணர்ச்சியற்றுக் கூறியவனைக் கண்டு சிலிர்த்துக் கொண்ட சாருகேசனும்..

“இப்டி ஒரு மகன் எனக்கும் தேவையில்ல டா! ஒரு விசயத்துல கூட என் பேச்சைக் கேட்டதுமில்ல! மதிச்சதுமில்ல!, நீயெல்லாம் ஒரு மகனா டா?”

“மதிக்கிற மாதிரி ஒரு நல்ல அப்பாவா ஒரு நாளாவது நீங்க நடந்துருக்கீங்களா?, பெத்தது மட்டும் என்னை! ஆனா.. அன்பைக் கொட்டி வளர்த்ததெல்லாம் இவளை”

“அவளை ஏன் டா வம்புக்கு இழுக்குற?, உன்னை மாதிரி கிடையாது அவ! என் சொல் பேச்சுக் கேட்டு பொறுப்போடு வளர்ற பொண்ணு அவ! உனக்கு வராத படிப்பையும்,நீ பார்க்காத வேலையையும் அவ பார்க்கப் போறா!”

“ரொம்ப சந்தோஷம்! அப்புறம் என்ன?, எனக்கு மகன் கிடையாது! ஒரே ஒரு வளர்ப்பு மக தான்னு இவளைக் கைக் காட்டிக்கோங்க! என்னை விடுங்க”

“அப்படித் தான் டா காட்டப் போறேன்! என்னைப் பெருமைபடுத்துற மாதிரி அவ வளர்ந்து நிற்பா! என் ஆசையை நிறைவேத்துனதுக்காகவே... அவளுக்காக.. ஊரெல்லாம் தேடி ஒரு ராஜகுமாரனைக் கூட்டி வந்துக் கல்யாணம் செஞ்சு வைப்பேன் டா!”

-அதுவரை அசட்டையாக அவர் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்தவன்.. அவரது கடைசி வாக்கியத்தில் முகம் சிவக்கக் கோபம் கொண்டு.. “ஜஸ்ட்.... ஷட் அப்” என்று சீற..

“யாரை டா வாயை மூடச் சொல்ற?” என்று கத்திய கேசன்.. அமர்ந்திருந்த இடத்திலிருந்து கோபத்துடன் எழுந்து நின்றார்.

நிலைமை கை மீறிப் போவதைக் கண்டு பதறி “தம்பி,தம்பி” என்று அருகே வந்த அன்னம்மா அவசரமாக அவன் தோள் பற்றி ஆசுவாசப்படுத்த.. மாமனின் கையைப் பற்றியக் சாருமதியின் விரல்களை ஒதுக்கிய கேசன்..

“உருப்படாத பய! இவனால என்னைக்குமே எனக்கு நிம்மதி கிடைக்கப் போறதில்ல! ஊரெல்லாம் என் மானத்தை வாங்குறதுக்காகவே பொறந்துருக்கான்” என்று கத்த..

“அப்டி என்ன உங்க மானத்தை வாங்கிட்டேன் நான்?” – பதிலுக்கு எகிறி வசந்திடம்..

“ராமலிங்கத்தைப் பார்க்கப் போனியா இல்லையா டா நீ?, நாடகம் போட மேடை வேணும், அரேஞ்ச் பண்ணிக் கொடுங்கன்னு நீ கேட்கல?, கூத்தாடுறதுக்குத் தான் உன்னை வளர்த்து விட்டிருக்கேனா? போனதும் போனவன், என் மகன்னு சொல்லி ஏன் டா உன்னை அறிமுகப்படுத்திக்கிற?, இவ்ளோ சொத்து,பத்து இருந்தும் உங்க மகனுக்கு ஏன் இந்தப் பொழப்புன்னு அவன் என் மூஞ்சில காறித் துப்புறான் டா” என்று முழுக் கோபத்தில் கத்தினார்.

முகம் கருக்க.. இறுகிப் போய் அமைதியாய் நின்றிருந்தான் வசந்த்.

“நாடகம் போடுறானாம் நாடகம்! பெரிய நடிகர் திலகம் இவரு! ஏழு கழுதை வயசாகிடுச்சு! உருப்படியா உத்தியோகத்துக்குப் போடா-ன்னா பாட்டு,கூத்துன்னு திரியுறான்! ஏன் டா உன் எண்ணம் இப்படிப் போகுது?, நம்ம குடும்பத்துக்கு இதெல்லாம் ஒத்து வராது! இத்தோட இதை நீ விட்டொழிக்கல.. நீ என் மகனே இல்லன்னு எழுதி வைச்சிட்டு செத்துடுவேன்”

-அவர் மிரட்டலில் பதறிப் போன சாருமதி “மாமாஆஆ” என்று கத்த.. அன்னம்மா “என்னஙகய்யா இப்படிப் பேசுறீங்க?, வாழ வேண்டிய பையனைப் பார்த்து.. பெத்தவரே இப்படிச் சொல்லலாமா?” என்று கூறியதும்.. கோபத்துடன் அவனை முறைத்து விட்டுத் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு நகர்ந்து விட்டார் கேசன்.

பின் தலை முடியைக் கோதியபடி அதிகபட்ச கோபத்துடன் ஜன்னலின் வெளியே நோக்கிய வசந்துக்கு ஆத்திரம் முழுதும் அந்த ராமலிங்கத்தின் புறம் திரும்பியது.

“ராசா..” – கவலை முகத்துடன் அருகே நின்றிருந்த அன்னம்மாவைக் கண்டு..

“என்ன?” என்றான்.

“ஐயா என்னென்னவோ சொல்றாரு! என்ன தம்பி நடக்குது?”

“அதெல்லாம் ஒன்னுமில்ல! அவருக்கு என்னை எப்படியாவது ஒழிச்சுக் கட்டனும்! அதான் இப்டில்லாம் பேசுறாரு! நான் அப்டில்லாம் விட்டுட மாட்டேன் அன்னம்மா! கோர்ட்ல கேஸ் போடுவேன் சொத்தைப் பிரிச்சுக் கொடுக்கச் சொல்லி”

சிரிப்புடன் கூறியவனைக் கேட்டு பாரம் குறைந்துப் புன்னகை கொண்ட அன்னம்மா...

“அவரை ரொம்பவும் கஷ்டப்படுத்தாதீங்க தம்பி! அவரும் ஒரு வகையில பாவம் தான்!”

“என்னை விடவா”

“இதுக்கு என்ன தம்பி பதில் சொல்ல?”

“போ அன்னம்மா! போய்.. அவருக்கு பி.பி மாத்திரை எடுத்துக் கொடு! மனுஷன் மூச்சு விடாம பேசியிருக்காரு” – எனக் கூறவும் அன்னம்மா நகர்ந்து விட.. கோபமும்,ஆத்திரமுமாய் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த சாருமதியை நிமிர்ந்து நோக்கினான் வசந்த்.

நியாயமா பார்த்தா நான் தான் கோபப்படனும்! இவ என்ன மூஞ்சியைத் தூக்குறா?

“என்னம்மா ராஜகுமாரி?, என்னை ஏன் முறைக்குற?, பெரிய ராஜகுமாரனுக்கு வாக்கப்படப் போறீங்க! முகத்தைக் கொஞ்சம் சிரிச்ச மாதிரி வைச்சுக்க வேண்டியது தான?” – நக்கல் குரலில் கேட்டவனிடம்..

“இப்படிப் பேச உங்களுக்கு வெட்கமாயில்ல?”- என்று பொரிந்தாள் சாரு.

“அவர் பேசப் பேச வாய் மூடிக் கேட்டுட்டிருந்த உனக்கே வெட்கமாயில்ல! நான் மட்டும் ஏன் வெட்கப்படனும்?”

“பின்ன?, அவர் கூடக் கூடப் பேசி, உங்களை மாதிரி அவரை டென்ஷன் பண்ணச் சொல்றீங்களா?, மாமாவை ஏன் இப்படிக் கஷ்டப்படுத்துறீங்க?”

“ஏய்ய்ய்.. என்ன இந்த மனுஷனைக் கஷ்டப்படுத்திட்டேன் நான்

இப்போ?”

“நாடகம் நடிக்கிறதைக் கூட ஒரு வகையில என்னால ஏத்துக்க முடியும்! உங்கத் திறமையை இன்னும் ஒரு தடவை கூட மாமா நேர்ல பார்த்ததில்ல! அதனால இப்படிப்பேசுறாரு! ஆனா.. இந்த வேண்டாத சகவாசமெல்லாம் தேவை தானா?, எனக்கு அசிங்கமா இருக்கு” – அருவெறுப்புடன் முகத்தைச் சுழித்தவளின் கையைப் பற்றி அழுத்தி..

“நானும் பார்த்துட்டே இருக்கேன்! அதென்ன எக்ஸ்ப்ரஷன் உன் ஃபேஸ்ல?, ஏதோ அருவெறுக்கத்தக்க விசயத்தைப் பார்த்த மாதிரி முகத்தைச் சுழிச்சுக்கிற?, ஏன் டி அந்த மனுஷன் தான் அந்தக் காலத்து ஆளு! பழைய பஞ்சாங்கமா இருக்காரு! நீ கூட ஏன் டி அவரை மாதிரி யோசிக்கிற?, அடுக்கி வைச்சிருக்கியே ரூம் ஃபுல்-ஆ! பெரிய பெரிய மேதைங்களோட புத்தகங்களா! வெறும் ஷோ கேஸ்க்கு தானா?, எந்த விதமான சிந்தனை மாற்றத்தையும் படிக்குற புத்தகம் ஏற்படுத்தலேனா.. உனக்கெல்லாம் புக்கைத் தொடத் தகுதியே இல்லன்னு அர்த்தம்!, ரத்தமும்,சதையும் இருக்குற சாதாரண மனுஷன் டி அவன்! சராசரி மனுஷனுக்கு இருக்குற ஆசா,பாசங்களைக் கூட வெளிப்படையாக் காட்டிக்க முடியாம நத்தையா சுருண்டு வாழ்ந்திட்டிருக்கிற பாவப்பட்ட ஜென்மம்! தயவு செஞ்சு அவனை ஒரு மனுஷனா வாழ விடுங்க!” என்றவன் வலியில் முகம் சுளித்தபடி கண்ணீர் வழிய நின்றவளை “ச்சை” என உதறி விட்டுச் சென்று விட்டான்.

மறுநாள் விடிந்ததும் நேராக அந்த ராமலிங்கத்திடம் சென்று நின்றான் வசந்த். பெரும் பணக்காரரும், கேசனின் நண்பனுமாகிய ராமலிங்கத்துக்குச் சொந்தமாக சிறிய அரங்கம் ஒன்றிருந்தது. பொதுக் கூட்டம்,கட்சி மீட்டிங்கிலிருந்துத் தொடங்கி சினிமா முகங்களின் நாடகங்கள் வரை அனைத்தும் அந்த அரங்கத்தில் நடைபெறும்.

அந்த அரங்கத்திற்கெனவே பார்வையாளர்கள் கூட்டம் இருந்ததால்.. தங்களது நாடகக் குழுவுக்கு இது ஒரு வாய்ப்பாக இருக்குமென்று நம்பி அவரைத் தேடிச் சென்று சந்தித்திருந்தான் வசந்த். அவனிடம் நல்ல படியாகப் பேசியனுப்பிய மனிதர் இப்படி நாரதர் வேலை பார்த்து வைப்பார் என அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

கோபமாகத் தன் கண் முன்னே அமர்ந்திருந்தவனை.. அணிந்திருந்தக் கண்ணாடி வழி நோக்கிய லிங்கம் “என்ன தம்பி, காலங்கார்த்தலயே ஆஃபிஸ் பக்கம் வந்திருக்கீங்க?, உங்க நாடக விஷயமா நானே ஃபோன் செய்றேன்னு சொல்லியிருந்தேனே” என்றார்.

“ஏன் சார் நடிக்கிறீங்க?”

“தம்பி”

“உங்களுக்கு நாங்க உங்க அரங்கத்துல நாடகம் போடுறதுல விருப்பமில்லேன்னா.. அதை என் கிட்டயே நீங்க நேரா சொல்லியிருக்கலாம்! எங்கப்பாக் கிட்ட ஏன் என்னைப் பத்தித் தரக்குறைவா பேசியிருக்கீங்க?”

“அப்படி என்ன தம்பி நான் தப்பா கேட்டுட்டேன்?, வெற்றிகரமா ஓடிட்டிருக்கிற உங்கப்பாவோட தொழில்ல பங்கெடுத்துக்காம.. நீங்க நாடகம்,நடிப்புன்னு சுத்துனா.. அது உங்கப்பாவுக்குத் தான அசிங்கம்?, அதனால தான் நான் அப்படிச் சொன்னேன்”

“உங்களுக்கு இட்லி பிடிக்குமா?, தோசை பிடிக்குமா?”

“ஏன் தம்பி கேட்குறீங்க?”

“பதில் சொல்லுங்க”

“தோசை தான்”

“இப்போ நான் உங்க வீட்டம்மாக்கிட்டப் போய், எண்ணெய் ஊத்தி சுடுற தோசை உடம்புக்குக் கெடுதி, அதனால உங்க வீட்டுக்காரருக்கு இட்லி மட்டும் கொடுங்கன்னு சொன்னா.. நீங்க என்ன பண்ணுவீங்க?”

“................”

“நாம என்னத்த வேணா தின்போம்! இவன் எதுக்குக் கேள்வி கேட்குறானான்னு நினைப்பீங்களா மாட்டீங்களா?, அது மாதிரி தான் இதுவும்! நான் என்ன பண்ணனும், பண்ணக் கூடாதுன்னு முடிவு பண்ண நீங்க யாரு சார்?”

“நான் ஒரு அக்கறைல தான் தம்பி சொன்னேன்”

“நீங்க யாரு என் மேல அக்கறைப் பட்றதுக்கு?, நான் உங்களைத் தொழில் ரீதியா அணுகியிருக்கேன்! ஒத்துக்கிறதும், மறுக்கிறதும் உங்க பிரியம். இதுல எங்க இருந்து சார் ஃப்ரீ அட்வைஸெல்லாம் வருது?, வயசாய்ட்டா போதும், எல்லாரும் தன்னை ஒரு பெரிய மனுஷனா உருவகப்படுத்திக்கிறீங்க”

அடக்கப்பட்டக் கோபத்துடன் பொறுமையாய்ப் பொரிந்தவனைக் கண்டு எரிச்சலுற்ற லிங்கம்..

“தம்பி! இது கலையை வளர்க்குற இடமில்ல! காசு சம்பாதிக்கிற இடம்!

நீ போட நினைக்குற ராஜா காலத்து நாடகத்துக்கெல்லாம் இங்க ஆடியன்ஸே கிடையாது! திருவிழால நடக்குற தெருக்கூத்தையெல்லாம் நீ மேடைல ஏத்தி அழகு பார்க்க நினைச்சா எப்படிப்பா?, அரசியல்,குடும்பம்,சமூகம்ன்னு ஏதாவது ஸ்க்ரிப்ட் எழுதிக் கொண்டு வா! கூட்டம் கூடும்! அதை விட்டுட்டு.. சரித்திரக் கதையையெல்லாம் எவன் பார்ப்பான்! உன் லிஸ்ட்ல இருக்குற பாதி நாடகங்கள்.. சினிமாவா மாறி.. ப்ரமோஷன் வாங்கிட்டுப் போய் பல வருஷமாயிடுச்சு! குத்துயிரும்,குலையுயிருமாக் கிடக்குற விசயத்தை நீ காப்பாத்த நினைக்குறது பேராசை"என்றார்.

"என்ன சார் பெரிய சினிமா?, எல்லாத்துக்கும் அடிப்படை நாடகம் தான்! என்ன தான் வெளிநாடு போய் சம்பாதிச்சாலும் தாய்நாட்டு மேல ஒரு பற்றும்,பாசமும் இருக்குறதில்ல?, அந்த மாதிரி தான் இதுவும்.. அடிப்படையை என்னைக்குமே மறக்கக் கூடாது சார்"

"ம்ஹ்ம் சினிமா இன்னும் இன்னும் வளர்ந்துட்டுப் போகும்! பட்டி,தொட்டியெல்லாம் ரீச் ஆகும்! அந்தப் பவர் சினிமாவுக்கு இருக்கு! வளர்ந்து வர்ற நாகரீகத்துக்கு ஏத்த மாதிரி மக்களும் மாறிக்கிட்டே தான் தம்பி போவாங்க! அடிப்படையை யாரு நியாபகம் வைச்சிட்டிருக்கப் போறா?, இதெல்லாம் வேலைக்காகாது தம்பி"

"நிச்சயம் கிடையாது சார்! எல்லாமே ஆரம்பிச்ச இடத்துல வந்து ஒரு நாள் நிற்கும்! வாழ்க்கைச் சக்கரத்தோட நியதியே அது தான?"

"நீ பேசுற வசனம், வசனமாவே நின்னு போயிடக்கூடாதுன்னு நான் வேண்டிக்கிறேன்! இப்போ கிளம்பு தம்பி! சினிமா நடிகர் **** என்னைப் பார்க்க வர்றார்! அவர் நாடகம் அடுத்த வாரம் நம்ம அரங்கத்துல நடக்கப் போகுது"

-விரட்டியவருக்கு உணர்ச்சியற்றப் பார்வையொன்றைக் கொடுத்து விட்டு.. தளர்வுடன் வெளியே வந்தான் வசந்த்.

வாழ்க்கைப் பாதை அத்தனை சுலபமாய் இருக்கப் போவதில்லை போலும்! பழமையென்றாலேப் பரணியில் அடுக்க வேண்டிய விசயமாகப் பார்க்கும் இந்த நவநாகரீக உலகுக்கு எப்படிப் புரிய வைப்பது.. கட்டிடத்தின் அஸ்திவாரம் ஆட்டம் கண்டால்.. கட்டிடமே இடிந்து விழுந்து விடுமென்பதை!

பெருமூச்சுடன் ஹரியைத் தேடிச் சென்றான்.

"என்னாச்சு வசந்த்?, உன் அப்பாவோட ஃப்ரெண்ட் என்ன சொன்னார்?" – ஆர்வமாக வினவினான் ஹரி.

“ப்ச், விடு டா” - வசந்த்

“என்ன டா?, உன் பர்த் டே-க்கு சர்ப்ரைஸ் தர்றேன்! அன்னிக்கு நிச்சயம் நாம.. பெரிய மேடைல நாடகம் போடப் போறோம்ன்னு சொன்ன?”

“முயற்சி பண்ணிட்டே இருக்கேன் டா ஹரி! அன்னிக்கு நம்மளால நாடகம் போட முடியாம போனாலும், நீ ஏமாற்றமடையக் கூடாது. சரியா?”

“இல்ல வசந்த்! நீ முயற்சி பண்றதே எனக்குப் பெரிய கிஃப்ட் தான் டா! இல்ல,இல்ல! நீயே எனக்குப் பெரிய கிஃப்ட் டா”

மெல்லப் புன்னகைத்தவன் “உன் பிறந்த நாள் அன்னைக்கு உன் அப்பா வர்றார்ன்னு சொன்ன?” என்று விசாரித்தான்.

“ஆமா, இந்த முறை நீ அவரைக் கண்டிப்பா மீட் பண்ணனும்” என்ற ஹரியிடம் சரியெனத் தலையாட்டினான்.

ஹரியின் பிறந்த நாளன்று காலைத் தன்னறையில் தயாராகிக் கொண்டிருந்தான் வசந்த்.

குளித்து முடித்து வெளி வந்தவன் வழக்கம் போல் டேப்-ரெக்கார்டரை ஆன் செய்யச் செல்கையில் கண்ணில் பட்டது சலங்கை ஒலி கேசட்.

“ஹ்ம்ம், இன்னும் திருட்டுத்தனமா ரூம்க்குள்ள வர்றதை மேடம் நிறுத்தல போல!” என்று முணுமுணுத்துக் கொண்டவன் எட்டி டைனிங்-டேபிளை நோக்கினான்.

புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு காலை உணவை உள்ளே தள்ளிக் கொண்டிருந்தாள் சாருமதி. அன்று அணிந்திருந்த அதே மஞ்சள் தாவணியுடன் அமர்ந்திருந்தவளை சிரிப்பும்,கோபமுமாய் நோக்கிப் பின் வேண்டுமென்றே சலங்கை ஒலி கேசட்டை ஒலிக்கச் செய்தான்.

முழுச் சத்தத்துடன் எஸ்.பி.பி தகிடததிமி,தகிடதிதிமி என பாடத் துவங்க.. ஹை-டெசிபலில் கூடச் சேர்ந்து பாடியவனைக் கேட்டு எரிச்சலுற்று.. நிமிர்ந்து அவன் அறையை நோக்கினாள் சாரு.

“பாவம் உண்டு பாவமில்லை!

வாழ்க்கையோடு கோபமில்லை!

காதல் என்னைக் காதலிக்கவில்லைஐஐஐஐஐஐஐ..” – தலை வாரியபடி வேண்டுமென்றே கத்தியவனைக் கேட்டுப் பல்லைக் கடித்தபடி நேர்ப்பார்வையுடன் அமர்ந்திருந்தாள்.

கோபத்தில் முகம் சிவந்து போய் மூச்சு வாங்க அமர்ந்திருந்தவளைக் கண்டபடிக் கையில் ஒரு பையுடன் டைனிங் டேபிளில் வந்தமர்ந்தான் வசந்த்.

விடாது அதே பாடலை ஹம் செய்து கொண்டிருந்தவனை ஓரப்பார்வையில் நோக்கி விட்டுத் தட்டில் கவனம் செலுத்தியவளை ஈர்த்தது அந்தக் கவர்.

வெள்ளைக் கவரின் கைப்பிடி வழியே தெரிந்த ஆலிவ் க்ரீன் நிறத்தை உற்று நோக்கியவளுக்கு அது ஒரு ஆடையென்று தெரிந்தது.

அவன் உண்டு முடிக்கும் வரைப் பொறுமையாகக் காத்திருந்தவள், அவன் நகர்ந்ததும் கடகடவெனக் கவர்-ஐப் பிரித்து நோக்கினாள்.

அன்று ஹரி தொட்டு ரசித்த அதே ஆலிவ்-க்ரீன் சுரிதார்! ஆனால்.. யாருக்காக வாங்கியிருக்கிறான்? யோசனையில் ஆழ்ந்தவளை அவன் காலடிச் சத்தம் தடை செய்ய.. பட்டென அதைக் கவர்-க்குள் திணித்து விட்டு சரியாக அமர்ந்து கொண்டாள்.

அவளை நோக்கியபடியே நின்று நிதானமாய் நீர் அருந்தியவன் பின் வெளியே சென்று விட்டான்.

அவன் சென்றதும் நேராக அன்னம்மாவிடம் சென்று நின்றாள் சாரு.

“அன்னம்மா..”

“என்னம்மா?”

“இப்போ அவர் எங்க போறார்?”

“எவர்?”

“அவர் தான்.. உன் வளர்ப்புப் பிள்ளை”

“வெளியே எங்கேயோ போறாரு தாயி! எங்க போறீங்கன்னு நான் கேட்கல”

“ஹ்ம்ம், கையில் வைச்சிருந்த கவர்-ல என்னோடது மாதிரியே ஒரு டிரெஸ் வைச்சிருக்கிறாரே!, யாருக்காம் அது?, உனக்குத் தெரியுமா?”

“தெரியும் கண்ணு! தம்பி ஃப்ரெண்ட் யாருக்கோப் பிறந்த நாளாம்! இந்த டிரெஸ்ஸை கிஃப்ட்-ஆ கொடுக்கப் போறதா சொன்னாரு. நீங்க அந்த டிரெஸ்ஸை எங்க வாங்குனீங்கன்னு என் கிட்ட ரெண்டு நாளைக்கு முன்னால விசாரிச்சார்”

“ஓஹோ!” என்று யோசித்தவளுக்கு நினைவில் நின்றது ஹரி ஒருவனே!

அவனுக்காகத் தான் வாங்கியிருப்பான்! அவளுக்கு நிச்சயம் தெரியும்!

அவனுடன் இவன் பழகுவதை நினைத்தாலே தலை முதல் கால் வரை அத்தனை உறுப்பும் அருவெறுப்பில் சுருங்கிப் போய் விடுகிறது அவளுக்கு. இதில்.. பெண்கள் அணியும் சுரிதாரை வாங்கி.. இவன் அவனுக்குப் பரிசளிப்பானாமா? இத்தனைக்கும்.. இதுவரை.. இவளுக்கு ஒரு கடலை மிட்டாய் கூட வாங்கிக் கொடுத்தது கிடையாது இவன்! அப்படியிருக்கையில்.. இதையெல்லாம்.... இதையெல்லாம்.. பார்த்துக் கொண்டு எப்படி அவளால் சும்மாயிருக்க முடியும்?

அடிவயிற்றிலிருந்துக் கொதித்துப் போய்க் கிளம்பிய அமிலசுரப்பிகளைச் சகித்துக் கொள்ள முடியாமல் புறப்பட்டு விட்டாள் ஹரியின் வீட்டை நோக்கி!

அங்கே ஹரியின் வீட்டை அடைந்த வசந்த்.. குளித்துக் கொண்டிருந்தவனைப் பாத்ரூமிலேயே வைத்துப் பூட்டி விட்டு.. வெளியே... தான் வாங்கி வந்த கேக்கின் மீது மெழுகுவர்த்தியை வைத்து செட் செய்து விட்டு.. பாத்ரூமின் கதவைத் திறந்தான்.

“என்னடா வசந்த் பண்ற?, காலங்கார்த்தால வீட்டுக்கு வந்ததுமில்லாம,பாத்ரூமுக்குள்ள வைச்சுப் பூட்டுற?” - எரிச்சலில் பாய்ந்தவனிடம் வசந்த் கேக்கை நோக்கிக் கை காட்ட.. கன்னத்தில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டுத் தன் விழிகளைப் பெரிதாக விரித்தான் ஹரி.

“தேங்க் யூ சோ மச் டா வசந்த்! கடைசியா எந்தப் பிறந்த நாளைக்குக் கேக் வெட்டினேன்றது கூட மறந்துடுச்சு எனக்கு” –நெகிழ்ந்து போய் குரல் கம்மக் கூறியவனிடம்...

“முதல்ல கேக்கை வெட்டு! அப்புறம் வசனம் பேசலாம்” எனச் சொல்லி.. கேக் வெட்ட வைத்து.. புகைப்படம் எடுத்தான் வசந்த்.

ஆசையாக ஒரு வாய்க் கேக்கை வசந்துக்குப் புகட்டியவன்...

“எங்கப்பாவுக்கு அப்புறம் என்னை மனுஷனா ட்ரீட் பண்ற ஒரே ஆள் இந்த உலகத்துலயே நீ தான் டா” – என்றவனிடம் சிரித்து...

“ஆச்சரியங்கள் இத்துடன் நிற்கவில்லை” எனக் கூறித் தான் கொண்டு வந்தக் கவர்-ஐ நீட்டினான் வசந்த்.

“உனக்கு ரொம்பப் பிடிச்ச ஆலிவ் க்ரீன் கலர் டிரெஸ்! பிரிச்சுப் பாரு” – என்றதும் கவர்-ஐப் பிரித்த ஹரி மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனான்.

“தேங்க் யூ டா! ரொம்பத் தேங்க்ஸ் டா வசந்த்” எனக் கூறிப் பாய்ந்து அணைத்துக் கொண்டவனிடம்..

“தேங்க்ஸ் மட்டும் போதாது. இப்போ நீ இந்த டிரெஸ்ஸைப் போட்டுக்கிட்டு என் கூட வெளியே வரனும்” என்று கோரிக்கை வைத்தான் வசந்த்.

“வெளியேவா?” எனத் திகைத்த ஹரி உடையை வருடியபடியே “ஏற்கனவே சொல்லியிருக்கேனே வசந்த், நான் இந்த மாதிரி டிரெஸ் பண்ணி வெளியே போனதில்ல டா!, எல்லாரும் வித்தியாசமா பார்க்குற ஃபீல் அதிகமாகும்! என்னால.. என்னால இயல்பா இருக்க முடியாது”என்றான்.

“உனக்கு இதைப் போட்டுக்கிட்டு வெளிய போகனும்ன்ற ஆசை இருக்கா இல்லையா?”

“இருக்கு. நிறைய இருக்கு”

“பின்ன ஏன் தயக்கம்?, நீ, நீயா இருக்கனும் ஹரி! யாருக்காகவும்.. உன்னோட விருப்பங்களையும், ஆசைகளையும் பூட்டி வைச்சுக்கனும்ன்ற கட்டாயமில்ல! புரிஞ்சதா?, நாடகம் போடும் போது பெண் வேஷம் போடுற தான?, அது மாதிரி நினைச்சுக்கோ”

“அ..அது...”

“ப்ச், வாழ்க்கை முழுக்க இப்படியே இருக்கப் போறியா?, ஒரு மாற்றம் வர வேணாமா?, எதையும் ஃபேஸ் பண்ணிப் பழகு ஹரி! இப்போ என்ன பெருசா நடந்துடும்ன்னு பயப்பட்ற?, மிஞ்சி மிஞ்சிப் போனா.. சில கேலிப் பார்வைகள், அதைத் தொடர்ந்த கிண்டல்! அவ்ளோ தான?, உலகத்துலயே நீ மட்டும் தான் கேலி,கிண்டலையெல்லாம் ஃபேஸ் பண்ற ஆளா?, இதையெல்லாம் இயல்பா எடுத்துக்கிட்டுக் கடந்து போயேன்!”

“சரி, இதை உடுத்திக்கிட்டு உன் கூட வெளிய வர்றேன்! போதுமா?”

சிரிப்புடன் கேட்டவனிடம் “தட்ஸ் குட்” என்று விட்டு அறையை நோக்கி அவனைத் திருப்பினான் வசந்த்.

சிறிது நேரத்தில் அவன் பரிசளித்த உடையில்.. லேசான அலங்காரத்தோடு அறையிலிருந்து வெளி வந்தவனை ஆச்சரியமாய் நோக்கினான் வசந்த்.

பெண் தோற்று விடுவாள் அவனது முக லட்சணத்தின் முன்பு!

“ரொம்ப ரொம்ப அழகா இருக்க டா ஹரி!!” –மனம் விட்டுப் பாராட்டியவனைக் கண்டுப் புன்னகைத்தவனுக்கு.. வாசலை விட்டுக் கீழிறங்குவதில் ஏகப்பட்டத் தயக்கம்.

“வா டா” என்று அவன் கைப் பற்றி வசந்த் அழைத்து வருகையில்.. அந்தத்தெரு முழுதும் அவனைத் தேடி அலைந்த சாருமதி எதிர்ப்பட்டாள்.

வசந்த் வாங்கிக் கொடுத்த ஆடையில்.. முழுமையான பெண் தோற்றத்துடன்.. அவனது கையைப் பற்றியபடி ஜோடி போட்டுக் கொண்டு வாசலில் இறங்கிய ஹரியைத் திகைபும்,வெறுப்புமாய் நோக்கி தொண்டை அடைக்க.. அதிர்ச்சியுடன் நின்று விட்டாள் சாருமதி.

தயக்கமும்,சிரிப்புமாய் வசந்துடன் இணைந்து நடந்த ஹரி தான் முதலில் அவளைக் கண்டான்.

அங்கு அவளை எதிர்பாராது அதிர்ந்து “வசந்த்” என அவனது தோளை பற்றிய வேளை.. வசந்தும் அவன் பார்வை சென்ற திக்கை நோக்கினான்.

நீ எங்க இங்க? என்பது போல் புருவம் சுருக்கி வசந்த் அவளைப் பார்க்க.. அவளோ.. கோர்த்திருந்த இருவரது கைகளின் மீதும் ஒரு நொடி பார்வையைச் செலுத்தி விட்டுப் பின் நிமிர்ந்து... தன் நீண்ட கண்கள் முழுக்கக் குளம் கட்டி நின்றக் கண்ணீருடன் அவனை நோக்கி.. ஆத்திரத்தில் மூக்கு நுனி சிவக்க.. வெறுப்பான ஒரு பார்வை பார்த்து விட்டு விறுவிறுவென நடந்து சென்று விட்டாள்.

அவள் பார்வையையும்,பாவனையையும் வைத்தே அவள் என்ன நினைத்திருப்பாள் என்பதை யூகித்து விட்ட வசந்துக்கு அவள் மீதுக் கோபம் கட்டுக்கடங்காமல் பொங்கியது.

அன்று அவ்வளவு எடுத்துச் சொல்லியும், இன்று இப்படியொரு பார்வை பார்த்து விட்டுச் செல்கிறாளென்றால்.. எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்! அப்படியென்ன செய்து விட்டான் அவன்! மாமனும்,மருமகளும் இவர்களிருவரையும் வெறுப்புடன் நோக்குமளவிற்கு! அதிலும் ஹரியிடம் அவள் காட்டும் அருவெறுப்பு தாங்கிக் கொள்ளவே முடியாததாகப் பட்டது அவனுக்கு!

இவர்களையெல்லாம் திருத்தவே முடியாது! இந்த மாதிரியான குருவி மூளைக்காரர்களை சுற்றி வைத்துக் கொண்டு பெரிதாய் சமூக மாற்றத்துக்கு அடிபோட்டுக் கொண்டிருக்கிறான் இவன்! இதெல்லாம் என்று மாறுமோ!

அவள் சென்ற திசையைக் கண்டு வெறுப்புடன் தோளைக் குலுக்கியவன்.. அவள் பின்னே சென்று சமாதானப்படுத்த விழையவில்லை.

“டேய் வசந்த்.. அந்தப் பொண்ணு போகுது பாரு டா”

“போனா போகட்டும்”

“ப்ச், என்ன பதில் இது?, அவ நீ காதலிக்குற பொண்ணு டா”

“அதே தான் நானும் சொல்றேன்! நான் காதலிக்குற பொண்ணுக்கு என் மேல கொஞ்சமாவது நம்பிக்கை வேண்டாமா?”

“முதல்ல நீ காதலிக்கிறதை அந்தப் பொண்ணுக் கிட்ட ஒழுங்கா வெளிப்படுத்தியிருக்கியா?, புதிர் போட்டு விளையாடுறவன் மேல நம்பிக்கை வைக்குறது ஒன்னு தான் குறை”

“ஹரி....” – எரிச்சலுடன் நண்பனை முறைத்தான் வசந்த்.

“உண்மை தான?, சிறுபிள்ளைத்தனமா ஐ லவ் யூன்னு மூணு வருஷத்துக்கு முன்னாடி நீ கொடுத்த லவ் லெட்டர் எல்லாம் இன்னும் செல்லுமா டா வசந்த்?”

“வெறுப்பேத்தாத டா என்னை”

“போய் அவளைச் சமாதானப்படுத்து வசந்த்! உன்னைப் பத்திப் புரிய வைக்க முயற்சி பண்ணு! உன்னால முடியாட்டி சொல்லு! நான் சொல்றேன்! நீ ரொம்ப நல்லவன் டா! நீ நினைச்சதெல்லாம் உன் வாழ்க்கைல நடக்கனும்”

“ஷ்ஷ்ஷ், நீ என்னை ஒரு மகான் மாதிரி பார்க்குறதை இன்னும் விடலயா டா?”

“கேலி பண்ணாத வசந்த், ஒழுங்கா வீட்டுக்குப் போ” என்று அவன் கூறிக் கொண்டிருக்கையிலேயே வந்து சேர்ந்தார் அவனது தந்தை நெடுமாறன்.

தொப்பையும்,கண்ணாடியுமாய் உருண்டு வந்தவரைத் தன் தந்தையென வசந்திடம் அறிமுகப்படுத்தினான் ஹரி.

“வாங்க, வாங்கப்பா!, நீங்க வருவீங்கன்னு சொன்னான் ஹரி! ஆனா.. எப்போ வருவீங்கன்னு சொல்லல!, எப்படியிருக்கீங்க?” – உற்சாகமாய் நலம் விசாரித்தவனிடம் தானும் பதிலுக்கு விசாரித்தார் மாறன்.

“அப்புறம் சொல்லுப்பா! என்ன சொல்றான் ஹரி?, சுரிதாரெல்லாம்

போட்டு வாசல்ல நிற்கிறான்?, எப்படி ஒத்துக்கிட்டான்?”

“ஐயோ! ரொம்பவே கஷ்டப்பட்டுத் தான் ஒத்துக்க வைச்சேன்ப்பா”

“நானும் நிறைய தடவை சொல்லியிருக்கேன்! நீ,நீயாவே இரு. அப்பா உனக்கு சப்போர்ட் பண்றேன்னு! ஆனா அவனோட தயக்கம் இதுவரை போனதேயில்ல! இப்போ சம வயசுத் தோழன் கிடைச்சிட்டதாலோ என்னவோ, கொஞ்சம் நார்மலா இருக்கான்! நான் உனக்கு ரொம்ப,ரொம்ப நன்றிக்கடன் பட்டிருக்கேன்ப்பா!” –நெகிழ்ச்சியுடன் அவன் கையைப் பிடித்துக் கொண்டார் மாறன்.

“ச்ச,ச்ச நான் அவனுக்கு எதுவும் பண்ணல! அவன் தான் எனக்கு நிறைய செஞ்சிருக்கான்! இவன் கூடப் பழகுறதுக்கு முன்னாடி வரை எதுலயும் பிடிப்பில்லாம சும்மா சுத்திட்டிருந்தேன்! இவனோடு சேர்ந்து நாடகம் போட ஆரம்பிச்சப்புறம் தான்.. எனக்கு இந்தக் கலை மேல ஈடுபாடு இருக்குறதையேத் தெரிஞ்சுக்கிட்டேன்! நான் தான்ப்பா அவனுக்குத் தேங்க்ஸ் சொல்லனும்”

“அடடா! ரெண்டு பேரும் இப்படியே மாத்தி,மாத்தி தேங்க்ஸ் சொல்லிட்டே இருக்கப் போறீங்களா?”

“அதான?, என்ன ப்ளான் வைச்சிருந்தீங்க ரெண்டு பேரும்?, சொல்லுங்க நானும் ஜாயின் பண்ணிக்கிறேன்” என்ற மாறனிடம் “அப்பா அதுக்கு முன்னாடி இவனுக்கு வேற ஒரு முக்கியமான வேலையிருக்கு. இவன் அதை முடிக்கட்டும் முதல்ல” என்ற ஹரி அவனை வற்புறுத்தி வீட்டிற்கு அனுப்பி வைத்தான்.

அவனது கட்டாயத்தால் வீடு திரும்பிய வசந்துக்கு, சாருமதியைச் சமாதானப்படுத்தும் எண்ணமெல்லாம் சிறிதும் கிடையாது! அப்படியென்னத் தன் மீது நம்பிக்கையற்றுப் போய் விட்டது அவளுக்கு என்கிறக் கோபம் தான் மிகுதியாயிருந்தது.

அதனால் வீட்டிற்கு வந்தவன்.. அன்னம்மா வெளியே சென்றிருப்பதைக் கண்டு நேராகத் தன் அறைக்குள் புகுந்து கொண்டான்.

எப்போதும் போல் டேப் ரெக்கார்டரில் பாட்டை ஒலிக்க விட்டு.. ஹரி கொடுத்த நாடகக் குறிப்புகள் அடங்கிய புத்தகமொன்றைக் கையில் வைத்துக் கொண்டு நின்றிருந்த வேளை.. அவன் அறைக் கதவைத் தள்ளிக் கொண்டுக் கண்ணீரும்,கோபமுமாய் வந்து நின்றாள் சாருமதி.

அவளைக் கண்டதும் மட்டுப்பட்டிருந்த எரிச்சல் தலை தூக்க.. அவள் வருகையை அசட்டை செய்து விட்டுப் புத்தகத்தினுள் பார்வையைத்

திருப்பியவனைக் கண்டு ஆத்திரம் அதிகமாக.. அவனருகே நெருங்கி.. அவன் கையிலிருந்தப் புத்தகத்தைப் பிடுங்கித் தூர எறிந்தாள் அவள்.

“ஏய்ய் என்னடி பண்ற?” – உச்சகட்டக் கோபத்தில் கத்தியவனிடம்..

“நீங்க என்ன பண்ணிட்டிருக்கீங்க, உங்க வாழ்க்கையோட! என் வாழ்க்கையோட! அதைச் சொல்லுங்க முதல்ல” – கண்ணீருடன் கேள்வி கேட்டவளைக் கண்டு..

“என்ன உளர்ற?” என்றான் வசந்த்.

“நிஜமா நீங்க நடந்துக்குற விதம், பண்ற விஷயம் எதுவும் எனக்குப் புரிபடவேயில்ல! நான் அந்தப் பையனைப் பத்தி எந்த விமர்சனமும் பண்ணல! அதுக்கான உரிமையும் எனக்கு இல்ல! ஆனா.. ஆனா.. நீங்க.. அவனுக்குப் பொண்ணுங்க போட்ற துணி எடுத்துக் கொடுத்து அழகு பார்க்குறதையும்.. கை.. கையைப் பிடிச்சுக்கிட்டு தெருவுல உலா வர்றதையும்.... பார்க்க... பார்க்க எப்படியிருக்குத் தெரியுமா எனக்கு?”

“எப்படியிருக்கு?”

“தலைல இருந்து கால் வரைக்கும் பத்திக்கிட்டு எரியுது” – கையை நீட்டி சைகை செய்து.. தன் பெரிய கண்கள் முழுக்க ஆத்திரத்தைக் காட்டியவளைப் பார்த்துச் சிரிப்பதா, அழுவதா என்றே புரியவில்லை வசந்துக்கு.

அப்படியும் அவளுக்குப் புரிய வைத்துவிடும் நோக்கத்தோடு “அவன் என் ஃப்ரெண்ட் சாரு” என்றவனை ஆங்காரமாய்ப் பார்த்து...

“அதுக்காக.. அதுக்காகக் கையைப் பிடிச்சுக்கிட்டு ஜோடியா உலா போவீங்களா?” என்று கத்தினாள் அவள்.

“சத்தத்தைக் குறை! நாம வீட்ல இருக்கோம்”

“நான் அப்படித் தான் கத்துவேன்”

“சரி, கத்து”

அலட்டிக் கொள்ளாமல் கூறியவனைக் கேட்டுக் கண்ணீர் பெருக..

“நீங்க அத்தனை தடவைக் கேட்டும் நான் பதில் சொல்லலன்றதுக்காகத் தான் இப்படியெல்லாம் பண்றீங்களா?” – கன்னத்தில் வழிந்தோடும் அருவியை நிப்பாட்டும் எண்ணமின்றி அவன் முகத்தை அண்ணாந்து பார்த்து வினவியவளைக் கண்டவனின் அகமும்,புறமும் வெகுவாய் மயங்கிப் போனது.

அவன் கரு மணிகள் இரண்டும் அசையாது.. அவள் முகத்திலேயே பதிந்து விட.. இப்போது அவனது மொத்த முக பாவமும் மாறிப் போயிருந்தது.

“என்ன கேட்டேன்?” - வசந்த்

“அ...அன்னிக்கு பீச்-ல கேட்டீங்களே!”

“என்னன்னு?”

“காதலிக்கலாமான்னு?”

“இப்போ அதுக்கு பதில் சொல்லப் போறியா?”

அவன் பார்வையில் படிப்படிப்பாய் கூடத் தொடங்கியிருந்த ஆசையையும்,காதலையும் கவனிக்காது தன் எண்ணங்களிலேயே உழன்று கொண்டிருந்த சாருமதிக்கு.. அவனிடம் என்ன பதில் கூறுவதென்றே புரியவில்லை.

உதட்டைக் கடித்தபடி வேறு புறம் நோக்கியவளுக்குக் கண்ணீர் மட்டும் நின்ற பாடில்லை!

வேறு வழியின்றித் தயக்கத்துடன் திரும்பி அவன் முகம் நோக்குகையில்.. அந்தக் கண்கள் காட்டிய பாவனையில் திணறி.. தடுமாறி.. சட்டென அவன் மார்பிலேயேத் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் அவள்.

தன் நெஞ்சோடு அமிழ்ந்து போயிருந்தவளை கண்டவனுக்குத் தன் மார்புக்கூட்டினுள்ளே.. உரத்த குரலுடன் அவளிடம் காதல் பாஷை பேசத் துடித்துக் கொண்டிருக்கும் இதயத்தின் துடிப்பை புரிய வைத்து விடும் வேகம் சீற்றமாய் எழுந்தது!

மொத்தமாய் அவளைத் தன்னோடு சேர்த்துக் கொள்ளத் துடித்தக் கரங்களின் ஆசையைக் கஷ்டப்பட்டு அடக்கி.. நீட்டிய கையை பாண்ட் பாக்கெட்டுக்குள் விட்டுக் கொண்டுக் குனிந்துத் தன் மார்பில் சாய்ந்திருந்தவளின் சிகையை நோக்கினான்.

“சாரு...” – அடிக்குரலில் அவஸ்தையாய் வெளி வந்த அவன் குரலின் தாக்கம் உண்டாக்கிய சில்லிப்பில் கண்களை இறுக மூடிக் கொண்டவள்..

“நீங்க கொடுத்த லவ் லெட்டரை நான் இன்னும் பத்திரமா வைச்சிருக்கேன் தெரியுமா?” என்றாள்.

“...............”

“மாமா சுக்குநூறாக் கிழிச்சுப் போட்டதும்.. ஒரு காகிதம் விடாம அத்தனையையும் பொருக்கி எடுத்துப் பத்திரப்படுத்தி வைச்சிருக்கேன்”

“................”

“நீங்க... நீங்க... அந்தப் பையனோடக் கையை இனிப் பிடிக்காதீங்க”

வார்த்தைகளில் கோர்வையின்றி.. வாய்க்கு வந்ததைப் பேசியவளைக் கண்டு சிரிப்பு வந்தது அவனுக்கு.

“சாரு..”

“ம்ம்”

“ஹரி என்னோட ஃப்ரெண்ட்! ஃப்ரெண்ட் மட்டும் தான்!”

“மூளைக்குத் தெரியுது! ஆனா.. மனசுக்குப் புரியல”

“ரெண்டும் உன் உடம்புக்குள்ள தான இருக்கு?, ரெண்டையும் சிங்க்-ல வை!”

“................”

“நாம எல்லாம் படிச்சவங்க சாரு! கால,காலமா எல்லாரும் ஃபாலோ பண்ற விசயத்தை நாமளும் கடைபிடிக்கனும்ன்னு எந்த அவசியமும் இல்ல! மாறி வர்ற உலகத்தைப் பத்தியும், வளர்ந்து வர்ற நாகரீகத்தைப் பத்தியும் நல்லாத் தெரிஞ்சவங்க நாம! அதனால.. இந்த வளர்ச்சி அனுமதிக்கிற சில விசயங்களுக்கு அங்கீகாரம் கொடுக்குறதுல எந்தத் தப்புமில்ல! காலச் சக்கரத்துல முன்னாடி ஓடிட்டவங்கக் கிட்ட நம்ம தலைமுறைக்கான மாற்றங்களைப் புகுத்த முடியாது! அதனால.. இயல்பை மாத்துற இந்த மாதிரியான விசயங்களுக்கு அவங்கக் கிட்டயிருந்து எதிர்ப்பு கிளம்பத் தான் செய்யும்! அதையெல்லாம் கண்டுக்காம.. நாம இந்த மாற்றங்களுக்கு அடையாளம் கொடுத்தோம்ன்னா.. இனி வர்ற தலைமுறை.. இதை இன்னும் சிறப்பான இடத்துக்கு எடுத்துட்டுப் போகும்! நான் சொல்றது புரியுதா?”

“....................”

“நாய்,பூனையெல்லாம் அருவெறுப்புப் பார்க்காம வீட்ல வைச்சு அன்பு காட்டி வளர்க்குறீங்க! அதே அன்பை சக மனுஷன் மேல காட்டச் சொன்னா.. கோபப் பட்றீங்க!”

“...............”

“அவன் பொண்ணு மாதிரி உடுத்துறதையும்,லிப்ஸ்டிக்

போட்டுக்கிறதையும் பார்க்குறது எனக்கும் புதுசு தான்! ஆனா.. அதை நான் ஆச்சரியமாத் தான் பார்த்தேனே ஒழிய.. அருவெறுப்பாப் பார்க்கல! இந்த மாற்றம் அவனுக்குக் கடவுள் கொடுத்தது.. அதை அவன் இயல்பா ஏத்துக்க வழி செஞ்சு கொடுக்க வேண்டியது.. சக மனுஷனான நம்மளோட கடமை”

“............”

“சாரு...”

“...........”

“இனி அவனை அருவெறுப்போட பார்க்க மாட்டியே!”

“...............”

“அவன் ரொம்ப நல்லவன் சாரு! அன்னிக்கு நம்ம வீட்டுக்கு வந்தப்போ, உன்னை அறிமுகப்படுத்தி வைக்கச் சொல்லி என் கிட்ட ஆசையாக் கேட்டான்! நீ தான் அவனைப் பார்த்ததும் தாம்,தூம்ன்னு குதிச்சு கலாட்டா பண்ணிட்ட!”

“................”

“உன் மாமா-லாம் முந்தைய தலைமுறை ஆளு! அவரோட எண்ணங்களுக்கெல்லாம் நீ வடிவம் கொடுத்துட்டு இருக்காத! சரியா?”

“...................”

“சாரு.. பதில் பேசு..” – அவன் அதட்டியதும் தயக்கத்துடன்...

“அ..அவங்க.. என்னைத் தப்பா நினைச்சிருப்பாங்களா?” என்று வினவினாள்.

“எவங்க?”

“அவங்க தான்.. உங்க ஃப்ரெண்ட் ஹரி!”

“அதெல்லாம் நினைக்க மாட்டான்! இன்ஃபாக்ட் உன்னைச் சமாதானப்படுத்தச் சொல்லி என்னை ஃபோர்ஸ் பண்ணி அனுப்பி வைச்சான்”

“நா..நான்.. சாரி கேட்கட்டுமா அவங்கக்கிட்ட?”

“ஹாஹாஹா! தாராளமா! ஆனா.. அதுக்கும் அவன் என்னைத் தான் திட்டுவான்! நான் தான் உன்னை ஏதோ மிரட்டி வைச்சிருக்கேன்னு”

“கொஞ்சம் பொறாமையா இருக்கு”

“எதுக்கு?”

“உங்க ஃப்ரெண்ட்ஷிப் பார்த்து..”

“அதனால தான் கண்ணீர் விட்டியா?”

“.............”

“சாரு...” – மீண்டும் மென்மையைத் தேக்கி ஆழ்ந்த குரலில் அழைத்தவனைக் கண்டு.. அவள் மீண்டும் தன் கண்களை மூடிக் கொள்ள..

பாக்கெட்டுக்குள்ளிருந்தத் தன் இடது கையை எடுத்து.. அவள் வலது கையின் ஐவிரல்களையும் பற்றிக் கொண்டவன்.. அதைத் தூக்கி...

“கையென்றே செங்காந்தள் மலரை..

நீ சொன்னால்.. நான் நம்பவோ..” என்று பாட.. வெடுக்கெனக் கையை இழுத்துக் கொண்டு.. அவனிடமிருந்து விலகி.. நான்கடித் தள்ளி நின்றாள் சாரு.

அவளது விலகல் கொடுத்த ஏமாற்றத்தில் முறைத்து..

“கம்பன் ஏமாந்தான்..

இளம் கன்னியரை ஒரு மலரென்றானே” – என்று இன்ஸ்ட்டெண்டாகப் பாட்டை மாற்றியவனைக் கண்டு வாய் விட்டுச் சிரித்தாள் அவள்.

ரசனையுடன் அவள் சிரிப்பை நோக்கியவனின் கண்களில் ஆயிரம்,ஆயிரம் காதல் பூக்கள்!

சிரிப்பு மறையாமல் பதில் பார்வை பார்த்தவளிடம்..

“நானாவது லவ் லெட்டர் தான் கொடுத்தேன்! ஆனா.. நீ என்னைக் கட்டிப் பிடிச்சிருக்க! இதுக்கெல்லாம் உன் மாமா விளக்கம் கேட்பாரு! பதில் சொல்ல ரெடியா இரு” என்று அவன் போலியாக மிரட்ட..

வேகமாய் அடித்துக் கொண்ட இதயத்தின் விளைவால்.. முப்பரிமாணத்தையும் முகத்தில் காட்டி.. கண்களைச் சுருக்கி.. நாக்கைக் கடித்துத் தலையைக் குனிந்து கொண்ட சாருமதிக்கு.. சத்தியமாய் அந்த நொடி.. விண்ணுக்கும்,மண்ணுக்கும் வித்தியாசம் தெரியவில்லை!

அனைத்தும்,அனைத்துமே அழகாகச் சென்று கொண்டிருந்தது. அந்த ஒரு நாள் சாருகேசன் அவளிடம் வந்து “உனக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்திருக்கிறேன் டா அம்மா” என்று சொல்லும் வரை!

## அத்தியாயம் – 6

சத்யா!! கமலஹாசனைத் தவிர யாருக்கு இந்தப் பெயர் பொருத்தமா இருந்துட முடியும்? அவர் பெரிய நடிகனா.. உலக நாயகனா இருந்துட்டுப் போகட்டும்! ஆனா.. எனக்கு.. கமல்ஹாசன் என்கிறக் காதலன் மேல தான் ஆசை,மோகம் எல்லாமே! தடித்தக் கீழிமைகளைக் கொண்டப் பெரிய கண்கள் முழுக்க அவர் கொண்டு வர்ற பாவனைகள் எல்லாமே கவர்ச்சியானது தான்! அதிலும் சத்யா! கொஞ்சமாத் தலை முடி,கழுத்துல கருப்புக் கயிறு, முகம் முழுக்கத் தாடியுமா ஆக்ராஷோத்தோட வலம் வர்ற மனுஷனை எப்படிக் காதலிக்காமல் இருக்க முடியும்?

“அந்த முட்டாள்க் கிட்ட சொல்லுங்க! நான் அவளை ரொம்ப....”- அப்டின்னு நிறுத்திட்டு அவர் கொடுக்குற எக்ஸ்பிரஷன் கொள்ளை அழகு! அந்த இடத்துல இளையராஜாவோட பிண்ணனி இசை வேறு!

கமலஹாசனுக்கு ரொம்பப் பொருத்தமான ஆளு இளையராஜா தான்! ரெண்டு பேர் காம்போ-ல வெளி வந்தப் பெரும்பாலான பாடல்கள் ஹிட்! இந்தப் பாட்டு வழக்கம் போல எஸ்.பி.பியோடது! கமல்ஹாசன் காதலை முகத்துல கொண்டு வர்றதுல கில்லாடின்னா, எஸ்,பி,பி குரல்ல கொண்டு வர்றதுல கில்லாடி! பாடல் ஆரம்பிக்குற இடத்துலயே... நம்மள ஏதோ பண்ணிடுவார் ராஜா! இவங்க 3 பேரோட.. லதா மங்கேஷ்கர் இணைந்து வாலியின் வரிகளை உச்சரித்த போது......

“சிந்தாமல் நின்றாடும் செந்தேனே!

சங்கீதம் உண்டாகும் நீ பேசும் பேச்சில் தான்...!

வளையோசை கலகலகலவென கவிதைகள் படிக்குது

குளுகுளுத் தென்றல் காற்றும் வீசுது..”

பெரும்பாலான நம் நாட்டுத் தந்தைகளைப் போல் சாருகேசனும் மகன் மீதுள்ள பாசத்தை வெளிப்படுத்தத் தெரியாத மனிதராவார்! மனைவியை இழந்த நிலையில் ஒற்றைப் பிள்ளையுடன் தனித்து நின்றவருக்கு எதிர்காலம் குறித்த பயம் நிறையவே இருந்தது.

அந்த எதிர்காலம் என்பது முழுக்க முழுக்க வசந்தைச் சார்ந்தது தான்! அன்னையற்று அநாதையாய் நிற்பவனை எப்படி வளர்க்கப் போகிறோமென்கிறப் பயம் அதிகம் அவருக்கு! மறுமணம் செய்யச் சொல்லிக் கட்டாயப்படுத்தி சொந்தங்களிடம் பிடிவாதமாக மறுத்து விட்டார். வருபவள், பிள்ளையைக் கொடுமைப்படுத்தினால் என்ன

செய்வதென்கிற எண்ணம்!

தொழில் வேறு அப்போது தான் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. மகனின் எதிர்காலம் குறித்த பயம் மற்றும் ஒரு சராசரித் தந்தையாய் தன் மகனுக்கு சொத்து சேர்த்து வைத்து விட வேண்டுமென்கிற எண்ணம் இவையிரண்டும் சேர்ந்து அவரைத் தொழிலின் பின்னே ஓட வைத்தது.

அன்னம்மாவின் பராமரிப்பில் அவன் பண்பும்,ஆரோக்கியமுமாய் வளர்வது கண்டு அவருக்கு ஏகத் திருப்தி. மகனைப் பார்த்துக் கொள்ளத் தான் அன்னம்மா இருக்கிறாளே என்கிற நினைப்பில் பல நாட்கள் வீட்டுப் பக்கம் செல்லாமல் ஷோரூமிலேயேக் குடியிருந்திருக்கிறார்.

தொழிலில் நன்றாகக் கால் ஊன்றிய பின் ஹப்பாடா-வெனத் திரும்பிப் பார்த்த போது.. மகன் அவரை விட்டு வெகு தூரம் சென்றிருந்தான்.

அன்னையென்று வந்தவள் தான், அவளுக்கானக் கடமையைச் செய்து முடிக்காமல், பாதியிலேயே சொர்க்கம் போய் விட்டாள்! இவரும் கூட அவரது கடமையான காசு சேர்ப்பதைச் சரியாகச் செய்யாமல்.. அவனோடு நேரம் செலவழித்திருந்தால்.. தொழிலில் எப்படி முன்னேறியிருக்க முடியும் என்பது அவரது எண்ணம்! அவனுக்காகத் தானே உழைக்கிறோம்! இதில் அவன் கோபப்பட என்னயிருக்கிறது என்கிற நியாயம் வேறு!

மகனின் ஒட்டாத தன்மை கொடுத்தக் கவலையில் அவர் ஆழ்ந்திருந்த வேளை வந்து சேர்ந்தாள் தங்கை மகளான சாருமதி.

பண்பும்,பணிவுமாய்.. அவர் மீது பாசத்தைத் தாண்டிய பக்தி கொண்டவளை அரவணைத்துக் கொண்டவர்.. மகன் மீது காட்டாத பாசத்தையெல்லாம் இவள் மீது காட்டினார்.

பாவம்! இதுவும் அவருக்கு எதிராய்ப் போய் விட்டது! போதாததற்கு.. தாய்,தந்தையற்று அநாதையாய் நிற்கும் பிள்ளைக்குப் பெற்றோரை நினைத்து ஏக்கம் வந்து விடக் கூடாதென்கிற நல்ல எண்ணத்தில் இவர் மகனைத் தவிர்க்க.. அவன் மொத்தமாய் இவரிடமிருந்து விலகிப் போனான்.

வளர,வளர படிப்பில் கவனமின்றி பொறுப்பற்றுத் திரிந்தவனை எண்ணி மேலும் கலங்கியவருக்கு அவனிடம் பொறுமையாய் எடுத்துச் சொல்லிப் புரிய வைக்க வேண்டுமென்கிற புரிதல் கொஞ்சமும் இல்லை! அதனால்.. அவர் அதிகம் எதிர்பார்த்த சுமூகநிலைக்கு வாய்ப்பேயில்லை என்றாகித் தினம் வாக்குவாதமும்,சண்டையுமாகச் செல்லத் தொடங்கியது

இருவருக்கும்.

அடுத்தத் தலைமுறை உட்கார்ந்து உண்ணுமளவிற்கு ஓடி,ஓடி சொத்து சேர்த்து வைத்து விட்டார். ஆனால்.. அதைக் கட்டிக் காக்கும் பொறுப்பு அவரது மகனைச் சேர்ந்ததல்லவா! படிப்பு முடிந்ததும் அவனை எப்படியேனும் தொழிலில் ஈடுபடுத்தி விட வேண்டுமென்று நினைத்தவருக்கு ஆப்பு வைத்து.. நடிப்பு, நாடகமென இறங்கி விட்டவனைக் கண்டு ஆத்திரம் எல்லை மீறியது அவருக்கு.

அதிலும் தன் தொழில்முறை நண்பன் ராமலிங்கம் அவரிடம் வந்து வசந்த் அவரைச் சந்தித்ததைப் பற்றிச் சொல்லி மகனைப் பொறுப்புடன் வளர்ப்பது எப்படியென்று அறிவுரை வேறு கூறவும் முழுதாய்க் கொதித்துப் போய் விட்டார். போதாதற்கு அந்த ஹரி வேறு! ஒட்டு மொத்த கோபத்தையும் மனதில் அடைத்தபடி வீடு வந்தவருக்கு, மகனைக் கண்டதும் அனைத்தும் பொங்கிக் கொண்டு வெளியே வந்து விட்டது.

அவனுடன் திட்டி சண்டையிட்டுப் போராடிக் கடைசியில் ஓய்ந்து போய் அறையில் அமர்ந்தவருக்கு.. நெஞ்சை அழுத்திப் பிசைவது போல் தொடங்கிய வலியொன்று முதுகு, கழுத்து என அத்தனை இடங்களிலும் பரவ.. மூச்சு விட சிரமமாகிப் போனது. வழக்கமாகப் போடும் மாத்திரையை அள்ளி அவசரமாய் வாயிலிட்டுக் கொண்டவர்.. பின் தாமதிக்காமல் டிரைவரின் உதவியுடன் மருத்துவமனையைச் சென்றடைந்தார்.

அவரது நல்ல காலம்! மருத்துவமனையை அடைந்ததும் வலி அதிகமாக.. உடனடியாக அவரை அனுமதித்த மருத்தவர், பரிசோதனை முடிவில் அவருக்கு வந்திருப்பது மாரடைப்பு எனக் கூறினார். முதல் முறை என்பதால் சேதாரமின்றித் தப்பித்தார் கேசன்.

பணி நிமித்தம் வெளியூர் சென்றிருப்பதாக வீட்டில் கூறி விட்டு டிரைவரின் உதவியுடன் இரண்டு நாட்களை மருத்துவமனையிலேயே கழித்தார்.

அங்கிருந்த இரண்டு நாட்களும் முழுக்க முழுக்க வசந்த் மற்றும் சாருவைப் பற்றிய சிந்தனை தான் அவருக்கு. இயல்பில் அவர் ஆரோக்கியமானவர் என்பதால் இத்தனை நாட்கள் பெரிதாக மருத்துவமனைக்குச் சென்றதில்லை! காய்ச்சல்,தலைவலியையெல்லாம் அவர் பெரிது படுத்தியதுமில்லை.

ஏறிக் கொண்டே போகும் வயதின் காரணமாக சாப்பாட்டில் கட்டுப்பாடு

விதித்தது கூட அன்னம்மா தான்! ரத்த அழுத்தத்திற்கு மாத்திரை எடுத்துக் கொள்வார்! அவ்வளவே! அதைத் தாண்டிப் பெரிதாக உடல்நிலையில் அக்கறை எடுத்துக் கொண்டது கிடையாது.

ஆனால்.. இப்போது அவருக்கு தன் ஆரோக்கியத்தைப் பற்றிய பயம் வந்தது. இன்று போல் திடீரெனத் தனக்கு ஏதேனும் ஆகி விட்டால்.. பிள்ளைகளின் நிலை என்னவாகும் என்று அஞ்சினார்.

அப்போதும் கூட அவர் வசந்தைப் பற்றிப் பெரிதாக கவலை கொள்ளவில்லை! ஆண் பிள்ளை! மலை போல் சொத்து இருக்கிறது! எப்படியேனும் பிழைத்துக் கொள்வான்!

ஆனால்.. சாருமதி.. தன்னை நம்பித் தங்கை விட்டுச் சென்ற பொக்கிஷம் அவள்! அவளுக்கொரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்காது சென்றால்.. நிச்சயம் அவர் ஆத்மா சாந்தியடையாது!

அவள் பெயரிலும் சொத்து,பத்துக்கள் உண்டு! அவளது தாய்,தந்தை வழி வந்தது, பின் இவர் வாங்கிப் போட்டது என! ஆனால்.. பணம்,காசு மட்டும் போதுமா ஒரு பெண்ணிற்கு! அதைத் தாண்டிய பாதுகாப்பு வேண்டுமே! வாழ்க்கைத் துணையயன்றி எவரால் அவளுக்குப் பாதுகாப்புக் கொடுத்து விட முடியும்?

நினைப்பதையெல்லாம் படி! திருமணத்தைப் பற்றி பிறகு யோசிக்கலாம் என்று அவளிடம் சொன்னவர் தான்! ஆனால்.. நிலைமை இப்படி மாறுமென்று அவர் கனவா கண்டார்?

படிக்கட்டும்! நினைத்தையெல்லாம் படிக்கட்டும்! திருமணம் செய்து கொண்டு படிக்கட்டும்! அழகான ஆண்மகனாக.. நல்ல தொழில் செய்பவனாக.. பெரிய இடத்தில் மாப்பிள்ளை பார்க்க வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டார்.

மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பியதும்.. அவர் செய்த முதல் காரியம் மாப்பிள்ளை வேட்டையில் ஈடுபட்டது தான்! தன் உற்றார், உறவினர் அனைவரிடமும் அவர் இது குறித்துக் கூறி வைத்திருந்த நிலையில்.. அவரிடம் வந்துத் தன் மகனுக்காகப் பெண் கேட்டார் அவரது உற்ற தோழனான மதிவாணன்.

தனது பட்டப்படிப்பின் இறுதியாண்டிலிருந்த சாருமதிக்கு.. கல்லூரிப் படிப்பு முடியும் தருவாயில் இருந்தபடியால்.. பெரிதாகக் கல்லூரி செல்ல வேண்டிய அவசியமிருக்கவில்லை. மேற்படிப்புக் குறித்த பரீட்சைகளில் முழுதாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வீட்டிலேயே பெரும்பாலான

நாட்களைக் கழித்தாள்.

ஏனோ தெரியவில்லை! அன்றொரு நாள் வசந்த்துடன் அத்தனை பெரிய சண்டையிட்ட கேசன், இப்போதெல்லாம் அவனுடனான சாதாரணப் பேச்சு வார்த்தைகளைக் கூட முற்றிலுமாகத் தவிர்த்து விட்டார். தொழில் கற்றுக் கொள்ள வரும்படித் தன் மகனிடம் வற்புறுத்துவதில்லை அவர்.

தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பவரைக் காண்கையில் வசந்த்துக்கு சந்தேகம் தான்! ஏதோ ஒரு பெரிய சம்பவத்திற்கு அடித்தளமிட்டுக் கொண்டிருக்கிறார் என்பது வரை புரிந்தது. அதனால் பம்மிப் பதுங்கிக் கொண்டிருக்கும் புலி பாயப் போகும் நாளை எதிர்பார்த்திருந்தான்.

ஒரு வெள்ளியன்று மாலை வீட்டுக்குள் நுழைந்தவன் தடதடவென அடித்துப் பிடித்துக் கொண்டு மாடிப்படிகளில் இறங்கி வந்த சாருமதியைக் கண்டு "ஏய்..ஏய்.. மெதுவா" எனக் கத்தியபடியே உள்ளே வந்தான்.

அவசரமாக ஓடிச் சென்றுத் தொலைக்காட்சிப் பெட்டியை அவள் உயிர்ப்பித்த வேளை தூர்தர்ஷனில் ஒலியும் ஒளியும் தொடங்கியிருந்தது.

அதுவரை என்னவோ,ஏதோவென அதிர்ந்து அவளைப் பார்த்துக் கொண்டிருந்தவன் அவள் டிவி அருகே செல்லவும், தலையில் அடித்துக் கொண்டான்.

"அப்படி என்ன அவசரம்?, ஒரு நாள் ஒலியும்,ஒளியும் பார்க்காட்டி என்னக் கெட்டுப் போயிடும்" - வசந்த்

"ப்ச், லைஃப்ல சில விஷயங்களை மிஸ் பண்ணவே கூடாது. அதுல இதுவும் ஒன்னு"

-தத்துவம் பேசியவளைக் கண்டு அவன் பல்லைக் கடித்த வேளை..

**"**விழியிலே**..** மணி விழியில் மௌனமொழி பேசும் அன்னம்**.."** –எனத் தொடங்கியிருந்தார் எஸ்.பி.பி. (இந்தப் பாட்டோட கன்னடா வெர்ஷன் 'ஜோதேயலி' கேட்டுப் பாருங்க!)

கருப்பு நிறத்தில் ஸ்கர்ட்டும், ஆகாய நீல வண்ணத்தில் முழுக்கை சட்டையும் அணிந்திருந்தவள், அவனைக் கண்டு கொள்ளாது ஓடிச் சென்று ஷோபாவில் அமர்ந்து கொண்டாள்.

"காலேஜ்க்கு மட்டம் போட்டுட்டு வீட்ல உட்கார்ந்து என்ன பண்ற நீ?"

“ம்ம்ம், நான் என்ன உங்கள மாதிரியா?, படிப்புக்கு பை,பை சொல்லிட்டு சும்மா ஊர் சுத்துறதுக்கு! நான் ****** எக்ஸாம்க்கு சின்சியரா ப்ரிபேர் பண்ணிட்டு இருக்கேன்!”

“பண்ணு பண்ணு!, படிப்பு வாழ்க்கைல ரொம்ப முக்கியம்”

“நக்கலா?”

“படிக்கிறதைத் தவிர ஒரு மண்ணும் வராது! ஆனா பேச்சுக்கு மட்டும் பஞ்சமில்லை! அப்டியே எங்கப்பனை மாதிரிடி நீ!”

“ரொம்பப் பேசாதீங்க”

“ப்ச், அன்னம்மா எங்க?”

“அன்னம்மா காய்,கறி வாங்கப் போயிருக்கு”

“நீயும் கூடப் போக வேண்டியது தான?”

“எதுக்கு?”

“எதுக்கா?, படிப்பு,பாட்டு,டிவின்னு சுத்துனா மட்டும் போதாது! கொஞ்சம் சமையல்கட்டுப் பக்கமும் போகனும்”

“ப்ச், அது என்ன?, பொண்ணுங்க மட்டும் தான் சமையல் கத்துக்கனுமா? ஆம்பளைங்க வாய் குறையாமப் பேசி வக்கணையா சாப்பிட மட்டும் செய்வீங்களா?, பெருசா சமூக சிந்தனை இருக்குற மாதிரி மைக்கே பிடிக்காம பக்கம்,பக்கமா பேசுவீங்களே! பெண் சுதந்திரம், பெண்ணுரிமை இதைப் பத்தியெல்லாம் மூச்சே விட மாட்டேங்கிறீங்க?” – நிறுத்தாமல் பேசியவளிடம்..

“ஷ்ஷ்ஷ்ஷ்!! போச்சு! அப்டின்னா என் எதிர்காலம் ரொம்பக் கஷ்டமா இருக்கும் போலவே!” – என்றான் அவன்.

“உங்க எதிர்காலம் ஏன் கஷ்டமா இருக்கனும்?”

“அதான, உனக்கு சமைக்கத் தெரியலேன்னா.. எனக்கென்னக் கஷ்டம்? உன் மாமா கூட்டிட்டு வரப் போற மிஸ்டர்.ராஜகுமாரனுக்குத் தான கஷ்ட,நஷ்டமெல்லாம்?”

-வழக்கமாக வம்பிழுப்பது போல் அவன் கேலி செய்ய.. சாருமதிக்குத் தான் நிமிடத்தில் கண்ணில் நீர் சேர்ந்து விட்டது.

மூக்கு விடைக்கக் குளம் கட்டி நின்றக் கண்ணீருடன் அவனை உறுத்து விழித்தவளைக் கண்டுப் பதறி..

“ஏய்.. ஏய்.. நான் விளையாட்டுக்குத் தான் சொன்னேன்!” என்று அவன் கூற.. வெடுக்கென எழுந்து விறுவிறுவெனத் தன் அறைக்குச் செல்லப் படியேறினாள் அவள்.

“சாரு.. ஏய்.. நில்லு.. நில்லுன்னு சொல்றேன்ல?” – என்றபடி அவளைத் தொடர்ந்து படியேறியவன்.. அறைக்குள் நுழையப் பார்த்தவளின் கையைப் பற்றித் தடுத்தான்.

நிலப்படியருகே அவன் நிற்க.. அறைக்குள்ளே அவள் திரும்பி நின்றிருந்தாள்.

“கையை விடுங்க”

“இப்போ என்னடி உனக்குக் கோபம்?, அன்னைக்கு உன் மாமா வாய் நிறைய இதைச் சொன்னப்போ நீ அமைதியாத் தான கேட்டுட்டிருந்த?” – எரிச்சலுடன் சீறியவனிடம்..

“அமைதியா இல்லாம என்ன பண்ணியிருக்கனும்?” – என்றுத் திமிராய் வினவினாள் அவள்.

“சொல்லியிருக்கனும்! என்னைப் பற்றி... நம்மைப் பற்றி!” – முன்னே திரும்பி நின்றவளின்.. காதோர முடிகளைக் கண்டபடிப் பேசினான் அவன்.

“உங்களைப் பத்தி,நம்மளப் பத்தி சொல்ல என்ன இருக்கு?” – மறுபடி அசட்டையாய் வினவியவளை..

“ஏய்ய்ய்” – எனத் தோள் பற்றித் தன் புறம் திருப்பியவனிடம்..

“ஆமா!, நீங்க இதுவரைக்கும் என் கிட்ட ஏதாவது சொல்லியிருக்கீங்களா?, உங்களைப் பத்தி.. நம்மைப் பத்தி” – என்றாள் அவள் நிதானமாக.

“அதான்.. கொட்டை எழுத்துல எழுதி லெட்டரா கொடுத்தேனே”

“கொடுத்துட்டு.. காதலிக்கத் தோணுதுன்னு சொன்னீங்க! அப்புறம், ஏதோ பேட்டரி லைஃப்-அ டெஸ்ட் பண்ற மாதிரி, இந்த ஃபீலிங்க்ஸ் லாங் லாஸ்டிங்கான்னு தெரிஞ்சுக்கனும்!, நீயும் என்னைக் காதலிக்கனும்ன்னு தோணுதுன்னு சொன்னீங்க! எல்ல்லாஆஆஆஆமே உங்களுக்குத் தோண மட்டும் தானே செஞ்சது? வெளிப்படையா.. சொல்லியிருக்கீங்களா?”

“வெளிப்படையா-ன்னா எப்படி சொல்லனும்?, நீ என்னைக் கட்டிப்பிடிச்ச மாதிரி நானும் உன்னைக் கட்டிப்பிடிச்சு சொல்லட்டுமா?”

– அடக்கப்பட்டச் சிரிப்புடன் இதழ் நெளியக் கூறியவனிடம்..

சங்கடத்தில் நாக்கைக் கடித்தபடி வேறு புறம் பார்த்து “அதையே சொல்லிக் காட்டாதீங்க” – என்று முகம் சுருக்கிக் கொண்டாள் அவள்.

“எனக்கு ஹக்கிங்-ல எல்லாம் இன்ட்ரெஸ்ட் கிடையாது. ஒன்லி கிஸ்ஸிங். முத்தம் கொடுக்க எனக்குப் பர்மிஷன் கொடு. நான் எல்லாத்தையும் வெளிப்படையா சொல்றேன்”

தீவிரமாய் அவள் முகம் பார்த்து.. அசால்ட்டாகக் கூறியவனை முறைத்துத் தன் தோளிலிருந்த அவன் கையை விலக்க முற்பட்டவளைத் தடுத்து.. பற்றியிருந்த கரத்தில் அழுத்தத்தைக் கூட்டி.. அவளை நிலப்படியின் மீது சாய்த்தான் அவன்.

அருகே நெருங்கி.. வட்டமாய் விரிந்திருந்தக் கண்கள் வழி அவள் இதயத்தைக் காண முயற்சித்து.. “என்னைத் தாண்டி எந்த ராஜகுமாரனும் உன்னை நெருங்கிட முடியாது! புரிஞ்சதா?” – என்றான்.

பார்வை மாற அவன் முகத்தையே இமைக்காது நோக்கி மெல்லத் தலையாட்டியவளிடம்..

“இப்போ பர்மிஷன் கொடுப்பியா?” என்றான் அவன்.

அவனது கேள்விக்குப் பதிலளிக்காமல் தன் தோளிலிருந்த அவன் கரத்தை அரும்பாடுபட்டு விலக்கி..

“அப்டின்னா நீங்க வாயைத் திறந்து சொல்ல மாட்டீங்க?” என்று மறு கேள்வி கேட்டாள் அவள்.

“எதை?”

“லெட்டர்-ல இருந்ததை” – கன்றிச் சிவந்த முகத்துடன் தயக்கமாய்க் கூறியவளைக் கண்டு உள்ளுக்குள் சிரித்து.. நின்றிருந்த நிலப்படியில் சாய்ந்து கைகளைக் கட்டிக் கொண்டவன்..

“ம்ஹ்ம் மாட்டேன்” –என்றான்.

“ஏன்-வாம்?” – கோபத்துடன் சிணுங்கியவளிடம்..

“கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி ஆண்,பெண்ன்னு பெருசா உரிமைப் போராட்டம் நடத்துன?, ஏன் நாங்க மட்டும் தான் இதையெல்லாம் வாய் விட்டு சொல்லனுமா?, நீங்க சொல்ல மாட்டீங்களோ” – என்று அவன் நக்கலாகக் கூற..

“லெட்டர் கொடுத்தது நீங்க. அப்டின்னா நீங்க தான் சொல்லனும்”

என்று பாய்ந்தாள் அவள்.

“சொல்ல முடியாது டி! உன்னால முடிஞ்சதைப் பாரு!, கிஸ் பண்ண பர்மிஷன் கேட்டு நிற்கிறவனைக் கொஞ்சமும் மதிக்காம.. கையைப் பிடிச்சு விலக்கி விட்ற! உனக்கு எதுக்குடி நான் சொல்லனும்! சொல்ல மாட்டேன் போ”

-பெரிதாக முறுக்கிக் கொண்டவனை மூச்சு வாங்க முறைத்து விட்டுப் பின் அவன் தோளைப் பற்றி வெளியே தள்ளி அறைக்கதவைச் சாற்றிக் கொண்டாள் அவள்.

“ஏதோ இன்னிக்கு நல்ல மூட்ல இருந்ததால பர்மிஷன் கேட்டேன். அடுத்த தடவை அனுமதியெல்லாம் கேட்க மாட்டேன்! நல்லாத் தெரிஞ்சுக்கோ” – என்று அவன் தொடர்ந்து கத்தியதைக் கேட்டு பற்கள் தெரிய அழகாய்ப் புன்னகைத்துக் கொண்டாள்.

அன்று ஹரியைக் காண அவன் வேலை செய்யும் பத்திரிக்கை ஆபிஸுக்கு வருகை தந்திருந்தான் வசந்த்.

ஆம்! நாடகம் போடுவதிலிருந்துப் பெரிதாக வருமானம் ஈட்ட முடிவதில்லை ஹரியினால்! எப்போதும் போல் தந்தையிடம் சென்று நிற்கவும்.. தன்மானம் இடம் கொடுக்கவில்லை. படிப்பு முடிந்தாயிற்று! வளர்ந்து முழு மனிதனாய் மாறிய பின்பு இன்னமும் கைச் செலவுக்குப் பெற்றோரிடம் நிற்பதா? ஆனாலும் வயிற்றை நிரப்பியாக வேண்டுமே! அதற்காக தினசரி பத்திரிக்கையொன்றில் வேலைக்குச் சேர்ந்திருந்தான் அவன்.

ஆனால் வசந்த் இந்த விசயத்தில் பெரிதாக அலட்டிக் கொள்ளவேயில்லை. ஒரு தந்தையாக சாருகேசன் செய்த ஒரே கடமைப் பணம் சேர்த்தது மட்டும் தான்! அதையும் கூட அனுபவிக்காமல்.. அவன் விலகி நிற்க வேண்டுமா?, கழுதை வயசாச்சு, இன்னும் தகப்பன் காசுல உட்கார்ந்து தின்கிறான் என்ற தந்தையின் பேச்சையெல்லாம் அவன் கண்டு கொள்ளவேயில்லை! சம்பாதிக்க வேண்டும் என்கிற ஆசை வரும் போது பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் அவனுக்கு!

இப்போது நடிப்பு,நாடகம் போன்றவற்றில் அடுத்த நிலைக்கு செல்லத் தொடங்கி விட்டான். நாடகக் கலை பற்றிய ஆராய்ச்சியில் இறங்கியவன் பெரும்பாலான நேரத்தை.. அதைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்கப்பதிலேயே கழித்தான்.

கிராமப்புறத் திருவிழாக்களில் நடக்கும் கூத்துக்கள், சுதந்திரப் போராட்ட காலத்தில் ஆங்கிலேய அரசை எதிர்க்கப் போடப் பட்ட

நாடகங்கள், சரித்திரக் கதைகள்,அரசியல்,சமூகம், குடும்பம் சார்ந்த நாடகங்கள் என அத்தனையையும் பற்றி ஊர்,ஊராகச் சென்று ஆராயத் தொடங்கினான்.

அவன் அறிந்த வரையில்.. வழிவழியாக இத்துறையில் ஈடுபட்டிருந்தக் கலைஞர்கள் அனைவரும்.. தொழில் பக்தியைத் தாண்டிய ஒரு பேரார்வத்தை இக்கலையின் மீது கொண்டிருந்தனர். அவர்களது அனுபவங்கள்,வாழ்வியல், நடிக்கும் முறை என அனைத்தையும் பதிவு செய்து புத்தகமாக எழுதத் தொடங்கினான்.

அவன் பதிவு செய்த விசயங்களை பத்திரிக்கையில் பிரசுரம் செய்ய விரும்பினான் ஹரி. இப்படியேனும் மறந்து போன இக்கலை மக்களிடம் சென்று சேர வேண்டுமென்பதற்காக.

அவனது மேலிடமும் இதற்கு ஒத்துக் கொள்ள.. அவர்களது வாராந்திரப் பத்திரிக்கையில் இவனது பதிவுகளைத் தொடராக வெளியிடத் தீர்மானித்திருந்தனர்.

கையில் ஃபைலுடன் உள்ளே வந்தவனை வரவேற்ற ஹரி “இப்பவே ப்ரூஃப் பார்க்க அனுப்புறேன் டா” என்று கூறி அவனிடமிருந்துக் கட்டுரையை வாங்கிச் சென்றான்.

அதன் பின்பு இருவரும் அலுவலகத்திற்கு அருகேயிருந்த டீக்கடையில் தஞ்சமடைந்தனர்.

“வேற ஏதாவது சாப்பிட்றியா டா?” – கடைக்காரர் கொடுத்த டீயை வாங்கி நண்பனின் கையில் வைத்தபடி வினவினான் வசந்த்.

“இல்ல வேண்டாம்!” என்ற ஹரி தொடர்ந்து “நீ தம் அடிக்க மாட்டியா டா?” என்று வினவினான்.

“ம்ஹ்ம் ஸ்மெல் பிடிக்காது! ஒரே ஒரு தடவை சும்மா வாய்ல வைச்சு ரஜினி மாதிரி ஸ்டைல் பண்ணதுக்கே எங்கப்பாப் பல வருஷம் சொல்லிக் காட்டி வெளுத்தெடுத்தார்”

“ஹாஹாஹா, இப்போ எப்படியிருக்கார் மனுஷன்?”

“பேசுறதையே விட்டுட்டார் டா! தெரியல, ஏதோ பெருசா ப்ளான் பண்றார்ன்னு மட்டும் தோணுது”

“உன்னை விட்டுப் பிடிக்கலாம்ன்னு நினைச்சிருப்பார்”

“அவர் என்னை விட்டுப் பல வருஷமாச்சு டா”

“எனக்கென்னவோ அப்டித் தோணல! அவர் உன் மேல ரொம்பப் பாசம்

வைச்சிருப்பார்ன்னு நினைக்கிறேன்”

“...........”

“வேற எதுவும் நாடக வாய்ப்பு கிடைக்கலையா டா?”

“ஹ்ம், சொல்லனும்ன்னு நினைச்சேன்! இந்த வாரம் சனிக்கிழமை ஒரு ஆசிரமத்துல ஆண்டு விழா நடக்குதுடா! அங்க பெர்ஃபார்ம் பண்ணக் கூப்பிட்டிருக்காங்க!”

“ஓ!! சரி டா”

“பார்ப்போம்! இந்த ஆர்ட்டிகிள் வார,வாரம் வெளி வரத் தொடங்கினப்புறம் எதுவும் மாற்றம் இருக்கான்னு”

“கண்டிப்பா இருக்கும்!”

“நம்புவோம்”

“அப்புறம், என்ன சொல்றா உன் சாரு?”

சிரித்துக் கொண்டே கேட்டவனிடம் முறுவலித்து..

“எப்போ வாயைத் திறந்து ஐ லவ் யூ சொல்லுவன்னு கேட்குறா” என்றான்.

“ஏன்? நீ இன்னும் சொல்லலியா?”

“ம்ஹ்ம்”

“ஏன்?”

“ப்ச், சொல்லத் தோணும் போது தான் டா சொல்ல முடியும்”

“எப்போ தோணும்?”

“தெரியல”

“டேய்... இதெல்லாம் ரொம்ப ஓவர் டா! எத்தனை வருஷமா காதலிக்குற?, லெட்டர்ல-லாம் சொல்ற? நேர்ல சொல்ல மாட்டியா?”

“சொல்றேன்.. சீக்கிரமே” – என்று அவன் கூறுகையிலேயே.. அவன் காதலியானவள் அவனெதிரே வந்து கொண்டிருந்தாள்.

மார்புக்குக் குறுக்காகத் துப்பட்டாவைக் கட்டிக் கொண்டு சைக்கிள் ஓட்டிக் கொண்டு வந்தவளும் இவனைக் கண்டுப் பெரிதாய் புன்னகைத்துப் பின்.. ஹரியைக் கண்டுத் தயக்கத்துடன் வண்டியின் வேகத்தைக் குறைத்தாள்.

வசந்த்தின் பார்வையைத் தொடர்ந்து அவளை நோக்கிய ஹரி அவசரமாய்த் தலையைத் திருப்பிக் கொண்டான்.

டீ க்ளாஸை வைத்து விட்டு அவளருகே சென்று, வசந்த் வழி மறித்ததும் இறங்கி நின்றாள் அவள்.

“துப்பட்டாவை இப்படிக் குறுக்காலக் கட்டாத! பார்க்க சகிக்கல” – சிடுசிடுத்தக் குரலில் கூறியவனை முறைத்து..

“அப்டின்னா துப்பட்டா போடாம தான் சைக்கிள் ஓட்டனும்!”- என்றாள் அவள்.

“என்னடி திமிரா?”

“பார்த்ததும் சிரிச்சு ஹாய்,ஹலோன்னு ஏதாவது சொல்லனும். அதை விட்டுட்டு இப்படித் திட்டக் கூடாது.

“ஹாய், ஹலோ தான, இவன் சொல்லுவான்” – என்று அவன் ஹரியைக் கைக் காட்ட.. அவனோ.. இருவரும் பேசிக் கொள்ளும் விதத்தைக் கண்டு சிரித்தபடி.. அருகிலிருந்த வைதேகி காத்திருந்தாள் படத்தின் நூறாவது நாள் போஸ்டரைத் தீவிரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“டேய் ஹரி....”

“ம்ம்”

“சாரு டா”

“...........”

“கொஞ்சம் இந்தப் பக்கம் திரும்பிப் பாரு” – அவன் தோளைப் பற்றித் திருப்பியவனிடம்..

“வசந்த், எனக்கு வேலையிருக்கு. நான் போறேன் டா” – என்று தப்பித்துக் கொள்ளப் பார்த்தான் ஹரி.

“உன்னைப் பார்த்து தான் இவன் இவ்ளோ பயப்பட்றான்” – சாருவை நோக்கி வசந்த்.

“நான் என்ன பண்ணேன்” – முணுமுணுத்தபடி சாரு.

“அய்யோ.. அப்டியெல்லாம் ஒன்னுமில்ல. வசந்த்த்த்த் நான் போறேன், நீங்க ரெண்டு பேரும் பேசுங்க” – பல்லைக் கடித்துக் கொண்டு கூறிய ஹரி நகர எத்தனிக்க..

“ஒரு நிமிஷம்..” என்று அவனைத் தடுத்தாள் சாரு.

அதிர்ந்து அவள் முகம் நோக்கியவனிடம் “வ..வந்து..” என்று இழுத்துக் கொண்டே வசந்தைப் பார்க்க.. அவனும் என்ன சொல்ல முயல்கிறாள் என்பது போல் அவளை நோக்கினான்.

“அ..அ..அன்னைக்கு நான் அப்படி பிஹேவ் பண்ணியிருக்கக் கூடாது. ரொம்ப சாரி”

தயக்கமாய் மன்னிப்புக் கேட்டவளைக் கண்டுப் பேந்த பேந்த விழித்தான் ஹரி.

“அந்த சம்பவத்துக்கு அப்புறம் நான் ஆலிவ் க்ரீன் கலர்ல டிரெஸ் வாங்கும் போதெல்லாம் உங்களுக்கும் ஒரு செட் வாங்கிடுவேன்”

மெல்லிய குரலில் அவள் கூறியதைக் கேட்டு இருவரும் வாயைப் பிளக்க.. அவள் மேலும் தொடர்ந்தாள்.

“இவர் கிட்ட கொடுக்கலாம்ன்னு நினைப்பேன்! ஆனா.. உங்களுக்குத் தெரியுமே, இவர் ரொம்பப் பேசுவார்ன்னு”

“ஹாஹாஹா” – சத்தமாகச் சிரித்த ஹரியைக் கண்டு இலகுவாகி.. ஒரு பெருமூச்சை வெளியிட்டவள்..

“வெரி சாரி! படிக்காதக் காட்டுமிராண்டி மாதிரி நடந்துக்கிட்டதா ஃபீல் பண்ணினேன் நான்! மாறிட்டு வர்ற காலகட்டத்துல ஏதேதோ விஷயங்கள் எல்லாம் தப்பு இல்லைன்ற லிஸ்ட்ல சேர்ந்துடுச்சு! இது.. இது.. இயற்கையான ஒன்னு தான?, நீங்க என்ன வேணும்ன்னா இப்படி ஆனீங்க?, அதனால.. உங்களுக்கு சப்போர்ட் பண்ணனும்ன்னு தோணிடுச்சு எனக்கு” – என்று கூறவும்.. வாயில் கை வைத்தான் வசந்த்.

“நிஜமா என் கண்ணு முன்னாடி நிற்குறது எங்கப்பன் வளர்த்த சாருமதி தானா?” – வியந்த குரலில் கேட்ட வசந்தை.. அவள் அநியாயத்துக்கு முறைத்து வைக்க..

“டேய்ய் வசந்த்” என்று அதட்டினான் ஹரி.

“நீ.. நீங்க.. ஒன்னுமே சொல்லலையே” – என்றபடி மீண்டும் ஹரியை நோக்கியவளிடம் லேசாய்ச் சிரித்து..

“அந்த டிரெஸ்ஸையெல்லாம் எப்போ எனக்குக் கொடுப்பீங்க?” என்று வினவினான் ஹரி.

முகம் மலரப் புன்னகை கொண்டு உற்சாகத்துடன் “இன்னிக்கே.. இன்னிக்கே இவர் கிட்டக் கொடுக்குறேன்” என்று கூறியவளிடம்..

“ம்ஹ்ம் நீங்க கொடுத்தாத் தான் வாங்கிப்பேன்” என்று ஹரி சொல்ல..

பெரிதாய்ச் சிரித்து "ஓகே! நானே எடுத்துட்டு வர்றேன் ஒரு நாள்" என்று தலையாட்டினாள் சாரு.

"ஹரி என்னை ஒரு தடவை ஓங்கி அடி டா!, நடக்கிறதெல்லாம் கனவு மாதிரி இருக்கு எனக்கு" – சாருவைக் கண்டபடி நண்பன் முன்பு கை நீட்டினான் வசந்த்.

எரிச்சலுடன் ஹரியின் புறம் திரும்பிய சாரு "நான் கிளம்புறேன்ங்க" என்று முறுக்கிக் கொள்ள..

"வசந்த் கொஞ்சம் சும்மா இரேன் டா" என்று மீண்டும் நண்பனை அதட்டி விட்டு..

"டீ குடிக்கிறீங்களா?" என்று கேட்டுப் பின் கடையைத் திரும்பிப் பார்த்து...

"இங்கேயெல்லாம் குடிப்பீங்களா?" என்று வினவினான் ஹரி.

அவன் பார்வையைத் தொடர்ந்து தானும் கடையை நோக்கியவள்..

"குடிக்கிறேன். இல்லேன்னா.. இங்க குடிக்கிறவங்க எல்லாம் உன் கண்ணுக்கு மனுஷங்களாத் தெரியலயான்னு கேட்டு இவர் லெக்சர் கொடுப்பார்" என்று புருவத்தைச் சுளிக்க.. அவளை நிமிர்ந்து பார்த்து முறைத்தான் வசந்த். இருவரையும் கண்டு சிரித்தபடி ஹரி நகர்ந்தான் கடையை நோக்கி.

"என் தேகம் எங்கும் உன் கானம் தங்கும்..

நீ வந்து கேளாமல்.. ஏங்கும் தமிழ்ச்சங்கம்..

பாடவா.. உன் பாடலை..."

டீக்கடை வானொலியில் எஸ்.ஜானகி ஏங்கிக் கொண்டிருந்தார்.

வேறு புறம் பார்த்தபடி நின்றிருந்த வசந்தின் தோளை மெல்லச் சுரண்டினாள் சாரு.

"என்ன?" – வசந்த்.

"கோபமா இருக்கீங்களா?"

"ஆமா, நான் ஏதோ உன்னை எல்லா விஷயத்துலயும் கம்பெல் பண்ற மாதிரி பேசுற?"

"பின்ன இல்லையா?, காதலிக்கிறியான்னு கேட்காம, காதலிக்கலாமான்னு தான கேட்டீங்க?"

“நான் கேட்டதும் நீ உடனே ஆமான்னு சொல்லிட்ட மாதிரி, பேச்சுக்கு மட்டும் பஞ்சமில்ல டி உன் கிட்ட”

“இப்போ என்ன? முறைச்சிட்டே தான் இருப்பீங்களா? எனக்கு டீயே வேணாம். நான் போறேன்”

“சரி தான் போடி”

அவள் பதிலுக்கு ஏதோ சொல்ல வாய் திறந்த வேளை கையில் டீயுடன் வந்தான் ஹரி.

“இங்க டீ ரொம்ப நல்லாயிருக்கும். தயக்கப்படாம் நீங்க குடிக்கலாம்” – ஹரி

“சும்மா சீன் போடுறா டா ஹரி! குடு. அதெல்லாம் குடிப்பா”

“இன்னும் ஏதாவது பேசுனீங்கன்னா.. டீயை மூஞ்சில ஊத்திடுவேன்” – மிரட்டியபடிக் குடித்தவளின் முகத்தையே நோக்கிய ஹரியிடம்..

“நிஜமாவே டீ ரொம்ப நல்லாயிருக்கு” என்று அவள் கூறியதும் ஹப்பாடாவெனப் புன்னகைத்தான் ஹரி.

“இந்தப் பக்கமா எங்க போற நீ?, அப்பா ஷோ-ரூம்க்கா?”

“ஆமாம்! மாமா இப்போ-ல்லாம் ரொம்ப டல்லாத் தெரியுறார், அவர் பெத்த மகன் தான் அவரைக் கண்டுக்கிறதில்லன்னா.. நானும் அவரைச் சும்மா விட்டுட முடியுமா?”

“அப்டியே தொழிலைக் கத்துக்கிட்டு நீயே கடையை உன் பேர்ல எழுதி வாங்கிக்க! மனுஷன் என்னைத் தொந்தரவு பண்ணாம இருப்பார்”

“அப்போ நீங்க என்ன தான் பண்ணப் போறீங்க”

“எனக்கு என் கலையிருக்கு! போற்றிப் பாடிக் கொண்டாட”

“ஓஹோ! கலை வந்து சோறு போடுமா?”

“அதுக்குத் தான் உன்னைத் தொழில் கத்துக்க சொல்றேன் டி! நீ சம்பாதிப்பியாம்! நான் கலையை வளர்ப்பேனாம்”

“பரவாயில்ல! கொஞ்சம் கூட வெட்கமே படாம, ஓபன் ஸ்டேட்மெண்ட் கொடுக்குறீங்க! வெர்ரி குட்”

“ஏய்.. நீ வேணா பாரு, அடுத்த 50 வருஷத்துல.. ஆம்பளைங்க எல்லாம் ஹோம் மேக்கரா மாறிடுவாங்க! பொம்பளைங்க வேலைக்குப் போய் சம்பாதிப்பாங்க!, அந்த மாற்றத்துக்கு அஸ்திவாரத்தை இன்னிக்கு நான்

போட்றேன்”

“அடப்பாவி...” – என்றபடி ஹரியும், தலையிலடித்துக் கொண்டபடி சாருவும் அவன் பேச்சைக் கேட்டு கடுப்பாகி நின்றனர்.

இந்திய அரசியலில் பெரும் மாற்றம் உண்டாகிய **1984**-ஆம் ஆண்டின் இறுதி மாதங்கள் அவை! உடல் நலக் குறைவினால் படுத்த படுக்கையாகி விட்ட மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர் அமெரிக்கா சென்றது இந்த காலகட்டத்தில் தான்! அதே போல் மத்தியில்.. இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டு நாடே ஸ்தம்பித்து நின்ற போது.. அவரது மகனான ராஜீவ்காந்தி பிரதமரானதும் இந்த வருட இறுதியில் தான்!

ஒட்டு மொத்தத் தமிழ்நாடும் எம்.ஜி.ஆர் உடல்நலம் தேறி எழுந்து வரப் பிரார்த்திக் கொண்டிருந்தது. வானொலி,தொலைக்காட்சி,தினசரி நாளிதழ்கள் என அத்தனையிலும் அவரைப் பற்றிய செய்திகளும்,வதந்திகளும் விடாது பிரசுரமாகிக் கொண்டிருந்தன.

இது ஒருபுறமிருக்க, இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டப் பிறகு ஆட்சியேற்ற ராஜீவ்காந்தி மத்தியில் ஆட்சியைக் கலைத்து மீண்டும் தேர்தலுக்கு வழி செய்து வைத்தார். தேர்தல் கொண்டாட்டம் நாடு முழுதும் ஜரூராய்த் துவங்க இந்திராகாந்தி இறந்ததையும், எம்.ஜி.ஆர் படுக்கையில் கிடப்பதையும் காட்டியே பிரச்சாரம் செய்தனர் கட்சியினர். இறுதியில் ஆஸ்பத்திரியிலிருந்த படியே அமோக வெற்றி பெற்று.. குணமாகி எழுந்து வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றார் செத்துப் போய் விட்டதாக ஊடகங்கள் பரப்பிய எம்.ஜி.ஆர்.

**1985**-ன் தொடக்கம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியிருக்க.. ஹரி வேலை செய்த பத்திரிக்கையில் வசந்த் எழுதிய நாடகக்கலை பற்றிய கட்டுரைக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. அதைத் தொடர்ந்து மறுமலர்ச்சி குழுவினருக்கு ஓரளவு பெரிய மேடைகளில் நாடகம் போடும் வாய்ப்புகளும் வந்த வண்ணமிருந்தன.

இங்கே சாருகேசனோ.. ஓராண்டுக்கும் மேலாக மாப்பிள்ளை வேட்டையில் ஈடுபட்டுச் சோர்ந்திருந்த நேரம் அவரைத் தேடி வந்து சந்தித்தார் அவரது நண்பர் மதிவாணன்.

தன் மகன் வெளிநாட்டில் படிப்பை முடித்து விட்டுத் திரும்புவதாகவும், வந்ததும் தனது டெக்ஸ்டைல் தொழிலை எடுத்து நடத்தப் போவதாகவும் சொல்லி, சாருமதியைப் பெண் கேட்டார். தோழனைப் பற்றியும்,அவன் குடும்பத்தைப் பற்றியும் நன்கு அறிந்தவர் என்பதால் உடனே தலையாட்டி விட்டார் சாருகேசன்.

இந்த யோசனைத் தனக்குத் தோன்றாமல் போனதேயெனத் தன்னையே திட்டிக் கொண்டவரிடம்.. இன்னும் மூன்றே மாதங்களில் மகன் வந்து விடுவானென்றும் வந்ததும் நிச்சயத்தை வைத்துக் கொண்டு உடனே திருமணத்தை முடித்து விடலாமென்றும் கூறிச் சென்றார். சொன்னபடி மூன்றே மாதத்தில் மனிதர் திரும்பி வர, உடனே செயலில் இறங்கினார் கேசன்.

அன்று காலை சாப்பாட்டிற்குத் தன்னறையிலிருந்து வெளியே வந்த வசந்த், டைனிங் டேபிளில் அமர்ந்திருந்த தந்தை முழு உற்சாகத்துடன் “வதனமே சந்திரபிம்பமோ” என்று பாடியபடி காலை உணவை உள்ளே தள்ளிக் கொண்டிருப்பதைக் கண்டு விழி விரித்தான்.

கடந்த ஓராண்டுகளாகவே சிந்தனைச் சிற்பியைப் போல் எந்நேரமும் யோசனையுடனே முகத்தை வைத்துக் கொண்டு சுற்றிய மனிதர், இன்று மறுபிறவி எடுத்ததைப் போன்று உற்சாகமும்,துடிப்புமாய் குரல் கொடுக்கவும், புருவத்தைச் சுருக்கிக் கொண்டு அவரைப் பார்த்தபடியே டைனிங் டேபிளில் அமர்ந்தான்.

அவன் வந்தமர்ந்ததும் விழி உயர்த்தி அவனைப் பார்த்தவர்..

“அன்னம்மா... உன் வளர்ப்புப் புள்ள டைனிங் டேபிளுக்கு வந்துட்டான்! என்னப்பா வேணும்? முட்டை ஆம்லெட்டா?, சிக்கன் 65-ஆ?” - பழையபடி வம்பு செய்ய..

அவரை ஏற இறங்கப் பார்த்தவன்..

“நான் பொதுவா ஃப்ரேக் ஃபாஸ்ட்டுக்கு நான்-வெஜ் எடுத்துக்கிறதில்ல” – என்றான்.

“ஓஹோ! முட்டை நான்-வெஜ்ல சேர்த்தியில்லயோ”

“அதெல்லாம் பாகவதர் காலத்துலேயே வெஜ் ஆயிடுச்சு”

பதில் பேசாமல் முறைப்புடன் சாப்பாட்டை அள்ளி வாயில் ஒதுக்கினார் அவர்.

அன்னம்மா தன் தட்டில் வைத்த இடியாப்பத்தைப் பார்க்காமல் தன் தந்தையையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் வசந்த்.

“என்ன டா?” – கேசன்.

“இல்ல, இத்தனை நாளா வீட்டுக்குள்ள வரும் போது வாயை வெளியே கழட்டி வைச்சிட்டு வந்தீங்களோ?”

“டேய்..”

“பாண்டிச்சேரி ஆஸ்ரமத்துல தியானத்தை முடிச்சிட்டு ஸ்ட்ரைட்டா வீட்டுக்குள்ள அடியெடுத்து வைச்ச மாதிரி.. அமைதியான முகத்தோட நடமாடிட்டு இருந்தீங்களே! இப்போ என்ன திடீர்ன்னு?”

“ஹாஹாஹா! பரவாயில்ல! அப்பனைப் பிடிக்காட்டியும் என் வேறுபாடு,மாறுபாட்டையெல்லாம் கவனிக்குற நீ”

“அவ்ளோ-லாம் சந்தோஷப் பட்டுக்காதீங்கப்பா!, இவ்ளோ நாள் நிம்மதியா இருந்தேன்! இனி உங்களோட வாக்குவாதம் பண்ணியே வாழ்க்கையை ஓட்டனுமேன்னு தான் கேள்வி கேட்குறேன்”

“எனக்கு மகனாப் பிறந்து நீ ஏகப்பட்டக் கஷ்டத்தை அனுபவிச்சுட்ட! என்ன டா?”

“இல்லைன்னு சொல்லி உங்க மனசைக் குளிர்விக்கிற எண்ணம் எனக்குக் கிடையாதுப்பா! உங்க மனசு குளிரனும்ன்னா.. ரெண்டு செம்பு தண்ணியை எடுத்து நீங்களே நெஞ்சுல ஊத்திக்கங்க! அதை விட்டுட்டு என்னைப் பொய் சொல்ல வைக்காதீங்க”

“அடி.. படவா! நான் உயிரோட இருக்குற வரைக்கும் என் அருமை உனக்குத் தெரியாது டா”

“ப்ச், சும்மா வசனம் பேசாம விஷயத்துக்கு வாங்கப்பா”

அவன் கூறியதும் அத்தனை நேரமிருந்த சிடுசிடுப்பு மாறி முகம் முழுதும் பல்லாக மகனை நோக்கியவர்..

“இந்த வீட்ல சுபகாரியம் நடக்கப் போகுதுடா” எனக் கூறினார்.

“சுபகாரியம்ன்னா?”

“கல்யாணம் டா! என் மருமகளுக்கு! என் மருமக குணத்துக்கும்,அழகுக்கும் ஏத்த ஒரு உத்தமபுருஷனை ஒரு வழியா தேடிக் கண்டுபிடிச்சுட்டேன்! என் சிநேகிதன் மதிவாணனை உனக்குத் தெரியும்ல..?” – என்றவர் தொடர்ந்து ஏதோ கூறிக் கொண்டே செல்ல..

‘என் மருமகளுக்குக் கல்யாணம்’ என்றதிலேயே உறைந்து போனவனுக்கு அடுத்து அவர் கூறிய எதுவும் காதிலேயே விழவில்லை. கோப நரம்புகள் புடைத்தெழுந்ததில் ஒரு நொடி விறைத்துப் போனவன்.. மறு நொடி சட்டென இருக்கையை விட்டு எழுந்து.. விறுவிறுவென மாடிப்படி ஏறிச் சென்று நேராக சாருமதியின் அறையில் நின்றான்.

அவளிடம் ஏற்கனவே சாருகேசன் விசயத்தைக் கூறி விட்டார் போலும்!

அழுது அழுது வீங்கிப் போனக் கண்களுடன் சோர்வாய்க் கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

அவனைக் கண்டதும் எழுந்து நின்றவள் நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்க்க முயலவில்லை.

கோபத்திலும்,ஆத்திரத்திலும் மூச்சு வாங்கப் பிடரி முடியைக் கோதியவன்... அவள் புறம் திரும்பி..

“அழுதியா?” என்றான்.

“..........”

“சாரு.. நிமிர்ந்து என்னைப் பாரு..”

பதிலற்று நின்றவளின் கையைப் பற்ற எண்ணி அவன் அவளருகே செல்ல, வேகமாகக் கையை விலக்கிக் கொண்டு இரண்டடிப் பின்னே நகர்ந்தவளிடம்..

“வெளிய போகனும். வா” என்றான்.

எங்கே என்பது போல் நிமிர்ந்து பார்த்தவளிடம்..

“நான் பேசனும். உன் கூட” என்றவன் தொடர்ந்து.. “வா” என்றான்.

பதிலற்று நின்றவளைக் கண்டு விட்டு வெளியே செல்ல அடியெடுத்து வைத்தவன் “என்னால மாமாவைக் கஷ்டப்படுத்த முடியாது” என்று கூறியவளின் குரலைக் கேட்டு அப்படியே நின்று விட்டான்.

ரௌத்திரத்துடன் அவளருகே நெருங்கியவன்...

“கஷ்டப்படுத்த முடியாதுன்னா என்ன அர்த்தம்?, அவர் பார்த்து வைச்சிருக்கிற மாப்பிள்ளையைத் தான் கல்யாணம் கட்டிக்குவேன்னு அர்த்தமா?” – அடிக்குரலில் சீற...

“வசந்த்.....” என்றபடி அதிர்ந்து அவன் முகம் நோக்கியவளுக்கு வார்த்தைகள் உறைந்து... கண்ணில் நீர் இறங்கியது.

பதில் பேசாமல் விறுவிறுவெனக் கீழே இறங்கியவன் வாசலைக் கடந்து வீட்டை விட்டு வெளியே செல்ல... அவனைத் தொடர்ந்து செல்லவிருந்தவளை “மதி” என அழைத்து நிறுத்தினார் கேசன்.

அவர் புறம் திரும்பாமலே நின்றவளிடம் “எங்கே-ம்மா போற?” என்று வினவ.. “சு..சும்மா தான் மாமா.. லேக் வரைக்கும்! காத்து வாங்க” என்று உளறிக் கொட்டியவள்.. அதற்கு மேலும் நிற்காது விறுவிறுவென நகர்ந்து விட்டாள்.

வீட்டிற்கு அருகிலிருந்த ஏரியில்.. ஒரு அரசமரத்தின் கீழ் நின்றிருந்தான் வசந்த்.

குனிந்தத் தலையுடனே வந்து நின்றவளை ஒரு நொடி விடாது நோக்கியவன்.. பின் அவள் கையைப் பற்றித் தன்னருகே இழுத்து நிறுத்தினான்.

“கையைப் பிடிக்க வந்தா.. தள்ளிப் போற?, என்னடி நினைச்சிட்டிருக்க உன் மனசுல?”

பதிலற்று உதட்டைக் கடித்து அழுகையை அடக்கியபடி வேறு புறம் பார்த்தாள் அவள்.

“என்னைத் தவிர வேற யாருக்கும் உன் கையைப் பிடிக்கிற உரிமை கிடையாது.” – அடிக்குரலில் அழுத்தமாய்க் கூறியவனைக் கேட்டும், அவன் முகம் பார்க்காதிருந்தவளைக் கண்டுப் பற்றியிருந்த அவள் கையை மேலும் அழுத்தினான் அவன்.

“சாரு... பதில் பேசு...”

அடக்கி வைத்திருந்த அழுகை மெல்ல அவள் கன்னத்தில் இறங்க, தன் இரு கரங்களாலும் அவள் முகம் பற்றித் தன் முகம் நோக்கச் செய்தான் அவன்.

தன் பெரிய கண்கள் முழுக்க அவன் பிம்பத்தை ஏந்திக் கொண்டுக் கண்ணீருடன் நிமிர்ந்து.... கொள்ளை,கொள்ளையானக் காதலை முகம் முழுக்க காட்டியபடி.. அவளையே வைத்த கண் வாங்காமல் பார்ப்பவனின் விழிகளைச் சந்திக்க முடியாமல்.. பட்டென இமை மூடிக் கொண்டவளிடம்...

“என்னடி?” என்றான் அவன். ஒலித்த குரலில் உரிமையுணர்வு ஓங்கியிருந்தது.

“...........”

“சாரு....”

“..........”

“பர்மிஷன் கேட்காம முத்தம் கொடுக்கச் சொல்லி என் மனசு நச்சரிக்க ஆரம்பிச்சிடுச்சு! நீ இப்போ கண்ணைத் திறந்து பார்க்கலேன்னா... என்ன வேணாலும் நடக்கலாம்”

அடிக்குரலில் எச்சரித்தவனைக் கேட்டும் அவள் விழிகளைத் திறக்கவில்லை.

மெல்லிய ஓசையுடன் சலசலத்துக் கொண்டிருந்த ஏரி நீரின் அருகே.. காலை வெயில் முகத்தில் பட விழி மூடி சிலையாய் நின்றவளைக் கண்டவனுக்கு இமைக்கத் தோன்றவில்லை.

அவள் கன்னத்தைப் பற்றியிருந்தக் கையின் பெருவிரலால் அவள் கண்களையும்,கன்னத்தையும் வருடியவன்...

“இப்போ எனக்கு உன் கிட்ட இதைச் சொல்லனும்ன்னு தோணுது. சொல்லட்டுமா?” – என்றான்.

என்ன சொல்லப் போகிறான் என்று புரிந்தது. ஆனாலும் விழி திறக்கவில்லை! எப்போது சொல்லப் போகிறான் என்று ஏங்கிய காலங்களை மூளை கணக்கெடுத்தது. செவி, அவன் கூறப் போகும் வார்த்தைகளைக் கேட்க.. ஆர்வமாய்த் தயாராகியது. லப்டப் இதயம் அவன் குரலுக்காக படபடப்புடன் காத்திருந்தது. நிமிடத்தில் சுறுசுறுப்பாகி விட்ட உடலுறுப்புகளை உணர்ந்து.. உறைந்து போய் நின்றவளின் கன்னத்தை அழுத்தினான் அவன்.

“கண்ணைத் திறந்து என்னைப் பார் சாரு...” – மெல்லிய குரலில் முணுமுணுத்தவனைக் கேட்டு உள்ளம் சிலிர்க்க.. மெல்ல விழி திறந்தவளின் முகத்தை... அடி முதல் நுனி வரைப் பொங்கி எழுந்த காதலுடன்.. பார்வையால் வருடியவன்..

“ஐ லவ் யூ” என்றான்.

இதயத்தில் ஏற்பட்ட நடுக்கம் வெப்பத்தைப் பரப்பியதில்.. உடல் முழுதும் சூடாகிப் போய் விட.. கன்னங்களின் வெம்மையால் படபடக்கத் தொடங்கிய இமைகளை அவசரமாய்க் கீழிறக்கியவளைக் கண்டு... அதற்கு மேல் தாங்காது அவள் முகம் நோக்கிக் குனிந்தான் அவன்.

அவன் முயற்சி புரிந்து.. அவன் கைகளிலிருந்துத் தன் முகத்தை விலக்கி.. அவன் மார்புக்குள் மறைந்து கொண்டாள் அவள்.

“இதுக்குப் பேரு தான் எஸ்கேப்பிஸமா?, சட்டு,சட்டுன்னு இங்க சாய்ஞ்சுக்கிற?, ஆனா.. நான் என் கொள்கைல இருந்துக் கீழிறங்க மாட்டேன்! நோ ஹக்கிங் ஒன்லி கிஸ்ஸிங்” – என்றபடித் தன் இரு கைகளையும் பாக்கெட்டுக்குள் நுழைத்துக் கொண்டவனைக் கண்டு சிரித்தாள் அவள்.

“சாரு...”

“ம்ம்”

“ஐ லவ் யூ…!”

ஒரே வார்த்தைகள் தான்! ஆனால்.. ஒவ்வொரு முறை அவன் கூறுகையிலும் ஒவ்வொரு விதமாக ஒலித்துத் தன்னை சிலிர்க்கச் செய்யும் அதிசயத்தை எண்ணி வியந்து கொண்டிருந்தவளை தொந்தரவு செய்யும் பொருட்டு அவன் மேலும் பேசினான்.

“ஏதாவது பதில் பேசு சாரு, அமைதியா இருந்தா என்ன அர்த்தம்?”

“நான் கேட்டப்போ ஏன் நீங்க சொல்லல?”

“இப்போ சொல்லலாம்ன்னு தான் அப்போ சொல்லல”

“............”

“மஞ்சள் கலர் தாவணில உன்னைப் பார்த்து.. ஐ லவ் யூன்னு லெட்டர் கொடுத்தப்பவே எனக்குத் தெரியும், இனி வாழ்நாள் முழுசுக்கும் எனக்கு நீ தான்-ன்னு!

“.................”

“நியாயமாப் பார்த்தா.. எங்கப்பா என்னை விட்டுட்டு உன் மேல மட்டும் பொழியுற பாசத்துக்கு.. எனக்கு உன் மேல வெறுப்பு தான் வரனும்! ஆனா.. அந்த மனுஷனோட ரத்தம் எனக்குள்ளயும் ஓட்றதாலயோ என்னவோ.. நானும் உன் மேல அதிகமான அன்பை வைச்சுட்டேன்”

“.............”

“ஊரெல்லாம் தேடி உன் மாமா கூட்டிட்டு வர்ற மாப்பிள்ளை அவரை மாதிரி தத்தியாத் தான் இருப்பானே தவிர ராஜகுமாரனா இருக்க மாட்டான்!, அதனால.. ஒழுங்கா என்னையேக் கட்டிக்க”

“நாம கல்யாணமெல்லாம் பண்ணிப்போமா?” – அவன் தோளிலிருந்துத் தலையை உயர்த்தாமல் கேட்டவளிடம்..

“ஏன், கல்யாணம் பண்ணிக்காமலே வாழலாமா?, எனக்கொன்னும் பிரச்சனையில்ல! எதுக்கும் உன் மாமா கிட்ட ஒரு தடவை கன்சல்ட் பண்ணிக்க”

“ப்ச், விளையாடாதீங்க வசந்த்”

“கல்யாணம் பண்ணிக்காம எப்படிடி குடும்பம் நடத்த முடியும்?, பிள்ளை,குட்டியெல்லாம் பெத்துக்க முடியும்?”

புருவம் சுருக்கி யோசித்தவளின்.. கன்னத்தில் தட்டி..

“நான் ஏற்கனவே சொன்னது தான்! நீ வேலைக்குப் போற! நான் கலையை வளர்க்குறேன்”

“எப்படி வளர்ப்பீங்க?”

“நிறைய ஐடியா வைச்சிருக்கேன்! அதையெல்லாம் இப்போ நான் சொல்ற மூட்ல இல்ல! இப்போ என் மூட்-ஏ வேற! நீ கொஞ்சம் நிமிர்ந்து என் முகத்தைப் பார்த்தேனா.. என் எண்ணத்தை நிறைவேத்திக்குவேன்!”

அவனது கேலிகளுக்குப் பதிலளிக்காமல்.. தூரத்தில் தெரிந்த ஏரி நீரை வெறித்தவள்.. “வசந்த்…” என்றழைத்தாள்.

“ம்ம்”

“மாமா முன்ன மாதிரி இல்ல வசந்த். ரொம்பத் தளர்ந்து போயிட்டார்”

“எதை வைச்சு சொல்ற?”

“பி.பி மாத்திரையைத் தவிர, இன்னும் வேற ஏதோ மாத்திரைகளும் சாப்பிட்றார்! கேள்வி கேட்டா சரியா பதில் சொல்ல மாட்டேங்குறார்! இந்தக் கொஞ்ச நாளா.. ஆளே மாறிப் போய்.. ரொம்ப அமைதியா இருந்தார். தொழில்ல எதுவும் பிரச்சனையோன்னு நினைச்சு.. அவரோட ஷோ-ரூம்க்குப் போறதை வழக்கமாக்கிக்கிட்டேன்! ஆனா.. அங்கே எல்லாம் ஸ்மூத்தா தான் போயிட்டிருக்கு!” – மேலும் தொடரப் போனவளைத் தடுத்து…

“ப்ச், ஏன் டி என்னைப் பத்தி யோசிக்கவே மாட்டியா நீ?, ஐ லவ் யூ சொல்லியிருக்கேன்! பதிலுக்கு நீயும் சொல்லனும். ஆனா சொல்லல! அதைத் தாண்டி வேற ஒன்னு கேட்டேன்! அதுக்கும் பதில் இல்ல! என்ன தான் நினைச்சிட்டிருக்க நீ?” என்றான்.

“வசந்த் நான் சீரியஸா பேசிட்டிருக்கேன்”

“சொல்லு”-எரிச்சலுடன் முகத்தைச் சுருக்கினான் அவன்.

“நினைச்சதெல்லாம் படி, கல்யாணத்தைப் பத்திக் கடைசியா யோசிக்கலாம்ன்னு சொன்னவர், ஏன் திடீர்ன்னு கல்யாணப் பேச்சை எடுக்குறார்ன்னு தெரியல” என்று கூறித் தொடர்ந்து “மாமாவை என்னால எப்பவும் கஷ்டப்படுத்த முடியாது. அவர் தான் எனக்கு அம்மா,அப்பா எல்லாம்! அவருக்கு ஏதாவதுன்னா.. நிச்சயம் நான் தாங்கிக்க மாட்டேன்” – என்றாள் அவள்.

“ஏய்ய்.. காலைல கூட அவரைப் பார்த்தேன்! 4 இடியாப்பம்.. தேங்காய்ப் பாலோட ரசிச்சு,ருசிச்சு சாப்பிட்டார்! அவருக்கா எதுவும் ஆகிடப்

போகுது?, அவரெல்லாம் இரும்பு மனிதர்! நூறு வருஷத்துக்கு நல்லாயிருப்பார்!”

“அப்பா-ன்ற பாசமே இல்லையா உங்களுக்கு? ஏன் இப்படிப் பேசுறீங்க?”

“ப்ச், இத்தனை வருசமா இல்லாம திடீர்ன்னு எப்படிடி பாசம் வரும்! ஒரு வகையில எனக்கு உன்னைப் பார்த்துப் பொறாமையா கூட இருக்கு. இந்த மாதிரி நான் யார் மேலயாவது பாசம் வைக்கனும்ன்னு தோணுது. அது நிச்சயம் எங்கப்பாவா இருக்க முடியாது சாரு. அந்த ஸ்டேஜை அவரும்,நானும் எப்பவோ தாண்டிட்டோம்!”

“இப்படியே பேசிட்டிருக்காதீங்க ப்ளீஸ்! மாமா ரொம்பப் பாவம்"

“சரி பாவமாவே இருக்கட்டும்! இப்போ என்னன்ற அதுக்கு?”

“நீங்க இந்தக் கல்யாண விசயத்தை எப்படி ஹாண்டில் பண்ணினாலும் சரி, மாமாவை ரொம்ப வருத்தப்பட வைக்காதீங்க”

“சரி டி! நீ சொல்றபடியே கேட்குறேன்.. இப்போ என்னை முத்தம் கொடுக்க விடு..” என்றபடி அருகே வந்தவனை விலக்கித் தள்ளி ஓடியே போய் விட்டாள் அவள்.

வசந்துடன் பேசி விட்டு வீடு வந்து சேர்ந்தவளை அன்று மாலை அவள் அறையில் சந்தித்த கேசன்.. அவள் சற்றும் எதிர்பாராத செய்தியைக் கூறினார்.

பரபரப்புடன் மாடியேறி வந்தவரை குழப்பத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள் சாரு. நேற்றிரவு அவர் திருமண விஷயத்தைப் பற்றிப் பேசிச் சென்றதிலிருந்து மனிதரைக் கண்டாலே மனது அடித்துக் கொள்கிறது அவளுக்கு.

“என்னாச்சு மாமா?, ஏன் இப்படி மூச்சு வாங்க மேலே ஏறி வர்றீங்க?, ஒரு குரல் கொடுத்திருந்தா நானே வந்திருப்பேன்”

“பரவாயில்லம்மா! இன்னும் எத்தனை நாள் நீ இந்த வீட்ல இருக்கப் போற?, உனக்காக மாடியேறி வர்றதெல்லாம் எனக்கு ஒரு பெரிய விஷயமே இல்லம்மா”

பாசமாய்க் கூறியவரைக் கேட்டு வயிற்றுக்குள் புளியைக் கரைத்தது அவளுக்கு.

“எ…எ..என்ன மாமா சொல்றீங்க?” – தயங்கித் தடுமாறி வினவியளிடம் தன் கையிலிருந்தப் புடவையையும், நகையையும் நீட்டியவர்..

“உடனே இதைக் கட்டிக்கிட்டுத் தயாராகும்மா! இன்னும் அரை மணி நேரத்துல மதிவாணன் குடும்பம் உன்னைப் பார்க்க வர்றாங்க. குமார் தம்பியும் வருது. அதனால அழகா சிங்காரிச்சுக்கோ” – என்று முழுச் சிரிப்புடன் கூற.. ஆடிப்போய் விட்டாள் சாருமதி.

மூளை மரத்துப் போய் செயலற்று நின்றவளுக்கு அடுத்து என்ன செய்வதென்று புரிபடவில்லை. வசந்த் வேறு வீட்டில் இல்லை. இப்படி முன்னெச்சரிக்கை எதுவுமின்றி கேசன் தடாலடியாகக் காரியத்தில் இறங்குவார் என அவள் எதிர்பார்க்கவில்லை.

நிமிடத்தில் நெற்றி முழுவதும் வியர்த்துப் படபடத்துப் போய் செய்வதறியாது விழித்தவளின் கண்களில் நீர் சேரத் தயாராகிக் கொண்டிருந்தது.

“என்னடா அம்மா?” – வாஞ்சையுடன் அவள் தலை கோதியவரின் மீது தோன்றிய நம்பிக்கையில்.. சட்டென நிமிர்ந்து அவர் முகம் நோக்கியவள்..

“எனக்கு.. எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம் மாமா.. நா..நான்.. உங்களை விட்டுட்டு எங்கேயும் போக மாட்டேன்” – என்று அழுகைக் குரலில் கூற.. தானும் கலங்கியபடி அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டார் கேசன்.

“எனக்கு மட்டும் உன்னைப் பிரிஞ்சு இருக்கிறது சந்தோசத்தைக் கொடுக்கும்னாம்மா நினைக்குறா?, சந்திரா கல்யாணத்தப்போ என்ன மாதிரி மனநிலைல இருந்தேனோ.. அதே மனநிலை தான்ம்மா இப்பவும். சந்தோஷம்,துக்கம்ன்னு எல்லா உணர்வும் ஒன்னு கூடி நிற்குது. நீ பெண் பிள்ளைம்மா! என்னைக்கா இருந்தாலும்... வேற ஒரு வீட்ல காலடி எடுத்து வைச்சுத் தான் ஆகனும்.. உன் வாழ்க்கையும் அடுத்த கட்டத்துக்குப் போக வேண்டாமா?, நீ கல்யாணமாகிக் குழந்தைகளோட திருப்தியா வாழ்றதை இந்த மாமன் பார்க்க வேண்டாமா?”

மெல்லிய குரலில் கூறியவரின் அன்பில் நெகிழ்ந்து மேலும் கண்ணீர் சிந்தினாள் அவள்.

“நீ படிப்பை முடிச்சு நினைச்ச மாதிரி லெக்சரர் உத்தியோகத்துல சேர்ந்தப்புறம் பொறுமையா கல்யாணம் பண்ணி வைக்கலாம்ன்னு தான்ம்மா நினைச்சிருந்தேன். ஆனா.. ஆனா.. காலம்.. நமக்காகக் காத்திட்டிருக்காது போல”

வருத்தத்துடன் கூறியவரைக் கேட்டு அதிர்ந்து அவர் தோளிலிருந்துத் தலையை நிமிர்த்தி அவர் முகம் நோக்கியவள்..

“மாமா.. எங்கக்கிட்டயிருந்து நீங்க ஏதோ மறைக்கிறீங்க தான?, என்னாச்சு உங்களுக்கு?, ஏதேதோ மாத்திரை எடுத்துக்கிறீங்க! கேட்டா.. சரியா பதில் சொல்ல மாட்டேங்குறீங்க” – என்று கூறவும்.. கண்ணாடியைக் கழட்டிக் கண்ணைத் துடைத்துக் கொண்டவர்.. ஒரு பெருமூச்சுடன்..

“எனக்கு ஒன்னுமில்லம்மா! ஆனா.. என் உடம்பு இன்னும் எத்தனை காலத்துக்கு என் சொல் பேச்சும் கேட்கும்ன்னு தெரியல. அதுக்குள்ள உனக்கு ஒரு நல்லது பண்ண ஆசைப்பட்றேன்” – என்று கூற...

அவரிடம் என்ன சொல்லி மறுக்கவென்று புரியாமல்.. கண்ணீர் விட்டபடி நின்றவளிடம்.. “அதை,இதை யோசிக்காம.. சீக்கிரம் ரெடியாகு டா அம்மா! இந்தக் கல்யாணம் தான் நீ எனக்குக் கொடுக்கப் போற மிகப் பெரிய சந்தோஷம். அதை அனுபவிக்க இந்த நிமிஷத்துல இருந்துத் தயாராகுறான் இந்த சாருகேசன்” எனக் கூறிப் புன்னகைத்து விட்டு படியிறங்கிச் சென்று விட்டார்.

அவர் தன் கையில் திணித்தப் புடவையுடன் சிலையாய் அமர்ந்திருந்தவளைக் கண்டபடி அவள் அறைக்குள் நுழைந்த அன்னம்மா.. பதறிப் போய்..

“என்ன கண்ணு நல்ல காரியம் நடக்கப் போறப்ப இப்படி அழுகுற?,” என்று அவள் கண்ணீரைத் துடைத்தார்.

அப்படியும் விடாது வழிந்த நீருடன் “அவர் எங்க அன்னம்மா?” என்று வினவினாள்.

“யாரு கண்ணு?”

“வசந்த்?”

“தம்பி காலைல வெளிய போனது! ராவுக்குத் தான கண்ணு வீட்டுக்கு வரும்.”

“ப்ச்” – என்றபடி நெற்றியைப் பற்றிக் கொண்டு அமர்ந்தவளிடம்.. “என்ன கண்ணு?” என்று வினவினார் அன்னம்மா.

“எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம் அன்னம்மா!”

சாருகேசனிடம் கூற முடியாததை அன்னம்மாவிடமேனும் கொட்டி விடும் நோக்கத்தோடு அவள் வாய் திறந்த வேளை.. கீழே பேச்சுக்குரல்களும் அதைத் தொடர்ந்து மாடியை நோக்கி “அன்னம்மா... சீக்கிரம் மதியைத் தயார் பண்ணிக் கூப்பிட்டு வா” என்று சாருகேசன்

கொடுத்த சத்தமும் கேட்டது.

“சரிங்கய்யா” என்று பதில் குரல் கொடுத்த அன்னம்மாவிற்குச் சத்தியமாக சாருமதியின் அழுகைக்கானக் காரணம் புரிபடவில்லை.

“அவங்க எல்லாம் வந்துட்டாங்க கண்ணு! இப்போ போய் இப்படி அழுதா என்ன அர்த்தம்?”

“என்னால முடியாது அன்னம்மா! எனக்குக் கல்யாணம் வேண்டாம்”

“அய்யய்ய.. உன் வயசுப் பொண்ணுங்களுக்குக் கல்யாணத்தை நினைச்சு வர்ற சாதாரண பயம் தான் கண்ணு இது! போகப் போக சரியாப் போயிடும்! கிளம்பு.. மாமா சத்தம் போடப் போறாரு”

அசையாது நிற்பவளைப் பொருட்படுத்தாமல் கட்டிலிலிருந்த சேலையைக் கையில் எடுத்தவர் அதைப் பிரித்தபடி..

“மாப்பிள்ளை கூட பேசிப் பழக ஆரம்பிச்சுப்புறம் இந்தப் பயமெல்லாம் தன்னால ஓடிடும். நீ போ.. முகத்தை கழுவிட்டு வா” என்றார்.

“முடியாது அன்னம்மா”

“கண்ணு.....”

“நான்... நான் அவரைக் காதலிக்குறேன் அன்னம்மா! என்னால.. அவரைத் தவிர யாரையும் கல்யாணம் பண்ணிக்க முடியாது.”

அவள் கூறியதைக் கேட்டுக் கையிலிருந்து சேலையை நழுவ விட்ட அன்னம்மா “என்ன கண்ணு சொல்ற?, யாரைச் சொல்ற” என்று பதற..

“வசந்த்” – என்றாள்.

“நம்ம தம்பியா?” என்று வாய் பிளந்த அன்னம்மா பின் முகம் மலர்ந்து..

“இதை உன் மாமாரு கிட்டச் சொல்ல வேண்டியது தானே?, ஆசையா வளர்த்த உன்னை சொந்த மகனுக்கேக் கட்டிக் கொடுக்க அவர் என்ன யோசிக்கவா போறாரு?, நீ ஏன் கண்ணு அவர் கிட்ட சொல்லல?” என்று வினவினார்.

“மாமா இப்படி அவசரமா ஏற்பாடு பண்ணுவார்ன்னு நான் நினைக்கவே இல்ல அன்னம்மா.”

“இப்போ என்ன கண்ணு பண்றது?”

“தெரியல. அவர் வேற வீட்ல இல்ல”

“அன்னம்மா... மதி ரெடியாய்ட்டான்னா கீழ கூப்பிட்டு வா” – மீண்டும்

மாடியை நோக்கிக் குரல் கொடுத்தவரைக் கண்டு கையைப் பிசைந்தார் அன்னம்மா.

“கண்ணு, இப்போ போய் உன் மாமாரு கிட்ட எதையும் சொல்லிப் புரிய வைக்க முடியாது. உன் மாமாருக்காக நீ இதை உடுத்திக்கிட்டுப் போய் அவங்க முன்னாடி நில்லு. மத்ததைப் பொறவு பேசிக்கலாம்”

“அன்னம்மா......” – கலங்கிய முகத்துடன் நின்றவளைச் சமாதானப்படுத்தி உடை மாற்ற வைத்துக் கீழே அழைத்துச் சென்றார்.

பெண் பார்க்கும் படலத்தைப் போல் பூ,பழத் தட்டுடன் வந்து அவளைச் சங்கடப்படுத்த வேண்டாமென்கிற நோக்குடன் சாதாரணமாக வருகை தந்திருந்தனர் மதிவாணன் குடும்பத்தினர்.

சம்பிரதாய நலம் விசாரிப்புகளுக்குப் பின்.. பெரியவர்கள் திருமணத்தைப் பற்றிப் பேசத் துவங்க.. தன் மருமகளை நோக்கிய சாருகேசன்..

“இவன் தான்-ம்மா குமரன். நான் உனக்குப் பார்த்திருக்கிற மாப்பிள்ளை! நீ இவனை ஏற்கனவே பார்த்திருக்கேல?” என்று வினவ.. பதில் பேசாமல்.. தலை குனிந்தபடி அமைதியாக நின்றிருந்தாள் சாரு.

“வெட்கப்பட்றா போல இருக்கு! தம்பி, உங்களுக்கு மதிக்கிட்ட எதுவும் பேசனுமா?” – கேசன்

“பரவாயில்ல அங்கிள். அவ ஏற்கனவே ரொம்ப டென்ஷனா இருக்குற மாதிரியிருக்கு”

“ஹாஹாஹா.. நல்ல பையன்ப்பா நீ” – என்றவர் தொடர்ந்து “மதி, அந்தக் காஃபி தட்டை எடுத்து தம்பிக் கிட்ட கொடும்மா” என்று ஏவ.. எந்திரமாய் நடந்து சென்று அவன் முன்பு காஃபியை நீட்டி விட்டுப் பின் மீண்டும் அன்னம்மாவின் அருகே நின்று கொண்டாள்.

அதன் பின் அனைவரும் பொதுவான பேச்சுக்களோடு அமர்ந்திருந்த சமயம் சரியாய் உள்ளே நுழைந்தான் வசந்த். வந்ததும் அவன் கண்டது மதிவாணனையும்,அவர் மகனையும் தான்.

“வாங்க அங்கிள், எப்படியிருக்கீங்க?” என்று முகம் மலர விசாரித்தவன் “ஹே குமார், ஹவ் ஆர் யூ மேன்?” என்று குமரனிடம் கை குலுக்கினான்.

“எங்களை நலம் விசாரிக்கிறது இருக்கட்டும்! உன் ஆர்ட்டிகிளை வாரம் தவறாம ஃபாலோ பண்ணிட்டு வர்றேன் நான்! ரொம்ப நல்லாயிருக்கு வசந்த். அடுத்த முறை நீ நாடகம் நடிக்கும் போது.. எனக்கு முதல் சீட்ல

டிக்கெட் வாங்கிக் கொடு. நான் பார்க்கனும்”

பாராட்டிய மதிவாணனிடம் சிரித்து சரியெனத் தலையாட்டியவன் தந்தையின் முகம் போகும் போக்கைக் காண வேண்டி அவர் புறம் திரும்ப.... அவர் அருகே.. புதுச்சேலை, நகை மற்றும் தலை நிறைய பூவுடன்.. குனிந்தத் தலையோடுக் கோபமும், அழுகையுமாய் நின்றிருந்தவளைக் கண்டுத் திடுக்கிட்டு.. ஒரு நொடி உறைந்துப் பின் அங்கிருந்த சூழ்நிலையை ஆராய்ந்தான்.

பெண் பார்க்கும் படலத்திற்கான சம்பிரதாயம் எதுவும் பின்பற்றப்படவில்லையென்றாலும் அச்சூழ்நிலைக் கொடுத்த சுப காரிய வாடை.. அவனால் சுவாசிக்கவே முடியாத அளவிற்குத் திணறலைக் கொடுத்தது.

அனைவரையும் சுற்றி வந்த அவன் பார்வை கடைசியாகத் தந்தையிடம் நின்று “எ...என்ன??” என்று கேட்டவனுக்கு அடுத்து வார்த்தைகள் எதுவும் தொண்டைக்குழிக்குள் கிளம்பாது போக.. முயற்சியை நிறுத்தித் தந்தையின் முகத்தையே நோக்கினான்.

“என்னடா அப்படிப் பார்க்குற?, காலையிலயே சொன்னேனே! மதிவாணன் மகனைத் தான் மதிக்குப் பார்த்திருக்கேன்னு! நான் சொன்னதை நீ எங்க முழுசா கேட்ட?, இவன் என்ன பேசுறது, நான் என்னக் கேட்குறதுன்னு எழுந்துல்ல போய்ட்ட?”

தன் போக்கில் புலம்பிச் சென்றவரைக் கண்டு கொள்ளாமல்.. முதன் முறையாகச் சேலை உடுத்தித் தன் கண் முன்னே நிற்பவளைத் தலை முதல் கால் வரை நோக்கினான் அவன்.

பார்க்கப் பார்க்கக் கண்ணில் வெறி ஏற.. சட்டெனத் திரும்பி குமரனை நோக்கினான். வெகு உரிமையாக.. அவ்வப்போது அவளைத் தீண்டிச் சென்ற அவன் பார்வையில் கை முஷ்டியை இறுக்கிக் கொதித்துப் போனவனுக்கு “உள்ள போடி..” என்று அவளை நோக்கிக் கத்த வேண்டும் போலிருந்தது.

பல்லைக் கடித்துக் கொண்டு அமர்ந்திருந்தவனின் மனநிலை புரியாது.. சாருகேசன் வேறு, தாங்கள் கிளம்புவதாகச் சொன்னவர்களிடம்.. “வந்ததுக்கு அவ தலைல ஒரு முழப் பூவை வைச்சு இந்த சம்மந்தத்தை உறுதி படுத்திட்டுப் போனீங்கன்னா.. நான் ரொம்ப சந்தோசப்படுவேன்” எனக் கூறி.. வசந்தின் ரத்த அழுத்தத்தை அநியாயத்துக்கு எகிற வைத்தார்.

விருட்டெனத் தன் இருக்கையிலிருந்து எழுந்தவனின் முகத்தைக்

கவனித்துக் கொண்டிருந்த அன்னம்மா அவசரமாக இடையிட்டு..

“ஐயா.. நல்ல நேரம் பார்த்துத் தான்ய்யா பூ வைக்கனும்! வீட்ல முதல்,முதலா நடக்குற சுபகாரியமாச்சே! இன்னைக்குச் சும்மா பொண்ணைப் பார்த்துட்டு போகலாம்ன்னு தான வந்திருக்காங்க?, இன்னொரு நல்ல நாளாப் பார்த்து மத்த சம்பிரதாயமெல்லாம் வைச்சுக்கலாம்.” என்று கூற..

“அதுவும் சரி தான்” எனத் தலையாட்டிய கேசனைக் கண்டு “அது பரவாயில்ல அன்னம்! ரெண்டு பேரும் தம்பதி சகிதமா ஜோடியா நின்னு உன் மாமா கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக்கட்டும்! மனுஷன் சந்தோசப்படுவார்” என்று மதிவாணன் கூற.. மறுக்க முடியாமல் மலங்க விழித்தார் அன்னம்மா.

“போடா குமார், நீயும் வாம்மா” – என்று மதிவாணனின் மனைவி அழைத்தும்.. அசையாமல் நின்றவளைக் கஷ்டப்பட்டு நகர்த்திக் கொண்டு போய் குமரனின் அருகே நிற்க வைத்தார் அன்னம்மா.

ஜோடியாகக் காலில் விழுந்தவர்களைக் கண்டு உள்ளம் பூரிக்கப் புன்னகையுடன் நிமிர்த்தியவர் “நூறு வருஷம் சீரும்,சிறப்புமா நல்ல படியா வாழனும் ரெண்டு பேரும்” என வாழ்த்தித் தன் வளர்ப்பு மகளின் உச்சியில் இதழ் பதித்து.. உணர்ச்சிவசப்பட்டுக் கண்ணீர் வடித்தார் சாருகேசன்.

மூன்றாம் மனிதர்களின் முன்பு தந்தையின் மானத்தை ஏலம் போட விரும்பாமல் பல்லைக் கடித்துக் கொண்டு நடப்பதைச் சகித்துக் கொண்டிருந்த வசந்த், இந்த நிகழ்வால் ஆத்திரத்தின் எல்லைக்கே சென்று விட்டான்.

எவனோ ஒருவனின் அருகில் ஜோடியாக நிற்பவளைக் கண்டவனுக்குக் காலை அவள் தலை சாய்த்தத் தன் நெஞ்சம் பற்றியெரிவதைப் போன்றொரு உணர்வு! ஓடிச் சென்று அவள் கையைப் பற்றித் தன்னோடே இழுத்துக் கொண்டு செல்லும் வேகம் பிறக்க.. கட்டுப்படுத்த முடியாமல்.. பின்னந்தலையைக் கோதியவனுக்குப் பைத்தியம் பிடிக்காத குறை!

நேரம் பார்த்துப் பொங்கியெழக் காத்திருக்கும் சுனாமியாய் மூச்சு வாங்க உச்சகட்ட சீற்றத்துடன் இறுகிப் போய் நின்றிருந்தான்.

“அப்டின்னா நாங்க கிளம்புறோம் சம்மந்தி” என்ற மதிவாணனின் மனைவி வாசலை நோக்கிச் செல்ல.. அவரைத் தொடர்ந்து மற்றவர்களும் வெளியே சென்றனர். கடைசி வரைத் தன் முகத்தை

நிமிர்ந்து பார்க்காத சாருமதியைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடந்து சென்ற குமரனின் தலையை வெட்டிப் போட்டு விடும் வெறி வசந்துக்கு.

அவர்களது கார் தங்கள் வீட்டைத் தாண்டும் வரை அமைதியாக நின்றவன், பொறுத்தது போதுமெனப் பொங்கியெழுந்து.. டீபாய் மீதிருந்த டீ-கப்புகளை விளாசித் தள்ளியதில் பெரும் சத்தத்தோடு கப்புகள் அனைத்தும் வாசலுக்குப் பறந்தன.

“என்னடா பண்ற நீ?” – தான் இருக்கும் மனநிலையைக் கெடுக்கும் நோக்குத்தோடு நடந்து கொள்ளும் மகனைக் கண்டுக் கொதித்துப் போய் கேட்டவரிடம்..

“நீங்க யாரைக் கேட்டு இதையெல்லாம் பண்றீங்க?” – என்று முழுக்குரலில் கத்தினான்.

“தம்பி,தம்பி மெல்லப் பேசுங்க தம்பி” – அவனை அடக்கும் முயற்சியில் அன்னம்மா.

மாமன் தன் உடல்நிலையைப் பற்றிக் கூறியதிலிருந்துக் கலக்கத்துடனிருந்த சாருமதி அவசரமாக அவனருகே ஓடிச் சென்று “வசந்த், பொறுமையா.. பொறுமையாப் பேசுங்க வசந்த் ப்ளீஸ்” என்று கெஞ்ச..

“பொறுமையாப் பேச எனக்கு வாய்ப்புக் கொடுத்தாரா இவரு?, அவர் இஷ்டத்துக்கு எல்லாம் பண்ணுவார்! நான் கைக் கட்டி வேடிக்கை பார்க்கனுமா?” – என்று மீண்டும் கத்தினான் அவன்.

“உனக்கு எதுக்கு டா நான் வாய்ப்பு கொடுக்கனும்! என் மருமகளுக்குக் கல்யாணம் பண்ண.. நான் யாரை டா கேட்கனும்?” – தானும் பதிலுக்குக் கத்தத் துவங்கியவரிடம்..

“என்னைக் கேட்கனும்! அவளை உயிரா நேசிக்கிற என்னைக் கேட்கனும்..” – என்று அவன் அடிக்குரலில் கூற..

ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விட்டார் சாருகேசன்.

“என்னடா சொல்ற?”

“ஆமா, நான் சாருமதியைக் காதலிக்கிறேன். அவளைக் கல்யாணம் பண்ணிக்கனும்ன்னு ஆசைப் பட்றேன். எனக்கு அவளைக் கட்டிக் கொடுங்க”

அடக்கப்பட்டக் கோபத்துடன் தன் தந்தை முகம் பார்த்து அழுத்தமாகக் கூறினான் அவன்.

திடீரென உடல் முழுதும் உண்டானத் தளர்ச்சியில் கண்ணாடியைக் கழட்டி நெற்றிப் பொட்டைத் தேய்த்துக் கொண்டவரிடம்..

“என்னைத் தவிர அவளைக் கட்டிக்க எவனுக்கு உரிமை இருக்குன்னு இந்த வேலையெல்லாம் பார்க்குறீங்க நீங்க? ஏன் உங்கக் கண்ணுக்கு நான் ஆம்பளையாத் தெரியலயா? ஓ!! சார் ராஜகுமாரனைல தேடிட்டு இருந்தீங்க?, இந்த ராப்பிச்சைக்காரனையெல்லாம் ஒரு ஆளா நினைப்பீங்களா?”

“வசந்த்....” – அழுகையுடன் அவனை அடக்க முற்பட்டாள் சாருமதி.

“நீ பேசாதடி! நீ பேசாத! இவர் சொன்னா.. இவர் சொன்னா... எவன் முன்னாடி வேணாலும் சீவி,சிங்காரிச்சுட்டு நிற்பியா நீ? இதுக்குப் பேரு என்ன தெரியுமா?” – அவன் தொடர்வதற்குள்..

“டேய்ய்ய்ய்ய்” என்றபடி அவன் சட்டையைக் கொத்தாகப் பற்றினார் சாருகேசன்.

“இதுக்கு மேல ஒரு வார்த்தைப் பேசுன, பெத்தப் புள்ள-ன்னு கூட பார்க்க மாட்டேன்! அடிச்சே கொன்னுடுவேன்”

“நீங்க அடிக்கிற வரைக்கும் வேடிக்கைப் பார்த்துட்டு சும்மா நிற்பேன்னு நினைச்சீங்களா?, அப்பான்ற மரியாதைக்காக நீங்க அடிச்சப்பல்லாம் கைக்கட்டி நின்ன என் பொறுமையை இன்னைக்கு நீங்க ரொம்பவே சோதிச்சிட்டீங்க! இப்போ கை வைச்சுப் பாருங்க.. என்ன நடக்குதுன்னு?”

“என்ன டா பண்ணுவ? அடிப்பியா? அடி டா! அடி டா பார்ப்போம்! வளர்த்தவனைக் கடவுளாப் பார்க்குற பாசமான பொண்ணு டா அவ! அவளைப் பத்தி ஒரு வார்த்தை நீ பேசுனாலும்.. நாக்கை இழுத்து வைச்சு அறுத்துடுவேன்! பெத்த அப்பன் மேல அன்பு,அக்கறையில்லாம, அவன் பேச்சையும் மதிக்காம.. தான்தோன்றித்தனமா சுத்துற உனக்கு.. அவளுக்கும் எனக்குமான அன்பைப் பத்தி எப்படிடா புரியும்?”

“அன்பைப் பத்தியெல்லாம் எனக்குத் தெரியனும்ன்னா.. நீங்க அதை முதல்ல எனக்குக் காட்டியிருக்கனும்”

“என்னடா காட்டாம இருந்தேன்?, பொண்டாட்டி செத்தா புது மாப்பிள்ளைன்னுவாங்களே! நான் அந்த மாதிரி எவளையும் கட்டிக்கிட்டுக் கூட்டி வந்து உன்னைக் கொடுமைப் படுத்திட்டேனா?, இல்ல மூணு வேளை சோத்துக்கு வழியில்லாம தெருவுல விட்டுட்டேனா?”

“ஓ! அப்டின்னா.. பெத்தப் புள்ளையோட வயிறு வாடாம பார்த்துக்கிறதே பெரிய பாசம் தான்னு சொல்றீங்களா?”

“இல்லையா பின்ன?, பாசம் இருக்குறதால தான் டா இன்னைக்கு வரைக்கும் உனக்கு சோறு போட்றேன்”

“அநாதை ஆசிரமத்துல... ஒரு பிள்ளை இல்ல, நூறு பிள்ளைங்களுக்கு சோறு போட்டு வளர்க்குறாங்க! இருந்தும்.. அங்க வளர்ற பிள்ளைங்களை ஏன் நாம அநாதைங்கன்னு சொல்றோம்?, அம்மா,அப்பா இல்லாததால.. அவங்க அன்பு இல்லாததால..”

“பார்த்தியா அன்னம்மா?, பெத்த அப்பன் குத்துக் கல்லாட்டம் உயிரோட இருந்தும், அநாதையோட அவனை ஒப்பிட்டுப் பார்க்குறான்”

“உண்மை தானப்பா?, சோறு போட்டுத் துணி வாங்கிக் கொடுத்து படிக்க வைச்சதைத் தவிர நீங்க என்ன பண்ணியிருக்கீங்க? சாதாரணமா அப்பாவும்,மகனும் பேசிக்கிற மாதிரி என்னைக்காவது நீங்களும்,நானும் பேசியிருக்கோமா?, நீங்க என் கூட விளையாட்ற மாதிரி, சிரிச்சுப் பேசுற மாதிரி.. ஒரு ஃபோட்டோவாவது இருக்கா நம்ம வீட்ல?, தாலி கட்டிட்டோமேன்னு கடமைக்காக என்னைப் பெத்துக்கிட்டீங்க போல! அதனால தான் எங்கம்மா இப்படிப் பாதிலயே செத்துப் போயிருக்காங்க”

“என்ன வார்த்தை பேசுறீங்க தம்பி.....” – வரம்பு மீறிப் பேசுபவனைக் கோபமாய் இடை வெட்டினார் அன்னம்மா.

“கடமைக்காக வாழ்ந்தவன் ஏன் டா வேற எவளையும் கல்யாணம் பண்ணிக்காம.. காலம் முழுக்க ஒத்தையா நிற்கனும்?”

“................”

“நானும் என் பொண்டாட்டியும் எப்படி வாழ்ந்தோம்ன்றதைப் பத்தி உன் கிட்டப் படம் போட்டுக் காட்டனும்ன்னு எனக்கு எந்த அவசியமுமில்ல”

“.................”

“பொண்டாட்டியை இழந்து நின்னவனுக்குப் பிள்ளையை சரியா வளர்க்கத் தெரியாம போச்சு போல! அதனால் தான்.. என்னைக்காவது ஒரு நாள் உனக்கும்,எனக்கும் இடைல எல்லாம் சரியாய்டும்ன்னு நான் நினைச்சது நடக்காமலே போயிடுச்சு! உன் விசயத்துல நான் தப்பு பண்ணதாகவே இருக்கட்டும்! ஆனா.. என்னை நம்பி என் தங்கை விட்டுட்டுப் போன சாருமதியை அவளுக்கேத்தவன் கைலப் பிடிச்சுக்

கொடுக்க வேண்டியது என்னோட கடமை”

“அப்டின்னா?”

“நான் பார்த்த மாப்பிள்ளையோட தான் மதிக்குக் கல்யாணம் நடக்கும்”

தீர்மானமாய்க் கூறியவரைக் கண்டு சாருமதி அதிர்ச்சியுடன் மாமனின் முகத்தை நோக்க.. வசந்த் என்பவனோ உணர்ச்சியற்று அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“ஐயா....” – இடையிட்ட அன்னம்மாவிடம்..

“உன் வளர்ப்புப் பிள்ளைக்கிட்ட சொல்லி வை! அவனால இந்தக் கல்யாணத்துல ஏதும் பிரச்சனை வந்தா தொலைச்சுக் கட்டிடுவேன்னு” என்று அவர் சீற..

“ஓஓ!! பார்ப்போம்! என்னை மீறி எவன் அவ கழுத்துல தாலி கட்டுறான்னு! என்னைத் தவிர எவனுக்கு அவ மேல உரிமை இருக்குன்னு” – தானும் தீர்மானமாக அவர் முகத்தைப் பார்த்துக் கூறினான் வசந்த்.

“உரிமையாம்! உரிமை! உரிமையைப் பத்தி பேச உனக்குத் தகுதியிருக்கனும் டா”

“என்ன தகுதியை நீங்க எதிர்பார்க்குறீங்க?”

“காசு,பணம் வைச்சிருக்கியா?, நல்ல உத்தியோகத்துல இருக்கியா?, அந்தஸ்தும்,உத்தியோகமும் தான் டா புருஷ லட்சணம்! இது ரெண்டுமே இல்லாதவனுக்குத் தன்னை ஆம்பளைன்னு சொல்லிக்கத் தகுதியே இல்ல!”

“நான் ஆம்பளையா இல்லையான்றதை, எனக்கும், அவளுக்கும் கல்யாணமாகிப் பிள்ளை,குட்டி பிறக்கும் போது பார்த்துத் தெரிஞ்சுக்கோங்க! அப்புறம், என்ன சொன்னீங்க?, காசு,பணம்,உத்தியோகம்! இதெல்லாம் அளவுக்கு அதிகமா சேர்த்து வைச்ச நீங்கப் பெருசா என்ன சாதிச்சீங்க?, பெத்த ஒரு பிள்ளை மேலப் பாசம் காட்டி வளர்க்கத் தெரியாம.. தள்ளாடுற வயசுல தலைல அடிச்சுட்டு நிற்குறீங்க”

“வசந்த்.....” – மீண்டும் உச்சஸ்தாதியில் கத்தியவரை அசட்டை செய்து..

“நீ சொல்லுடி! காசு,பணமெல்லாம் இருந்தாத் தான் நீ என்னைக் கட்டிப்பியா?” – என சாருமதியிடம் பாய்ந்தவனிடம்..

“அவக் கிட்ட உனக்கென்ன பேச்சு?, அவ பதில் சொல்ல மாட்டா! அவ

நான் வளர்த்த பிள்ளை டா! என் பேச்சை மட்டும் தான் கேட்பா! மதிம்மா.. இந்த முரட்டு ராஸ்கல் உனக்கு வேண்டாம்! இவனால உனக்கு நல்ல வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்க முடியாது. இவனை உன் தலைல கட்டி உன் வாழ்க்கையை நானே கெடுத்தா.. என் தங்கச்சி ஆத்மா என்னைச் சும்மா விடாதும்மா" – என்று சாருமதியின் கையைப் பற்றிக் கொண்டுப் பேசியவரை வெறுப்புடன் நோக்கினான் வசந்த்.

"சொந்தப் பையன் மேல எவ்வளவு நல்ல எண்ணம்" – அடிக்குரலில் விரக்தியுடன் கூறியவனிடம்..

"சொந்தப் பையன்-னா, நீ கேட்டதும் நான் இவளை உனக்குக் கட்டிக் கொடுத்துடனுமா?, நடிப்பு,நாடகம்ன்னு நீ கூத்தடிச்சுக்கிட்டுப் பொறுப்பில்லாம சுத்துறதை ஊரே வேடிக்கைப் பார்க்குதே டா! தெரிஞ்சே நான் இவளை உனக்குக் கொடுத்தேன்னா.. வளர்த்த பிள்ளை வாழ்க்கையைத் தன் சுயநலத்துக்காக வீணாக்கிட்டான் சாருகேசன்னு ஊரே என் முகத்துல காறித் துப்பும்" – என்று மேலும் பொங்கினார் சாருகேசன்.

மனம் விட்டுப் போனது வசந்துக்கு.

"பாசம் காட்டி என்னை ஒரு நாள் கூட சீராட்டினது கிடையாது! படிப்பு,வேலை, காசு,பணம் அத்தனைலயும் உங்களால தான் எனக்கு வெறுப்பு உண்டாச்சுன்றதை புரிஞ்சுக்கிட்டது கிடையாது. பக்கத்துல உட்கார்ந்துப் பொறுமையா என் பிரச்சனை என்னன்னு கேட்டது கிடையாது. என் திறமையை ஊக்குவிச்சது கிடையாது! என் விருப்பத்துக்கும்,ஆசைக்கும் மதிப்பு கொடுத்தது கிடையாது. நடுத்தெருவுல நின்னு இதையெல்லாம் நான் மைக் போட்டு சொன்னா.. நிச்சயம் நீங்க சொன்ன அதே ஊர் உங்க மூஞ்சில காறித் துப்பத் தான்ப்பா செய்யும்" – தளர்வான குரலில் கூறியவன்.. சாருமதியிடம் திரும்பினான்.

"ப்ச், எதுக்கு அழற? அழறதை நிறுத்து. இவரால நம்மள ஒன்னும் பண்ணிட முடியாது"

திமிரான குரலில் கூறியவனைக் கேட்டுக் கொதித்துப் போன கேசன் மருமகளின் முன்பு தன் கையை நீட்டினார்.

"என் உயிரா நான் உன்னைப் பாசம் காட்டி வளர்த்தது உண்மைன்னா.. இந்தப் பயலை மனசுல இருந்துத் தூக்கிப் போட்டுடுவேன்னு இப்போவே எனக்குச் சத்தியம் பண்ணு"

"மா..மா..." எனக் கூவி அதிர்ந்து.. நடுங்கிப் போனாள் சாருமதி.

“இந்தாளு உன்னை மிரட்டிப் பார்க்குறாரு! சாரு.. சத்தியம் பண்ணாத” - வசந்த்

இன்னமும் தன் முன்னே கை நீட்டிக் கொண்டு நின்றவரைக் கண்டு குலுங்கி அழுதபடி செய்வதறியாது விழித்தவளிடம்..

“நீயாவது என் பக்கம் இரு சாரு! என்னை ஏமாத்தாத! என்னால நிச்சயம் தாங்க முடியாது” - கலங்கிய குரலில் கூறியவனைக் கேட்டு மேலும் அழுகை பெருகியது அவளுக்கு.

இப்படியொரு இக்கட்டான சூழ்நிலையில் நிறுத்தி வைக்கத் தான் தாயும்,தந்தையும் தன்னை உயிரோடு விட்டுச் சென்றார்களா?, ஒரு புறம் சொந்த மகளைப் போல வளர்த்த மாமன்! மறுபுறம் அவருக்கு ஈடான பாசத்துடன் தன்னை உயிராய் நேசிக்கும் மாமன் மகன்! இருவருமே வேண்டும் எனக் கதறிய அவள் மனதின் ஓசை அங்கு நின்றிருந்த இருவரையுமே சென்றடையவில்லை.

“மாமா.. நான்…” என்று ஆரம்பித்தவளைத் தடுத்து..

“இப்போ நீ சத்தியம் பண்ணலேன்னா.. அவனோடு சேர்ந்து.. நீயும் எனக்கில்லைன்னு நினைச்சுக்கிட்டு.. எல்லாத்தையும் தலை முழுகிட்டு.. ஒரேடியா போய்டுவேன் நான்! உங்கம்மா மாதிரி!” – என்றவரைக் கண்டு கதறியவள்… அப்போதும் கூட.. அசையாது நிற்க.. தொப்பென சோபாவில் அமர்ந்தார் சாருகேசன்.

மூச்சிரைக்க.. வியர்த்துப் போய்.. கண்ணாடியைக் கழட்டியவரைக் கண்டுப் பதறி அவர் காலடியில் அமர்ந்த சாரு, அவர் நெஞ்சை நீவியபடியே “மாமா.. மாமா.. என்னாச்சு?, என்னாச்சு மாமா?” என்று கேட்டு விட்டு.. மரம் போல் நின்ற வசந்திடம் “பார்த்துக்கிட்டே நிற்குறீங்க?” என்று சீறும் வேளை.. அவர் வழக்கமாய்ப் போடும் மாத்திரையோடு அவசரமாய் அருகே வந்தார் அன்னம்மா.

அவர் நீட்டிய மாத்திரையைத் தள்ளி விட்டபடி “இனி நான் உயிரோட இருந்து என்னத்த சாதிக்கப் போறேன்?, பெத்தது, வளர்த்தது ரெண்டுமே என் பேச்சைக் கேட்காம.. தான் இஷ்டத்துக்குப் போயிடுச்சே” என்று கூற..

“இல்ல,இல்ல மாமா.. நான்.. நீங்க சொல்றபடியெல்லாம் கேட்குறேன். தயவு செஞ்சு மாத்திரையைப் போட்டுக்கோங்க.. வசந்த்.. வசந்த்.. சொல்லுங்க” – அவனை நோக்கிக் கத்தியவளிடம்…

“அவர் நடிக்கிறார் சாரு! உன்னை ப்ளாக் மெய்ல் பண்றார்! சொன்னாக்

கேளு! அவர் சொல்றதுக்கெல்லாம் தலை ஆட்டாத!, பெத்த மகனோட விருப்பத்தையே புரிஞ்சுக்காத மனுஷன், உன் ஆசைக்கா சம்மதம் சொல்லுவார்?"-என்றான் அவன்.

"அதுக்காக.. அதுக்காக அவர் அவஸ்தைப் பட்றதைப் பார்த்துட்டு உங்களை மாதிரி கண்டுக்காம நிற்கச் சொல்றீங்களா? எனக்கு மாமா வேணும்!" என்றவள் தொடர்ந்து "ப்ளீஸ் மாமா.. மாத்திரையைப் போடுங்க" என்றவளிடம் அவர் மீண்டும் கையை நீட்டினார்.

"சத்தியம் பண்ணு"

"சாரு..." – முழுக்குரலில் கத்தினான் அவன்.

தலையைப் பிடித்துக் கொண்டு ஒரு நொடி விழி மூடியவள் பின் அவர் கையில் தன் கையை அழுத்தி "உங்க விருப்பம் தான் மாமா என் விருப்பமும்! எல்லா விசயத்துலயும்" எனக் கூறி ஓடிச் சென்று அவர் தூர எறிந்த மாத்திரையை பொருக்கிக் கொண்டு வந்து அவர் வாயில் திணித்தாள்.

நடிப்பில் தன் தந்தை தன்னையே மிஞ்சி விட்டார் என்கிற எண்ணம் தான் வசந்துக்கு! ஆத்திரத்தையும், கோபத்தையும் தாண்டிய இயலாமையுடன் தன் காதலியை நோக்கியவன்.. விருட்டென வெளியேறி விட்டான்.

வீடே நிசப்தமாகியிருக்க.. மாத்திரையின் உதவியால் உறங்கத் தொடங்கியிருந்தார் சாருகேசன். இருள் கவிழ்ந்து.. இரவு துவங்கியிருந்தது.

உண்ணாமல்,கொள்ளாமல் பித்துப் பிடித்தாற் போல் அமர்ந்திருந்தவளைப் பார்த்து விட்டு அன்னம்மா அமைதியாக நகர்ந்து விட்டார். நேரம் கடந்து நள்ளிரவாகியது. ஆனால் வீட்டை விட்டுச் சென்றவன் வந்த பாடில்லை!

தான் செய்த செயலின் விளைவால் காயப்பட்டு நிராசையுடன் வெளியேறியவனின் முகம் நெஞ்சுக்குள் நின்று.. இரண்டு கண்களையும் வற்றாத ஜீவ நதியாக்கியது. உயிரோடிருப்பதே வீண் எனத் தோன்றியது. செத்துப் போன தாய்,தந்தையை துணைக்கழைத்துப் பார்த்தாள். ம்ஹ்ம்! பிரயோஜனமில்லை! அவர்களிருவரது முகம் கூட மனக்கண்ணில் நிற்கவில்லை! முழுதாய் மனதை மாமனும்,அவன் மகனுமே நிறைத்திருந்தனர். நிமிடத்தில் சூனியமாகி விட்ட வாழ்க்கையை நினைத்த படி.. அப்படியே ஷோபாவில் தலை சாய்த்து விட்டாள் அவள்.

நள்ளிரவைக் கடந்த வேளையில்.. டொக்,டொக் என வாசலில் சத்தம் கேட்டது.

ஒலி வந்தத் திசையில் ஓடிச் சென்று பார்த்தவள் கண்டது, கையில் மண்வெட்டியுடன் ஏதோ ஒரு செடியைக் கொன்று குவித்துக் கொண்டிருந்த வசந்தைத் தான்! அச்செடியைத் தன் தந்தையாக உருவகப்படுத்திக் கொண்டான் போலும்! கொலைவெறியுடன் கொத்திக் கொண்டிருந்தான்.

“வசந்த்...” – அவன் செயலில் அதிர்ந்து மெல்லிய குரலில் அழைத்தாள் அவள். குரல் ஙஞுணநமன-வென மூக்கிலிருந்து வந்தது.

நிமிர்ந்து அவளை நோக்கியவன் நிதானத்தில் இல்லை.

சட்டெனக் குனிந்து அவனருகே அமர்ந்து அவன் கையிலிருந்த மண்வெட்டியைப் பறித்துத் தூர எறிந்தவள் “குடிச்சிருக்கீங்களா?” என்று அழுகைக் குரலில் வினவினாள்.

பதிலற்றுத் தலை முடியைக் கோதிக் கொண்டான் அவன்.

“வசந்த்....” எனக் கைப்பற்ற வந்தவளிடமிருந்து வெடுக்கென எழுந்து கொண்டவன் நான்கடித் தள்ளி நின்றான்.

‘என்னைத் தொடாத’ – என எச்சரித்தது அவன் பார்வை.

அவன் பார்வையை அசட்டை செய்து மீண்டும் அருகே நெருங்கியவளிடம்.. இந்த முறை வாய் திறந்தான் அவன்.

“பக்கத்துல வராத! ஒரே அறை-ல மூச்சை நிறுத்திடுவேன்”

“நிறுத்திடுங்க! எனக்கும் உயிர் வாழ்றதுல இஷ்டமில்ல!”

“என்னடி வசனம் பேசுறியா?”

“கத்தாதீங்க. மாமா தூங்கிட்டிருக்கார்” – பதறிய படி அவள்.

“ஓ! தூங்குறாரா மனுஷன்?, என் சந்தோசத்தைக் கெடுத்து, என்னை நடை பிணமாக்கிட்டு.. அவர் மட்டும் நிம்மதியா தூங்குறாரா?”

“வசந்த்.. ப்ளீஸ்.. வீட்டுக்குள்ள போகலாம்... வாங்க..”

“மாட்டேன் டி! வர முடியாது என்னால! எனக்குப் பிடிக்கல! இந்த வீட்டுக்குள்ள காலடி எடுத்து வைக்க எனக்குப் பிடிக்கல”

“அப்டில்லாம் சொல்லாதீங்க வசந்த்! ப்ளீஸ் உள்ள வாங்க” – அவன் கையைப் பற்றி உள்ளே இழுத்தவளை உதறி..

“என்னைத் தொட்டுப் பேசாத! எவனோ ஒருத்தன் பக்கத்துல உரசிட்டு நின்னவளுக்கு என்னைத் தொடத் தகுதியே இல்ல” என்று சீறினான் அவன்.

இயலாமையோடுப் பதிலின்றி அவன் முகம் நோக்கியவளிடம்…

“நீ தானடி இங்க சாய்ஞ்ச?” – என்று தன் நெஞ்சைத் தொட்டுக் காட்டி.. “ஐ லவ் யூன்னு நான் சொன்னப்போ வெட்கப்பட்டு நீ தான இங்க சாய்ஞ்ச?, இப்போ இஷ்டத்துக்கு அந்தாளு போட்ற வெத்து நாடகத்துக்குத் தலையாட்டி நான் வேண்டாம்ன்னு என் முன்னாடியே அந்தாளு கையைப் புடிச்சு சத்தியம் பண்ற?” முழுக் குரலில் கத்தியவனின் வாயை அவசரமாக மூடினாள்.

அவள் கையை உதறித் தடுமாறி நின்றவனை இழுத்துக் கொண்டு வீட்டினுள்ளே சென்றாள்.

திமிறியபடி அவள் இழுப்புக்கு உடன் நடந்தவனை அறையில் தள்ளித் தாழிட்டு கதவின் மீதே சாய்ந்து நின்றவளை மூச்சு வாங்க நோக்கினான் அவன்.

“கதவைத் திற. நான் வெளியே போகனும்”

“முடியாது! தயவு செஞ்சு மேலும்,மேலும் பிரச்சனை பண்ணாம படுத்துத் தூங்குங்க! உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன்”

“யார் நான்? நான் பிரச்சனை பண்றேனா?”

“………………..”

“நான் என்ன செய்யனும்ன்னு எதிர்பார்க்குற நீ?, நீயும்,அந்தாளும் நடத்துற பாசப் போராட்டத்தைப் பாராட்டி.. மனசு பூரிச்சுப் போய்.. அப்படியே உன்னை விட்டுக் கொடுத்துடனும்ன்னா?”

“…………..”

“எவனோ ஒருத்தன் என் கண்ணு முன்னாடி உன்னை உரிமையாப் பார்க்குறதையே என்னாலப் பொறுத்துக்க முடியல. இதுல.. உன் கையப் பிடிச்சு.. கழுத்தைத் தொட்டுத் தாலி கட்டுறதை எப்படி அமைதியா பார்த்துட்டு நிற்பேன்னு நினைக்குற?”

பதில் சொல்ல முடியாமல் நிமிர்ந்து அவன் முகம் பார்த்தவளின் கண்ணும்,கன்னங்களும் அழுது ஓய்ந்ததில் கன்றிச் சிவந்து போயிருந்தன. பெரிய கண்களிரெண்டும் சுருங்கிப் போய் முகமே பரிதாபமாய்க் காட்சி தர.. மேலும் வார்த்தைகளால் வதைக்கத்

தோன்றாமல் அவளைப் பார்த்தபடியே அவளுக்கு எதிரேக் கட்டிலில் அமர்ந்தான் அவன்.

கதவில் சாய்ந்தபடி அப்படியேக் கீழே அமர்ந்தவளும் காலைக் கட்டிக் கொண்டு அவன் முகத்தையே நோக்கினாள்.

இதயம் முழுதும் நிறைந்திருந்த அத்தனை உணர்வுகளையும் கண்கள் வழியே வெளிக் காட்டியபடி இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு செயலற்று அமர்ந்திருந்தனர்.

அவுட்-ஏ ஆகாமல் நின்று விளையாடும் விதியையும், ஆட்டுவிக்கும் தந்தையையும், அவர் தாளத்திற்கேற்ப ஆடத் தயாராய் இருக்கும் அவளையும் எண்ணிப் பல்லைக் கடித்தபடிக் கண்களை மூடியவனுக்குக் கோபம் மட்டுமே பிரதானமாயிருந்தது. தந்தை மீது! அவள் மீது! ஏன், இந்தச் சூழ்நிலையில் சிக்கிக் கொண்டு கையாலாகாதவனாய் நிற்கும் தன் மீதும்!

மூடிய விழிகளுடன் முகம் கசங்க அமர்ந்திருந்தவனைக் கண்டு.. மனம் வெம்பி “வசந்த்…” என்றழைத்தாள் அவள்.

“வெளிய போ!”

“…………”

“என் கண்ணு முன்னாடி வராத”

“வசந்த்….” – மீண்டும் கலங்கத் தொடங்கியவள்.. அழுதபடி அவன் முகம் பார்க்க.. தன் பார்வையை இப்போது வேறு புறம் திருப்பிக் கொண்டான் அவன்.

அடுத்த சில நிமிடங்கள் அவள் அழுகைச் சத்தம் மட்டுமே அந்த அறையில் ஒலித்தது.

பின் முகத்தைத் துடைத்துக் கொண்டு எழுந்து நின்றவள்.. வெளியே செல்ல எண்ணிக் கதவில் கை வைத்தாள்.

அவளது அழுகைச் சத்தத்தை சகித்துக் கொண்டவனால்.. அவளது விலகலைப் பொறுத்துக் கொள்ள முடியாது போக.. சட்டென எழுந்து வந்து.. வெளியே செல்லவிருந்தவளின் கையைப் பற்றித் தடுத்தான்.

பற்றியிருந்த அவன் கையை வெறித்தபடி ஒரு நிமிடம் அமைதியாக நின்றவள்..

“நான் ஒன்னும் அவன் பக்கத்துல உரசிட்டு நிற்கல” என்றாள்.

“..........”

“ஏதோ ஆசைப்பட்டு நான் அலங்காரம் பண்ணி நின்ன மாதிரி, அப்படிப் பேசுறீங்க?”

“..............”

“சாரி கேளுங்க” – அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவனிடம் நிமிர்ந்து பார்த்துக் கூறினாள் அவள்.

“சாரி” – சட்டெனக் கேட்டு விட்டான் அவன்.

மூக்கு விடைக்க.. அழுகையை அடக்கி வேறு புறம் பார்த்தவளை.. அதற்கு மேல் பொறுக்காமல் அருகிலிழுத்து.. அவள் கன்னத்தில்.. தன் கன்னத்தை அழுத்தினான் அவன்.

மூச்சடக்கி நின்றவளின் கண்கள் தாமாகவே மூடிக் கொள்ள.. இரு கைகளாலும் அவள் பின்னந்தலையைப் பற்றி.. அவள் கன்னத்துக்குள், தன் கன்னத்தைப் புதைத்துக் கொண்டான்.

முழுதாக இரண்டு நிமிடங்கள் அவளை அணைத்தபடி நின்றவன்.. பின் விலகி.. அவளைக் கண்டபடியே பின்னால் நகர்ந்துக் கட்டிலில் அமர்ந்தான்.

உணர்ச்சிக் கொந்தளிப்பில் கண்களை இறுக மூடி நின்றவளை அள்ளிக் கொள்ளும் ஆவல்.. பிரவாகமாகக் கிளம்ப.. ஒரு சத்தியத்தில் தன் ஒட்டுமொத்த ஆசையிலும் மண்ணைப் போட்டு விட்டவளை எண்ணிக் கோபமுற்று.. இயலாமையுடன் தன்னருகேயிருந்தத் தலையணைகளை அவள் மீது விட்டெறிந்தான் அவன்.

ஒன்று.. இரண்டு.. மூன்று..

வரிசையாகத் தன் மீது வந்து விழுந்த தலையணைகளை உணர்ந்தும் விழி திறக்காதிருந்தவளைக் கண்டு.. அப்படியேத் தலையைப் பின்னுக்கு சாய்த்துக் கட்டிலில் விழுந்தவன்.. டங்,டங்கெனப் பின்னந்தலையைப் படுக்கையில் முட்டிக் கொள்ளும் சத்தம் காதில் விழுந்தது.

கை முஷ்டியை இறுக்கிப் படுக்கையில் குத்தியவனைக் கண்டு விழி திறந்த சாருமதிக்கும்.. அதே இயலாமை உணர்வு!

செய்கையற்று அவனை வெறித்தவள் மெல்ல நடந்து சென்று அவன் காலடியில் அமர்ந்தாள்.

“வசந்த்....”

“போடி இங்கேயிருந்து... இன்னும் என்ன?, நான் ரத்தக் கண்ணீர் வடிக்கிறதை வேடிக்கைப் பார்க்கனுமா?”

“வசந்த்....”

“எந்திரிச்சுப் போடி! பர்மிஷன் கேட்காம முத்தம் கொடுத்துடுவேன்னு ஏற்கனவே சொல்லியிருக்கேன்! இன்னும் ஒரு நிமிஷம் நீ இங்க இருந்தா.. கண்டிப்பா கிஸ் பண்ணுவேன்”

“................” – பதிலற்றுத் தலை குனிந்தபடி அமர்ந்திருந்தாள் அவள்.

திடீரெனக் காற்றில் ஆக்ஸிஜன் குறைந்து மூச்சு விட சிரமமாகிப் போன உணர்வு அவனுக்கு! எழுந்து.. அவள் முகம் பார்க்காமல் ஜன்னலருகே செல்ல.. தானும் எழுந்தவள்.. அவன் செய்கையைக் கண்டபடி அசையாது நின்றாள்.

ஜன்னல் கம்பியை இறுகப் பற்றியவன்.. என்ன நினைத்தானோ.. திரும்பி அவள் முகம் பார்த்தான்.

மஞ்சள் மாலையில் ஜொலித்த அவள் கண்கள்! ஒவ்வொரு முறை பார்க்கும் போதும் அவனை முழுதாய் உள்ளிழுத்து மூழ்கடிக்கும் அந்தக் கண்கள்! காதலும்,ஆசையுமாய் வெட்கத்துடன் அவள், அவன் மார்பில் சாயும் வேளை கிறங்கிக் கதவடைத்துக் கொள்ளும் அதே கண்கள்.. இன்று தவிப்பில் திணறி.. நிராசையுடன் அவனை நோக்குவதைக் கண்டு ஒரு நொடி நின்றவன்..

மறு நொடி அவளருகே நெருங்கி.. இருகைகளால் அவள் முகம் பற்றி.. அவள் இதழ்களுக்குள் தன்னை மூழ்கடித்துக் கொண்டான்.

அவன் தன் கையைப் பற்றினால் கூடத் திமிறி விலகி ஓடுபவள்.. இன்று விழி மூடி மயங்கி நின்றாள்.

நிமிர்ந்து அவள் முகம் பார்த்து.. மூடிய இமைகளில் இதழ் பதித்து.. மூக்குத்தியில் முத்தமிட்டு.. மீண்டும் அவள் இதழ்களில் தொலைந்தான் அவன்.

பூமி சுற்றுவது நின்று.. உலகம் உறைந்து போன உணர்வுடன்... ஆகாசத்தில் அழகாய்ப் பறந்தவர்களுக்கு ஒத்துழைக்கும் வண்ணம் அசையாது நின்ற கடிகார முள்.. அவன் அவளிடமிருந்து விலகி நிமிர்ந்த வேளை.. மீண்டும் தன் செயலைத் தொடர்ந்தது.

கண்களைத் திறவாதிருந்தவளைக் கண்டு இதழ் விரிய... அவள் கன்னத்தில் அழுந்த இதழ் பதித்து... அவள் தோளில் முகம் புதைத்தான்

அவன்.

“சாரு…”

“…….”

“கிஸ் பண்ணி முடிச்சுப் பல மணி நேரமாச்சு. இப்போ நீ தைரியமா கண்ணைத் திறக்கலாம்”

சிரித்தபடி கூறியவனைக் கேட்டு சிணுங்கலுடன் விழி திறந்துத் தலை குனிந்து கொண்டவளின் முகம் பற்றி நிமிர்த்தினான் அவன்.

ஆசையுடன் பார்வையால் அவள் முகம் வருடி.. மீண்டும் இதழ் பதித்தவன்.. “உன் சத்தியத்தோட லட்சணம் இது தானா?” என்று கேலி செய்ய..

அதுவரை உலகம் மறந்திருந்தவள் மீண்டும் கலங்கிய முகத்துடன்.. அவன் மார்பில் சாய்ந்தாள்.

“இப்போ என்ன பண்றது வசந்த்?”

“இந்தக் கிஸ்ஸை இப்படியேக் கண்டினியூ பண்ணினா.. இந்தப் பிரச்சனைக்கு சொல்யூஷன் கிடைச்சிடும்”

“ப்ச், வசந்த்”

“சத்தியமெல்லாம் எனக்கு சக்கரைப் பொங்கல் மாதிரி! அள்ளி சாப்பிட்டுப் போய்ட்டே இருப்பேன்! உன் மாமா இல்ல, எந்தக் கொம்பனாலும் உன்னை என் கிட்டயிருந்து அவ்ளோ சீக்கிரம் பிரிச்சுட முடியாது” – என்றுக் கொக்கரித்தவன் அறிந்திருக்கவில்லை, மறுநாள் காலை சாருகேசன் அவனுக்கு வைத்திருந்த ட்விஸ்ட்டைப் பற்றி!

# அத்தியாயம் – 7

அழகன்! Early 90’s-ல வெளி வந்த படம்! ஹிட் மூவியும் கூட! வித்தியாசமான கதை! ரசிக்க வைக்குற முகங்கள்,வசனம்,ஸ்கீர்ன் ப்ளே எல்லாம்!! அதை விட மிஸ்டர்.கீரவாணி மியூசிக்ல இந்தப் படத்துல வர்ற எல்லாப் பாட்டும் செம்ம ஹிட்! என்னோட ஃபேவரைட் இது!

பானுப்ரியா டான்ஸ் ஆடிக்கிட்டேக் கோபத்தோட தன் மனசுல இருக்குறதைச் சொல்லி மம்முட்டிக்கிட்ட ப்ரபோஸ் பண்ணுவாங்க! பதிலுக்குக் கோபப்பட்டுக் கத்துற மம்முட்டியும் யெஸ் டாமிட்! ஐ ஸ்டார்டட் லவ்விங் யூ அண்ட் ஐ லவ் நோ ஒன் எல்ஸ்ன்னு கத்திட்டுப் படி இறங்கிடுவார்! நான் பொஸஸ்ஸிவா இருக்குறது தப்பான்னு கேட்டு தன்னோட பெரிய கண்ணை விரிச்சு.. முழிச்சிட்டு நிற்குற பானுப்ரியாவைப் பார்த்து.. அழகா.. ஒரு சிரிப்பு சிரிப்பார் அவர்! ச்ச, நிஜமாவே அவர் அழகன் தான்!

சடசடன்னு காதல் மழை நம்ம மனசுக்குள்ளப் பொழிய ஆரம்பிக்குற நேரம்.. அதே கலகல உணர்வை வெளிப்படுத்துற மாதிரி இசையும் தொடங்கும்! வைரமுத்து உயிர் கொடுத்த வரிகளுக்கு எஸ்.பி.பி உயிர்ப்பைக் கொடுக்க.. புதுசா காதலிக்கத் தொடங்குற ரெண்டு பேரோட மனநிலையை அத்தனை அழகா... அவர் குரல்ல வெளிப்படுத்திருப்பார்! ஒவ்வொரு முறைக் கேட்கும் போதும்.... சிலிர்ப்பு தான்! ஐ லவ் யூ எஸ்.பி.பி சார்!!

“ஏகாந்தம் இந்த ஆனந்தம்..

அதன் எல்லை யாரறிவார்..

ஏதேதோ சுகம் போதாதோ..

இந்த ஏக்கம் யாரறிவார்..

முதலாய்.. முடிவாய்...

இங்கு.. என்றும் வாழ்வது காதல் ஒன்று தான்!!"

துணுக்கு: படம் இடம் பெற்ற படம் அழகன்.

பாடல்: மழையும் நீயே!

இரு கைகளையும் அகல நீட்டி.. வாய் பிளந்து 'ஆ'-வென உறங்கிக் கொண்டிருந்தான் வசந்த். அவன் காலடியில் தலை பதித்தபடி.. அமர்ந்த நிலையிலேயேத் தானும் தூங்கிப் போயிருந்தாள் சாருமதி.

கருவானம் இருள் கலைந்து.. நிறம் மாறி நீல வண்ணம் கொண்ட நேரம்.. விடியல் தொடங்கி.. கீச்,கீச் என அவர்கள் வீட்டுத் தோட்டத்துப் பறவைகள் சுறுசுறுப்பாய்க் குரல் கொடுக்கத் துவங்கியிருந்தன.

திறந்திருந்த ஜன்னல் வழி உள் நுழைந்த குருவியொன்று கொடுத்த சத்தத்தில் உறக்கம் கலைந்து.. கனத்தத் தலையைக் கையில் பற்றியபடி எழுந்தமர்ந்தான் வசந்த்.

தன் உள்ளங்காலில் கன்னம் பதித்து விழி மூடியிலிருந்தவளின் முகம் அவனது காலை வேளையை சொர்க்கமாக்க.. மெல்ல கால்களை உறுவிக் கொண்டு அவள் தலை கோதினான்.

அவன் தீண்டலில் உறக்கம் தொலைத்தவளும், விழி திறக்காமல்.. இதழ்களில் பரவிய புன்னைகையோடே சாய்ந்திருந்தாள்.

"ஏய்..."

"ம்ம்"

"ஐ லவ் யூ" – மெல்லிய குரலில் முணுமுணுத்தவனைக் கேட்டுப் புன்னகை சிரிப்பாக மாற.. எழுந்தமர்ந்தவள்..

"தினமும் காலைல இதைச் சொல்வீங்களா?" என்று வினவினாள்.

"ம்ஹ்ம் தோணும் போது தான் சொல்லுவேன்"

“ம்க்கும்”

“நேத்து நைட்ல இருந்து ஆயிரம் தடவை இதை நான் சொல்லிட்டேன்! ஆனா.. நீ இன்னும் ஒரு தடவை கூட என்னைப் பார்த்து சொல்லல!”

நமுட்டுச் சிரிப்புடன் எழுந்துத் தலைமுடியைக் கொண்டையாக்கியபடி “எனக்கு தோணும் போது தான் சொல்ல முடியும்” என்று கெத்தாகக் கூறியவளை அவன் முறைத்த நேரம்.. அன்னம்மாவின் குரல்..

“தம்பிஇஇஇஇ.. மதிக் கண்ணுணுணுணு” என்று முழுப் பதற்றத்துடன் ஒலிக்க.. அடித்துப் பிடித்துக் கொண்டு இருவரும் ஓடிச் சென்றனர்.

சாருகேசனின் அறையில் நின்றிருந்த அன்னம்மா.. தொங்கியத் தலையுடன் கட்டிலில் கிடந்தவரைக் கண்டுக் கதறி “தம்பி.. தம்பி” எனக் கத்த..

“மாமாஆஆஆ” என்றபடி ஓடி வந்து அவர் தலையைத் தாங்கிய மதிக்கு நெஞ்சு நடுங்கிப் போனது.

அவர் படுத்திருந்தக் கோலத்தைக் கண்டு ஒரு நொடி திடுக்கிட்டுப் போன வசந்த் வேகமாக அருகே சென்று நாடி பிடித்துப் பார்த்தான்.

“மயங்கியிருக்காரு!, அன்னம்மா டிரைவரை கார் எடுக்கச் சொல்லு” எனக் கூறி விட்டு அவசரமாக அவரைக் கையில் அள்ளிக் கொண்டு வாசலை நோக்கி விரைந்தான் வசந்த்.

விடாது அழுது புலம்பியபடி வந்த சாருமதி “என்னால தான்.. எல்லாம் என்னால தான்” என்று தலையிலடித்துக் கொள்ள.. முகம் இறுக அமைதியாய் அமர்ந்திருந்தான் வசந்த்.

மருத்துவமனையில் அவசரசிகிச்சைப் பிரிவில் உடனே அனுமதிக்கப்பட்டார் சாருகேசன். மூடிய ஐசியூவின் கதவருகே நின்று கொண்டு அழுகையில் கரைந்த சாருமதியை எப்படிச்

சமாதானப்படுத்துவதென்றே புரியவில்லை அவனுக்கு.

“சாரு.. முதல்ல போய் உட்காரு” – பல்லைக் கடித்தபடி அடக்கப்பட்டக் கோபத்துடன் கூறினான் அவன்.

அவனை ஆத்திரத்துடன் நிமிர்ந்து பார்த்தவள் கொத்தாக அவன் சட்டையைப் பற்றி..

“எல்லாம் உங்களால தான்! ஏன் என்னைக் காதலிச்சீங்க?, நம்மளால தான் மாமா இன்னைக்கு இந்த நிலைமைல படுத்திருக்கார்! அவர் விருப்பத்துக்கு மாறா.. எந்த விசயத்துலயும் நான் நடந்துக்கிட்டது கிடையாது! அவர் தான் எனக்கு எல்லாம்ன்னு நினைச்சு அவர் பேச்சே வேத வாக்கா நினைச்சிருந்தேன்! நீங்க தான்.. நீங்க தான் என் மனசைக் கலைச்சு மாமாவை இப்படி ஆக்கிட்டீங்க! சந்தோஷமா?, இப்போ சந்தோஷமா உங்களுக்கு?” – என ஆவேசமாகக் கத்தினாள்.

தன் சட்டையிலிருந்த அவள் கைகளை விலக்கி “முட்டாள்தனமா பேசாத! உன் விருப்பம் என்னன்னு தெரிஞ்சும்.. எவனோ ஒருத்தனைக் கூட்டி வந்து கல்யாணம் செஞ்சு வைக்க நினைச்ச மனுஷன் அவரு! அவரோட சுயநலத்தால தான் இப்படி வந்து படுத்திருக்கிறாரே ஒழிய.. உன்னாலயோ.. என்னாலயோ இல்ல!” என்று அவனும் பதிலுக்கு சீறினான்.

“அவரா சுயநலவாதி?, அவர் இல்லேன்னா.. இன்னைக்கு நான் இல்ல! இந்த வீட்டுக்கு நான் வந்த நாள்லயிருந்து இப்போ வரை எனக்கு என் அப்பா,அம்மா நியாபகம் கூட வந்ததில்ல! அந்தளவுக்குப் பாசத்தைக் காட்டி வளர்த்த மனுஷன் அவரு! அவரைப் போய் வாய் கூசாம சுயநலவாதின்னு சொல்றீங்க?”

“ஏய்ய் என்னன்றடி இப்போ?, உள்ள படுத்திருக்கிற உன் மாமா இன்னும் உயிரோட தான் இருக்காரு. வாயை மூடிட்டுப் போய் அங்க உட்காரு”

“மனசாட்சியில்லாம எப்படி இப்படிப் பேசுறீங்க? அவர் மேலக் கொஞ்சம் கூடப் பாசமேயில்லையா உங்களுக்கு?”

“பாசமில்லாம தான் ஐசியூ வாசல்ல இப்படி நின்னு உன் கூடப் போராடிட்டு இருக்கேன்! ஏய்ய் பேசாம போடி”

“கண்ணு, நாம இருக்குறது ஹாஸ்பிடல்! கொஞ்ச நேரம் ரெண்டு பேரும் சண்டை போடாம அமைதியா இருங்க” என்று அன்னம்மா அதட்டியதும்..

“மனுஷனே இல்ல அன்னம்மா இவரு! சரியான மிருகம்! செத்துப் போன மாதிரி தலை தொங்கிக் கிடந்த மனுஷனைப் பார்த்தும் கூட கொஞ்சமும் ஈவு,இரக்கமில்லாம எப்படிப் பேசுறார் பார்த்தீங்களா?, அவர் செத்தாக் கூட இவரெல்லாம் கண்ணீர் விட மாட்டாரு” – அழுது கொண்டே அவரிடம் கூறியவளைக் கண்டுப் பல்லைக் கடித்தபடி..

“ஆமா அழ மாட்டேன்” என்றான் அவன்.

அடுத்த சில நிமிடங்களில் வெளியே வந்த டாக்டர் அவருக்கு இரண்டாவது முறையாக மாரடைப்பு வந்திருப்பதாகக் கூற ஆடிப் போய் விட்டான் வசந்த்.

முதல் முறை வந்த விசயத்தையே குடும்பத்தில் எவரும் அறியாதிருக்கையில் இப்போது இரண்டாம் முறை என்று மருத்துவர் கூறியதும்.. சாருமதி கால்கள் தொய்ந்து விழ.. அப்படியே மடங்கிச் சரிந்துக் கீழே அமர்ந்து விட்டாள்.

“நான் சொன்னேன்ல அன்னம்மா?, மாமாவுக்கு ஏதோ பிரச்சனைன்னு! என் கிட்ட வாய் விட்டு சொன்னார், இன்னும் எத்தனை நாளைக்கு என் உடம்பு ஒத்துழைக்கும்ன்னு தெரியலம்மான்னு! அப்பவே என்னன்னு விசாரிக்காம.. என் பிரச்சனையையே பெருசா நினைச்சு.. சுயநலமா நடந்துக்கிட்டேன்! இந்தப் பாவம் என்னைச் சும்மா விடாது” – மீண்டும் தலையிலடித்துக் கொண்டு அழுதவளை முழு எரிச்சலுடன் நோக்கினான் வசந்த்.

“ஏய்ய் இப்போ நீ வாயை மூடப் போறியா இல்லையா?, தப்பு உன் மேல இல்ல. என் மேல தான்! அதுக்காக உன்னை மாதிரி நான் உட்கார்ந்து அழுதுட்டேவா இருக்கேன்?, இப்போ இந்தச் சூழ்நிலையை எப்படி சமாளிக்குறதுன்னு யோசிக்காம லூசுத்தனமா புலம்பிட்டிருக்க?”

“நீங்க பேசாதீங்க!, அவர் இப்படி ஆனதுக்குக் காரணமே நீங்க தான்”

“ஆமா நான் தான்! ஒப்பனா ஒத்துக்கிட்டேனே! இன்னும் என்ன?, தயவு செஞ்சு கொஞ்ச நேரம் அமைதியா இரு சாரு” – என்றவனும் செய்வதறியாதுத் தலையைப் பற்றிக் கொண்டு அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தான்.

அவன் எதிர்பார்க்கவில்லை! தந்தை இத்தனை அழுத்தக்காரராக இருப்பாரென்று! அவர் குணாதியசத்திற்குத் தன் நோயைச் சொல்லிக் காட்டி மிரட்டியே சாருமதியிடம் அவர் நினைத்த காரியத்தைச் சாதித்திருக்கலாம்! ஆனால் கடைசி வரைத் தனக்கு நேர்ந்ததை அவர் வெளியே சொல்லவேயில்லை! யோசனையுடன் அமர்ந்திருந்தவனிடம் மீண்டும் வந்து நின்றார் டாக்டர்.

மூவரும் அவசரமாய் எழுந்து அவரைச் சூழ்ந்து கொள்ள, இப்போது அவர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டாரென்றும் அடுத்த 24 மணி நேரம் அப்சர்வேஷனில் இருக்க வேண்டும் என்று கூற…

“மாரியாத்தா..” என்றபடி மருத்துவமனையின் கூரையை நோக்கிச் சாமி கும்பிட்ட அன்னம்மாவையும், கண்ணைத் துடைத்துக் கொண்டு “தேங்க்ஸ் டாக்டர்” என்று முறுவலித்த சாருமதியையும் கண்டு கொள்ளாமல் “டாக்டர் நான் அவரை இப்போப் பார்க்கனும்” என்றான் வசந்த்.

பிடிக்காத தந்தையானாலும், அவருடன் ஆயிரம் சண்டையிட்டாலும் அவர் இல்லாத வீட்டையோ,

வாழ்க்கையையோ அவன் கற்பனை செய்ததில்லை!

மனிதர் எங்கே ஒரேடியாய் உயிரை விட்டுக் காலம் முழுதும் தன்னைக் குற்ற உணர்ச்சியில் நிற்க வைத்து விடுவாரோ என்று அஞ்சி உள்ளுக்குள் கலங்கிக் கொண்டிருந்தவனுக்கு டாக்டரின் வார்த்தைகள் ஆசுவாசத்தைக் கொடுக்க... அதுவரையிருந்த மனநிலை மாறி அவர் மீது மூட்டை,மூட்டையாய்க் கோபம் எழுந்தது அவனுக்கு.

இப்போ எப்படிப் பார்க்க முடியும் என்றுத் தயங்கிய டாக்டரிடம் ஒரேடியாகப் பிடிவாதம் பிடித்தான் வசந்த். அவர் மனதைக் கஷ்டப்படுத்தும் எதையும் பேசி வைக்கக் கூடாதென்கிற டாக்டரின் நிபந்தனையுடன் ஐசியூவுக்குச் சென்றான் வசந்த். அவன் என்ன செய்வானோ,ஏது செய்வானோ என்று பதறியபடி அவன் பின்னேயே நுழைந்தாள் சாருமதி.

மூக்கில் பொருத்தப்பட்டிருந்த ஆக்ஸிஜன் மாஸ்க்குடன் படுக்கையில் படுத்திருந்த சாருகேசன்.. கதவு திறக்கப்படும் சத்தத்தில் கண் விழித்தார்.

ஜோடியாக உள்ளே நுழைந்த இருவரையும்.. என்றுமில்லாத பார்வையுடன் புதிதாய் நோக்கியவரின் விழிகள் இருவருக்கான ஜோடிப் பொருத்தத்தை ஆராய்ந்தது.

கருப்பு நிற பேண்ட் நீல நிறச் சட்டையுமாய் அந்த அறைக்கதவின் நிலப்படியை கையால் தொட்டுவிடுமளவிற்கு உயரத்துடன் இருந்தவனையும், அவனருகே.. அழகே உருவமாய் அவன் தோளை உரசியபடி வந்து நின்ற சாருவையும் அளவெடுத்தது அவர் கண்கள்.

விழி உயர்த்தித் தன் முகம் பார்த்தவரைக் கண்டவனுக்கு என்னவென்றே சொல்ல முடியாத உணர்வு!

டைனிங் டேபிளில் அவனுடன் தினம் உற்சாகமாய் வாய்த் தகராறில் ஈடுபடும் தந்தை, பெல்ட்டால் அவனை விளாசித்

தள்ளி விட்டு 'குஸ்தி வீரன் டா' என்று கூக்குரலிடும் தந்தையென தன்னோடு சண்டையிடும் அவர் முகத்தை மட்டுமே பார்த்து வந்தவனுக்கு.. படுத்த படுக்கையாக.. பேச்சற்றுக் கிடந்தவரைக் கண்டு உள்ளுக்குள் ஏதோ செய்தது.

ரத்தப் பாசம் போலும்! கடுப்புடன் தலையைக் கோதிக் கொண்டான். ஆனாலும் பொறுக்க முடியாமல்..

"எவ்ளோ கொடுத்தீங்க அந்த டாக்டருக்கு?, நீங்க எழுதிக் கொடுத்த வசனத்தைக் கரெக்டா ஒப்பிச்சிட்டுப் போறாரு?" – ஐசியூவின் அமைதியைக் கலைக்கும் வண்ணம் குரல் உயர்த்தியவனைக் கண்டுப் பதறி அவன் கையை இறுகப் பற்றிய சாருமதி..

"வசந்த், வசந்த் என்ன பண்றீங்க நீங்க?, இப்படி சத்தம் போடத் தான் உள்ள வந்தீங்களா?" – என்று கோபமாய்ச் சீறத் தொடங்கினாள்.

மகனின் வார்த்தைகளை இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் வெளியே விட்ட சாருகேசனின் கண்கள் முழுக்க.. முழுக்க.. இணைந்திருந்த இருவரது கைகளையேச் சுற்றி வந்தது.

"உங்க எண்ணம் நிறைவேறனும்ன்றதுக்காக எந்த எக்ஸ்டீரீம்க்கு வேணா போவீங்களா?, அப்படி என்ன பாவம் பண்ணிட்டேன் நான் உங்களுக்கு?, இத்தனை வருஷமா கூட வளர்ந்த என்னை விட யாருக்கு இவளைப் பத்தி நல்லாத் தெரியும்? யாரு என்னை விட இவளை நல்லாப் பார்த்துக்குவா?"

"................."

"இத்தனை வயசாகியும் சம்பாதிக்குற காசு மேல இருக்குற மோகம் குறையலயா உங்களுக்கு?, அவ்ளோ சொத்து சேர்த்து வைச்சிருக்கீங்கள்ல, பின்ன என்னையும் ஏன் காசு பின்னாடி ஓடச் சொல்லி டார்ச்சர் பண்றீங்க?"

"............"

“இப்போ என்ன இவளை விட்டு நான் விலகிடனும்! அவ்ளோ தான?, போயிட்றேன்! இவளை விட்டு.. இந்த வீட்டை விட்டு ஒரேடியா போயிட்றேன்.. நீங்க இவளுக்குக் கல்யாணம் பண்ணி வைச்சாலும் சரி, கருமாதி பண்ணி வைச்சாலும் சரி! இனி இதைப் பத்தி நான் கவலைப்பட்றதா இல்ல”

“வசந்த்....” – அவனைக் கட்டுப்படுத்த முடியாது அவன் கைகளை இறுக்கியவளிடம்..

“இந்த மனுஷன் இப்படி ஆனதுக்குக் காரணம் நான் தான்னு நீ தான சொன்ன?, நான் என்னவோ உன்னை வற்புறுத்திக் காதலிக்க வைச்ச மாதிரி.. உன் மனசைக் கலைச்சுட்டேன்னு கூசாம சொன்ன?, உனக்கு எப்பவும் என்னை விட அவர் தான் முக்கியம் சாருமதி! நேத்து நான் அவ்ளோ கெஞ்சியும்.. நீ அவர் கைல அடிச்சு சத்தியம் பண்ணப்பவே, நான் விலகிப் போயிருந்திருக்கனும்!”

“................” – பதிலின்றி இறுகிப் போய் நின்றவளின் கையை உதறி.. தந்தையின் புறம் திரும்பியவன்..

“நான் இவ கூட இருக்குற வரைக்கும் நீங்க இந்த ஹாஸ்பிடல் பெட்-ஐ விட்டு எந்திரிச்சு வர மாட்டீங்கன்னு எனக்கு நல்லாத் தெரியும்! அவ்ளோ கஷ்டமெல்லாம் நான் உங்களுக்குக் கொடுக்குறதா இல்ல”

“................”

“நான் செத்துட்டதா நினைச்சுத் தலை முழுகிட்டு.. உங்க வளர்ப்புப் பொண்ணோட கல்யாணத்துக்கு சீக்கிரம் தயாராகுங்க!” – என்று கூறி விட்டு வாசல் நோக்கிச் சென்றவன் ஒரு நொடி நின்று அவர் முகம் நோக்கி..

“கடைசி வரைக்கும் நீங்க எனக்கு அப்பாவா நடந்துக்கவே இல்லப்பா” – விழி சிவக்கக் கூறி விட்டு விறுவிறுவெனக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறி விட்டான் வசந்த்.

பின்னோடு ஓடிச் சென்று அவனைச் சமாதானம் செய்ய

விழைந்த கால்களைக் கஷ்டப்பட்டுத் தடுத்துத் தன் மாமன் அருகே அவசரமாய்ச் சென்ற சாருமதி அவர் கையைப் பற்றி..

“அ..அவர் ஏதோ கோபத்துல பேசுறார் மாமா! நீங்க இ..இதையெல்லாம் பெருசு படுத்திக்க வேண்டாம்!” என்று கூற.. சலனமற்ற விழிகளுடன் கலங்கிய அவள் கண்களை நோக்கியவர்.. மெல்ல உறங்கிப் போனார்.

அதன் பிறகு அவன் அவரைக் காண முயலவில்லை. வீட்டுப் பக்கமும் செல்லவில்லை! அணிந்திருந்த உடையோடு ஹரி வீட்டில் தஞ்சம் புகுந்தவன், அங்கேயே தங்கி விட்டான்!

எந்நேரமும் உற்சாகமும்,துடிப்புமாய் இருக்கும் நண்பன், சோர்ந்த விழிகளும்,சிரிப்பற்ற முகமுமாய் நடமாடுவதைக் கண்டு ஹரி தான் அவ்வப்போது ஹாஸ்பிடல் சென்று பார்த்து அங்கிருந்த நிலைமையை அவனிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

அவன் கூறுவதைக் காதால் கேட்டுக் கொள்வான்! அவ்வளவே! மற்றபடி தந்தையைப் பற்றியும், சாருமதியைப் பற்றியும் எந்தக் கேள்வியும் வராது அவனிடமிருந்து.

அவன் அருகே இல்லாதது ஒரு புறம் மன உளைச்சலைக் கொடுத்தாலும்.. எங்கே இவன் முகம் பார்த்தால் மீண்டும் சாருகேசனின் உடல்நிலையில் பின்னடைவு ஏற்படுமோ என்கிறப் பயமும் இருந்தது சாருமதிக்கு. விதியை நொந்தபடி சாருகேசனின் அருகிலேயேத் தவமிருந்தாள் அவள்.

அவர் மருத்துவமனையிலிருந்த போதே விஷயம் கேள்விப் பட்டு அவரைக் காண வந்திருந்த மதிவாணன் அவரிடம் “நீ ஹாஸ்பிடலை விட்டு வீட்டுக்கு வந்ததும் நிச்சயதார்த்தத்தை வைச்சுக்கலாம்! கவலைப்படாம சீக்கிரம் எழுந்து வா டா” என்று ஆறுதல் கூற.. தணலின் மீது நிற்பதைப் போன்று.. அடக்கப்பட்ட உணர்வுடன் விறைத்துப் போய் நின்ற சாருமதியைக் கண்டபடியே... அவரிடம் பதிலின்றிப்

புன்னகைத்து வைத்தார் கேசன்.

என்ன தான் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு மனிதர் தேறி வந்தாலும்.. புருவம் சுருக்கியபடி எந்நேரமும் யோசனையில் காணப்பட்டவரைக் கண்டு பீதி நிறைந்தது சாருமதி.

‘மகனை நினைச்சு வருத்தப்பட்றாரோ என்னவோ’ என்று அன்னம்மா வேறு அவளைக் குழப்ப.. இது தான் சாக்கென்று ஓடிச் சென்றாள் அவனைக் காண.

பீட்டர்ஸ் ரோட்டில் ஒரு சிறிய அரங்கமொன்றில் அபிமன்யு-சுந்தரி நாடகத்தில் பங்கேற்றுக் கொண்டிருந்தவனை.. அரங்கத்தின் வாசலிலேயே சந்தித்தாள்.

அன்று மருத்துவமனையில் தந்தை கண் விழிக்கும் முன்பு வரைத் தன்னையொரு மனசாட்சியற்ற சிங்கம்,புலியாகக் கற்பனை செய்துத் தூற்றியவள்.. இன்று எதற்காகத் தன்னை நேரில் காண வந்திருக்கிறாள் என்ற கோபம் அவனுக்கு! போதாதற்கு நிச்சயதார்த்த ஏற்பாடுகளைப் பற்றி வேறு அறிந்திருந்த படியால் விறைப்புடன் நின்றவனை அவள் வீட்டுக்கு அழைக்க.. திட்டி,மிரட்டி அவளைத் துரத்தியடித்தான்.

அடுத்த ஒரு வாரத்தில் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீடு திரும்பியிருந்தார் சாருகேசன். முற்றிலுமாக அவருக்குத் துணையிருந்துக் கண்ணும்,கருத்துமாய் அவரைப் பார்த்துக் கொண்டாள் சாருமதி.

அன்று காலை சாப்பாட்டை முடித்த சாருகேசன், உறங்கச் சொன்ன சாருமதியிடம் “கொஞ்ச நேரம் பேப்பர் படிக்கிறேன்ம்மா” எனக் கூறி விட்டு ஹால் ஷோபாவில் வந்தமர்ந்தார்.

அவர் வசதியாய் உட்கார வழி செய்து விட்டு மாடியறைக்குச் செல்ல வாசலுக்கு வந்த சாருமதி.. வீட்டுக்குள் நுழைந்து

கொண்டிருந்த மதிவாணனையும், அவர் மகனையும் கண்டுப் பேயறைந்தது போல் அப்படியே நின்று விட்டாள்.

அவளைக் கண்டுப் புன்னகைத்து "என்னம்மா மருமகளே, ஷாக் ஆகி நிற்கிற?" என்ற மதிவாணனுக்குப் பதில் சொல்லாமல் திடுதிடுவென உள்ளே ஓடி மறைந்தாள்.

அவசரமாய் ஓடுபவளைக் கண்டு புருவம் சுருக்கிய சாருகேசன் நிமிர்ந்து வாசலைப் பார்த்த போது.. மதிவாணன் உள்ளே நுழைந்தார்.

"வாடா.. வாப்பா குமார்" – என்று வரவேற்றபடி எழுந்தவரைத் தடுத்து அமர வைத்த மதிவாணன்..

"இப்போ எப்படியிருக்கு?" என்று விசாரித்தார்.

அவருக்குப் பதில் கூறி விட்டு.. இருவருக்கும் காஃபி கொடுத்த அன்னம்மாவிடம் "மதி எங்க?" என்று கேட்டார் சாருகேசன்.

சங்கடமாய் அவர் முகம் பார்த்த அன்னம் "பா...பாத்ரூம்ல இருக்கு" என்று சமாளிக்க..

"எங்களைப் பார்த்ததும் அடிச்சுப் பிடிச்சு மருமக ஓடுனது இந்த அவசரத்துக்குத் தானா?" என்று சிரித்தார் மதிவாணன்.

அவரது அட்டு காமெடிக்குப் புன்னகைக்க விரும்பாத சாருகேசன் "நான் போய்ப் பார்க்குறேன்" என்று எழுந்து சென்றார்.

உள்ளே அவரது அறை மூலையில் கால்களை மடித்துத் தரையில் அமர்ந்திருந்த சாருமதி நெற்றியை முட்டியின் மீது அழுத்தியபடிக் கண்களை இறுக மூடியிருந்தாள்.

அவள் அமர்ந்திருந்த கோலத்தைக் கண்ட சாருகேசனுக்கு மனம் நெகிழ்ந்தது. கோபமோ,அழுகையோ வரும் போது இப்படி மூலையில் வந்து அமர்ந்து கொள்வதை வழக்கமாக வைத்திருந்த சின்ன வயது சாருமதியை நினைவு கூர்ந்தார் அவர்.

அருகே சென்று அவள் தோளைத் தொட்டு “என்னம்மா?” என்றவரிடம்.. பதில் சொல்லாமல் தலை குனிந்தாள் அவள்.

என்னவென்று சொல்லுவாள் அவள்! இத்திருமணத்தை நிறுத்தும் படி வசந்த் சண்டையிட்டதால் தான் இத்தனை நாட்கள் மருத்துவமனையில் கிடந்தார்! இப்போது அவளும் அதையே கூறினால்.. எப்படி ஏற்றுக் கொள்வார்! இனியொரு முறை அவர் கஷ்டப்படுவதைக் காண அவளால் நிச்சயம் முடியாது.

வாயை அழுந்த மூடிக் கொண்டு இறுகிய முகத்துடன் அமர்ந்திருந்தவளிடம்..

“மதிவாணனும்,குமரனும் வந்திருக்காங்கம்மா! ஒரு மரியாதைக்காவேனும் வாங்க-ன்னு சொல்லாம, இப்படி வந்து உட்கார்ந்துக்கிட்டா எப்படிம்மா?” என்று வினவினார்.

அவர் பேச்சை மீறும் எண்ணம் இல்லாவிடினும், அசைய மறுத்தக் கால்களை.. என்ன சொல்லி எழுப்பி நிறுத்தவென்றேப் புரியவில்லை அவளுக்கு.

பரிதாபமாய்த் தன் முகம் நோக்கியவளை அவர் கைப் பற்றித் தூக்கி நிறுத்த.. குனிந்தத் தலையுடனே நின்றவள்.. எப்படியேனும் வெளியே செல்வதைத் தவிர்த்து விடும் நோக்கத்தோடு..

“இ..இ..இன்னொரு நாள் அவங்களைப் பார்த்துக்கிறேனே மாமா” என்று தயங்கிய குரலில் கூற..

“இன்னொரு நாள் மட்டும் தைரியமா வந்து நின்னுடுவியா?” என்று வினவினார் அவர்.

பதில் சொல்லாமல் இமைகளை இறுக மூடியவளின் விழிகளிலிருந்து சொட்டியது ஒரு துளிக் கண்ணீர்.

“சாருமதி....”

“..........”

“அம்மா… டேய்…” – பாசமாய் அழைத்தவரின் முகம் பார்க்காமல் மறுபுறம் திரும்பி நின்று விசும்பியவள்..

“என்னால முடியாது மாமா ப்ளீஸ்” என்று கெஞ்ச.. எதுவும் சொல்லாமல்.. நகர்ந்து ஜன்னலருகே சென்று நின்றார் அவர்.

அடுத்த சில நிமிடங்கள் அழுகையுடன் நின்றவள் பின் மூக்கை உறிஞ்சியபடியே அவரருகே சென்றாள்.

“எனக்குக் கொஞ்ச நாள் டைம் கொடுங்க மாமா” – மனதை மறைத்துக் கூறியவளிடம்..

“வசந்தை மறக்குறதுக்கா?” – என்று நேரடியாக வினவினார் அவர்.

“நடப்பை ஏத்துக்கிறதுக்கு” – என உணர்ச்சியற்றக் குரலில் கூறினாள் அவள்.

“அவ்ளோ பெரிய வில்லனாம்மா நான்?, விருப்பமில்லாமக் கண்ணீரோட நிற்குற உன்னை, என் இஷ்டப்படி யாருக்கோக் கட்டிக் கொடுக்குறதுக்கு?”

“மாமா….” – அதிர்ச்சியுடன் அவர் முகம் நோக்கினாள் அவள்.

“நீ ஏன்-ம்மா என் கிட்ட முன்னமே சொல்லல?”

“சொல்ற சூழ்நிலை வரல மாமா! உங்க உடல்நிலையைப் பத்தியோ, அதனால வந்த உங்க எண்ண மாற்றத்தைப் பத்தியோ எனக்குத் தெரியாது! கல்யாணத்துக்கு இவ்ளோ சீக்கிரம் ஏற்பாடு பண்ணுவீங்கன்னு நான் எதிர்பார்க்கல”

“அப்படி எத்தனை நாள் என் கிட்ட மறைக்கலாம்ன்னு நினைச்சிருந்தீங்க?”

“மறைக்கனும்ன்னு எல்லாம் இல்ல மாமா, ஒளிஞ்சு,மறைஞ்சு ஊர் சுத்தியெல்லாம் நாங்கக் காதலிக்கல! அப்டியே உங்களுக்குத் தெரிய வந்திருந்தாலும்.. அவர்… அவர் அப்போவும் உங்கக்கிட்ட சண்டை தான் போட்டிருப்பார்”

மெல்லிய குரலில் கூறியவளைக் கேட்டுத் தன் மகனை எண்ணி சிரிப்பு வந்தது அவருக்கு.

முன்னமே தெரிய வந்திருந்தாலும் "ஆமா காதலிக்கிறேன்.அதனால என்ன இப்போ?" –என்று தான் எகிறியிருப்பான் அவன்.

நகைப்பவரின் முகத்தையே ஒரு நொடி விழி அசையாது நோக்கியவள்..

"எனக்கு... எனக்கு அவரை ரொம்பப் பிடிக்கும் மாமா" என்றாள்.

வியப்புடன் நிமிர்ந்தவரிடம்...

"அவரை மட்டும் தான் பிடிக்கும்" என்று அவள் அழுத்தமாகக் கூற.. கையைக் கட்டிக் கொண்டு அவள் பேசுவதை வேடிக்கை பார்த்தார் அவர்.

"உங்கக் கூட எவ்ளோ தான் சண்டை போட்டாலும், வாக்குவாதம் பண்ணாலும், ஏன் நீங்க அப்பாவே இல்ல எனக்குன்னு சொன்னாலும், அவர்.. நீங்க வேண்டாம்ன்னு ஒரு தடவை கூட நினைச்சதில்ல மாமா"

"............"

"நான்.. நான் அவரைக் காதலிக்கிறேன் மாமா.. உங்க மேல எவ்ளோ பாசம் வைச்சிருக்கேனோ... அந்தளவுக்கு அவரையும் நேசிக்கிறேன். என்னால... யாரையும் கல்யாணம் பண்ணிக்க முடியாது மாமா"

"..........."

"உங்களுக்கு இது பிடிக்கலைன்னா.. நான் அவரை விட்டு ஒதுங்கியே இருக்கேன்! ஆனா.. ஆனா.. எனக்குக் கல்யாணம் மட்டும் வேண்டாம்! நான் கடைசி வரை உங்களோடவே இருந்துட்றேன்"

உயிராய் நேசிப்பவனை விட்டு விலகி.. வளர்த்த மாமனுக்காக யோசித்துத் தன் ஆசைகளை மறைத்துப் பாவமாய் கண் முன் நிற்பவளை நெஞ்சில் பொங்கி எழுந்தப் பாசத்துடன்.. சிறு புன்னகையோடு நோக்கினார் அவர்.

இந்தச் சில நாட்களாக எவ்வளவு கண்ணீர் வடித்து விட்டாள்! சொந்த மகளாக எண்ணி வளர்த்தது அவளை இத்தனைக் கஷ்டத்துக்குள்ளாக்கத் தானா? மன்னிப்பாளா அவர் தங்கை?

வசந்துக்கு என்ன குறை?, அவரது மகன் என்பதே அவனது பெரிய தகுதி (!?) தானே?, அதைத் தாண்டி என்ன எதிர்பார்த்து.. அவனை விடுத்து வேறு மாப்பிள்ளை தேடினார் அவர்?

பதிலை எதிர்பார்த்துத் தன் முகத்தையே பார்த்தவளின் கையைப் பற்றி..

“இனி எந்தக் காரணத்துக்காகவும் நீ வாழ்நாள்ல கண்ணீர் சிந்தக் கூடாதும்மா! இனி எல்லாம் உன் விருப்பப்படியே நடக்கும்! அழாத! நான் போய் அவங்களை அனுப்பிட்டு வர்றேன்” என்று வெளியே சென்றவர் என்ன சொல்லி அவர்களை அனுப்பி வைத்தாரோ.. மீண்டும் மருமகளின் அருகே வந்தமர்ந்தார்.

“சொல்லும்மா. நான் என்ன பண்ணனும்?”

மகனிடம் கூட இது போன்று அருகில் அமர்ந்துப் பொறுமையாய்க் கேள்வி கேட்டதில்லை அவர்! தனக்கு அவர் கொடுக்கும் முக்கியத்துவத்தை எண்ணி எப்போதும் போல மனம் நெகிழ்ந்தது அவளுக்கு.

தான் ஒரு ஆண் பிள்ளையாய்ப் பிறந்திருந்தால் கூட தன்னையும் அவர் வசந்தைப் போலத் தான் நடத்தியிருப்பார்! அதில் எந்த சந்தேகமுமில்லை!

பெண் பிள்ளை என்பதாலேயே பொத்திப் பொத்திப் பாதுகாத்து.. பாசம் காட்டி வளர்த்து வருகிறார் போலும்!

அடைத்தத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு அவரை நிமிர்ந்து நோக்கியவள்..

“அ…அவரை வீட்டுக்கு வர வைக்கனும்”-என்றாள்.

“நான் கூப்பிட்டா வருவானா?” – கேள்வி கேட்டவரிடம்..

அவசரமாய் “வருவார் மாமா” என்றாள்.

“எனக்கு நம்பிக்கையில்ல!, நான் ஏன் வரனும் அப்டி,இப்டின்னு நிச்சயம் குதிப்பான்”

“அப்டின்னா.. அடிச்சு இழுத்துட்டு வாங்க”

“அதுசரி! சும்மாவே என் மேல கொள்ளை,கொள்ளையா வெறுப்பை சேர்த்து வைச்சிருக்கான்!இதுல அடிக்க வேற செய்யனுமா?,” – அலுத்துக் கொண்டவரிடம்..

“உ…உங்களுக்கு அவரைப் பிடிக்குமா மாமா?” என்றுத் தயக்கத்துடன் வினவினாள் அவள்.

“உன்னை எனக்குப் பிடிக்கும் தான?”

“பிடிக்கும்”

“அப்போ அவனையும் தானம்மா பிடிக்கும்?”

“ம்ஹ்ம்! நான் உங்களுக்கு தங்கை பொண்ணு தான்! ஆனா அவர் சொந்த மகனாச்சே! அப்டின்னா அவர் தானே என்னை விட உங்களுக்கு ஸ்பெஷலா இருக்கனும்?”

“ஸ்பெஷல் தான். ஒத்துக்கிறேன்”

“அப்போ ஏன் மாமா அவரை எப்பவும் திட்டுறீங்க”

“தெரியலம்மா! அவன் மேல நான் காட்டுற கோபம் தான் என் பாசத்தோட அளவு போல!”

“………….”

“எப்போ அவனை வீட்டுக்குக் கூப்பிடலாம்?”

“இப்பவே”

“சரி வா போகலாம்.”

“நி...நிஜமாவா மாமா?”

“ம்ம்” – என்றவரைக் கண்டு முகம் மலர்ந்துக் கடகடவெனத் தயாராகி அவர் முன்பு வந்து நின்றாள் சாரு.

இந்தச் சில நாட்களாக அவள் முகத்தில் அவர் காணாத உற்சாகமும், சந்தோசமும் இன்று டன் கணக்கில் வழிவதைக் கண்டுப் புன்னகையுடனே மருகளுடன் புறப்பட்டார், மகனைக் காண!

இருவரும் ஹரியின் வீட்டை அடைகையில்.. வெளியே செல்லத் தயாராகி வாசலுக்கு வந்த ஹரி தான் முதலில் அவர்களைக் கண்டான்.

அடித்துப் பிடித்துக் கொண்டு உள்ளே ஓடியவன் வசந்திடம் விசயத்தைச் சொல்ல.. அவனும் அவசரமாய் வெளியே வந்தான்.

வாசலருகே வந்து கொண்டிருந்தவர்களிடம் விரைந்து சென்றவன்.. தந்தையின் முகத்தைக் கண்டு..

“இந்த வெயில்ல இப்டி நடந்து வராட்டி தான் என்ன இப்போ?, ஏய்.. அறிவில்லையாடி உனக்கு?” – என்று சாருமதியிடம் பாய.. அவளோ.. வாய் பிளந்து அவனை நோக்கி விட்டுப் பின்.. அலட்டிக் கொள்ளாமல் அருகே நின்றிருந்த சாருகேசனையும் நோக்கினாள்.

“ஹாஸ்பிட்டல்ல இருந்து வந்து முழுசா ஒரு வாரம் கூட ஆகல! அதுக்குள்ள என்ன அவசரம் உங்களுக்கு, இப்படி வெளிய வர்ற அளவுக்கு?” – இப்போது நேராக அவரிடமே பாய்ந்தான் அவன்.

மறுபடி ஒரு சண்டைக்கு வழி வகுத்து விடுவானோ என்று பயந்துக் குறுக்கே புகுந்த சாருமதி..

“உங்களை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகத் தான் மாமா வந்திருக்கிறாரு” என்று கூற…

“ஏன், இவர் வந்து அழைச்சாத் தான் நான் வருவேன்னு உன் கிட்ட சொன்னேனா?” – என அவளையே கேள்வி கேட்க.. அடப்பாவி என்று பார்ப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை அவளுக்கு.

“வராம எங்க போயிடப் போறேன்?, ஒரேடியா இங்கேயே இருந்துடுவேன்னு நினைச்சீங்களா?, அந்த வீட்ல எனக்கும் பங்கு இருக்கு”

தோளைக் குலுக்கிக் கொண்டு கூறியவனைக் கேட்டு.. “வசந்த்த்த்த்த்த்த்” என்று பல்லைக் கடித்தாள் சாரு.

அவளைக் கண்டு கொள்ளாமல் தந்தையிடம் திரும்பியவன்..

“இது ஹரி வீடு. இஷ்டமிருந்தா உள்ள வாங்க! இல்லேன்னா இப்டியே நம்ம வீட்டுக்குப் போகலாம்” என்று கூற.. ஒரு மூலையில் இவர்களனைவரையும் பார்த்தபடிப் பம்மி நின்ற ஹரியைக் கண்டு விட்டு “இல்ல, இவ்ளோ தூரம் வந்துட்டேன்ல?, உள்ளே போய்ட்டு அப்புறமா வீட்டுக்குப் போகலாம்” என்றவர் வீட்டுக்குள் சென்றார்.

வசந்தைத் தவிர மற்ற இருவரும் வியப்பு குறையாமல் அவரைப் பின் தொடர்ந்தனர்.

ஹாலிலிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு வீட்டைச் சுற்றி நோட்டமிட்டார் சாருகேசன்.

“பரவாயில்ல! வீட்டைச் சுத்தமா வைச்சிருக்கான் உன் நண்பன்! உன்னை மாதிரி இல்ல போல”

“நீங்க என்னைக்கு என் ரூம்க்குள்ள வந்து பார்த்தீங்க?”

பட்டெனப் பதில் கூறிய வசந்தின் காலை மிதித்து அடக்கிய சாரு பார்வையாலே அவனை எரிக்க.. அவளை விட்டுத் தள்ளி நின்று கொண்டான் அவன்.

“சாரு...” – மெல்லிய குரலில் தன்னை அழைத்த ஹரியிடம் அவள் என்னவென்று வினவ..

“உன் மாமா என்ன சாப்பிடுவார்?, காஃபியா டீயா?” என்று அவன் கூறிக் கொண்டிருக்கையிலேயே..

“ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டு வா போதும்” என்றார் அவர்.

தன்னிடம் அவர் பேசியதைக் கண்டுத் திடுக்கிட்டு விழித்த ஹரி குடுகுடுவென ஓடிச் சென்று ஒரு செம்பில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து அவரிடம் நீட்டினான்.

“நானே இவரைப் பார்த்துப் பயப்பட மாட்டேன்! இவன் ஏன் இவ்ளோ நடுங்குறான்” என்று முணுமுணுத்தான் வசந்த்.

அதன் பின்பு சிறிது நேரம் அமர்ந்து ஹரியிடம் பேச்சுக் கொடுத்து அவனை மேலும் நடுங்க வைத்த மனிதர் பின் தான் கிளம்புவதாகக் கூறி எழுந்தார்.

“நீ வீட்டை வைச்சிருக்கிற விதமும், தனியா குடியிருக்கிற பாங்கும், உன் பொறுப்புணர்ச்சியைப் படம் போட்டுக் காட்டுது! இதைக் கொஞ்சம் உன் நண்பனுக்கும் சொல்லிக் கொடு”

வாசலில் நின்று கொண்டு தன்னிடம் கூறியவரைக் கேட்டு அசட்டுச் சிரிப்புடன் ஹரி, வசந்தை நோக்க.. அவனோ எதுவும் கூறாமல் ஜன்னல் வழி வெளியே வெறித்துக் கொண்டிருந்தான்.

“அப்ப நான் கிளம்புறேன்” என்று விட்டு மகனிடம் “வாடா” என்றார்.

“நீங்க கிளம்புங்க! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு! முடிச்சிட்டு நைட் வர்றேன்”

“பொல்லாத வேலை! பெரிய கலெக்டர் வேலை” என்று முணுமுணுத்துக் கொண்டே சென்றவரைக் கண்டு நண்பனை முறைத்தான் ஹரி.

இங்கே வந்ததிலிருந்துத் தன் புறம் பார்வையைத் திருப்பாதிருந்தவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சாருவும் வெளியேறினாள்.

அவர் சென்றதும் “ஹப்பாஆஆஆ” என்றபடிப் பொத்தென நாற்காலியில் சாய்ந்த ஹரியைக் கண்டு சிரித்தான் வசந்த்.

“நீயெல்லாம் எப்படித் தான் அவர் முன்னாடி பயமில்லாம பேசுறியோ!”

“பயமா? எனக்கா?”

“உன் கோபமெல்லாம் போயிடுச்சா வசந்த்?”

“எனக்கென்ன கோபம்?”

“டேய்.. டேய்..”

“ப்ச், நான் என்னைக்கு அவர் மேலக் கோபப்படாம இருந்திருக்கேன்?, அவர் ஹாஸ்பிடல்ல இருந்து வந்தப்புறம் வீட்டுக்குப் போய்டலாம்ன்ற திட்டத்துல தான் இருந்தேன்”

“அடப்பாவி”

“ப்ச், என்னடா?, அவ்ளோ சொத்து சேர்த்து வைச்சிருக்கிறாரு மனுஷன்? அதையெல்லாம் யார் அனுபவிக்கிறது?, இந்த ராட்சசி அந்தாளோட வளர்ப்பு! ரெண்டு பேருக்கும் சேர்த்து வைக்கத் தான் தெரியுமே தவிர அனுபவிக்கத் தெரியாது! அந்த வீட்லயே யார் பேச்சையும் கேட்காம.. வாழ்க்கையை எனக்குப் பிடிச்ச மாதிரி அனுபவிச்சு வாழ்ற ஒரே மனுஷன் நான் மட்டும் தான்”

“நீ இந்த பூமில வசிக்க வேண்டிய ஆளே இல்லடா வசந்த்”

“நக்கலா?”

“சாரு விஷயம்???” – என்று இழுத்தவனிடம்..

“அவர் என்ன நினைக்கிறாரோ அதைப் பண்ணட்டும்! அவளுக்கு நான் வேணும்ன்னா அவ மாமாவை எதிர்த்து

சண்டை போடட்டும்! இனி நான் இந்த விஷயத்துல எதுவும் பண்றதா இல்ல" – என்று தீர்மானமாகக் கூறியவனைக் கவலையுடன் நோக்கினான் ஹரி.

"மனுஷன் என்ன நோக்கத்துல இவனை வீட்டுக்குக் கூப்பிட்றாரோ தெரியலயே" – வாய் விட்டுப் புலம்பியவனின் தலையில் அடித்து..

"பசிக்குது! போய் சமை டா" என்று வசந்த் கூறவும் எழுந்து சமையலறைக்குச் சென்றான் ஹரி.

நண்பனை எண்ணிப் புன்னகைத்தபடியே ஜன்னலருகே சென்ற வசந்த் வாசலிலிருந்த மாமரத்தின் அருகே கையைக் கட்டிக் கொண்டு நின்றிருந்த சாருமதியைக் கண்டுப் புருவம் சுருக்கினான்.

அவரை வீட்டில் விட்ட வேகத்தில் ஓடோடி வந்திருக்கிறாள் போலும்! நெற்றி முழுதும் வியர்வை பூத்துக் கிடந்தது. ஏதோ யோசனையுடன் நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தவளின் அருகே சென்று நின்றான்.

அவனைக் கண்டதும் முக பாவனையை அவசரமாக மாற்றிக் கொண்டு வேறு புறம் நோக்கினாள் அவள்.

அவள் செய்கைகளனைத்தும் சுருக்கிய புருவங்களுடன் நோக்கியபடி "என்ன?" என்றான் அவன்.

".............."

"எதுக்கு இங்க நிக்குற?"

"............"

"ஏய்ய்ய்ய், உன் கிட்ட தான் கேட்குறேன்" – பொறுமையற்ற குரலில் கூறியவனின் புறம் பார்வையைத் திருப்பிப் பின்...

நான்காய் மடிக்கப் பட்டிருந்தக் காகிதமொன்றைத் தன் இரண்டு கைகளாலும் இறுகப் பிடித்தபடி.. தலையைக் குனிந்து

கொண்டு.. அவன் முன்பு நீட்டினாள் அவள்.

காகிதத்தைப் பார்த்ததும் அவன் முகம் என்ன மாதிரியான பாவனையை வெளிப்படுத்துகிறதென்பதைப் பார்க்க ஆவல் உந்த.. குனிந்தபடியேத் தன் பெரிய கண்களை மட்டும் உயர்த்தி.. மெல்ல அவனை நோக்கினாள் அவள்.

அவள் பார்வையும், அவள் கையிலிருந்தக் காகிதமும்.. அவன் புருவச் சுருக்கத்தை நீக்கி.. இயல்பாக்க.. உள்ளே அடித்த சாரலில் நனைந்தபடியே.. அவள் கையிலிருந்தக் காகிதத்தை வெடுக்கெனப் பிடுங்கிப் பிரித்தான் அவன்.

ஐ லவ் யூ – சாரு.

கொட்டை எழுத்தில் அவள் காதல்.. அந்தக் காகிதம் முழுதையும் நிறைத்திருந்தது.

காகிதத்தைக் கையில் வைத்தபடியே மூக்கைச் சொரிந்தவனின் இதழோரத்தில் மோகனமாய் ஒரு புன்னகை.

“என்ன இது?” – அதட்டலாய் வினவினான்.

“லவ் லெட்டர்”

“யாருக்கு?”

“உங்களுக்கு”

“யார் எழுதினது?”

“ம்ம்ம், உங்கப்பா!

“ப்ச்” – என முறைத்தவனிடம்..

“சாருன்னு அதுலயே எழுதியிருக்கேனே! பின்ன என்ன கேள்வி?” என்று அவள் கடுகடுக்க..

“உன் மாமா கிட்ட இதைக் காட்டுனியா?” என்று வினவினான் அவன்.

“..........”

“அவர் பேச்சை மீறி எதுவும் செய்ய மாட்டேன்னு உறுதி மொழி எடுத்துக்கிட்ட ஆளாச்சே நீ!”

“.......”

“இதை நீ என் கிட்டக் கொடுத்தது தெரிஞ்சு, உன் மாமா பாட்டுக்க, மறுபடி ஆஸ்பத்திரில படுத்துடப் போறார், எதுக்கும் மனசைத் தேத்திக்க! இந்த முறை மனுஷன் பொட்டுன்னு போனாலும் ஆச்சரியப்படுறதுக்கில்ல”

“வசந்த்த்த்த்” – எரிச்சலுடன் கத்தியவளின் முகத்தில் காகிதத்தை எறிந்து..

“என் முன்னாடி என்னைக் காதலிக்குற மாதிரி மயங்கி, உருக வேண்டியது! அப்புறம் அந்தாளு ஐசியூல படுத்துக்கிட்டா.. மனசு மாறி.. அவர் கிட்ட உங்க விருப்பம் தான் என் விருப்பம்ன்னு பாசத்தைப் பொழிய வேண்டியது! என்னை என்ன பொம்மைன்னு நினைச்சியா?, நீ ஆட்டி வைக்குற படி ஆடுறதுக்கு?” – ஆத்திரத்தில் சீறியவனிடம்..

“நீங்க பொம்மையில்ல! மனசாட்சியில்லாத மிருகம்!” என்றுத் தானும் கத்திய சாருமதி..

“ஐசியூல இருக்குற மனுஷன் கிட்ட சண்டை போடுற அளவுக்கு நான் உங்கள மாதிரி தைரியசாலி கிடையாது! அந்த நேரத்துல அவரைச் சமாதானப்படுத்தத் தான் அப்படிச் சொன்னேனே தவிர.. எவனோ ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக் குடும்பம் நடத்துற நோக்கத்துல இல்ல! அப்படியே மாமா என்னைக் கம்பெல் பண்ணியிருந்தாலும்.. விஷம் குடிச்சுத் தற்கொலை பண்ணியிருப்பேனே ஒழிய.. நிச்சயம் கல்யாணத்துக்கு சம்மதிச்சிருக்க மாட்டேன்” – என்று கூற...

என்ன பேச்சுப் பேசுறா என்று கடுப்பாகிப் போன வசந்த் “வாயை மூடு” என்றான்.

“நியாயமா பார்த்தா.. என் மேல நம்பிக்கை வைக்காம போனதுக்கு.. நான் தான் உங்க மேலக் கோப்படனும்! வீட்டை

விட்டு வெளிய போய் கஷ்டப்படுறீங்களேன்னு பாவம் பார்த்துத் தேடி வந்தேன்ல? என்னைச் சொல்லனும்” – என்று புலம்பியவள்...

காற்றில் பறந்தோடி விட்டக் காகிதத்தைத் தேடிச் சென்று எடுத்து வந்து..

“ஐ லவ் யூன்னு லெட்டர் எழுதிக் கொடுத்தா.. என் முகத்துல விட்டெறியுறீங்களா?, இனி ஜென்மத்துக்கும் இந்த வார்த்தை என் வாய்ல இருந்து வராது” என்று கர்ஜித்து விட்டு.. விறுவிறுவெனச் சென்று விட...

“சரி தான் போடி” என்றுத் தானும் கோபத்துடன் நகர்ந்து விட்டான் வசந்த்.

அன்றிரவு வீடு திரும்பியவன்.. தோட்டத்தில் நடை பயின்று கொண்டிருந்தத் தந்தையைக் கண்டு கொள்ளாமல் விறுவிறுவென வீட்டுக்குள் நுழைந்து “அன்னம்மா” என்று குரல் கொடுத்தபடியே டைனிங் டேபிளில் அமர்ந்தான்.

“ராசா... வந்துட்டீங்களாஆஆஆஆஆ?” – என்று வாய் நிறையக் கேட்டபடி அவனருகே வந்து அவன் முகத்தில் திருஷ்டி வழித்த அன்னம்மாவிடம்..

“ஆமா.. நான் போருக்குப் போய்ட்டு திரும்பி வந்திருக்கேன்! நீ திருஷ்டி கழி” என்று அவன் நக்கலடிக்க..

“நீங்க இல்லாம, வீடு வீடாவே இல்ல தம்பி! என்ன இருந்தாலும் இந்த வீட்டோட மகராஜன் நீங்க தான?” என்று பொங்கிய அன்னம்மாவைச் சமாதானப்படுத்தியவன்..

“பசிக்குது! சீக்கிரம் சாப்பாடு எடுத்து வை! ரெண்டு வாரத்துக்கும் மேல உன் கை மணத்தை ருசிக்காம என் நாக்கு செத்துப் போய்க் கிடக்கு” – என்று அவசரப்படுத்த..

வேக,வேகமாக அவன் முன்பு அவனுக்குப் பிடித்த ஐட்டங்கள் அத்தனையையும் கடை பரப்பினார் அன்னம்மா.

“இவ்வளவும் எனக்காக செஞ்சியா?” – என்று கண்ணை விரித்தான் வசந்த்.

“நீங்க ராவுக்கு வீட்டுக்கு வரப் போறதா மதிக் கண்ணு சொல்லுச்சு! அதான் எல்லாஆும் பண்ணி வைச்சுட்டேன்” என்றவரிடம் புன்னகைத்து உண்டபடியே…

“எங்க அவ?” என்று விசாரித்தான்.

“மேல அறையில தான்! என்னமோ தெரியல! அது முகமே சரியில்ல தம்பி. உம்முன்னே இருக்கு”

“ப்ச், அவ மூஞ்சியே அப்படித் தான் அன்னம்மா! அவளையெல்லாம் நீ கண்டுக்காத! ரெண்டு வாரமா வீட்டை விட்டு வெளியே போனது தான் நான் தான்! அதனால எனக்குத் தான் உன் ஸ்பெஷல் கவனிப்பெல்லாம்! புரிஞ்சதா?” என்று அவன் மிரட்ட விரிந்த சிரிப்புடன் வேகமாய்த் தலையாட்டினார் அன்னம்மா.

இருவரையும் கண்டபடியே ஹால் ஷோபாவில் அமர்ந்திருந்தார் கேசன்.

உண்டு முடித்துப் பெரிய ஏப்பத்துடன் தந்தையைக் கடந்து சென்றவனை “நில்லு டா” என்று நிறுத்தினார் சாருகேசன்.

“என்னப்பா?”

“உன் கூடக் கொஞ்சம் பேசனும். உட்காரு” – என்றவரிடம் முகம் சுழித்து..

“வயிறு முட்ட சாப்பிட்டிருக்கேன்ப்பா! நல்லாத் தூக்கம் வரும். நான் தூங்கனும்! ஹரி வீட்ல ஏசி இல்ல. கொசுக்கடி வேற! இத்தனை நாளா நான் சரியாக் கூடத் தூங்கல! இன்னிக்கு நான் நல்லாத் தூங்கனும்” என்றான் அவன்.

“ஹ்ம்ம்! இந்த சொகுசெல்லாம் நான் சம்பாதிச்ச காசுல இருந்து தான வந்தது?, பெருசா தனக்குக் காசு,பணம் தேவையில்லன்னு பீத்திக்குவான்! ஆனா.. ஏசியில்லாம தூங்க

மட்டும் முடியாதாம்! என்ன பிறவியோ” – உள்ளுக்குள் அவனை வறுத்தெடுத்தவரிடம்..

“என்னப்பா?” என்றான் அவன்.

“உட்காரு டா”

“பரவாயில்ல! நான் நிக்குறேன்”

“என்ன மரியாதையா?”

அவர் கேள்வியில் கடுப்பாகி அருகிலிருந்த பியானோவின் முன்பு போடப்பட்டிருந்த நாற்காலியை இழுத்து அமர்ந்தான்.

“சொல்லுங்க”

“சாருமதிக்கும்,உனக்கும் கல்யாணம் பண்ணி வைக்கலாம்னு இருக்கேன்”

“நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு எப்போ சொன்னேன்?”

“டேய்ய்…” பல்லைக் கடித்துக் கொண்டு அடிக்குரலில் சீறியவரிடம்…

“ப்ச், இப்போ என்ன கல்யாணத்துக்கு அவசரம் எங்களுக்கு?, அவ படிக்கட்டும்ப்பா! படிச்சு அவ நினைச்ச மாதிரி வேலைக்குப் போகட்டும்! கல்யாணமெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம்”என்றான்.

“அதுவரைக்கும் நான் உயிரோட இருக்கனுமே”

“அதெல்லாம் இருப்பீங்க”

“வசந்த்…..”

-நிமிர்ந்துத் தன் முகத்தை இயலாமையுடன் நோக்குபவரைக் கண்டுப் பெருமூச்சுடன் எழுந்து சென்று அவர் அமர்ந்திருந்த ஷோபாவில் சாய்ந்தபடி அவர் காலடியில் அமர்ந்தான். வியப்புடன் தன்னை நோக்குபவரிடம்..

“நான் கேட்டேன் டாக்டர் கிட்ட! முறையான சாப்பாடு, எக்ஸர்சைஸோட டென்ஷன் இல்லாத லைஃபை லீட் பண்ணினா, இனிக் குறைஞ்சது 15,20 வருஷத்துக்காவது நீங்க ஆரோக்கியமா இருப்பீங்களாம்” – என்றான்.

“டென்ஷன் இல்லாம வாழத் தான் டா உங்களைக் கல்யாணம் பண்ணிக்க சொல்றேன்”

“உங்களுக்கு டென்ஷன் குறைஞ்சிடும்! எனக்கு ஏறிடுமே!”

“ப்ச், வசந்த்....”

“இன்னும் 2,3 வருஷம்ப்பா! நானும் பெரிய ஆள் ஆக வேணாமா?”

“நீ என்ன பெரிய ஆள் ஆகப் போற?”

“ஒரு ஆக்டிங் இன்ஸ்டிடியூட் வைக்கனும்! என்னை மாதிரி நடிப்பு,நாடகத்துல இண்ட்ரெஸ்ட் இருக்குறவங்களுக்கு முழு நேரப் பயிற்சி கொடுத்து.. நிறைய கலைஞர்களை உருவாக்கனும்! சினிமாவோட சேர்ந்து மேடை நாடகங்களும் மக்களை ரீச் ஆகுற மாதிரி ஏதாவது செய்யனும்!”

கண்ணில் மின்னும் கனவோடு கூறிக் கொண்டே சென்றவன்.. தந்தையின் முகம் போன போக்கைக் கண்டுப் பேச்சை நிறுத்தி…

“என்னப்பா?” என்றான்.

“அப்டின்னா என் தொழில்?, கஷ்டப்பட்டு ராப்பகலா நான் உழைச்சு முன்ன கொண்டு வந்தத் தொழிலை யார் எடுத்து நடத்துறது”

“நீங்க தான்”

“ப்ச், முன்ன மாதிரி என்னால அலைய முடியாது டா வசந்த்”

“அப்டின்னா உங்க மருமகளுக்குக் கத்துக் கொடுங்க! அவ எடுத்து நடத்தட்டும்”

“………”

“பெண் பிள்ளையாச்சேன்னு யோசிக்குறீங்களா?, நாட்டை ஆண்ட இந்திராகாந்தியே பெண் தான்ப்பா”

“நான் அப்படி யோசிக்கல! அவ ரொம்பச் சின்னப் பொண்ணுடா”

“அந்தச் சின்னப் பொண்ணுக்குக் கல்யாணம் மட்டும் பண்ணி வைப்பீங்க! தொழில் கத்துக் கொடுக்க மாட்டீங்களா?, சொல்லிக் கொடுங்கப்பா! அவ உங்களை விட, என்னை விட நல்லாவே மேனேஜ் பண்ணுவா! அவளால முடியாதப்போ நான் வர்றேன்”

“நிஜமாவா டா?”

“ஆமாப்பா! எப்படியும் நான் திறக்கப் போற ஆக்டிங் இன்ஸ்டிடியூட்டுக்கு நீங்க தான் ஸ்பான்சர் பண்ணப் போறீங்க! உங்களுக்கு உதவாம இருப்பேனா?”

“ராஸ்கல்”

“சரி, பேசி முடிச்சுட்டீங்களா? நான் தூங்கப் போகட்டுமா?”

“…………”

“இன்னும் என்னப்பா?” – என்றவனிடம் தயங்கி…

“வசந்த்…” என்றழைத்து அவன் முகம் பார்த்தவரிடமிருந்துப் பார்வையைத் திருப்பி நேராக நோக்கியவன்..

“மன்னிப்புக் கேட்டுத் தலையைக் கோதித் தோளைப் பிடிச்சுப் பாசம் காட்டுறேன்ற பேர்ல புதுசா எதுவும் பண்ணிடாதீங்க! நான் ஒன்னும் குழந்தை இல்ல!” என்று கூற.. அவனை முறைப்பதைத் தவிர வேறு எதுவும் செய்யத் தோன்றவில்லை அவருக்கு.

கொட்டாவி விட்டபடி எழுந்தவன் அவர் முறைப்பை சட்டை செய்யாமல் நகர்ந்து விட்டான்.

மரணப்படுக்கை வரை சென்று வந்தவருக்கு இனியும் மகனைக் கஷ்டப்படுத்தி விடக் கூடாதென்கிற எண்ணம்! ஆக்ஸிஜன் மாஸ்க்குடன் படுக்கையில் தந்தையைக் கண்டு விட்டவனுக்கு இனியும் அவர் மீது வெறுப்பை வளர்த்துக் கொள்ளக் கூடாதென்கிற எண்ணம்! எப்படியோ! நன்றாக இருந்தால் சரி!

தந்தையுடன் பேசி விட்டு மாடியேறியவன் சாருமதியின் அறைக்கதவைத் தட்டினான்.

“ப்ச், எனக்குப் பசிக்கல! சாப்பாடு வேண்டாம்ன்னு சொன்னேன்ல அன்னம்மா?” – என்றுத் திட்டியபடிக் கதவைத் திறந்தவள்.. கையைக் கட்டிக் கொண்டு நிலப்படியில் சாய்ந்து நின்றவனைக் கண்டுக் கோபமுற்று மீண்டும் கதவைச் சாத்த முற்பட.... “ஏய்ய்ய்ய்” எனத் தடுத்து அவளுடன் போராடி அறைக்குள் நுழைந்தவன்.. கதவைச் சாத்தி விட்டு நின்று அவளை முறைத்தான்.

“அப்டின்னா நீ இன்னும் சாப்பிடலயா?” – வசந்த்.

“நீங்க சாப்பிட்டீங்களா?”

“திருப்தியா!!!”

“அப்புறம் என்ன?, போய் இழுத்து போர்த்திட்டுத் தூங்குங்க”

“நீயும் வா”

“வாட்ட்ட்ட்ட்???”

“என்ன வாட்?, அன்னைக்கு நைட் ஃபுல்-ஆ என் ரூம்ல தான தூங்குன?”

“சத்தமாப் பேசாதீங்க. மாமாக்குக் கேட்டுடப் போகுது” – பதறிப் போனவளிடம்..

“கேட்டாலும் மனுஷன் கண்டுக்க மாட்டார்!”-என்றான் அவன்.

“என்ன சொல்றீங்க?”

“உனக்கும்,எனக்கும் கல்யாணம் பண்ண ப்ளான் பண்ணிட்டிருக்கார் அவர்”

“நிஜமாவா???” – விழி விரித்தாள் அவள்.

“ஆமா! ஆனா நான் வேண்டாம்ன்னு சொல்லிட்டேன்” – தோளைக் குலுக்கிக் கொண்டு அசால்ட்டாகக் கூறியவனிடம் பல்லைக் கடித்து..

“ஏன்???????” – என்றாள்.

“நீ தான் என் மேலக் கோபமா இருக்கியே!”

“அதுக்காக? அதுக்காக வேண்டாம்ன்னு சொல்லிடுவீங்களா?”

“ஆமா! பின்ன! நான் எங்கப்பா மாதிரி கிடையாது! உன் விருப்பத்துக்கு மதிப்பு கொடுக்குற ஆளு”

“கிழிச்சீங்க! ப்ச், உங்க கூட என்னப் பேச்சு?, நான் மாமாக்கிட்டயே பேசிக்கிறேன்” – நகரப் பார்த்தவளின் கையைப் பற்றி நிறுத்தியவன்.. “நீ முதல்ல என் கிட்ட சாரி கேளு” என்றான்.

“எதுக்கு சாரி கேக்கனும்?”

“என் கண்ணு முன்னாடியே உன் மாமா கைல சத்தியம் பண்ணி நான் வேண்டாம்ன்னு சொன்னதுக்கு! ஹாஸ்பிடல்ல வைச்சு.. நீங்க தான் என் மனசைக் கலைச்சீங்கன்னு சண்டை போட்டதுக்கு! அப்புறம் அடிக்கடி.. நீங்க மனுஷனே இல்ல, மிருகம்ன்னு வசனம் பேசுறதுக்கு”

“முதல் ரெண்டு ஸ்டேட்மெண்ட்க்கு வேணா சாரி கேட்குறேன்! ஆனா கடைசி வரிக்குக் கேட்க முடியாது”

“ஏன்?”

“ஏன்னா அது நூறு சதவீதம் உண்மை”

“நான் கோபத்துல இருந்தப்போ கொடுத்தக் கிஸ்ஸை வைச்சு என்னை மிருகம்ன்னு முடிவு பண்ணாதடி”

கொஞ்சம் கூட வெட்க மானமின்றி வெளிப்படையாகக் கூறியவனின் அருகே வந்து அவன் வாயை மூடி “என்ன பேசுறீங்க?,வாயை மூடுங்க” என்று மிரட்டினாள் அவள்.

முட்டைக் கண்ணை விரித்துப் பல்லைக் கடித்துக் கொண்டு முணுமுணுத்தவளைக் கண்டவனின் இதழ்கள் சிரிப்பில் விரிய..

தன்னருகே நின்றிருந்தவளின் இடையைத் தன் இருகைகளால் பற்றித் தூக்கி அருகிலிருந்த டிரெஸ்ஸிங் டேபிளில் அமர வைத்தான் அவன்.

“சாரி.. காலைல அப்படிப் பேசுனதுக்கு” – வசந்த்.

“ஒன்னும் தேவையில்ல”

“எங்க அந்த லெட்டர்?”

“ம்ம்ம், கிழிச்சுப் போட்டுட்டேன்”

“எங்க கிழிச்சுப் போட்டன்னு சொல்லு! தேடிக் கண்டுப்பிடிச்சு எடுத்து சேர்த்து வைக்கிறேன். உன்னை மாதிரி!”

“சொல்ல முடியாது”

“ப்ச், சாரு...” – பொறுமையற்றக் குரலில் அழைத்தவனிடமிருந்து விலகி..

எட்டிச் சற்றுத் தள்ளியிருந்த நோட்டுப் புத்தகத்தைக் கையிலெடுத்து அதனுள் இருந்த காகிதத்தை அவனிடம் நீட்டினாள்.

முகம் மலர அவள் கொடுத்ததை வாங்கி பாக்கெட்டுக்குள் பத்திரப்படுத்தியவனை அவள் கேள்வியாக நோக்க...

“நாளைக்குக் காலைல அப்பா படிக்கிற பேப்பரோடு சேர்த்து இதையும் வைக்கிறேன்! என்னை மட்டும் நீ மாட்டி விட்டேல?, இதையும் அவர் பார்க்கட்டும்” என்றான்.

“பார்க்கட்டும்! நானும் உங்களை மாதிரி.. யெஸ்,ஐ லவ் ஹிம்ன்னு அவர் கிட்ட நேரடியாவே ஒத்துக்குவேன்”-

திமிராகக் கூறியவளைக் கண்டு நகைத்து..

“பரவாயில்லயே! தேறிட்ட டி ரொம்ப! சரி, உனக்குப் பார்த்த ராஜகுமாரனை எப்படி சமாளிச்சார் மனுஷன்?” – என்று கேட்டவனிடம் அன்று காலை நடந்ததைக் கூறினாள் சாரு.

“மாமா அவங்கக்கிட்ட என்ன சொல்லி அனுப்பி வைச்சார்ன்னு எனக்குத் தெரியாது”

“ப்ச், அது அவர் பாடு! யாரைக் கேட்டு உனக்கு மாப்பிள்ளை பார்த்தாரு! அனுபவிக்கட்டும்”

“சரி விடுங்க! எப்போப் பார்த்தாலும் அவரைத் திட்டிக்கிட்டு…”

“என்ன இருந்தாலும் உனக்கு என்னை விட அவர் தான் முக்கியம். என்னடி?”

“ம்ஹ்ம் உங்க மேல இருக்குற பாசத்துக்குப் பேரு காதல். அவர் மேல இருக்குற பாசத்துக்குப் பேரு பக்தி.”

“ஓஹோ! விட்டா அவர் கழுத்துல மாலையை மாட்டி சூடம் காட்டிடுவ போல”

“ப்ச், வசந்த்…” – அவன் தோளைக் குத்தியவளின் கரத்தைப் பற்றி.. அவள் விரல்களில் முத்தமிட்டான் அவன்.

வெட்க முறுவலுடன் விலகப் பார்த்தவளைத் தடுத்து… அவள் முகத்தைத் தன் கைகளில் ஏந்தி.. காதோர முடிகளை ஒதுக்கி.. அவள் கன்னம் வருடியவன்…

“நேத்து பர்மிஷன் கேட்காம முத்தம் கொடுத்ததுத் தப்புன்னு தோணுச்சு! இப்போ சொல்லு.. கிஸ் பண்ணட்டுமா?” என்று வினவினான்.

அவன் மூச்சுக் காற்று முகத்தில் மோதியதில்.. சுவாசிக்கத் திணறி.. சிலிர்த்து.. சிவந்து… அவள் அனுமதியின்றிக் கிறங்கத் தொடங்கிய இமைகளைப் பிடிவாதமாய்ப் பிடித்து நிறுத்தி… படபடக்கும் நெஞ்சோடுத் தன் கருமணிகளை வேறு புறம்

நகர்த்தியவளின் கன்னம் பற்றித் தன் புறம் திருப்பினான் அவன்.

மெல்ல விழி உயர்த்தி அவனை நோக்கியவளின் பார்வையில்.. காதல்,காதல்,காதல் மட்டுமே நிறைந்திருக்க.. புருவம் உயர்த்தி அவள் சம்மதத்தை வினவியவன்.. அவள் அளித்த அனுமதியில் மயங்கி.. அவள் கண்ணோரத்தில் முத்தமிட்டுப் பின் இதழ் நோக்கிக் குனிந்தான்.

இத்தனை நாட்களாக மனதில் மலை போல் குவிந்து கிடந்தக் கோபம்,ஆத்திரம்,கவலை,அழுகை என அத்தனை உணர்வும் இன்று ஒரே நாளில்.. ஆரம்பித்தவராலேயே முடித்தும் வைக்கப்பட்டு விட்டதாலோ என்னவோ.. பாரம் குறைந்த அவர்களது இதயத்தின் மகிழ்ச்சியை மீண்டும் மீண்டும் ஒலித்த முத்தச்சத்தமே உணர்த்தியது.

டிரெஸ்ஸிங் டேபிள் கண்ணாடியில் சாய்ந்தபடிக் கண் மூடியிருந்தவளைத் தன் கைகளில் அள்ளிக் கொண்டு போய்... ஷோபாவில் அமரச் செய்து.. அவளருகேத் தானும் அமர்ந்தான் வசந்த்.

“கல்யாணம் மட்டும் வேணாம்! ஆனா.. இது மட்டும் வேணுமா?” – என்று அவன் தோளில் சாய்ந்தபடி அவள் முணுமுணுக்க..

“அது வேற, இது வேற” என்றான் அவன்.

“எனக்கு எல்லாம் ஒன்னு தான்!” என்று அவள் முறைப்புடன் கூறிய வேளை... அன்னம்மா கதவைத் தட்ட..

“இதோ வர்றேன் அன்னம்மா” – என்றபடி அவன் எழுந்து சென்று கதவைத் திறந்தான்.

அவனை அவள் அறையில் எதிர்பார்க்காத அன்னம்மா கண்ணை விரிக்க...

“என்ன அன்னம்மா?” என்று வினவினான்.

“இதெல்லாம் ரொம்பத் தப்பு தம்பி”

“என்னத் தப்பு?, எதையும் பார்த்துட்டியா?” - சந்தேகமாய் வினவியவளைக் கேட்டு..

“வசந்த்த்த்” என்று சாரு பல்லைக் கடிக்க..

“ஒரே வீட்ல இருக்குறீங்க ரெண்டு பேரும்! கல்யாணம் முடியுற வரைக்கும் இந்த மாதிரி தனியா சந்திக்கிறது தப்பு ராசா”

“அதுசரி! என்ன, அந்த மனுஷன் வேலையை நீ பார்க்குறியா?, வில்லனா இருந்த அவரே பச்சை கொடி காட்டிட்டார்! இப்போ நீ என்ன தொடங்குற?”

“வசந்த்.. நீங்க முதல்ல கிளம்புங்க! இனிமே இப்படி நடக்காது அன்னம்மா” – குற்ற உணர்வுடன் இடையில் புகுந்த சாருமதி.

“இனிமே இது அடிக்கடி நடக்கும் அன்னம்மா. இதுக்கெல்லாம் நீ பழகிக்க” என்றவன் அவர் கையிலிருந்த சாப்பாட்டுத் தட்டை வாங்கிக் கொண்டான்.

இருவரையும் ஒரு மாதிரி நோக்கியபடி அன்னம்மா நகர்ந்து விட.. அவனைப் போகச் சொல்லி வற்புறுத்தியவளை சாப்பிட வைத்து அதன் பின்பே தன் அறைக்குச் சென்றான் அவன்.

வீடு பழையபடி சகஜநிலைக்குத் திரும்பியிருக்க... சாருமதி தனது முதுகலைப் படிப்பின் முதலாமாண்டில் அடியெடுத்து வைத்திருந்தாள். சாருகேசனும் தன் பிள்ளைகளைப் பற்றிய கவலைகளைக் கை விட்டு தொழிலைப் பார்க்கத் தொடங்கியிருந்தார்.

வசந்த் எண்ணப்படி மாமாவுடன் ஷோ ரூமிற்குச் சென்றுத் தொழிலைக் கற்கவும் துவங்கியிருந்தாள் சாரு.

வசந்த் வழக்கம் போல் நடிப்பு,நாடகம்,புத்தகம் என சுற்றிக் கொண்டிருந்தான். ஆக்டிங் இன்ஸ்ட்டிடியூட்டைப் பற்றிப் பேசிய தந்தையிடம் “அதுக்கெல்லாம் காலமிருக்குப்பா! நிறைய ப்ளானிங் வேணும்! நான் ஒரு ஆளாத் தனியா இறங்க

முடியாது, பொறுமையா தான் பண்ணனும்" என்று விட்டான்.

மகன் என்ன செய்கிறான் என்று கேட்கும் ஆட்களிடம் கௌரவமாய்க் கூறிக் கொள்ளும் வேலை எதையேனும் அவன் பார்க்க வேண்டுமென்கிற எண்ணம் அவருக்கு! ஆனால் மகன் அவருக்கு நேர் எதிரானவனாயிற்றே! தன் இஷ்டப்படி அவனை ஆட்டி வைக்க முடியாது! அவன் விசயத்தில் கவலைப்படுவதும் வீண் என்றெண்ணிக் கொண்டார்!

அனைத்தும் அதன் போக்கில்.. தங்கு தடையின்றி ஓடிக் கொண்டிருந்தது.

இந்நிலையில் அவன் நடிக்கும் நாடகமொன்றைக் காண அன்று மாமாவை அழைத்தாள் சாருமதி.

"எனக்கு நாடகம் பார்க்குற அளவுக்குப் பொறுமை கிடையாதும்மா மதி" – வெளிப்படையாக மறுத்தபடி சாருகேசன்.

"ப்ச், தினம் ஒரு பாகவதர் படம் பார்க்குறவர் பேசுற பேச்சா இது?, அவரோட நாடகம் கூட, நீங்க பார்க்குற பாகவதர் படம் மாதிரி தான் இருக்கும் மாமா"

"அப்படியா?"

"ஆமா மாமா! ஒரு தடவை வந்து பாருங்க! உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும்! உங்க பையன் சிவாஜி கணேசன் ரேஞ்சுக்குப் பயங்கரமா நடிப்பார்"

"என்னம்மா பயமுறுத்துற?"

"அய்யோ! அவ்ளோ நல்லா நடிப்பார்ன்னு சொன்னேன் மாமா"

"இவ்ளோ பேசுறியே! நீ எப்போ அவன் நாடகத்தைப் பார்த்த?"

"அ..அ..அது.. ஒரு தடவை.. பொருட்காட்சில பார்த்தேன்

மாமா”

“ஹ்ம்ம் ஹ்ம்ம்” – முறைத்துக் கொண்டவரைக் கண்டு எரிச்சலுற்றுப் பின் “வாங்க மாமா ப்ளீஸ்! நல்லாயிருக்கும்” என்று விடாமல் பேசி அவரைக் கிளப்பியிருந்தாள்.

அவர் சம்மதம் சொல்லி விட்டத் திருப்தியில் வசந்தைக் காண அவன் அறைக்கு ஓடோடிச் சென்றாள் சாரு.

இலங்கை வானொலி நிலையத்தில் கே.ஜே.யேசுதாஸ் உருகி உருகித் தன் காதலை பாட்டாகப் பாடிக் கொண்டிருக்க.. டிரெஸ்ஸிங் டேபிளின் முன்னே நின்று தலை வாரிக் கொண்டிருந்தான் வசந்த்.

அவன் பின்னே சென்று நின்று.. மலர்ந்த முகத்துடன்..

“மாமா இன்னிக்கு உங்க நாடகம் பார்க்க வர்றார்” என்று சந்தோஷமாகக் கூவியவளிடம்.. உதட்டை வளைத்துப் புருவம் உயர்த்தி ‘அடேங்கப்பா,அதிசயம் தான்’ என்பதைப் போல் ஒரு பாவனை செய்தான் அவன்.

“ப்ச், எவ்ளோ பெரிய காரியம் பண்ணியிருக்கேன்! இவ்ளோ தான் உங்க ரியாக்ஷனா?”

காட்டுக்கத்தலாகக் கத்தியவளைக் கண்டு கொள்ளாமல்.. கண்ணாடி காட்டிய அவள் முகத்தில் பார்வையைப் பதித்து…

**“**உன் பார்வையில் ஓராயிரம்**..**

கவிதை நான் எழுதுவேன்**..** காற்றில் நானே**..”** – என்று யேசுதாஸோடு சேர்ந்து அவன் பாடத் துவங்க.. கையைக் கட்டிக் கொண்டு சிரிப்புடன் அவனை நோக்கினாள் அவள்.

“அவரோட சேர்ந்து நீயுமா வர்ற?” – வசந்த்.

“ஆமா, பின்ன நான் இல்லாமலா? இனி உங்களோட எல்லா நாடகத்துலயும் எனக்கு ஃபர்ஸ்ட் ரோ-ல இடம் வேணும்! நோட் பண்ணி வைச்சுக்கோங்க”

“ம்ஹ்ம்ம்????”

“நிஜமா தான் சொல்றேன்”

“சரி, அப்பா எப்படி ஒத்துக்கிட்டார்?, கூத்தாடுமிடத்திற்கு சான்றோர் எவரும் செல்லார்ன்னு வசனம் பேசுற மனுஷனாச்சே”

“அதெல்லாம் சும்மா! அவர் பாகவதர் ஃபேன்! உங்க நாடகம் அவர் படம் மாதிரி தான இருக்கு?, அதெல்லாம் பார்ப்பார்”

“ஏன் டி என்னைப் பார்த்தா பாகவதர் மாதிரியா இருக்கு?, யாரை யாரோட கம்பேர் பண்ற?”

“ஹிஹி! சாரி வசந்த்”

“நீ சொல்றதும் ஒரு வகைல சரி தான்! பாகவதர் நடிச்ச நாடகங்களைத் தான் நாங்களும் மேடைல நடிக்குறோம்”

“அப்டின்னா நான் கரெக்டா தான் சொல்லியிருக்கேன்! சரி, சீக்கிரம் கிளம்புங்க! எல்லாரும் சேர்ந்து கிளம்பலாம்” – எனக் கூறி செல்லப் பார்த்தவளின் கைப் பற்றித் தடுத்தவன் அவளிடம்..

“நீ இப்படியே வரப் போறியா?” – என்று அவள் அணிந்திருந்த மேக்ஸியைச் சுட்டிக் காட்டினான்.

“ஏன்? இந்த டிரெஸ்க்கு என்ன குறை?”

“ப்ச், மஞ்சள் கலர் தாவணி கட்டிட்டு வாயேன்! ப்ளீஸ்” – கெஞ்சலாகக் கூறியவனை முகம் சிவக்க நோக்கி..

“அப்டி அந்தத் தாவணில என்ன தான் இருக்கோ?” என்று தலையில் அடித்துக் கொண்டவளிடம்..

“அதெல்லாம் உனக்கு சொன்னாப் புரியாது. உன்னால மஞ்சள் தாவணி கட்ட முடியுமா முடியாதா?” – தகராறு செய்யும் நோக்கத்துடன் கேட்டவனிடம் “கட்டுறேன்” எனக் கூறி அவன் அறையை விட்டு வெளியேறினாள்.

கார் அருகே அப்பனும்,மகனும் நின்றிருக்க அவசரமாய் வாசலுக்கு ஓடி வந்தாள் சாரு.

மஞ்சள் தாவணியும், காதில் ஜிமிக்கும், தலை நிறையப் பூவுமாய்.. தன் நீண்ட பின்னலைப் பின்னால் போட்டபடி அவசரமாய் ஓடி வந்து நின்றவளைக் கண்டு மையலுடன் புன்னகைத்து.. அவளுக்காகக் கார் கதவைத் திறந்தவனை.. பார்க்கும் பார்க்காத பாவனையில் உள்ளே ஏறியவளுக்கு இதழோரம் சிரிப்பில் துடித்தது.

தானே காரை ஓட்டியவன் ரியர் வியூ மிர்ரரில் அடிக்கடி அவள் முகத்தைப் பார்க்க.. அருகில் அமர்ந்திருந்த மாமாவை நோக்கிக் கண்ணைக் காட்டிப் பல்லைக் கடித்தவளை மேலும் உசுப்பேற்றும் பொருட்டுத் தந்தையை அழைத்தான் வசந்த்.

“அப்பா..”

“ம்ம்”

“சாருவுக்கு இந்தத் தாவணி அழகாயிருக்குல்லப்பா?”

“அவளுக்கென்ன அம்சமா இருக்கா”

“பார்த்தியா அப்பாவுக்கும் இந்தத் தாவணி பிடிச்சிருக்கு” என்றவனை அவள் முறைத்த முறைப்பில்.. தன் 32 பற்களையும் காட்டி அழகாய்ப் புன்னகைத்தபடி சாலையில் பார்வையைப் பதித்தான் வசந்த்.

ஓரளவு கூட்டம் கூடியிருந்த அந்த அரங்கில் தந்தையையும்,காதலியையும் முதல் வரிசையில் அமரச் செய்து விட்டு.. ஒப்பன அறையை நோக்கி நகர்ந்து விட்டான் வசந்த்.

திரை தொங்க விடப்பட்டிருந்த மேடையில்..

திருச்செந்தூர் நொண்டி நாடகம்

மறுமலர்ச்சிக் குழு –என்று எழுதப்பட்டிருக்க.. சுற்றி,சுற்றிப் பார்த்தபடி அமர்ந்திருந்தனர் மாமனும், மருமகளும்.

சிறிது நேரத்திலேயேத் தன்னருகே வந்து அமர்ந்த ஹரியை வியப்புடன் நோக்கிய சாரு “நீங்க நடிக்கலையா” என்று வினவ..

“ம்ஹ்ம் இன்னிக்கு உன் மாமா மகன் மட்டும் சோலோவா பெர்ஃபார்ம் பண்றான்” என்று கூறினான் அவன்.

அடுத்த சில நிமிடங்களில் மேடையில் தோன்றினான் வசந்த்.

பொன்னி நதியில் நீராடி, நெற்றியில் பட்டையாய் திருநீர் அணிந்து,மார்பில் முத்து மணிகள் ஒளி வீச.. சிவன் துதியைப் பாடியபடி ஒற்றைக்காலுடன் அவன் நொண்டியாக நின்றான்.

மக்களிடையே அறவொழுக்கத்தினை வலியுறுத்த வேண்டி 17-ஆம் நூற்றாண்டில் வழக்கத்திலிருந்த சிற்றிலக்கிய நாடகங்களில் ஒன்று தான் இந்த நொண்டி நாடகம்! ஒற்றைக்காலுடன் தோன்றும் கதையின் நாயகனை அடிப்படையாக வைத்தே இந்தப் பெயரில் அழைக்கப்படுகிறது.

ஒழுக்கமின்மை தன் வாழ்வை எத்தகைய பாதையில் இழுத்துச் சென்றதென்பதை நொண்டியானவன் எடுத்துக் கூறுவதே இந்நாடகத்தின் மையக்கரு. நொண்டியென்கிற தனி கதாபாத்திரம் மட்டுமே மேடையில் தோன்றி தன் வாழ்வில் நடந்த அத்தனை அனர்த்தங்களையும் சபையோருக்குக் கூறுவான். திருட்டு,ஏமாற்று,விபச்சாரம் போன்றவை அக்காலகட்டத்தில் தீஞ்செயலாகக் கருதப்பட்டதை இந்நொண்டி நாடகம் விளக்கிக் கூறும்.

Mono-acting-ஐத் தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்த நாடகம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது!

முதற்காட்சியில்..

நல்ல உடல் ஆரோக்கியத்துடன் திடகாத்திரமாகத் தோன்றும் நம் கதாநாயகன்.. தன் பெற்றோரின் அரவணைப்பில் பாராட்டி,சீராட்டி வளர்க்கப்படுகிறான்.

கல்வி,உத்தியோகம் என எதிலும் பற்றின்றி தான்தோன்றித்தனமாய் சுற்றித் திரிபவனை மண வாழ்வில் பிணைத்து வைக்கின்றனர் அவன் பெற்றோர்.

இளமையின் மோகத்தில், பருவ தாபத்தில் தன் மனைவியுடன் குடித்தனம் நடத்துபவனுக்கு.. நாட்கள் செல்லச் செல்ல அவளிடமும் பற்றற்றுப் போய் விடுகிறது.

அந்தி வானமும், செடியும்,கொடியும்... நிலவும்,மலரும்.. ஏன் தன் கண்ணுக்கு மட்டும் அழகாய்த் தெரியவில்லை என சபையோரிடம் கேட்டுப் பாட்டாகப் படிக்கிறான். உண்ணும் உணவிலும், உறங்கும் படுக்கையிலும் தனது திருப்தியற்றத் தன்மையை,மகிழ்ச்சியின்மையை நகைச்சுவையோடு விளக்குகிறான்.

அடுத்த காட்சியில்.. வீட்டில் எவரிடமும் சொல்லாமல்.. பொன்னையும்,பொருளையும் எடுத்துக் கொண்டு நிம்மதியைத் தேடி ஓடி விடுகிறான்.

நாடு நாடாகப் பயணப்படுபவன் வழியில் சிலரை நண்பர்களாக்கிக் கொள்கிறான். கொலை கொள்ளையெனக் காமுகர்களாகத் திகழ்பவர்களின் வலையில் வீழ்ந்துத் தீயவனாகி விடுகிறான்.

பாறையொன்றில் படுத்துக் கொண்டுக் கால் மேல் கால் போட்டபடி வாயில் சுருட்டுடன்.. “காலமே இது பொய்யடா! வெறும் காற்றடைத்தப் பையடா” என உற்சாகமாய்ப் பாடுபவனைக் கண்டுக் கை தட்டுகிறது கூட்டம்.

அடுத்த காட்சியில் கள்வனாய் உருமாறி மேடையில் நிற்கிறான்.

வீட்டிலிருந்துக் கொண்டு வந்தப் பொன்னும்,பொருளும் முழுதாய்த் தீர்ந்து போன நிலையில்.. பசியைப் போக்கத் திருடத் துவங்குகிறான் நொண்டி.

தலையில் கட்டியத் துண்டுடன்,கன்னங்களில் பரவிக் கிடந்தத்

தாடியும், சிவந்த கண்களுமாய்.. கொலைப் பட்டினியின் விளைவால்.. கொலைவெறியுடன் காட்சி தந்தவன்.. தன் கருமணிகளை இங்குமங்கும் உருட்டியபடி மதில் ஏறிக் குதிக்கிறான்.

அப்பட்டினி வேளையிலும் சுறுசுறுப்பாய் செயல்பட்ட மூளையுடன் வெற்றிகரமாக.. ஒரு மூடைப் பொன் திருடுபவன்.. தன் நண்பர்களுடன் அதைப் பகிர்ந்து கொண்டு மதுவுக்கும்,மாதுவுக்கும் அடிமை ஆகிறான்.

தாசி வீட்டில் அடிமையாகக் கிடப்பவன் கடைசியில் திருடிய பொருள் அத்தனையையும் இழந்துத் துன்பத்துக்குள்ளாகிறான்.

அவன் குடியும்,கூத்துமாயிருந்த பொழுதில் அவனோடு கூடிக் களித்தப் பரத்தையானவள்.. அவன் பொருள் இழந்து நிற்கையில்.. அவனைத் துரத்தியடிக்கிறாள்.

கலைந்து போன பரட்டைத் தலையும், வெற்று மார்புமாய்.. வாசலில் வந்து விழும் நொண்டியின் முகத்தில் கோபமும்,ரௌத்திரமும் தாண்டவமாடுகிறது.

அடுத்த காட்சி: தண்டனைக்குள்ளாதல்**.**

பரத்தையரும் துரத்த நேர்ந்தத் தன் அவலநிலையை எண்ணிக் கோபம் கொள்ளும் நொண்டி, மேலும் பொருள் ஈட்ட நினைத்து மறுபடி திருடுகிறான்.

அரசனின் குதிரையென்று அறியாமல்.. காட்டு வழியே நின்றிருந்தக் குதிரையொன்றை அவன் திருட முயல.. பிடிபடுகிறான் காவலாளிகளிடம்.

“நாட்டை ஆளும் மன்னனின் புரவியையே திருட நினைத்தாயா?” எனக் கேட்டு அவனை அடித்துத் துன்புறுத்தும் காவலாளிகள், மாறுகால் மாறுகை வாங்கியதில்.. தன் கால்களையும்,கைகளையும் இழந்து வலியால் துடி,துடிக்கிறான்.

கைகளைப் பின்னேக் கட்டியபடி... மண்டியிட்டுத் தலை குனிந்து அமர்ந்திருந்தவனின் கைகள் துண்டிக்கப்பட்ட நொடி, ஆஆஆஆஆஆ-வெனக் கத்திக் கொண்டுக் கீழே விழுபவனின் கால்களும் தொடர்ந்து வெட்டப்பட.. வலியில் கதறுபவனைக் கண்டு அவையோரின் கண்களில் நீர் சேர்கிறது.

அடுத்த காட்சியில்..

மருந்துகளின் சாறு முகத்தில் தெறிக்க மெல்லக் கண் விழிக்கிறான் நொண்டி. நல்லவர் ஒருவரால் தான் காப்பாற்றப்பட்டு இன்று உயிருடன் இருப்பதையும் எண்ணிக் கண்ணீர் சிந்துகிறான்.

அவருடைய வழிகாட்டுதலின் பேரில்.. திருச்செந்தூர் முருகனின் இறைதலத்தை அடைகிறான்.

கடவுள் அமைத்துக் கொடுத்த நல்வாழ்வின் பயனை அனுபவிக்காமல்.. புத்தியிழந்து போய்... ஏமாற்றிப் பொன் திருடி, பரத்தை தேடி, அற வழி தவறித் தான் அனுபவித்த அத்தனை வேதனைகளையும் பாட்டாகப் பாடி.. அந்த ஆறுமுகத்தானிடம் மோட்சம் வேண்டி சரணடைகிறான்.

தன் தவறை உணர்ந்தவனின் கண் முன் தோன்றும் காங்கேயன்.. அவன் இழந்த கை,கால்களைத் திரும்பக் கொடுக்க.. நெகிழ்ச்சியும்,மகிழ்ச்சியுமாய்.. அவரைப் போற்றிப் பாடுபவன்.. கடைசி வரை ஒழுக்க சீலனாக வாழ்கிறான் என்பதோடு நாடகம் முடிகிறது.

ஒற்றை ஆளாய் மேடையில் நின்று.. கதையில் வந்த அத்தனை கதாப்பாத்திரத்தின் வசனத்தையும் தானே பேசி.. ஒவ்வொருக்கான பாவனையையும் தனித்தனியாய் அடுத்தடுத்து வெளிப்படுத்தி.. அம்மேடையையே ஆண்டவனை வியப்பு கூறாமல்.. பிளந்த வாயுடன் பார்த்துக் கொண்டிருந்த சாருகேசன், கடகடவென ஒலித்த கரகோஷத்தின் சத்தத்தில் தன்னிலை அடைந்து சாருமதியை

நோக்கினார்.

ஹரி எழுந்து நின்று விசில் அடித்துக் கொண்டிருக்க.. அவனுக்கு அருகில் நின்று உற்சாகமாய் கை தட்டிக் கொண்டிருந்தாள் அவள்.

நாடகம் முடிவுற்று.. அனைவரும் வீடு திரும்புகையில்.. சாருமதி அவனது நடிப்புத் திறமையைப் பற்றி வாய் ஓயாமல் பேசிக் கொண்டு வர.. வசந்தும், கேசனும் அமைதியாய் வந்தனர்.

வீட்டிற்கு வந்திறங்கியதும் நேராகத் தன்னறைக்குச் சென்ற கேசன், எதையோ கையில் எடுத்துக் கொண்டு சாருமதியிடம் வந்தார்.

“அம்மா.. மதி” – கேசன்

“சொல்லுங்க மாமா?” – என்றவளிடம் ஒரு ப்ளாங்க் செக்கை (blank cheque) நீட்டினார்.

வியப்புடன் அவரை நோக்கி என்னவென்று விசாரித்தவளிடம்..

“இதைக் கொண்டு போய் அவன் கைல கொடும்மா. ஏதோ ஆக்டிங் இன்ஸ்டிடியூட் ஆரம்பிக்கனும்ன்னு சொல்லிட்டிருந்தானே! எவ்ளோ வேணாலும் பணம் எடுத்துக்கச் சொல்லு” என்று அவர் கூற..

திகைத்து விழி விரித்து அவரையே ஆச்சரியமாக நோக்கினாள் சாரு.

அவள் விழித்துக் கொண்டு நிற்கையிலேயே டெலிஃபோன் மணியடிக்க... சென்று அதை எடுத்துக் காதில் வைத்தவர்..

“ம்ம் மணி சொல்லுய்யா, நல்லாயிருக்கியா?” எனக் கேட்டு.. “எங்க போயிருந்தேன்னு கேட்குறியா?, என் மகன் நடிக்கிற நாடகத்தைப் பார்க்கப் போயிருந்தேன்! சும்மா சொல்லக் கூடாது. டிகேஎஸ் தோத்துப் போயிருவாருய்யா! அருமையா நடிக்கிறான் பையன்” என்று முழு உற்சாகத்துடன் ஃபோனில்

பேச.. நடப்பதையெல்லாம் வியப்பு குறையாமல் பார்த்தபடியே வசந்தைத் தேடிச் சென்றாள் அவள்.

தந்தை ப்ளாங்க் செக் கொடுத்ததையும், ஃபோனில் பேசுவதையும் தன் அறையிலிருந்தேக் கேட்டுக் கொண்டிருந்த வசந்தின் முகம் புன்னகையில் மலர்ந்து போயிருந்தது.

சிரிப்பு மாறாமல் சட்டை பட்டனை கழட்டிக் கொண்டிருந்தவனின் அருகே சென்று நின்றாள் சாரு.

“இது என்ன தெரியுமா?”-சாரு

“என்ன?”

“ப்ளாங்க் செக். மாமா கொடுத்தார். இதுல நீங்க எவ்ளோ வேணா பணம் எடுத்துக்கலாமாம்!” – முகத்தை சுழித்தபடி கூறியவளின் கன்னத்தைக் கிள்ளி..

“அதுக்கு ஏன் உன் முகம் இப்படிப் போகுது” என்று வம்பு செய்தான் அவன்.

“என்னையும்,மாமாவையும் பார்த்தா.. பொறாமையா இருக்குன்னு நீங்க அடிக்கடி சொல்வீங்களே.. இப்போ உங்களையும்,அவரையும் பார்க்க எனக்குத் தான் பொறாமையா இருக்கு”

“ஹாஹாஹா”-வென நகைத்தவனிடம் “இதை என்ன செய்ய?” என்று செக்கை காட்டி அவள் கேட்க..

புன்னகை குறையாமல் “நீயே வைச்சுக்கோ” எனக் கூறி அவள் தலையில் தட்டி விட்டு குளியலறைக்குள் சென்று மறைந்தான் அவன்.

மகிழ்ச்சியும்,நிம்மதியும் குடிகொண்டிருந்த வீட்டில் கலகலப்புக்குப் பஞ்சமில்லாதிருக்க.. அந்த உணர்வைத் தக்க வைத்துக் கொள்ள நினைத்த அனைவரின் முகங்களிலும் புன்னகைக்குக் குறையில்லை.

இரவு சாப்பாட்டை அனைவரும் சேர்ந்தமர்ந்து உண்டதில் திருப்தி கொண்டு நிம்மதியாய் உறங்கிப் போயிருந்தாள் சாரு.

நள்ளிரவில் யாரோ தன்னை உலுக்கி எழுப்புவதை உணர்ந்து அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தமர்ந்தவளின் முன்னே கையைக் கட்டிக் கொண்டு முறைப்புடன் நின்றிருந்தான் வசந்த்.

“என்ன?” – தூக்கம் பறிபோன எரிச்சலில் சுருக்கியப் புருவங்களுடன் வினவியவளிடம்..

“தூக்கம் வராம நான் இங்கக் கடுப்புல இருக்கேன்! நீ மட்டும் நிம்மதியா தூங்குற” – என்று அவன் காய..

வாயைப் பிளந்து ஒரு நொடி அவனை நோக்கியவள் மறு நொடி..

“உங்களுக்குத் தூக்கம் வரலேன்னா.. தூங்கிட்டிருக்கிற என்னை எழுப்புவீங்களா?” என்று பாய்ந்தாள்.

“ப்ச், கோபப்படாத சாரு”

“உங்களுக்கு ஏன் தூக்கம் வரல?”

“தெரியல”

“இப்போ என்னை என்ன பண்ணச் சொல்றீங்க?”

“வெளிய போகலாமா?”

“எங்க?”

“ஏரிக்கு”

“விளையாட்றீங்களா?, மணி 1. பேய்,பூதம் எல்லாம் அங்க தான் சுத்திட்டிருக்கும்”

“பரவாயில்ல. நாமளும் அதுங்களோட சேர்ந்து சுத்தலாம்” – அவள் கையைப் பற்றிப் படுக்கையிலிருந்து எழுப்பியவனைக் கண்டு பதறி..

“வேணாம் வசந்த்! சொன்னாக் கேளுங்க! ஏற்கனவே அன்னம்மா நம்ம 2 பேரும் சிரிச்சுப் பேசுனாலே முறைச்சுப் பார்க்குது. நீங்க இப்படியெல்லாம் பண்றது தெரிஞ்சா.. என்னைத் தான் திட்டும்”

“பரவாயில்ல வாங்கிக்க”

“வசந்த்த்த்” – கத்த முற்பட்டவளை அடக்கித் தன் கைகளில் அள்ளிக் கொண்டான் அவன்.

இருவரையும் கண்டு அதிர்வுடன் கதவைத் திறந்த கூர்காவைக் கண்டு கொள்ளாமல் வாசலில் அவளை இறக்கி விட்டுக் கையைப் பற்றியபடி ஏரியை நோக்கி நடந்தான்.

சுற்றி சுற்றிப் பார்த்தபடி பதை,பதைப்புடன் நடந்தவளின் தோளைச் சுற்றிக் கைகளை போட்டுக் கொண்டவனை நிமிர்ந்து முறைத்தாள் அவள்.

பௌர்ணமி நிலவு வானில் ரோந்து சென்று கொண்டிருக்க.. நீரின் ஓசையும்,காற்றிலாடும் மரங்களின் ஒலியையும் தவிர சர்வ நிசப்தம் அங்கே.

அதே அரசமரத்தடி அருகே புல் தரையில் அமர்ந்து அவள் கைப்பற்றி இழுத்துத் தன்னருகே அமரச் செய்தான் வசந்த்.

“இப்படி இருட்டுல வந்து உட்கார்ந்தே ஆகனுமா உங்களுக்கு?, பூச்சி,பொட்டுக் கடிச்சாக் கூட கத்த முடியாது” – புலம்ப ஆரம்பித்தவளின் வாயில் விரல் வைத்துத் தடுத்து.. புன்னகையுடன் அவள் தோளில் சாய்ந்தான்.

சட்டென விறைத்துப் போனவளின் கண்களிலும் மையல் ஏற.. படபடத்த மனதுடன் வான்மதியை நோக்கினாள் அவள்.

“சாரு....”

“ம்ம்ம்”

“ஐ லவ் யூ”

“தெரியும்”

“சந்தோசம், நிம்மதியைத் தாண்டி.. இப்போ மனசு ரொம்ப திருப்தியா இருக்குற மாதிரி ஃபீல் பண்றேன்”

“இருக்காதா பின்ன?, ப்ளாங்க் செக் வேற கைல கிடைச்சிருக்கு!”-நக்கலடித்தவளின் தலையில் நறுக்கெனக் குட்டி வைத்தான் அவன்.

“ஆஆஆஆஆ” எனக் கத்தியவள் அவனைத் தள்ளி விட்டு.. எழப் பார்க்க.. அவளைப் பிடித்திழுத்துத் தன் மார்பில் போட்டுக் கொண்டவன்.. அப்படியேப் பின்னால் சாய்ந்து படுத்தான்.

“பஞ்சு மெத்தைல சொகுசா படுக்குறதை விட்டுட்டு.. இப்படிக் கட்டாந்தரைல அட்டகாசம் பண்ணிட்டு இருக்கீங்க நீங்க”

“தெரியல! இப்போ இந்த நிமிஷம்.. உன் கூட இங்க இருக்கனும்ன்னு தோணுச்சு”

“வேற என்ன தோணுது?”

“நீ இன்னும் கொஞ்சம் கிட்ட வந்தா சொல்லுவேன்”

“ப்ச், வசந்த்த்த்”

“நீ இப்படி சிணுங்கிக்கிட்டே என் பேரைச் சொல்றது எனக்கு எவ்ளோ பிடிச்சிருக்குத் தெரியுமா?”

“எவ்ளோ பிடிச்சிருக்கு?”

கேள்வி கேட்டவளிடம்.. தலையை மட்டும் தூக்கி.. தன் மார்பில் சாய்ந்திருந்தவளின் நெற்றியில் பட்டென இதழ் பதித்து விட்டு மீண்டும் படுத்துக் கொண்டான்.

“ஆரம்பிச்சுட்டீங்களா?”

“ம்ம், இப்படியே கண்டினியூ ஆகும். நீ கோபப்படக் கூடாது”

கேலியாகக் கூறியவனை முறைக்க முயன்று தோற்றுப் பின்

அவன் மார்பில் நாடியைப் பதித்து.. அந்தப் பௌர்ணமி நிலவொளியோடு போட்டி போட்டுக் கொண்டுப் பளபளத்த அவன் முகத்தை இமைக்காது நோக்கியவளிடம் “என்ன?” என்று அவன் வினவ.. கூறினாள் அவள்.

“ஐ லவ் யூ வசந்த்...”

*********************************முற்றும்**************